# கி.வா.ஜ



# பேசுகிறார்



அல்லயன்ஸ்

# கி. வா. ஜ. பேசுகிறார்

★

அல்லயன்ஸ் கம்பெனி
244, ராமகிருஷ்ணா மடம் சாலை
தபாற் பெட்டி எண் 617
மயிலாப்பூர் :: சென்னை-600 004

உரிமை பதிவு

முதற் பதிப்பு - டிசம்பர், 93

ரூ. 24-00

கணேஷ் பிரிண்டர்ஸ்
சென்னை - 4

# பதிப்புரை

இந்தப் புத்தகத்திலுள்ள கட்டுரைகளில் 'மல்லிகை மாலை' (8—10—1943), 'போர்க்கால காவியம்', 'அந்தக் காலம் வேறு' (20—9—1944), 'கொச்சைத் தமிழ்', 'நாடோடிப் பாடல்கள்' (24—6—1943), 'குறி சொல்லுதல்' (14—2—1944), 'டாக்டர் உ. வே. சாமிநாதையர்' (27-4-1943), எல்லாம் சென்னை வானொலியிலும்; 'தமிழ் வசனத்துக்கு விஷயம்' (5—2—1940), 'கட்டுரை'(23-12-42), 'சுரேந்திர பூபால குறவஞ்சி நாடகம்' (25—12—1942) 'கனம் கிருஷ்ணையர்' (29—9—1939) போன்றவை திருச்சி வானொலியிலும்; 'புறநானூறும் சரித்திரமும்'—என்பது சென்னை சிந்தாதிரிப் பேட்டை ஹைஸ்கூலில் ராவ்ஸாகிப் வையாபுரிப் பிள்ளையவர்கள் தலைமையில் நடைபெற்ற புறநானூறு மகா நாட்டிலும் 'வாகீச கலாநிதி' கி.வா. ஜகந்நாதன் அவர்கள் பேசிய பேச்சுக்கள்.

கி. வா. ஜ. அவர்களின் தமிழ்ப் புலமை தனித் தன்மை வாய்ந்தது. அவருடைய எழுத்துத் தமிழுக்கும், பேச்சுத் தமிழுக்கும் வித்தியாசம் இல்லை என்று எடுத்துக் காட்ட, நவசக்தி ஆண்டு மலரில் வெளியான 'மண் சுமந்த கதை', சந்திராவில் வெளியான 'தமிழ் வசன நடை', கலைமகளில் வெளிவந்த 'வாத்தியார் ஐயா', 'தமிழ்த் தாத்தாவும் காந்தித் தாத்தாவும்' சுதேசமித்திரன் வாரப் பதிப்பில் வெளியான 'ஒரே எழுத்து' போன்ற கட்டுரைகளையும் இத்துடன் சேர்த்து வெளியிட்டுள்ளோம்.

இந்தக் கட்டுரைகள் தற்கால மாணவர்களுக்குப் பெரிதும் உதவும் என்ற நம்பிக்கையுடன் வெளியிடுகிறோம்.

—பதிப்பகத்தார்

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1 | மல்லிகை மாலை | ... | 15 |
| 2 | மண் சுமந்த கதை | ... | 26 |
| 3 | போர்க்கால இலக்கியம் | ... | 34 |
| 4 | அந்தக் காலம் வேறு | ... | 40 |
| 5 | கலையும் தொழிலும் | ... | 50 |
| 6 | தமிழ் வசன நடை | ... | 53 |
| 7 | தமிழ் வசனத்துக்கு விஷயம் | ... | 61 |
| 8 | கொச்சைத் தமிழ் | ... | 70 |
| 9 | கட்டுரை | ... | 76 |
| 10 | நாடோடிப் பாடல்கள் | ... | 81 |
| 11 | குறி சொல்லுதல் | ... | 89 |
| 12 | சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் | ... | 98 |
| 13 | வாத்தியார் ஐயா | ... | 108 |
| 14 | புறநானூறும் சரித்திரமும் | ... | 133 |
| 15 | கனம் கிருஷ்ணையர் | ... | 158 |
| 16 | டாக்டர் உ. வே. சாமிநாதையர் | ... | 167 |
| 17 | ஒரே எழுத்து | ... | 176 |
| 18 | தமிழ்த் தாத்தாவும் காந்தித் தாத்தாவும் | ... | 184 |

# முன்னுரை

பழங் காலத்தில் கண்ணுக்கும் காதுக்கும் கருத்துக்கும் இன்பத்தை அளிக்கக் கூடியதாக இருந்தது நாடகம். காவியத்தைக் காதிலே கேட்டு அனுபவிக்கலாம். அதனால் அதைச் சிராவ்ய காவியம் என்பார்கள். நாடகத்தைக் கண்ணாலே கண்டு அநுபவிப்பதனால் அதற்குத் திருசிய காவியம் என்ற பெயர் வழங்கியது. அந்தக் கொள்கையின் படி பார்த்தால் குருடன் நாடகத்தை ரசிக்க முடியாது.

விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியானது மனிதன் கனவிலும் எதிர்பாராத பல அதிசயங்களை அன்றாட வாழ்க்கையில் புகுத்தி யிருக்கிறது. நம்முடைய மூதாதையர் யாரேனும் ஒருவர் திடீரென்று உயிர் பெற்றெழுந்து இந்த உலகத்தில் உலவத் தொடங்கினால் இடந்தோறும் அவர் புதிய புதிய அதிசயத்தைக் கண்டு விம்மி ஆச்சரியத்துள் மூழ்கி அந்த மருட்சியினாலேயே மீண்டும் செத்துப் போய் விடுவார்.

நாடகம் கண்ணாலே நுகர்வதற்குரியது என்ற இலக்கணத்தையும், திருசிய காவியம் என்ற அதன் பெயரையும் போக்கிவிட்டது இன்று வந்த ரேடியோ, மற்றும் ஒளிபரப்புச் சாதனங்கள். வானொலியில் வெறும் ஒலி விசித்திரங்களைக் கொண்டே நாடகம் நடத்தப்படுகிறது. காவியத்தைப் படிக்கும்போது சொற்பொருள் அமைதியினால் கேட்பவர் உள்ளத்தே சித்திரம் அமைவது போல, காதிலே விழும் பேச்சினாலும் தொனிக் குறிப்பினாலும் ஒலிகளின் அமைதியாலும் பாத்திரங்களின் இயல்பையும் நிகழ்ச்சி வகைகளையும் உணர்ந்து, கேட்பவர்கள் நன்றாக ரசிக்கும்படியாக ரேடியோ நாடகங்களை இப்போது நிகழ்த்தி வருகிறார்கள். எனவே வானொலியில் நாடகமும் சிராவிய காவியமாக மாறிவிட்டது.

வானொலி நாடகத்தில் ஒலி மூலமாகவே பாவத்தை வெளிப்படுத்தும் புதுமை ஏற்பட்டது போலவே, வானொலிப் பிரசங்கங்களிலும் ஒரு தனி முறை அவசிய மாயிற்று. வானொலி நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலுமே ஒலியே பலவித உணர்ச்சிகளை எழுப்புகின்றது. எல்லாப் பொருளையும் தோற்றுவிக்கும் மூலதத்துவம் **நாதம்** என்று தத்துவ நூலார் சொல்வார்கள். வானில் எழும் ஒலி, நாடக பாத்திரங்களையும், போர் நிகழ்ச்சிகளையும், பிரசங்கப் பொருளையும் கேட்போர் உள்ளத் தடத்தில் உருவுருவாகக் காட்டி இன்புறுத்துகின்றது.

மேடையின்மேல் ஏறிப் பேசுகிறவர் செய்யும் பிரசங்கத் துக்கும் ரேடியோப் பிரசங்கத்துக்கும் பலபல வேறுபாடுகள் உண்டு. மேடைப் பிரசங்கி தன் உருவத்தைக் கொண்டும், வாய் அசைவைக்கொண்டும் முகத்தோற்றத்தைக்கொண்டும் கை அசைவுகளைக் கொண்டும் சில வகையான குறிப்புக் களைக் கேட்போர் உள்ளத்தில் பதியச் செய்கிறான். அவன் பேசும் பேச்சில் செறிவு அதிகமாக இருப்பதில்லை. ஒரே விஷயத்தைப் பல உதாரணங்களால் விளக்கியும், மீட்டும் மீட்டும் சொல்லி வற்புறுத்தியும் பிரசங்கம் செய்கிறான். நிதானமாக விஷயங்களைச் சொல்கிறான்.

கேட்போர் அவனைப் பார்ப்பதிலும், கேட்போரை அவன் பார்ப்பதிலும் சில நன்மைகள் உண்டு. பிரசங்கத்தி னால் அவன் வெளிப்படுத்தும் கருத்துக்களை அவனது முகக் குறிப்பு முதலியவை பின்னும் சுவையுடையனவாகச் செய் கின்றன கேட்பவர்களுடைய உத்சாகத்தை நேரே தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இருப்பதனால், அவ்வப்பொழுது அதை மிகுவிப்பதற்கு வேண்டிய தந்திரத்தை அவன் மேற்கொள்ள லாம். சொல்லுகின்ற கருத்து மிகவும் நுண்ணிதாகத் தலைவலி யெடுக்கும்படி இருக்கிறதென்று வைத்துக்கொள் வோம். சாமர்த்தியசாலியான பிரசங்கி கேட்பவர்களின்

முகக் குறிப்பிலிருந்தே இதை உணர்ந்து கொள்ளலாம். அப்பொழுது ஊறுகாயைப் போல இடையிலே ஹாஸ்ய ரஸத்தைக் கொண்டுவந்து, தன் முன்னே இருப்பவர்கள் முகத்தில் ஒளியை உண்டாக்கலாம்.

இத்தகைய அநுகூலங்கள் ரேடியோப் பிரசங்கிகளுக்கு இருப்பதில்லை. எவ்வளவோ விதமான கட்டுப்பாடுகள் அங்கே உண்டு. அவை அவசியந்தான் என்பதில் சந்தேகம் இல்லை; ஆனாலும் கட்டுப்பாடு கட்டுப்பாடுதானே?

ஆள் யாரும் இல்லாமல், நமக்குக் காவலாக வரும் ரேடியோ உதவியாளர் ஒருவர் மட்டும் இருக்க, காற்றுக் கூடப் புகாத அறையில் தனியே இருந்து பிரசங்கம் செய்கிறோம். நாம் செய்வது பிரசங்கம் என்ற நினைவே ஏற்பட இடம் இல்லை. வானொலிக் கருவிக்கு முன்னாலே உட்கார்ந்து கொண்டு, எழுதிக்கொண்டு போயிருக்கிற பிரசங்கத்தை வாசிக்கிறோம். எதிரே உட்கார்ந்திருக்கும் அன்பர் அவ்வப்போது ஊமைச் சாடையால் மெதுவாக வாசிக்கலாமென்றும், வேகமாகப் போகலாமென்றும் குறிப்பிடுகிறார். ஹாம், ஹூம் என்ற சப்தம் இல்லாமல், இருமாமல், தும்மாமல், கனைக்காமல் கதறாமல், முனகாமல், பெருமூச்சு விடாமல், நாமும் கிட்டத்தட்ட ஒரு யந்திரத்தைப்போலப் 'பிரசங்கம்' செய்ய வேண்டும். எழுதிப் படிப்பதை, ஆள் இல்லாத அறையில் படிப்பதைத்தான் பிரசங்கம் என்று சொல்கிறோம். அந்தப் பிரசங்கம் பத்து அல்லது பதினைந்து நிமிஷத்துக்கு மேலே போவதில்லை. மணிக் கணக்காக மேடைமேல் ஏறிப் பொழிந்து தள்ளும் வழக்கம் உள்ளவர்களுக்குக்கூட அந்தப் பத்துப் பதினைந்து நிமிஷம் வானொலிப் பிரசங்கம் செய்வதற்குள் வேர்த்து விறுவிறுத்துப் போகிறது.

அதற்குக் காரணம் கட்டுப்பாடுதான். குறுகிய காலத்தில் உயிரில்லாத யந்திரத்துக்கு முன் உட்கார்ந்து கொண்டு,

ஆயிரக் கணக்கான மனிதர்களுக்கு முன்னே பேசுகிறோம் என்று நினைத்துக்கொண்டு, பேசுகிறோம். இந்தக் கட்டுப்பாடுதான் ஒவ்வொரு நிமிஷத்தையும் ஒவ்வொரு யுகமாகச் செய்கின்றது.

ரேடியோவின் முன்னிலையில் ஒவ்வொரு நிமிஷத்துக்கும், ஏன்? ஒவ்வொரு கணத்துக்கும் விலை உண்டு; மதிப்புண்டு. காலத்தின் அருமையைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் வானொலி நிலையத்திலே கற்றுக்கொள்ளலாம்.

## 2

வானொலிப் பிரசங்கத்தைப் பேச்சு என்றுதான் குறிக்கிறார்கள். ஆனால் அது ஒரு விதத்தில் கட்டுரையைப் போல இருக்கிறது. நன்றாகச் சிந்தித்து விஷயத்தைக் கோவையாக அமைத்து முதல், நடு, இறுதி என்ற வக்கணையுடன் விளங்கும்படியாக எழுதுவதனால் அதைக் கட்டுரையென்று சொல்லலாம். மேடைப் பிரசங்கத்தைக் காட்டிலும் அதில் செறிவு அதிகம் இருக்கிறது. ஒரு மணி நேரம் மேடையிலேறிச் செய்யும் பிரசங்கத்தை, ஒரு விஷயத்தைக்கூட விடாமல் பதினைந்து நிமிஷ ரேடியோப் பேச்சாகப் பேசி விடலாம்.

ஆனால் அது வெறும் கட்டுரையாக இருந்துவிட்டால் படித்து இன்புற முடியுமேயன்றிக் கேட்டு இன்புற முடியாது. செறிவு மிகுதியாக இருந்தால், கேட்கும் ஜனங்கள், நாம் ஒரு வாக்கியத்தில் சொன்ன கருத்தை ஜீரணம் செய்து கொள்வதற்குள் மேல்வரும் பல கருத்துக்களை நழுவ விட்டு விடுவார்கள். ஆகவே கட்டுரைகளைப் போலப் பல கருத்துக்களை ஒன்றன்மேல் ஒன்றாகச் செறித்து அமைப்பது ரேடியோப் பிரசங்கத்துக்குப் பொருந்தாது. ஒரே விஷயத்தைச் சிறிது விரிவாக-மேடைப் பிரசங்கத்தைப் போலச் சொல்ல வேண்டும். ஆனால் அந்த விரிவு அளவு கடவாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்தத் திரிசங்கு சுவர்க்கத்தில்

அகப்பட்டுக்கொண்டு நல்ல பெயர் வாங்குவது சிரமமான காரியம் அல்லவா?

கட்டுரையாக இருந்தால், படிப்பவருக்கு ஒரு கருத்து விளங்காவிட்டால் அதை மீட்டும் படித்துப் பார்க்கலாம். வானொலிப் பிரசங்கத்தில் அப்படிமீட்டும் தெரிந்துகொள்ள வகை இல்லை. சொல்லும் விஷயங்கள் பளிச்சுப் பளிச் சென்று விளங்க வேண்டும்; அல்லது பின்னாலே விளங்கக் கூடியதாக இருந்தால் அதுவரையில் கருத்துத் தொடர்பு அறாமல் கேட்பவர்களுடைய உள்ளத்தில் பற்ற வேண்டும்.

தெளிவுதான் வானொலிப் பேச்சுக்கு மிகவும் அவசிய மானது: அது இல்லாவிட்டால் ரேடியோ வைத்திருக்கிறவர், பிரசங்கியின் காதைத் திருகுவதுபோல முடுக்காணியைத் திருகிவிட்டு வேறு பாட்டோ செய்தியோ கேட்க ஆரம்பிப்ப தைப்பற்றிக் குறைகூற நியாயம் இல்லை.

புஸ்தக உருவத்தில் வரும் கட்டுரைகள் செறிவு மிகுதி யாக உள்ளவை. பத்திரிகைகளில் வருபவை அவற்றிலும் செறிவு குறைந்து விளக்கம் மிகுந்து அமைந்திருக்கின்றன. அவற்றைவிடத் தெளிவாக, செறிவு குறைவாக இருப்பது வானொலிப் பேச்சு. அதைக் காட்டிலும் செறிவு மிகக் குறைந்து, உதாரணங்களும் விளக்கங்களும் மிகுதியாக அமைவது மேடைப் பிரசங்கம். செறிவு அதிகமாக ஆக அதற்கு ஆயுளும் அதிகமாகும். இலக்கியமாகக் கணக்கெடுக் கும்போது செறிவுள்ளவையே முதலில் வருகின்றன.

இலக்கியங்கள் சிறப்புடையன என்றாலும், அவற்றை நேரே படித்து இன்புறுவர் சிலரே. இலக்கியத்தின் அழகை எடுத்துக் காட்டும் விமரிசனங்களைப் படித்து இன்புறு வோரே பலர். செறிவு குறைவாக இருந்தாலும் தெளிவான முறையில், சில கருத்துக்களையே வெளியிட்டாலும் உள்ளத் தில் பதியும்படியாக எழுதினால் அல்லது சொன்னால், அந்த முயற்சி முடிவில் இலக்கிய வளர்ச்சிக்கு ஏதுவாகவே ஆகும்.

அப்படியே, செறிவுள்ள புஸ்தகங்களை மக்கள் ஆவலோடு தேர்ந்து படிப்பதற்கும் இலக்கியச் சுவையை உண்டாக்குவதற்கும் செறிவிலே படிப்படியாகக் குறைந்து, தெளிவும் விளக்கமும் படிப்படியாக மிகுந்து விளங்கும் பத்திரிகைக் கட்டுரைகளும், ரேடியோப் பேச்சுக்களும், மேடைப் பிரசங்கங்களும் மிகவும் உபயோகமானவை. இலக்கிய ஞானத்தை அடைவதற்கு இவை சரியை, கிரியை, யோகம் என்பன போன்ற சோபனங்கள் என்றே சொல்லலாம்.

## 3

ரேடியோப் பிரசங்கத்தின் வெற்றியில் ஒருபகுதி விஷயத்தைப் பொறுத்ததானாலும், அதை விளக்கும் தோரணையிலும், சொல்லும் தொனிபேதங்களிலுமே அவ்வெற்றியின் பெரும்பகுதி அடங்கி இருக்கிறது. ஏதோ எழுதி வைத்ததைப் படிக்கிறாரென்ற உணர்ச்சி கேட்பவர்களுக்கு ஏற்படாதபடி பேச்சு அமைய வேண்டும். இயற்கையாகவே வானொலிக்கென்று எடுத்த குரல்கள் உண்டு. எல்லோருடைய குரல்களும் வானொலியில் பிரசங்கச் சுவையை விளைவிப்பதில்லை. மேடைப் பிரசங்கத்தின் சுவைக்கு ஒரு காரணமாக இருக்கின்றது.

பேச்சைப் பேச்சென்று நம்பச் செய்பவை தொனிபேதங்களே. நமக்கு முன்னாலே பலர் இருக்கிறார்கள், அவர்களுக்கு முன் நாம் நிற்கிறோம் என்ற நினைவு நமக்கு முதலில் இருக்க வேண்டும். அதைக் கேட்பவர்களுக்கும் நினைவூட்ட வேண்டும். பிரசங்கத்தின் போக்கிலே அந்த நினைவு எழ வேண்டும். அவர்களை முன்னிலைப் படுத்திச் சில சமயங்களில் விஷயத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்களிடம் கேள்விகள் கேட்க வேண்டும். நம்முடைய பிரசங்க யாத்திரையில் நம்மோடு அவர்களையும் அழைத்துச் சென்று 'இதைப் பாருங்கள்; அதைக் கவனியுங்கள்' என்று சொல்ல வேண்டும்.

'அந்த மாலை இன்னது என்று உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்', 'பரம ரசிகர்களாகிய மதுகரங்கள் நம்மிடத்தில் உள்ள கருணையினால் நமக்கு இடம்கொடுத்துப் போய்விட்டன', 'ஔவையாரைத்தான் உங்களுக்குத் தெரியுமே?' 'எதை வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்கள்', 'நீங்களே சொல்லுங்கள். அந்தக் காலம்வேறுதான்; இந்தக் காலம் வேறுதான்', 'இனி, சரித்திரத்திற்கு வருவோம்', 'எனக்கு ஒன்று தோன்றுகிறது. உங்கள் அபிப்பிராயத்துக்குப் பொருத்தமாயிருந்தால் வைத்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால்...நான் சொல்லுவானேன்? உங்கள் இஷ்டம்.' 'அதிலே உள்ள கவிதைக்கு உதாரணம் வேண்டுமா? சிறிது கேளுங்கள்;', 'ஹாஸ்ய ரஸத்தைக் கொஞ்சம் ருசி பாருங்கள்' இந்த மாதிரியான வாக்கியங்களைப் பின்வரும் கட்டுரைகளில் அன்பர்கள் கண்டால் வானொலியின் முன்னாலே நின்று பேசுகிறேன் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

தொனி பேதங்கள் இருந்தால்தான் ரேடியோப் பிரசங்கம் கேட்பதற்கு நன்றாக இருக்கும். கேள்விக் குறிகளும் ஆச்சரியக் குறிகளும் காகிதத்தில் இருக்கும் பொழுதைவிடப் பேச்சிலேதான் அதிகமாகத் பரிமளிக்கின்றன. பாவத்தோடு பேசுவதற்கு அவை கருவியாக உதவுகின்றன.

'மனம் சும்மா இராமல், அது என்ன மணம் என்று ஆராய்ச்சி செய்யத் தொடங்கியது' என்று ஒரு வாக்கியமாக எழுதி விடலாம். பேசும்போது இடையே ஒரு கேள்வியைப் போட்டுக்கொண்டு, 'மேலே மனம் சும்மா இருக்குமா?' அது என்னமணம் என்று ஆராய்ச்சி செய்யத் தொடங்கியது' என்று சொன்னால், கேட்பவர்கள் 'இது உயிருள்ள மனிதன் தொனி பேதத்துடன் பேசும் பேச்சு' என்று நினைப்பார்கள்.

ஒரு புலவருடைய பாடல் வெறும் சொல்லடுக்கு என்று சொல்லுகிறோம். அதற்கு வேண்டிய நிருபணமெல்லாம்

சொல்லியாயிற்று. கடைசியில் அந்தக் கருத்தை முடிக்கும் போது, 'அவரிடம் மல்லிகை மாலையை நாம் எப்படி எதிர் பார்க்க முடியும்?' என்ற கேள்வியாகக் கேட்டால், அதே எதிரில் உட்கார்ந்திருக்கிறார்களே அவர்கள், 'முடியாது, முடியாது தான்' என்று மனசுக்குள்ளே சொல்லும்போது நம் பிரசங்கத்துக்கு எவ்வளவு சுவை உண்டாகி விடுகிறது! ஒரு கேள்விக் குறிதான்; ஆனாலும் அதில் சூஷ்மம் இருக்கிறது.

இப்படியே ஆச்சரியக் குறிகளால் பிரசங்கத்தில் ஜாலம் செய்யலாம்; ரேடியோப் பிரசங்கத்தில் நன்றாகச் செய்ய லாம். 'என்ன ஆச்சரியம்! ஒரு சின்ன மலர். பங்களாக்களி லெல்லாம் தொங்கும் கொடிகளில் இருக்கின்றனவே, அந்த மாதிரி கண்ணைப் பறிக்கும் வர்ணங்கள் இல்லை; தாமரைப் பூவைப் போன்ற பெரிய உருவம் இல்லை; சுத்த வெள்ளை நிறம்; சிறிய உருவம். இதற்குள்ளே எவ்வளவு நறுமணம்! மனசைக் கவரும் மணம்! மனசின் ஓட்டத்தை நிறுத்தும் மணம்! அதுதான் மல்லிகையின் பெருமை!'

இந்த விஷயத்தைச் செறிவுடைய கட்டுரையில் சில வார்த்தைகளால் எழுதி விடலாம். பிரசங்கத்திலோ, ஜீவ னோடு ஒரு குரல் பேசுகிறதென்பதை நினைவுறுத்தக் கருவி யாக இருக்கும் தொனி பேதங்களைப் பிரயோகம் செய்ய இந்த வாக்கியங்கள் உபயோகப்படுகின்றன.

'அட! இன்னும் இவனுக்குக் கோபம் ஆறவில்லையே! சரி, சரி; இவனுடைய பகைவர்களுக்கு அதோ கதிதான். இந்தத் தவமகனைப் பார்த்துங்கூட இவன் கண்களில் சிவப்புப் போகவில்லையே!'

'புஸ்தகத்தின் உருவ அழகைப் பற்றிச் சொல்லப் போனால், அடே அப்பா! அந்தக் காலம் எங்கே, இந்த காலம் எங்கே?'

'அவனுக்கு உறைத்தால்தானே? அவனும் ஆண் பிள்ளையா? சீ!'

'அடடா! என்ன பக்தி விசுவாசம்! என்ன உபசாரம்! அப்புறம்?'

மேடைப் பிரசங்கத்தில் உபயோகமாகும் சரக்குகள் இவை. இவற்றை ரேடியோப் பிரசங்கத்திலும் உபயோகப் படுத்தினால், இது பேச்சு என்று தோன்றும்.

இன்னும், தமிழ் மொழியில் தொனி பேதங்களால் விஷயத்தை வற்புறுத்தவும், கேட்பவர்களுக்கு மேலே என்ன வருகிறதென்ற ஆவலை உண்டாக்கவும் உபயோகமான தந்திரங்கள் பல உண்டு. அவற்றை எல்லாம் பயன்படுத்த வேண்டும். இடையிடையே ஹாஸ்யம் கலந்தால்—உரிய இடத்தில் ரசம் தப்பாமல் பொருந்தி இருக்கும்படியாகக் கலந்தால்—பிரசங்கத்தின் சுவை மிகுதி ஆகும். வேகத்தைச் சின்னஞ்சிறு வாக்கியங்களால் புலப்படுத்தியும், நிதானத்தைப் பெரிய வாக்கியங்களால் குறிப்பிட்டும் பேசினால் ரசமாக இருக்கும்.

இப்படி அநுபவத்தினாலே—ரேடியோ கேட்கும் அநுபவம், ரேடியோவில் பேசும் அநுபவம் இரண்டையுந்தான் சொல்கிறேன்—தெரிந்துகொள்ளும் 'தொழில் ரகசியங்கள்' எவ்வளவோ உண்டு. ரேடியோப்பிரசங்கம் ஒரு தனிக் கலை. மேடைப் பிரசங்கமும் கலைதான். ஆனால் இரண்டும் ஒரே கலையென்று சொல்ல முடியாது. சிறந்த மேடைப் பிரசங்கி ரேடியோவில் சப்பையாகப் போய்விடலாம். ரேடியோவிலே புகழ்பெற்ற பிரசங்கி மேடைப் பிரசங்கத்துக்கு ஏற்ற விரிவு இல்லாமல் இருக்கலாம். முதலில் சொன்னவகையே அதிகம்.

## 4

இவ்வளவு செய்தியும் நானாக ஊகித்து அறிந்துகொண்டவை. ஆனால் காரியத்தில் நான் செய்த ரேடியோப் பிரசங்கங்கள் எப்படி இருந்தன என்பதை நான் எவ்வாறு சொல்ல முடியும்? அவ்வப்போது ரேடியோக்காரர்கள், 'இன்ன விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டும்' என்று கேட்கிறார்கள்.

அதைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து, 'காமா சோமா' என்று ஓர் உருவம் கொடுத்துக் காற்றிலே மிதக்க விட்டு விடுகிறேன். அப்புறம் அதை யார் கவனிக்கிறார்கள்?

எனக்குக் கொடுத்த விஷயங்களெல்லாம் இலக்கிய சம்பந்தமானவை. ஆகையால் அன்றன்று நிகழும் செய்தி விமரிசனத்தைப் போலில்லாமல், பல காலத்துக்கும் பொதுவான இலக்கிய விமரிசனத்தின் நிழலிலே ஒதுங்கும்படியாகவாவது இவை அமையும் என்று நினைக்கிறேன். காற்றோடு போய்விடாமல் அச்சிலே அமைத்தால் பயன்படுமென்ற எண்ணத்தை அன்பர்கள் உண்டாக்கினமையால் இந்த 'மல்லிகை மாலை'யைத் தொடுக்கும்படியாக நேர்ந்தது.

இந்தப் புஸ்தகத்தில் வானொலிப் பிரசங்கள் இருக்கின்றன. அவற்றைப் பதிப்பித்துக் கொள்ள அனுமதி அளித்த அகில இந்திய ரேடியோ நிலையத்தாரிடம் மிக்க நன்றி பாராட்டுகிறேன். இவற்றில் சில சில இடங்களில் சில விஷயங்களைக் கூட்டியிருக்கிறேன். பிரசங்கத்தை முதலில் எழுதியபொழுது எழுதியவை அவை. மேடைப் பிரசங்கமாக எழுதிப் படித்தது 'புறநானூறும் சரித்திரமும்' என்ற கட்டுரை.

இலக்கிய விமரிசனம் தமிழில் இன்னும் சரியாக உருப்பெறவில்லை. ஆயினும் இலக்கியச் சுவையை எப்படி நுகர வேண்டும் என்பதை உணர்த்தும் 'பிரசங்கக் கட்டுரைகள்' அவ்வப்போது வெளியாகின்றன. இந்த வகையில் இப்புஸ்தகத்தில் உள்ள கட்டுரைகள் சேருமென்று அன்பர்கள் நினைத்தால் அந்த முத்திரையை வைத்துக்கொள்ளட்டும். "இல்லை, இல்லை; அதற்குத் தகுதி போதாது" என்று எடை போட்டாலும் குற்றம் இல்லை; "படிக்க முடிகிறது; படித்து சுசிக்க முடிகிறது. சொன்ன விஷயம் மயக்கமின்றித் தெளிவாகப் புரிகிறது" என்ற மதிப்புரையை அளித்தால் போதும்: காற்றோடே போய் விடாமல், இவைகளை இந்தப் புஸ்தகத்திலே அடைத்ததற்குப் பயன் கிடைத்தது என்று ஆறுதல் பெறுவேன்.

—கி. வா. ஜகந்நாதன்

# கி. வா. ஜ. பேசுகிறார்

## மல்லிகை மாலை

மாலை நேரம். மனம் சஞ்சல மடைந்ததென்று தோட்டத்துக்குள்ளே புகுந்தேன். ஞாபகமெல்லாம் எங்கேயோ இருந்தது. அந்தி மயங்கிக் கையெழுத்து மறையும் தருணம். தோட்டத்துக்குள் புகுந்தபோதே என்னுடைய மனம் எப்படி எப்படியோ அலைந்திருந்தது. மாறி அந்தத் தோட்டத்தைப்பற்றி நினைக்கும்படி ஆகிவிட்டது; கம்மென்று வந்த நறுமணத்தை நான் உணர்ந்தேன்; படர்ந்து சென்றுகொண்டிருந்த மனத்தின் சலனம் மாறி மணத்திலே பதிந்து நிலைபெற்று விட்டது.

மேலே மனம் சும்மா இருக்குமா? அது என்ன மணம் என்று ஆராய்ச்சி செய்யத் தொடங்கியது. நிச்சயமாக மல்லிகையின் சுகந்தம் என்று தெரிந்து போய் விட்டது. என்ன ஆச்சரியம்! ஒரு சின்ன மலர். பங்களாக்களிலெல்லாம் தொங்கும் கொடிகளில் இருக்கின்றனவே, அந்த மாதிரி கண்ணைப் பறிக்கும் வர்ணங்கள் இல்லை; தாமரைப் பூவைப்போன்ற பெரிய உருவமும் இல்லை. சுத்த வெள்ளை நிறம்; சிறிய உருவம். இதற்குள்ளே எவ்வளவு நறுமணம்! மனசைக் கவரும் மணம்! மனசின் ஓட்டத்தை நிறுத்தும் மணம்! அதுதான் மல்லிகையின் பெருமை.

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு தமிழ்நாட்டிலே தமிழில் எவ்வளவோ கவிதைகள் இருந்தன. கவிதையே

வாழ்க்கையென்று நினைக்கும்படி வாழ்க்கையின் அகத்தும் புறத்தும் கவிதை படர்ந்து அங்குள்ள உணர்ச்சிகளையெல்லாம் கோத்துக்கொண்டு நின்றது. அந்தக் காலத்தில், தமிழ்க் கவிதையென்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதை ஒரு புலவர் சொல்லி இருக்கிறார். அவர் விஷயத்தை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்து இலக்கணம் கூறவில்லை. கவிதையைப் பற்றிச் சொல்லுகிறதையே கவிதையாக்கி விட்டார்.

என்ன சொல்லுகிறார்? ஓர் உபமானஞ் சொல்லிக் கவிதை இத்தகையது என்று சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார். மாலைக் காலத்தில் சலனமடைந்த மனசை நின்று கவனிக்கச் செய்ததே, அந்த மல்லிகைப்பூமாதிரி இருக்கிறது தமிழ்க் கவிதை என்று சொல்லுகிறார்.

சொல்என்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னும்
நல்இருந் தீந்தாது நாறுதலால்-மல்லிகையின்
வண்டார் கமழ்தாமம் அன்றே! மலையாத
தண்டாரான் கூடல் தமிழ்.

மல்லிகையின் வண்டு ஆர் கமழ்தாமம் அன்றே-வண்டுகள் மொய்த்துக்கொள்ளும் மல்லிகையின் நறுமண மாலை அல்லவா? எது? தமிழ். எந்தத் தமிழ்? பழைய காலத்தில் தமிழுக்குச் சிங்காசனம் தந்து வளர்த்து வந்த அரசர்கள் எவ்வளவோ பேர் இருந்தாலும், பாண்டியர்களுக்குத்தான் அப்படி வளர்த்ததில் முதல் இடம். சங்கம் வைத்து வளர்த்தவர்கள் பாண்டிய அரசர்கள். அதனால் பாண்டி நாட்டைத் தான் அக்காலத்தில் தமிழ்நாடு என்று சிறப்பித்துச் சொல்வார்கள். அந்தப் பாண்டியருடைய நகரம் மதுரை. அங்கே தான் புலவர்களுடைய சபையாகிய சங்கம் இருந்தது. மதுரைக்குக் கூடல் என்றும் ஒரு பெயர் உண்டு. அந்தக் கூடலிலே வளர்ந்த தமிழ் என்கிறார் புலவர்.

பாண்டியனைப்பற்றிப் புலவர் சொல்கிறது நயமாக இருக்கிறது. அவனுடைய ஊரில் தமிழாகிய மல்லிகை மாலை இருக்கிறது. மற்ற ஊரிலிருந்து வந்தவர்கள் மணம் நுகர்ந்து அதைப் பாராட்டி அணிந்து கொள்கிறார்கள். அவன் அணிந்துகொண்டிருக்கிற வாஸ்தவமான மாலை எப்படிப் பட்டது தெரியுமா? அதை வேறு யாரும் அணிந்து கொள்ளமாட்டார்கள். மலையாத தண்தாரான்-வேறுயாரும் போட்டுக் கொள்ளாத குளிர்ந்த மாலையை உடையவன் என்று வருணிக்கிறார் புலவர். அந்த மாலை இன்னது என்று உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அதுதான் வேப்பம்பூ மாலை!

பாண்டியன் வேறு யாரும் அணிய விரும்பாத வேப்பம் பூ மாலையைத் தரித்திருந்தாலும் அவனுடைய ஊரிலே தான் நல்ல சரக்கு இருக்கிறது. மலையாத தண்தாரா னுடைய கூடலிலே தமிழ் இருக்கிறது. தமிழ்என்பது என்ன? மல்லிகையின் வண்டு ஆர் கமழ் தாமம் அது. ஜலதோஷம் பிடித்தவர்களுக்கு மூக்கு உபயோகப்படாவிட்டாலும் வாசனையை அறியும் நிபுணர்கள்(Specialists)இருக்கிறார் கள், இதில் நறுமணம் இருக்கிறதென்று தெரிவிக்க. அந்த நிபுணர்களாகிய, அல்லது நம்மைக்காட்டிலும் மணம் அறிவதில் ரசிகர்களாகிய, வண்டுகள் நமக்கு முன்னே அந்த மல்லிகையின் மணம் கமழும் தாமத்தைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆகையால்தான் கவி வண்டு ஆர் கமழ் தாமம் அன்றே என்று சொல்கிறார்.

மல்லிகை மாலைக்குப் பக்கத்தில் வந்து விட்டோம். நம்மைக் கண்டவுடன் பரமரசிகர்களாகிய மதுரங்கள் நம் மீடத்திலே உள்ள கருணையினால் நமக்கு இடம்கொடுத்துப் போய்விட்டன. இப்போது இந்தச் சிறிய மலரின் மகத்துவம்; இது கமழ்கிறதே இந்தக் கவர்ச்சி வாய்ந்த சக்தி, எப்படி வந்தது என்று சோதனை போடலாமா? மலரைப்

பித்து விட வேண்டாம். இதை இருக்கிறபடியே வைத்துப் பார்க்கலாம். கவி சொல்லுகிறாரே அதைக் கேட்கலாம்.

மல்லிகைப் பூவில் மெல்லிய இதழ்களெல்லாம் சேர்ந்த எளிய உருவம் இருக்கிறது. வர்ணம் சுத்த வெள்ளை. அதை வர்ணமென்று சொல்வதுகூடச் சரியல்ல. பார்க்கும்போது அந்த மலரின் உருவம் கண்ணில் பட்டாலும் நிறம் மனதில் படுவதில்லை. ஆனாலும் எல்லாவற்றிற்கும் மேலாக மல்லிகையை மல்லிகையாகவும் மலராகவும் நம் மனதைக் கவர்வதாகவும் செய்வது எது தெரியுமா? அதன் நறுமணம். மல்லிகையின் மகரந்தம் சின்னஞ் சிறிய இடத்துக்குள் அடங்கிக் கிடந்தாலும் அதன் நறுமணம் எங்கும் பரந்து இனிமை ஊட்டுகிறது.

தமிழும் இத்தகையதுதான். தமிழ்க் கவிதையில் சொல், பொருள், அலங்காரம் என்று மூன்று இருக்கின்றன. சொல் அல்லது வார்த்தைதான் இதழ்கள்; அலங்காரம் வர்ணம்; பொருள்தான் நறுமணம். மல்லிகை மலரில் மணத்தைத் தாங்கிக்கொள்வதற்காக மாத்திரம் மெல்லிய வெள்ளிய இதழ்கள் இருக்கின்றன. கரடு முரடாக இல்லாமல் உள்ள அந்த மலருக்குள்ளே எங்கும் பரவும் மணம் தங்கியிருக்கிறது. மணத்தை நாம் நுகரும்போது மலரின் உருவத்தையும் நிறத்தையும் மறந்துபோய்விடுகிறோம். மல்லிகையின் வாசனையில் மனதைப் பறிகொடுத்து நிற்கிறோம்; நம்மையே நாம் மறக்கும் நிலை வந்துவிடுகிறது. கவிதையிலும், சொற்களாகிய இதழ்களும் அவற்றின் கட்டுக்கோப்பாகிய உருவமும் அலங்காரங்களாகிய வர்ணங்களும்தலைமையுடையன அல்ல; பொருள்தான்; அது சுருங்கிய உருவத்திலே அமைந்திருந்தாலும் அதன் பெருமை நினைக்க நினைக்க விரிந்து கொடுத்து இன்பத்தைத் தரவல்லது.

இப்போது கவிஞனுடைய வார்த்தைகளை மறுபடியும் கவனிக்கலாம்.

சொல் என்னும் பூம்போது தோற்றி—சொற்களாகிய மெல்லிய பூவென்னும் உருவத்தைத் தோன்றச் செய்து, பொருள் என்னும் நல் இருந் தீந்தாது நாறுதலால்—கவியின் கருத்தாகிய நல்ல பெரிய இனிமையான மகரந்தம் வாசனை வீசுவதனால், மல்லிகையின் வண்டு ஆர் கமழ் தாமம் அன்றே, மலையாத தண்தாரான் கூடல் தமிழ்—மல்லிகை மாலையைப் போன்றது பாண்டியனுக்குரிய மதுரையிலே வளர்ந்த தமிழ்.

இதுதான் அன்று, இரண்டாயிர வருஷங்களுக்கு முன் தமிழர்கள் கவிதையைப்பற்றி எண்ணிய எண்ணம். எளிய மெல்லிய சொற்களாகி, உயர்ந்த இனிமையான ஆழ்ந்த கருத்துக்களைக்கொண்டு நிற்பது கவிதை என்பதே அவர்களுடைய கொள்கை.

அக்காலத்துக் கவிதைகளில் பெரும்பாலானவை அகவற் பாட்டுக்கள். வசனத்துக்கு அடுத்தபடி நெருடு இல்லாமல் அமைந்தது அகவல். அந்தப் பாடல்களில் இயற்கைத் தேவியின் அழகும், மனித உள்ளத்தின் துடிப்புக்களும் சொல்லப் பட்டன.

காலம் தன்னுடைய வேலையை நடத்திக்கொண்டே வந்தது. கவிதை செய்யுளாயிற்று. கட்டுப்பாடுகளும் கோணல்களும் கணக்கின்றிப் புகுந்து கொண்டன. யாப்பு நயங்களும், அலங்காரங்களும் செய்யுளை நிரப்பின. முழம் போட்டு அளப்பதைப் போல பாடல்களை அளந்து பார்த்து இயற்றினார்கள். கருத்தைக் காட்டிலும் சொல்லுக்கும் சொற்களின் கட்டுக்கோப்புக்கும் அலங்காரத்திற்கும் கௌரவம் உண்டாயிற்று. கம்பீரமான கங்காப் பிரவாகமாக இருந்த கவிதை போய், மூலைக்கு மூலை திரும்பித் தேங்கி வற்றியும் குழம்பியும் செல்லும் சிறு வாய்க்காலைப் போன்ற செய்யுள் உண்டாயிற்று.

## 2

இந்த நிலையில், நேற்று, இருநூறு வருஷங்களுக்கு முன் இருந்த ஒரு புலவர் செய்யுளைப்பற்றி என்ன சொல்கிறார், கேளுங்கள். கவிதையை மல்லிகை மாலையாக அன்று ஒரு கவிஞர் சொன்னதைக் கேட்டோம். நேற்று வந்த ஒரு புலவர் செய்யுளை ஒரு கட்டிடம் என்று சொல்கிறார். சொல்கிற போதே வார்த்தைகளைச் சிலேடையாக அடுக்கிறார்.

—மல்லல்உறச்
சந்தி பொருத்தித் தகுஞ்சீர் கெடாதடுக்கிப்
புந்தி மகிழற் புதவணித்தா—முந்தையோர்
செய்யுள்போற் செய்த திருக்கோயில்.

இங்கே புலவர் திருக்கோயில் ஒன்றுக்கு உபமானமாகச் செய்யுளைச் சொல்கிறார்; அவருக்குப் பிரதானமாக இருப்பது கோயில்.

மல்லல்உற - வளம் பொருந்தும்படி, சந்தி பொருத்தி - எழுத்திலக்கணத்தின்படி அமைந்த சந்திகளெல்லாம் தவறாமல் பொருந்தும்படி செய்து, தகும் சீர் கெடாது அடுக்கி - ஏற்ற சீர்களெல்லாம் யாப்பிலக்கணத்தின்படி குற்றப்படாமல் அடுக்கி, புந்தி மகிழ் அற்புத அணித்தா-புத்தியில் அற்புத உணர்ச்சியை ஊட்டக்கூடிய அலங்காரங்களை உடையதாகி, முந்தையோர் செய்யுள்போல் - முன்னோர்கள் இயற்றிய செய்யுள் இருப்பதுபோல, கோயில் எப்படி இருந்தது? அந்த வார்த்தைகளையே திருப்பிப் படித்தால் போதும். சந்தி பொருந்தி-கல்லுக்குக் கல் இடையிலே சந்து விழாதபடி பொருத்தி, தகும்சீர் கெடாது அடுக்கி-கட்டடத்திற்கேற்ற கனம் கெடாமல் மட்டமாக அடுக்கி, புந்தி மகிழ் அற்புத அணித்தா-புத்தியில் மகா அற்புதமென்று மகிழுகின்ற அலங்காரங்களை உடையதாகி, செய்த திருக்கோயில்.

எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணமெல்லாம் அமைந்தது கவிதை என்று புலவர் அபிப்பிராயப்படுகிறார் என்றுதான் தெரிகிறது. முக்கியமான விஷயத்தையே புலவர் சொல்லவில்லை. அதுதான் பொருள்; உள்ளத்து உணர்ச்சியையும் கருத்தையுந்தான் பொருளென்று சொல்லுகிறோம்; அதைப்பற்றி ஒரு வார்த்தை இல்லை. வெறும் கல் கட்டிடமாக வைத்து விட்டார் பாட்டை. முன்னே சொன்ன மல்லிகை மாலை எங்கே? இந்த வெறுங் கல் கட்டிடம் எங்கே?

3

இப்போது இந்த இரண்டு காலத்துக் கவிதைகளுக்கும் உதாரணங்களைப் பார்க்கலாம்.

கடற்கரைப் பக்கத்திலேயுள்ள சிறிய ஊர்; அங்கே காதலி ஒருத்தி காதலனுடைய இன்ப அணைப்பிலே தன்னை இழந்து பிறகு அவன் பிரியவே, தன்னை உணர்ந்தாள். பிரிவுத் துன்பம் அதிகரித்தது. காதலனைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள். வீட்டிலே ஒரு வேலையும் ஓடவில்லை. தன் ஆசைக் காதலனோடு பழகிய கடற்கரைச் சோலைக்குப் போய், அங்கே அவன் நடந்த இடத்தையும் நின்ற இடத்தையும் பார்த்தாவது ஆறுதல் அடையலாமென்று போனாள் போய்ச் சோலையைப் பார்த்தாள். பிறகு கடற்கரை மணலில் அவன் தேரைச் செலுத்திக்கொண்டு திரும்பிப் போனபோது உண்டான சுவடுகளைப் பார்க்க வந்தாள். அந்தச் சுவட்டைப் பார்ப்பதிலே அவளுக்கு ஓர் ஆனந்தம். கடற்கரை அல்லவா? நண்டுகளெல்லாம் அங்கும் இங்கும் ஓடி விளையாடிக்கொண்டிருந்தன. தேர் போன சுவட்டினூடே ஓடியோடி அண்டையிலுள்ள மணலைத் தள்ளிக் கொண்டானடித்தன. அதைப் பார்க்கையில் தலைவிக்குப் பொறுக்கவில்லை. நண்டுகளின் விளையாட்டினால்

தேர்ச் சுவடு சிதைந்து போகிறதே! அவள் மனமும் அல்லவா சிதைகிறது! 'அட! இங்கேயும் நமக்குத் துன்பந்தானா?' என்று பொருமுகிறாள். அவளுக்கு உண்டாயிருக்கும் காதற்பித்து அளவு கடந்தது. இன்னாரிடம் இன்ன பேசுவது என்று தெரியவில்லை. நண்டைப் பார்த்துப் பொங்கிவரும் உணர்ச்சியைக் கொட்டுகிறாள்.

"நண்டு ராஜாவே, உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள் கிறேன்! என்னுடைய காதலனது தேர் போன வழியைக் கண்ணாரக் கண்டு ஆறுதல் பெறலாமென்று வந்திருக் கிறேன். நீ அந்த வழிமேல் நடந்து அதைச் சிதைக்காதே" என்று நயந்து வேண்டிக் கொள்கிறாள். கவியில் இந்தக் கருத்து எப்படி மலர்ந்து மணக்கிறது பார்க்கலாம்.

கொடுத்தாள் அலவ, குறையாம் இரப்பேம்,
ஒடுங்கா ஒலிகடற் சேர்ப்பன்—நெடுந்தேர்
கடந்த வழியைஎம் கண்ணாரக் காண
நடந்து சிதையாதி நீ.

"உனக்கு அழகாக வளைந்த கால்கள் இருக்கின்றன; அவற்றை இந்தக் காரியத்தைச் செய்வதற்கு உபயோகிக் காதே" என்று ஞாபக மூட்டுபவளைப்போலக் 'கொடுத்தாள் அலவ-வளைந்த காலையுடைய நண்டே' என்று அழைக் கிறாள். 'குறையாம் இரப்பேம்'—பாட்டினுடைய ஜீவன் இதில்தான் இருக்கிறது. "என்னுடைய காரியம் ஒன்றை உன்னிடத்தில் யாசிக்கிறேன்." ஆம்! அவள் தலைவன் பிரிவி னால் நைந்து போய் நிற்கிறாள்; அவளுக்குத் தாரகமாக இருக்கிறது தேர்ச் சுவடு; அதைப் பார்ப்பதிலே அவள் உயிர் நிற்கிறது. அது சிதைந்தால் அவள் உள்ளமும் உயிரும் சிதை கின்றன. ஆகையால் அவள் உண்மையில் கெஞ்சித்தான் வேண்டுகிறாள். இந்த வார்த்தைகள் அவளுடைய இருதயத் திலிருந்து வெளிவருகின்றன. எதை யாசிக்கிறாள்? ஒடுங்கா ஒலிகடற் சேர்ப்பன்-அடங்காத முழக்கத்தையுடைய கடல்

துறைக்குத் தலைவனாகிய என் காதலனுடைய, நெடுந்தேர்-உயர்ந்த தேரானது, கடந்த வழியை-சென்ற வழியை, எம் கண் ஆரக்காண-என்னுடைய கண்ணாரக் கண்டு ஆறுதல் பெற வேண்டும்; அதற்காக, நடந்து சிதையாதி நீ-நீ அதன் மேல் நடந்து அதைச் சிதைக்காதே.

அவளுடைய பணிவும், பெண்மைத்தன்மையும், அந்தத் தேர் வழியைப் பார்ப்பதிலே அவள் தன் உயிரையே சார்த்தி வைத்திருப்பதும் பாட்டில் எவ்வளவு நன்றாக மணக்கின்றன! இதுதான் மல்லிகையின் வண்டார் கமழ்தாமம்.

## 4

கல்கட்டிட காலம். இதேமாதிரி ஒரு காட்சியை ஒரு புலவர் செய்யுளிற் சொல்கிறார். வழியைக் கண்டு சிதைப்பதற்குப் பதிலாகக் கடலின் அலை சிதைக்கிறது. அந்தக் கடலைப் பார்த்துக் காதலி சொல்வதாக அமைந்திருக்கிறது செய்யுள்.

விரதத் தவர்தொழும் ஆரூரர், வீதி விடங்கர், அஞ்சப்
பரதத் தவர்,கண்டம் காரெனச் செய்த பனிக்கடலே,
சுரதத் துறைமறந் தேகினர் தேர்வழி தூர்ப்ப
தென்னோ?
இரதத் தருமை தெரியாதன் றோவிடம் ஈந்தவர்க்கே!

இங்கே தலைவியின் காதல் நமக்குத் தெரியவில்லை. அவள் கோபந்தான் தெரிகிறது; கோபத்தால் சிலேடையாக வையும் சக்தியுடையவளென்று தெரிகிறது. வெள்ளையாகச் சொன்னால் முன் கவியிலே நாம் பார்த்த காதலியையே காணவில்லை. புலவர்தாம் தம்முடைய சிலேடையணியோடு நிற்கிறார்.

கடலில் உண்டான விஷத்தைச் சிவபெருமான் நுகர்ந்தார். இந்தப் புராணக் கதையைப் புலவர் உபயோகித்துச் சொல்கிறார்.

விரதத்தவர் தொழும் ஆரூரர் வீதிவிடங்கர்-தவம் செய்பவர்கள் தொழுகின்ற திருவாரூரில் இருக்கும் வீதி விடங்கர், அஞ்சப்பரதத்தவர்-ஹம்ச நடனம் புரிபவராகிய சிவபெருமானுடைய, கண்டம் கார் எனச் செய்த பனிக் கடலே-திருக்கழுத்தை மேகமென்று சொல்லும்படி கறுப் பாகச் செய்த குளிர்ச்சியை உடைய கடலே, சுரதத்துறை மறந்து ஏகினர்-லீலைகளின் வகைகளை மறந்துவிட்டுப் போன காதலருடைய, தேர்வழி-தேர்போன வழியை, தூர்ப்பது என்னோ-தூரும்படி செய்வது ஏன்?-அவளே பதிலும் சொல்லிக் கொள்கிறாள். இரதத்து அருமை தெரி யாதன்றோ, விடம் ஈந்தவர்க்கே-விஷத்தைத் தந்த கொடிய வர்களுக்கு இரதத்தின் அருமை தெரியாதல்லவா? தமிழில் ரஸம் என்பது இரதம் என்று வரும். 'விஷம் கொடுத்தவர் களுக்கு ரஸத்தின் அருமை தெரியுமா என்ன?' என்று வேறு அர்த்தம் ஒன்று தொனிக்கிறது. சிலேடையோடு வந்து வேற்றுப் பொருள் வைப்பணி என்று இதைச் சொல்லு வார்கள்.

எல்லாம் சரிதான். 'சுரதத்துறை மறந்து' என்னும் காதலி, சுரதத்துறைகளைத்தான் முக்கியமாக எண்ணி னாளா? சிலேடையிலேதான் வைதாளா? இரதம் என்ற வார்த்தையை இரண்டு அர்த்தம் வரும்படி அமைக்க வேண் டும் என்று நினைத்தார் புலவர். "இரதத்தருமை தெரியா தன்றோ விட மீந்தவர்க்கே" என்று கடைசி அடியை முதலிலே பாடிக்கொண்டார். அதற்கு ஏற்ற எதுகை வரும் படி வார்த்தைகளை எடுத்து அடுக்கினார். 'சுரதத்துறை' தான் அவருக்குக் கிடைத்தது. எல்லாவற்றையும் மறந்து 'இரதத்தருமை' என்ற சொற்களிலே தலைமையை வைத்துப் பாட்டைப் பாடின அவரிடம் மல்லிகை மலர் மாலையை நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்?

இந்தமாதிரி அலங்காரங்களையும் சொல்லில் வரும் சமற்காரங்களையும் அமைப்பதற்கும் ஒரு பழக்கம்

வேண்டும். கழைக்கூத்தாடி டபடப வென்று காதை அடைக் கும்படி பறையை முழக்கிக்கொண்டும் அதற்குமேல் தன் தொண்டைப் பலத்தை வெளிப்படுத்திக் கொண்டும் உடம்பை வளைக்காதபடி எல்லாம் வளைத்துக் காட்டு கிறானே, அந்த வித்தையைப் பார்த்து நாம் வியக்க வில்லையா? அதைச் சேர்ந்தது இத்தகைய செய்யுள் வித்தை. முதலில் சொன்ன கவிதையோ அழகும் மென்மை யும் நிரம்பிய அணங்கு ஒருத்தி இன்னிசைக் கீதத்தினிடையே மெல்லென்று நடனம் ஆடினால் எப்படி இருக்கும், அப்படி இருக்கும் அநுபவத்தைத் தருவது. கழைக்கூத்தாடியின் வித்தையில் ஒவ்வொரு கணமும் அவனைத் தனியே நின்று பார்க்கிறோம். மெல்லியலின் இன்னிசைக் கூத்திலே நம்மையே மறந்துவிடுகிறோம்; தூங்கியே போகிறோம்.

சொற்பாவும் பொருள்தெரிந்து தூய்மை நோக்கித்
தூங்காதார் மனத்திருளை வாங்கா தானை

என்று அப்பர் சொல்கிறார். பாரதியாரும் கவிதையாம் மணிப்பெயர்க் காதலியோடு பெற்ற அனுபவத்தை,

நின்னொடு களித்து நினைவிழந் திருந்த
என்னை

என்று சொல்கிறார்.

அன்று கவிதை இருந்தது; நேற்று செய்யுள் ஆரவா ரித்தது; இன்று பாரதியின் கவிக்குயில் கூவுகிறது. பாரதி சகாப்தம் ஆரம்பமாகி யிருக்கிறது. பாரதி, கவிதை யுலகத் திலே புது யுகத்தை உண்டாக்கினார்.

பள்ளத்தி லேநெடு நாளழு கும்கெட்ட
பாசியை எற்றிவிடும்-பெரு
வெள்ளத்தைப் போலக்

கவிதை வெறி மூண்டு தம் பாட்டுத் திறத்தாலே இவ்வையத் தையே பாலிக்கும் கவிமன்னர் பாரதியார். அவரால் இன்று

அருணோதயம் ஆகியிருக்கிறது. இனிக் கவிதையுலகத்தில் ஒளி பரவ வேண்டும்; அதனால் தமிழுலகம் இன்பக் களி துளும்பி எழ வேண்டும்.

# மண் சுமந்த கதை

அழகிய மலர், மணம் செறிந்து தளதளவென்று கண்ணையும் கருத்தையும் கவர்கிறது. அதைக் கண்ட உடனே மனசுக்கு ஏதோ ஒரு தனி உல்லாச உணர்ச்சி உண்டாகிறது. மணத்தின் மோகன சக்தியும் நிறத்தின் கவர்ச்சியும் நம்மை ஆட்கொள்கின்றன.

மலரின் நிறத்திலே ஈடுபட்டால் அதை அப்படியே சிறிது நேரம் பார்த்து அனுபவிக்கிறோம்; அதன் மணம் நமக்குப் புலப்படும்போது இன்னும் சிறிது அதிகமாக நம் மனத்தை அதன்பால் செலுத்தி இன்புறுகிறோம். அதனிடம் இயற்கையாக உள்ள மென்மையை அநுபவிக்க ஆரம்பித்தாலோ, சில நேரம் பிரமித்து நின்று விடுகிறோம்.

மலரின் நிறம் எல்லோருடைய கண்ணிலும் சட்டென்று படும்; அதன் மணம் சற்றுக் கூர்ந்து கவனிப்பவர்களுக்குத் தெரியும்; அதன் மென்மையோ நன்றாகக் கவனிப்பவர்களுக்குத்தான் புலப்படும். மலரின் முழு அழகையும் நுகர வேண்டுமானால் நன்றாகக் கவனித்து உள்ளத்தை அதன் கண்ணே செலுத்தித்தான் பார்க்க வேண்டும்.

அழகுக்கு இருப்பிடமாகிய கலைப் பொருள்கள் எல்லாவற்றையும் நறுமண மலர்களாகச் சொல்லி விடலாம். தெய்வத்தைப் பூஜிக்க மலர்கள் உதவுகின்றன. கலைப் பொருள்களும் மிகச் சிறந்த மதிப்பை உடையனவாய் உயர்ந்த இடத்திலே விளங்கக் கூடியவை. எவ்வளவுக்கு எவ்வளவு அழகுணர்ச்சியோடும் அன்போடும் மனிதன்

அவற்றை நுகரத் தலைபடுகிறானோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவற்றின் இனிமை பெருகிக் கிடக்கும்.

கலைப் பொருள்களிலே சிறந்தது கவிதை. கலை மரத்திலே விளைந்த பல பல பொருள்களிலே மலரைப்போல நிற்பது அது. தன்னுடைய சுகந்தத்தினாலே வண்டினங்களை அழையாது அழைக்கும் ஆற்றல் வாய்ந்தது. அதன்கண் ஈடுபட ஈடுபட இன்பம் சுரக்கும். "நவில்தொறும் நூல்நயம் போலும்" என்று திருவள்ளுவர் சொல்கிறார். மரத்தில் இலைக் கூட்டத்துக்கு நடுவே மலர்கள் விளங்குவது போலச் செய்யுட்களின் கூட்டத்தில் சுவையுடைய கவிதைகள் விளங்குகின்றன. மணமில்லாத மலரையும் மணமுள்ள மலரையும் வைத்து ஒப்பு நோக்கும்போது மணமுள்ள மலரின் சிறப்பு நன்றாகத் தெரிகிறது. கவியுலகத்திலும் அப்படிப் பார்க்க வழி இருக்கிறது.

ஒரு கருத்தைப் பல புலவர்கள் எடுத்து ஆண்டிருப்பார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரியத்திற்காக ஒவ்வொரு முறையில் அந்தக் கருத்தைக் கோலம் செய்திருப்பார்கள்; சில புன் கவிகள் அதை அலங்கோலம் செய்வதும் உண்டு. உபயோகமில்லாத பொருளென்று நாம் நினைக்கும் ஒன்றைக் கவியுலகத்திலே கவிஞன் மிகவும் சிறந்ததாகக் காட்டி விடுவான். மாயா ஜால மந்திர சக்தியை விஞ்சிய அவனுடைய மோகன வித்தை உலகில் எங்கும் இல்லை.

## 2

மதுரையில் ஸ்ரீ சொக்கநாதக் கடவுள் அறுபத்துநான்கு திருவிளையாடல்களைப் புரிந்தருளினார். அடியார்களிடத்தில் அப்பிரானுக்கு உள்ள கருணையைப் புலப்படுத்துவன அவை. அவற்றுள் மண் சுமந்த திருவிளையாடல் என்பது ஒன்று. மாணிக்கவாசகரைச் சிறையில் அடைத்த பாண்டியனுக்கு அப்பெரியாருடைய பெருமையை இறைவர் புலப்படுத்த எண்ணினார். வையையிலே பெருவெள்ளம் வரச்

செய்தார். மதுரைமா நகரில் வையைக் கரையை உயர்த்தும் முயற்சியில் நகரமக்கள் ஈடுபட்டனர். ஒவ்வொருவருக்கும் அந்த வேலையில் பங்கு பாண்டிய அரசனால் வரையறுத்து அளிக்கப்பட்டது. அங்கே பிட்டுச் சுட்டு வியாபாரம் செய்து வந்த ஒரு கிழவிக்குச் சொக்கநாதக் கடவுளே வேலையாளாக வந்து வேலையைக் கவனிக்காமல் பேசிக்கொண்டே இருந்தார். மேற்பார்வை பார்த்து வந்த பாண்டியன் அவரைக் கண்டு தன் கைப் பிரம்பால் அவர் முதுகில் அடித்தான். அவ்வடி சர்வ சராசரங்களின் மேலும் பட்டது. வேலையாளாக வந்த சொக்கநாதர் ஒரு கூடை மண் கொட்டி உடைப்பை அடைத்து மறைந்தருளினார். எல்லா உயிர்களிடத்திலும் உறையும் சிவபெருமானே வேலையாளாக வந்தது தெரிந்து பாண்டியன் மனமுருகினான். மாணிக்கவாசகரைச் சிறையினின்றும் விடுதலை செய்தான். அன்பர்களெல்லாம் சொக்கநாதரைத் துதித்தனர்.

இந்தக் கதை தமிழில் பிற்காலத்து இலக்கியங்களில் அடிக்கடி வரும். எத்தனையோ புலவர்கள் இந்தத் திருவிளையாடற் செய்தியைச் சாதுரியமாக எடுத்து ஆண்டிருக்கிறார்கள்.

மாணிக்கவாசகர் பொருட்டாகவே வையையில் வெள்ளம் வரச் செய்ததாக அசரீரி சொல்லப் பாண்டியன் அவரை விடுவித்து வழிபட்டான் என்பது புராணம்.

மாணிக்கவாசகர் சிறந்த சிவபக்தர்! சைவ சமய ஆசாரியர்களில் ஒருவர். அவர் மனம் உருகிப் பாடிய பாடல்களைத் திருவாசகத்திலே காணலாம். இறைவன் தமக்காக மண் சுமந்து அடிபட்டுப் புண் சுமந்த செய்தியை அவர் பல இடங்களில் சொல்லியிருக்கிறார். ''மண்ணைச் சுமந்து பிட்டு விற்பவளிடத்தில் பிட்டையே கூலியாக வாங்கிப் பாண்டியனுடைய பிரம்பினால் அடிபட்டுப் புண் சுமந்த பொன்மேனியைப் பாடுவோம்'' என்று ஓரிடத்தில் பாடுகிறார்.

மண் சுமப்பது எத்தனை இழிவான் வேலை! அதற்குக் கூலி வாங்குவது அதைவிடக் கேவலம்; ஒருவன் அடிக்க அடிபடுவது சகிக்க முடியாத இழிவு. இவ்வளவையும் அப் பெருமான் பக்தர் பொருட்டுச் செய்தான். சிறிது நாகரிகம் படைத்த மனிதன் கூடச் செய்ய அருவருக்கும் இந்த வேலையைச் செய்தவன் எத்தகையவன்? அவன் பெருமையைப் பண் சுமந்த பாடல்கள் எத்தனையோ காலமாகப் பாடி வருகின்றன. கருணையே திருவுருவாக உடைய எம்பெருமாட்டியை வாம பாகத்தில் ஏற்றிருக்கிறவன், திருப்பெருந்துறையில்இருப்பவன்,வானுலகமெல்லாம் பரவிய கீர்த்தியை உடையவன், எல்லா உலகங்களுக்கும் ஈசன், நெற்றியிலே கண்படைத்த பெரியவன். அவன் மதுரையிலே மண் சுமந்தான், கூலி வாங்கினான், அடிபட்டான் என்றால் எவ்வளவு பெருங் கருணை அவன்பால் இருக்க வேண்டும்! இந்தச் செய்தியைக் கேட்கும்போதே அன்பர்களுடைய உள்ளம் கசியும். இதற்குக் காரணமான மாணிக்கவாசகர் உருகுவதற்குச் சொல்ல வேண்டுமா? பெண்களை எல்லாம் அழைத்து, "அந்தப் புண் சுமந்த திருமேனியைப் பாடுதுங்காண் அம்மானாய்" என்று அம்மானைப் பாட்டாகப் பாடுகிறார்.

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்!

[பண்-ராகம். மண்டலம்-உலகங்கள். கலி-முழக்கம். கோ-அரசன்.]

பக்தர்களுக்கு இனிக்கும் பாட்டு இது.

3

மண் சுமந்த கதையில் பல கட்டங்கள் இருக்கின்றன. வந்தியின் பிட்டுக்காக இறைவர் வந்தது, மண் சுமந்தது, கூலி வாங்கினது, அடிபட்டது, அடித்த பாண்டியன் உட்பட எல்லோருடைய முதுகிலும் அந்த அடி பட்டது, பிறகு பாண்டியன் உணர்வு பெற்று மாணிக்கவாசகரை விடுதலை செய்தது என்று கதை படர்ந்து நடக்கிறது. இதில் கடைசிப் பகுதியை ஒருவர் நினைத்தார். இறைவரது முதுகிலே அடித்த அடி எங்கும்பட்டது. ஆகையால் அவர் எவ்வுயிரிலும் நீங்காது உறைபவர் என்ற உண்மை வெளியாயிற்று இப்படிச் சொன்னாலே போதும். ஆனால் அவர் இந்தச் செய்தியைப் பின்னும் நன்றாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நினைத்தார். 'கடவுள் எங்கும் பரந்தவர் என்று இதனால் தெரியவில்லையா?' என்று கேட்டிருக்கலாம். அதற்கு மேலும் போனால், **எங்கள் சிவபெருமான்** எங்கும் நிறைந்தவர் என்பது தெளிவாகிறது' என்று சொல்லியிருக்கலாம். அதுவும் அவருக்குப் போதவில்லை. சமய அறிவிலே ஊறினவர் அவர்; சமயவாதி. இந்தச் செய்தியைக் கொண்டு வாதம் செய்ய, வாய்ச் சண்டை போட எண்ணினார். "உங்கள் சாமி உலகமெல்லாம் நிறைந்தவர் என்று சொல்ல முடியுமா? பிரமா, விஷ்ணு, சிவன் என்று வரிசையாக எண்ணுகிறீர்களே. பிரமன் ஒரு சமயம் அடிபட்டான். முருகன் நறுக்கென்று அவன் தலையிலே குட்டினான். பிரமதேவன் எங்கும் நிறைந்தவனாக இருந்தானானால் அந்தக் குட்டு எல்லோருடைய தலையிலும் பட்டிருக்க வேண்டுமே! அப்படி நடக்கவில்லையே! கிடக்கட்டும். மகா விஷ்ணுவின் கதை என்ன? இடைச்சி கையில் அடிபட்டாரே. அந்த அடி யார்மேல் பட்டது? எங்கள் பசுபதிமேல் பட்ட அடி எல்லார் மேலும் பட்டது பாருங்கள். இதனால் யார் பெரியவர் என்று தெரிகிறது?" - இப்படியெல்லாம்

அவருடைய கற்பனை ஓடியது. அதை ஒரு வெண்பாவாகச் சொல்லி விட்டார்.

எண்கணனைக் குட்டியகுட்டு எங்கேனும் பட்டதோ
மங்கைஅரி மேல்அடித்த மத்தடிபோய்—எங்கேனும்
பட்டதோ எங்கள் பசுபதிமேற் பட்ட அடி
பட்டதே எவ்வுயிர்க்கும் பார்.

[எண்கணன்-எட்டுக் கண்ணையுடைய பிரமன். அரி—கண்ணன்.]

மண் சுமந்த கதையில் இறைவர் தாம் பட்ட அடியை மறந்தாலும் இவர் மறக்கவில்லை. கடவுள் மேனி புண்பட்டதோ இல்லையோ, மற்றத் தெய்வங்களை வழிபடும் அன்பர் மனம் புண்படும்படி பாட்டால் அடிக்கிறார், இந்தச் சமயவாதி.

4

ஒரு கவிஞன் இந்தச் செய்தியைக் கேட்டான். அவன் பக்தனாக இருந்திருக்கலாம். ஆனால் நிச்சயமாகச் சமய வாதி அல்ல. அவனுடைய கவிதையுள்ளம் வேலை செய்ய ஆரம்பித்தது. சொக்கநாதப் பெருமானைக் கடவுளென்றோ எல்லாத் தெய்வங்களிலும் உயர்ந்தவரென்றோ சித்தாந்தம் செய்ய அவன் வரவில்லை போலும்! அவர் மண் சுமந்து ஒரே கூடையினால் வையை உடைப்பை அடைத்தார் என்ற காட்சியை மாத்திரம் அவன் அநுபவித்தான்.

'கவிக்கு உபயோகமான பொருள் அல்லவா இது? இதைக் கொண்டு சொக்கநாதரையே அழைத்து வந்து விடலாமே!' என்று கவிஞன் நினைத்திருக்க வேண்டும். அவருக்கு மற்றவர்கள் கொடுத்திருந்த வேஷத்தை எல்லாம் களைந்து விட்டுக் காதலனாக வேஷம் புனைந்து விட்டான். காதலன் என்றால் காதலி இல்லாமலா?

காதலன் காதலியைப் பிரிந்து இருக்கிறான். "அவர் இன்னும் வரவில்லையே!" என்று அவள் உருகுகிறாள். கண்ணீர் ஆறாகக் கடலாகப் பிரவகிக்கிறது. அதைப் பார்த்துத் தோழி சொக்கநாதராகிய காதலனிடம் முறையிடுகிறாள்.

"வேலைப் போலக் கூர்மையான பார்வை பெற்ற கண்களை உடையவள் இந்தக் கன்னிகை. இந்தக் கண்கள் இப்போது கூர்மையை இழந்து அழுகின்றன. கண்ணீர் பிரவாகமாகப் பொங்கிக் கடலைப்போலப் பெருகுகிறது. இதற்கும் எல்லையுண்டு. இது பெருகி உடைத்து விட்டால் அப்புறம் அடைக்க முடியுமா என்ன? அதற்கும் உபாயம் உண்டோ?... ஆகோ! வையை யாற்று வெள்ளத்தை அடைத்த பேர்வழி அல்லவா நீ! அதுமாதிரி இதை அடைத்து விடலாமென்று நினைக்கிறாயா? அது இங்கே நடக்காது. அங்கே சும்மாடு இல்லாமலே ஏதோ ஒரு கூடை மண்ணைக் கைலாகவத்திலே சட்டென்று போட்டாய்; அடைந்து போய்விட்டது. இங்கே அந்தத் தந்திரம் பலியாது. சும்மாடு கட்டிக்கொண்டு சுமந்து சுமந்து கூடைமேல் கூடை போட்டு அடைத்தாலும் இது அடைபடாது. அடைபட இது வையை ஆறல்ல சுவாமி, வையை ஆறு அல்ல. பரவை, கண்ணீர்ப் பிரவாகக் கடல் என்பது ஞாபகம் இருக்கட்டும். ஆற்றிலே செய்த தந்திரத்தைக் கடலிலே செய்ய முடியாது."

இப்படிச் சொல்கிறாள் தோழி.

படைத்தாரை வேற்கண்ணி கண்ணீர்
பிரவாகப் பரவைபொங்கி
உடைத்தால் அடைக்க உபாயம்உண்
டோநறை ஊற்றுகொன்றைத்
தொடைத்தாம வேணியில் சும்மாடு
கட்டிச் சுமந்துசுமந்து
அடைத்தால் அடைபடச் சொக்கே
இதுவையை ஆறல்லவே!

[படைத்தாரை வேல் கண்ணி-ஆயுதமாகிய நீண்ட வேலைப் போன்ற கண்ணையுடையவள். பரவை-கடல். நறை-தேன். தொடைத் தாமம்-தொடுத்தலையுடைய மாலை. வேணி-தலை. சொக்கே-சொக்கநாதக் கடவுளே ]

சொக்கநாதக் கடவுளை எங்கோ கைலாயத்தில் இருக்கும் கண்காணாத தெய்வமாகத் தோழி நினைக்கவில்லை. தன் அருகில் தன் சொல்லைக் கேட்கும் நிலையில் பவ்யமாக நிற்பதாகவே அவள் பாவிக்கிறாள். "சொக்கே!" என்ற அருமைப் பெயரால் சுதந்திரமாக அழைக்கும் வார்த்தையே அதைத் தெரிவிக்கிறது.

தலைவியின் துக்கத்தை அழகாகச் சொல்லி விடுகிறாள்; சாதுரியமாகவும் கூறுகிறாள்.

மண் சுமந்த கதையைக் கொண்டு இப்போது கவிஞன் ஒரு நாடகத்தையல்லவா நடத்தி விட்டான்! காதலைக் கொண்டு வந்து கலந்து இனிமை யூட்டி, கதையையும் அதிலே கரைத்துக் கவிதையைப் பாடியிருக்கிறான். "சொக்கே! இது வையை யாறல்லவே!" என்ற அடி உள்ளத்துள்ளே கேட்டுக்கொண்டே இருக்கிறது. சொல்லுக்குச் சொல் சுவை பொங்கும் இந்தப் பாடலைத் தனியே படித்து இன்புற்றாலே இதன் அருமை விளங்கும்; மேலே சொன்ன பாடல்களோடு வைத்துப் பார்த்தால் அந்தச் சுவை பின்னும் அதிகமாகும்.

முதல் பாட்டிலே மாணிக்கவாசகருடைய பக்தி மணக்கிறது. இறைவனது பெருங்கருணையை அவர் பாராட்டுகிறார். சிவ பக்தர்கள் பாட்டை மிகவும் நன்றாக ரசிக்கலாம். மண் சுமந்த கதையை நம்பாமல் உள்ள அயல் மதத்தினர் ஒருவர் அந்தப் பாடலைப் படித்தால் சிவபக்தரைப்போல அவ்வளவு இன்பத்தை அடைய முடியாது; தமிழ்ப்பாவினிமையை ஓரளவு தெரிந்து கொள்ளலாம்.

இரண்டாவது செய்யுளிலே சமயவாதி, கதையைத் தமக்கு ஆயுதமாக்கிக் கொண்டிருக்கிறார். மற்றச் சமயங்

களை இழித்துப் பேசுவதிலே இன்பங்காணும் உள்ளத்திற்கு அந்தப் பாட்டு இனிக்கும். எல்லாரிடத்திலும் அதைப் பாட முடியாது.

இறுதிப் பாடலோ, கதையை நம்பாவிட்டாலும், சொக்க நாதரைத் தெய்வமாகக் கொள்ளாவிட்டாலும் தமிழ் நயம் தெரிபவர் யாராயினும் அவருக்கு இன்பத்தைத் தருகிறது. மண் சுமந்து ஆற்றில் உடைப்பை அடைத்தவர் என்ற செய்தியைக் கற்பனைக்காகவாவது ஒப்புக்கொள்ளலாம், அந்தச் சிறு செய்தியை அகத்துறைப் பாட்டிலே பொருத்திக் கவிதைசெய்கிறான் கவிஞன். இதைச் சைவர் மாத்திரமல்ல கிறிஸ்தவர்கூட அனுபவிக்கலாம்; ''சொக்கே இது வையை ஆறு அல்லவே'' என்று சொல்லிச் சொல்லி அநுபவிக்கலாம்.

# போர்க்கால இலக்கியம்

**குமரகுருபர சுவாமிகள்** என்று ஒரு பெரிய புலவர் தமிழ் நாட்டில் இருந்தார். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் பாட புஸ்தகங்களில் வாசிக்கும், 'நீதிநெறி விளக்கம்' என்ற நூலை இயற்றினவர் அவரே. அவர் ஒரு துறவி. காசியிலே பல வருஷங்கள் இருந்து வாழ்ந்தார். அங்கே ஒரு மடம் கட்டிக்கொண்டு புராணப் பிரசங்கங்களும், சன்மார்க்க உபதேசங்களும் செய்து புகழ் பெற்றார். அக்காலத்தில் டில்லியில் ஆண்டிருந்த மொகலாய மன்னர் அவருக்குப் பழக்கமானார். அந்த மன்னரிடமிருந்து குமரகுருபரர் சில நிலங்களைப் பெற்றார்.

மொகலாய மன்னரின் சபைக்குப் போகும்போது அங்கு உள்ள காட்சிகளை எல்லாம் கண்டு அநுபவித்தார். அந்த மன்னர் ஆஸ்தானத்துக்கு வரும்போது நடக்கும் மரியாதை

களையும் ஜனங்கள் அவருக்குப் பயபக்தியோடு சலாம் செய்வதையும் பார்த்தார். எவ்வளவோ பிரபுக்கள் அரசருடைய திருஷ்டி எப்போது தம்மீது படுமோ என்று ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தார்கள். அசந்து மறந்து தம்முடைய பக்கம் திரும்பினால் உடனே சலாம் செய்ய வேண்டுமென்று தம் கையை நெற்றிக்கருகிலே வைத்துக்கொண்டு நின்றனர் சிலர். அந்தக் காட்சியை முனிவர் கண்டு பெரிய ஆச்சரியத்தை அடைந்தார். சலாமிடுவதற்கு ஏங்கி நிற்கும் அந்தச் செல்வர் நின்ற கோலமும், அவர் முகத்தில் தோற்றிய பாவமும் முனிவர் உள்ளத்தே நன்றாகப் பதிந்தன.

முனிவர் மதுரை மீனாட்சி அம்மை விஷயமாக ஒரு பிள்ளைத் தமிழ் பாடத் தொடங்கினார். அதில் முருகக் கடவுளைப் பற்றிச் சொல்ல வேண்டி வந்தது. வள்ளி நாயகியின்பால் மட்டிலாக் காதல் கொண்ட அப்பெருமான் அவளுடைய கடைக்கண்ணோக்கத்தைப் பெற வேண்டுமென்று ஏங்கி நின்றதாகச் சொல்லலாமென்று தோற்றியது. பாதுஷாவின் பார்வைக்கு ஏங்கி நின்ற பிரபுவின் கோலம் அவருக்கு உதவி செய்தது.

............கலாமயிற் கூத்தயர்
குளிர்புனம் மொய்த்திட்ட சாரலிற் போய்ச்சிறு
குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு
குமரனை முத்துக் குமாரனைப் போற்றுதும்''

என்று பாடினார். ''மயில்கள் நடனமிடுகின்ற, மலைச் சாரலிலே போய் அங்கே வாழ்கின்ற சிறிய குறமகளாகிய வள்ளிக்குச் சலாம் போடுவதற்காக ஏங்கி நின்ற குமரன்'' என்று அதில் வருணிக்கிறார். பாதுஷாவைக் குமரகுருபர முனிவர் கண்டதனால் இத்தகைய வருணனையும், சலாமென்ற வார்த்தையும் இலக்கியத்திலே பொருந்தி நிற்கின்றன.

இலக்கிய சிருஷ்டி கர்த்தர்கள் இப்படித்தான் காலதேச வர்த்தமானங்களைத் தங்கள் இலக்கியத்திலே ஏற்றிவிடு

கிறார்கள். "இது இன்ன காலம்" என்று ஆராய்ச்சிக்காரர்கள் திர்ணயிப்பதற்கு அத்தகைய செய்திகள் அடையாளங்களாக நிற்கின்றன.

ஒரு தனி மனிதர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் கண்ட காட்சியே இலக்கியத்தின் போக்கிலே தனது சுவட்டைப் பதித்து விடுகிறதென்றால், பல மனிதர்களும் பல நாடுகளும் சம்பந்தப்பட்ட போரால், பல மாதங்கள் நடைபெறும் சண்டையால் இலக்கியங்களிலே உண்டாகும் வேறுபாடுகளுக்கு அளவேது?

ஔவையாரைத்தான் உங்களுக்குத் தெரியுமே? அவர் அதிகமான் என்ற சேர அரசனிடமிருந்து பலவகை உபகாரங்களைப் பெற்றவர். அவன்மேல் பல பாடல்களைப் பாடியிருக்கிறார். அந்த அதிகமானுக்குப் பல காலங் கழித்து ஒரு பிள்ளை பிறந்தது. தவம் செய்து பெற்ற பிள்ளை. பிள்ளை பிறந்த சிறப்பைப் பாராட்ட எண்ணினார் ஔவையார். சமாதான காலமாக இருந்தால் குழந்தைக்காக அவன் தவம் செய்ததையும், அந்தக் குழந்தை உதயமானதையும் பாடியிருப்பார். அது போர் நடந்துகொண்டிருந்த காலம். அதிகமான் பகைவர்களைப் பெரும்பாலும் தோல்வியுறச் செய்தான். குழந்தை பிறந்தால் அதை வந்து பார்க்க வேண்டியது தந்தையின் கடமை. வந்து பார்த்தான். அந்தக் காட்சியை ஔவையார் வருணிக்கிறார்.

அவன் எப்படி வந்து பார்த்தான் தெரியுமா? கையிலே வேல், காலிலே வீரகண்டை, உடம்பிலே வேர்வை, மேலே புண். கண்ணைப் பார்த்தால் ஒரே சிவப்பு.

"அட! இன்னும் இவனுக்குக் கோபம் ஆறவில்லையே! சரி, சரி; இவனுடைய பகைவர்களுக்கு அதோகதிதான். இந்தத் தவ மகனைப் பார்த்துங்கூட இவன் கண்களில் சிவப்புப் போகவில்லையே!"

இன்னும் ஆறாது சினனே, அன்னோ
உய்ந்தனர் அல்லர் இவன் உடற்றி யோரே
செறுவர் நோக்கிய கண்தன்
சிறுவனை நோக்கியும் சிவப்பு ஆனாவே!

[அன்னோ-ஐயோ! உடற்றியோர்-சண்டையிட்டவர். செறுவர்-எதிர்க்கும் பகைவர். ஆனா-அடங்கா]

என்று பாடினார். போர்க்கால இலக்கியத்தில் பிள்ளை பிறந்த செய்தியிலும் போர்க்கோல வருணனை புகுந்து கொள்கிறது.

போர்க் காலத்து இலக்கியத்தில் போரைப் பற்றிய செய்திகளே தலைமை வகிக்கின்றன. காவியம் எழுதுபவர்கள் தம்மை அறியாமலே வீரச் சுவையில் பேனாவைத் தோய்த்து எழுதுகிறார்கள். புத்தக எழுத்தாளன் போர்க் காலத் தேவைகளை நிறைவேற்றப் பார்க்கிறான்; தன்னுடைய இயல்பான போக்கிலே அந்தத் தேவைக்கு ஏற்ற மாறுதல்களைச் செய்ய முற்படுகிறான். அப்படிச் செய்யா விட்டால் அவனைப் பத்தாம் பசலிப் பேர்வழி என்று யாவரும் சொல்லி விடுவார்கள்.

போர்க் காலத்தில் எழுதும் புத்தகங்களில் வேகமும் சுருக்கமும் சக்தியும் இருக்க வேண்டும், இல்லையானால் உலகம் மதிக்காது. போர்த்தீ படர்ந்து கொழுந்துவிட்டு எரியும்போது சம்பிரதாயங்களுக்கும் வருணனைகளுக்கும் இடம் இருப்பதில்லை. அன்ன நடையும் ஆனை நடையும் யுத்த காலத்திலே எடுபடுவதில்லை. சரேலென்று பாயும் சிங்கப் பாய்ச்சல் வேண்டும். குதிரையின் கதியிலே போக வேண்டும் நடை.

விஷயத்திலே மாறுதல், நடையிலே மாறுதல் வார்த்தைகளிலேகூட மாறுதல்-எல்லாவற்றிலும் போர் புகுந்து கலந்து முடுக்குகிறது. காதற் கதைகளைச் சமாதான காலத்திலே

எழுதினால் ரசமாக இருக்கும். தென்றல் காற்று வீசும் மாலைக் காலத்தில் ஒரு பூம்பொழிலில் நிதானமாக அமர்ந்து கொண்டு வீணையை வாசிக்கலாம். பிரசண்டமாருதம் வீசும் போது வீணையைக் கேட்பவர்கள் யார்? பலர் கூடி ஓடும் போது காது செவிடுபடும்படி முரசையல்லவா அடிக்க வேண்டும்? முரசத்தில் கமகம் இல்லையே என்றால், கமகத் துக்குக் காலம் அல்லவே என்றுதான் பதில் சொல்ல வேண்டி வரும். வெறி பிடித்த வீரக் கதைகளையும் வீர நிகழ்ச்சிகளை யும் போர்க்காலத்தில் எழுதினால், அவை உண்மையான வீரச் சுவை பொருந்தியனவாக இருக்கும். சுருதியோடு பாடும்போது காதுக்கு எவ்வளவு நன்றாக இருக்கிறது? போர்க் காலத்தில் எங்கும் போரைப்பற்றிய பேச்சே நிரம்பி வீரப்பாட்டுக்கு வேண்டிய சுருதி இயல்பாகவே அமைந்து விடுகிறது. மேலே வீரச்சுவையை விளைத்தால் அது பன்மடங்கு சோபிக்கும். அந்தச் சுருதியிலே காதலையும், ஹாஸ்யத்தையும் கொண்டு வந்தால் அபஸ்வரந்தான் மிச்சம்.

இப்போது போர் நடக்கிறது. இக்காலத்தில் புதிய புஸ்த கங்களும் வெளிவருகின்றன. புத்தக வியாபாரிகள் லாபத்தை மட்டும் எதிர்பார்த்துச் சுடச்சுட விற்கும் புத்த கங்களைக் கொண்டு வருகிறார்கள். போலந்தில் போர் தொடங்கியது முதல் அது வீழும்வரையில் பத்திரிகைகளி லெல்லாம் போலந்தைப்பற்றிய கட்டுரைகள்; போலந்தைப் பற்றிய சரித்திரப் புத்தகங்கள், போலந்திலே மனிதர்கள் எப்படி உடை அணிகிறார்களென்பது போன்ற சின்னச் சின்ன சமாசாரங்களுக்கெல்லாம் புத்தகத்தில் இடம் கொடுத்தார்கள். அபிஸீனியா ஆஸ்திரேலியாவில் இருக் கிறதா, வட துருவத்திலிருக்கிறதா என்றெல்லாம் நினைக் கின்ற மாணாக்கர்களுக்கு அபிஸீனியாவின் பூகோளம், சரித்திரம், பொருளாதாரம், சமூக சாஸ்திரம், இலக்கிய வளர்ச்சி என்பவைகளை மிகவும் கர்ம சிரத்தையோடு

ஊட்ட முன்வந்த புத்தக எழுத்தாளர்களும் பிரசுரகர்த்தர் களும் எவ்வளவு லாபம் சம்பாதித்து விட்டார்கள். அரிச்சுவடியின் ஆரம்பத்தில் அணில் ஆடு இலை என்ற பாடங்களுக்குப் பதில் அபிஸீனியா, ஆப்பிரிக்கா, இத்தாலி என்ற பாடங்கள் வந்துவிடுமோ என்றுகூட எண்ணும்படி யாகி விட்டது. எல்லாம் அபிஸீனியாவின்மேல் இத்தாலி படையெடுத்ததன் பிறகு உண்டான ஆர்ப்பாட்டம். இன்றைக்கு அதே அபிஸீனியா, பழைய கறுப்பன் கறுப்பனே என்றபடி பூகோளத்திலிருந்து மறைந்து ஒதுங்கி நிற்கிறது.

எல்லாம் யுத்த தேவதையின் திருவிளையாடல்கள். மற்றக் காலத்தில் யாவரும் போற்றும் ஒன்றை மூலையிலே படுக்க வைப்பதும், புற்றீசலைப் போலச் சில நேர வாழ் வுள்ள புதிய விஷயங்களைப் புகுத்துவதும் அதனுடைய சாமர்த்தியச் செயல்கள்.

போர்க்கால இலக்கியத்தில் இலக்கணம் வேண்டாம், ஆழம் வேண்டாம், வருணனை வேண்டாமென்று சொல் கிறார்கள். "காகிதம் இல்லை, கதையை அளக்காதே" என்று கம்பெனிக்காரர் சொல்கிறார். "ஸோடியம் குளோரைடைப் பற்றி எழுதினது போதும்; வெடி விமானத் தைப்பற்றி எழுதுமையா" என்று விஞ்ஞானியைப் பத்திரி கைக்காரன் கேட்கிறான். 'வாக்கியங்களை நீட்ட வேண் டாம்; இரண்டு வார்த்தைகளிலே முடித்துவிடும்; இலக் கணத்தையும் வருணனையையும் போர் முடிந்த பிறகு வைத்துக் கொள்ளலாம்" என்று புத்தக எழுத்தாளனுக்குக் கட்டளை பிறக்கிறது. "இடி இடித்தது போல இருந்தது" என்று எழுதினால் கர்நாடகமென்று அடித்துவிட்டு, "குண்டு விழுந்ததுபோல் இருந்தது" என்று திருத்துகிறார்கள்.

இவை போர் செய்த மாற்றங்கள். தொழிலாளி, விவசாயி, வியாபாரி, உத்தியோகஸ்தன் எல்லோரும் போருக் காக உழைக்கும்போது புத்தக எழுத்தாளன் மட்டும் 'தாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக'க் 'கடல்

சூழ்ந்த உலகத்தில்' வாழ்ந்துகொண்டு தாமரை போன்ற முகத்தையும் கிளிபோன்ற சொல்லையும் அன்னம் போன்ற நடையையும் உடைய நாரீமணிகளைச் சிருஷ்டித்துக் கொண்டு இருப்பது நியாயமா? டைனமைட் பதித்த கட்டிடம் திடீரென்று ஒரு கணத்தில் தரை மட்டமானது போல அவன் சிருஷ்டிக்கும் கதாநாயகனது கற்பனை தகர வேண்டும். அவன் அபாயச் சங்கைப் போல அழ வேண்டும். நீர் மூழ்கியைப்போல அபாயத்தில் முழுகி எதிரிக்கு ஆபத்தை உண்டாக்க வேண்டும்.

இப்படி அவன் எழுத்து இருந்தால்தான் போர்க் காலத்தில் ஜீவித்திருந்ததற்குப் பலன் உண்டு. இல்லாவிட்டால் பேசாமல் பேனாவைத் தூர எறிந்துவிட்டுத் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு மிலிடரிக்கு ஆள் சேர்க்கும் காரியாலயத்தை நோக்கி நடந்து விடலாம்.

# அந்தக் காலம் வேறு

## புத்தக உலகில்

நல்ல வயசாகித் தலை நரைத்துப்போய்க் குடுகுடு கிழவர்களாக உள்ளவர்களோடு நாம் பேசத் தொடங்கினால் அவர்கள் எத்தனையோ விஷயங்களை எடுத்துச் சொல்வார்கள். பழங்காலத்துக் கதைகளை அடுக்கடுக்காக, நாம் கேளாமலே விரிவாகச் சொல்லிக்கொண்டே போவார்கள். பழைய ஞாபகங்களிலே ஒன்றிப்போய் அவர்கள் பேசும் பொழுது அவர்களுக்கு இந்த உலக ஞாபகமே இராது. அவர்கள் தம் பேச்சை நிறுத்தியதும் ஒரு பெருமூச்சு விடுவார்கள் பிறகு, "ஹூம்! எல்லாம் அந்தக் காலம்! இப்போது எல்லாம் தலைகீழ்ப் பாடம். முளைத்து மூணு இலை

விடுவதற்குள் கால் பூமியின்மேல் இருப்பதில்லை. காலம் கலிகாலம் அல்லவா?'' என்று சொல்லுவார்கள். பழைய காலத்துப் பேச்சு எதுவாக இருந்தாலும் இந்தப் பல்லவியில் வந்துதான் முடியும். எதை வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்கள், அந்தக் காலத்ததென்றால் அதன் மகிமையே வேறு என்பதுதான் அவர்கள் கருத்து. ''இந்தக் காலத்தில் இட்டிலி பண்ணுகிறார்களே, அது இட்டிலியா? அதில் உளுந்து வாசனை ஏதாவது இருக்கிறதா? அந்தக் காலத்தில் உளுந்துக்கு எத்தனை வாசனை? இட்லிதான் எவ்வளவு ருசியாகவும் மெதுவாகவும் இருக்கும்?'' என்று இட்டிலி புராணத்தை விரிப்பார்கள். ''என் தாத்தா, அந்தக் காலத்தில் எலக்ட்ரிக் விளக்கு உண்டா?'' என்று யாராவது சிறு பையன் கேட்கட்டும். கிழவர் ஒரு பெரிய பிரசங்கத்தையே செய்ய ஆரம்பித்து விடுவார். ''எலக்ட்ரிக் விளக்கு எங்களுக்கு எதற்கு? நாங்கள் என்ன குருடர்களா? நிலா வெளிச்சத்தில் புத்தகம் படிப்போமே. குத்துவிளக்கில் விளக்கெண்ணையை விட்டுப்படித்தால் கண்ணுக்கு எவ்வளவு குளிர்ச்சி தெரியுமா; இப்போது எலக்ட்ரிக் விளக்குவந்துவிட்டது என்று ஜம்பம் அடிக்கிறீர்களே! மூன்றாவது வயசிலேயே கண்ணாடி மாட்டிக்கொள்ளும் பிரயாவத்துக்குக் காரணம் அந்த மாயாஜால எலக்ட்ரிக் விளக்கென்ற சமாசாரம் உங்களுக்குத் தெரிய வில்லையே! ஹூம்! ''அந்தக் காலமே வேறு. இந்தக் காலம் மாதிரியா?'' என்று கடல்மடை திறந்தாற்போல் அந்தக் காலத்துக்கும் இந்தக் காலத்துக்கும் உள்ள வேற்றுமையை விமரிசனம் செய்ய முனைந்து விடுவார் தாத்தா.

தாத்தா சொல்வதில் உண்மை ஓரளவு இருக்கலாம்? இல்லாமலும் இருக்கலாம். ஆனால் எந்த விஷயமானாலும் பழைய காலத்தது என்றால் உயர்ந்தது என்று அவர் சொல்வது, நிச்சயமாக உண்மையாகாது. அது அபிமானத்தால் வரும் பேச்சு. அந்தக் காலத்திற்குப் பிறகு மனித ஜாதி எத்தனையோ துறைகளில் முன்னேறி இருக்கிறது

எத்தனையோ வகைகளில் பின்னடைந்தும் இருக்கிறது, எவ்வளவோ நல்ல காரியங்களை நாம் மறந்து விட்டோம். ஆனாலும் நம் முன்னோர்கள் கனவிலும் கண்டறியாத அற்புதங்களைச் செய்கிறோம்.

புத்தக உலகத்தில் முப்பது நாற்பது வருஷங்களுக்கு முன்பு இருந்த நிலை என்ன? இன்று, இந்த 1993-ஆம் வருஷத்தில் இருக்கும் நிலை என்ன? சந்தேகமே இல்லாமல் பல பல வகைகளில் முன்னேற்றத்தை அடைந்திருக்கிறோம். புஸ்தகத்தில் உள்ள விஷயம். அந்த விஷயத்தைச் சொல்லும் தோரணை, புஸ்தகத்தின் உருவ அமைப்பு ஆகிய எல்லாவற்றிலும் கவர்ச்சியும் அழகும் பயனும் அதிகமாகும்படியான முறைகளை நாம் இப்போது மேற்கொண்டு வருகிறோம்.

தமிழ்ப் புத்தகங்கள் அந்தக் காலத்தில் எப்படி இருந்தன, இப்போது எப்படி இருக்கின்றன, பாருங்கள். முதலில் எண்ணிக்கையைப் பார்த்தாலே போதும். முன் காலத்தில் இவ்வளவு புத்தகங்கள் வெளிவரவே இல்லை. வெளியான புத்தகங்களில் அநேகம் செய்யுள் நூல்கள்; புராணங்களும் பிரபந்தங்களுமாகவே இருக்கும்.

அந்தக் காலத்தில் செய்யுளிலே ஒரு மோகம் இருந்தது. எதுகை, மோனை இருந்துவிட்டால் போதும். செய்யுளாகி விடும். கவிதைச் சுவை இருக்க வேண்டும் என்பதில் அவ்வளவாக அக்கறை கொள்வதில்லை. எதுகை, மோனைகளுக்கு எந்த எந்த வார்த்தைகள் இணைந்து வருகின்றனவோ அவற்றைப் போட வேண்டியது, அதைச் செய்யுளென்று சொல்லிப் பாராட்ட வேண்டியது-இப்படிக் கவியை உற்பத்தி செய்தார்கள். ''சீர்பூத்த, வார்பூத்த, நார்பூத்த'' என்று தக்கைகளைப் போன்ற வார்த்தைகளை அடுக்கினார்கள். கவிதை என்பது இயல்பாக மலர் மலர்வதைப் போலக் கவிஞன் உணர்ச்சி வசப்பட்டபோது அழகிய உருவத்தோடு வெளிப்படுவதென்று இந்த எதுகை மோனைக் கவிஞர்கள் நினைக்கவில்லை. தொழிற்சாலையில் பாண்டங்களோ,

வேறு பண்டங்களோ அச்சில் வார்த்து ஆயிரக்கணக்காகத் தள்ளுகிறார்களே, அந்தமாதிரி ஆகிவிட்டது கவிதைத் தொழில்.

அந்தக் காலத்தில் சென்னை ராஜதானிக் கலாசாலையில் பூண்டி அரங்கநாத முதலியார் என்ற பேராசிரியர் இருந்தார். அவர் நல்ல அறிவாளி. தமிழிலும் சிறந்த புலமை படைத்தவர். அவர் 'கச்சிக் கலம்பகம்' என்ற நூலை இயற்றினார். அதை இயற்றிக்கொண்டு வரும்போது அந்தச் செய்தியைக் கும்பகோணம் காலேஜில் இருந்த சாது சேஷையா என்ற அறிஞருக்கு ஒரு கடிதம் மூலம் தெரிவித்தார். கடிதம் ஆங்கிலத்தில் எழுதியது. 'நான் கச்சிக் கலம்பகம் என்ற நூலை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறேன். (Manufacturing)'' என்று அந்தக் கடிதத்தில் எழுதினார். தொழிற்சாலையில் உற்பத்தி செய்வதைக் குறிக்க எந்த வார்த்தையை ஆங்கிலத்தில் சொல்வார்களோ அதே வார்த்தையை அவர் போட்டிருந்தார். அவர் அதை வேண்டுமென்றுதான் போட்டிருக்க வேண்டும். 'குயவன் சட்டி பானை செய்வது போலக் கவிதை என்ற பெயரால் எதையோ நாங்கள் உற்பத்தி செய்கிறோம்' என்று சொல்வதைப் போலத் தொனிக்கிறது அவருடைய கடிதம். அதில் உண்மை இருக்கிறது. அந்தக் காலத்தில் வெளிவந்தசெய்யுள் நூல்களை எடுத்துப் பார்த்தால் அவையெல்லாம் இப்படி உற்பத்தியானவைகளே என்று சொல்லலாம். எங்கோ ஒன்று இரண்டு நன்றாக இருக்கலாம்.

ஒருவர் சில பாடல்களைப் பாடி ஒரு நூலை இயற்றினாரானால் அதை அப்படியே வெளியிடமாட்டார். எங்கெங்கே புலவர்கள் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் போய் அவர்களிடத்தில் சிறப்புப்பாயிரம் வாங்கி அவைகளையும் சேர்த்து அச்சிடுவார். பாட்டின் சிறப்பைப் படிப்பவர்கள் உணர்வதற்கு அந்தப் பாட்டைக் காட்டிலும் இந்தச் சிறப்புப் பாயிரங்கள் கருவியாக இருக்கும் என்பது புலவருடைய

ஞாபகம்! இதில் விநோதம் என்னவென்றால், சில நூல் களின் மூலம் இருபது பாடல்கள் இருக்கும்; அந்தப் புத்தகத் துக்குச் சிறப்புப் பாயிரப் பாடல்களோ ஐம்பதுக்குமேல் இருக்கும்!

இவ்வளவும் புதிய செய்யுள் நூல் சம்பந்தமான சமா சாரம். ஆனால் பழைய நூல்கள் விஷயத்தில் அக்காலத்தின ருக்கு இருந்த ஆசையை நாம் போற்ற வேண்டும். பழைய தமிழ் நூல்களை வெளியிடுவதிலும் படிப்பதிலும் அவர்களுக்கு மிகுதியான விருப்பம் இருந்தது.

இப்பொழுது நமக்குக் கவிதையின்மேல் அவ்வளவு நாட் டம் இல்லை. பழைய கவிதையில் சில நூல்களைத்தான் நாம் படிக்கிறோம். அந்த நூல்களை நாமே படித்துப் பயன் பெறுவதைக் காட்டிலும், யாராவது அதில் உள்ள நயங் களை எடுத்துக் கட்டுரையாக எழுதியிருந்தால் அதை வாசிக்க முன் வருகிறோம். பழைய காலத்தில் யமகம், திரிபு முதலிய பல்லை உடைக்கும் பாடல்களை, பல் உடைந்தா லும் சரி, அவற்றை ஒரு கை பார்த்துவிடுவது என்ற முயற்சி இருந்தது. இப்பொழுதோ பாலைப்போலத் தெளிந்த கவிதையாக இருந்தாலும் கண நேரம் அதில் ஊன்றி நிற்கும் உணர்ச்சி இருப்பதில்லை.

இக்காலத்தில் நாளுக்குநாள் புதிய புதிய வசன புத்தகங் களும் பத்திரிகைகளும் புறப்படுகின்றன. இவ்வளவு அதிக மாக அந்தக் காலத்தில் வெளியாகவில்லை. பள்ளிக்கூடத்துப் புத்தகங்கள், நாவல்கள், புராண வசனங்கள் இவைகளே அக்காலத்து வசன புத்தகங்களில் பெரும்பாலானவை. பள்ளிக்கூடத்துப் புத்தகங்களில் பெயருக்குக் கதைகளும் கட்டுரைகளும் இருக்கும். உலகத்தில் புதிய புதிய துறை களில் எவ்வளவோ முயற்சிகள் நடைபெறுகின்றனவே, அவற்றைப் பற்றி ஒன்றும் இராது. ஏதாவது இருந்தாலும் ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்ததாகவே இருக்கும். இளைஞர்களுக்கு உற்சாகம் மூட்டக்கூடிய விஷயங்கள்

மிகவும் அருமையாகவே காணப்படும். கட்டுரைகளைத் திருப்பித் திருப்பி நீதி நூல்களிலுள்ள செய்யுட்களை மேற்கோள் காட்டி எழுதியிருப்பார்கள். நீளமான வாக்கியங்களும், 'கடல்புடை சூழ்ந்த நிலவுலகத்தில்', 'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்' என்பன போன்ற தொடர்களும் நிரம்பியிருக்கும். கற்பு, பொறாமை, நல்லொழுக்கம், கூடா நட்பு என்பனபோலத் திருக்குறளிலும் நாலடியாரிலும் வரும் அதிகாரத் தலைப்புக்களையே கட்டுரைகளின் பெயர்களாகக் காண முடியுமே அன்றி அவற்றில் புதுமை இராது.

விஞ்ஞானம், சரித்திரம், பூகோளம் முதலிய துறைகளில் தமிழில் புஸ்தகங்கள் அக்காலத்தில் வெளிவரவில்லை. சிறிய வகுப்புக்களுக்கும் பயன்படும்படி சில புத்தகங்கள் வந்தனவே ஒழிய அறிவைப் போதிக்கும் உருப்படியான புத்தகங்கள் இல்லை. இக்காலத்திலோ எல்லாவற்றையும் தாய்ப்பாஷை மூலமாகப் போதிக்க வேண்டும் என்ற கிளர்ச்சி பலமாக இருக்கிறது. பள்ளிக்கூடத்தில் பாடமாக வைக்கும்படியாக விஞ்ஞானம் முதலிய பகுதிகளை விரித்துரைக்கும் புத்தகங்கள் பல வந்துவிட்டன. முன்பு இரண்டாம் பாரத்திலேயே எல்லாம் இங்கிலீஷில் ஆரம்பமாகிவிடும். இப்போதோ ஹைஸ்கூல் பாடங்களெல்லாம் தமிழில் சொல்லித் தருகிறார்கள். காலேஜ் வகுப்புகளிலும் தமிழில் கற்றுக் கொடுப்பதற்குத் தக்கபடி புத்தகங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. விஞ்ஞானம்முதலிய கலைத்துறைகளில் வழங்கும் ஆங்கிலச் சொற்களுக்குறிய தமிழ்ச் சொற்களைத் தேர்ந்து தொகுத்திருக்கிறார்கள். இந்தக் கலைச் சொல்லாக்கம் புதிய புத்தகங்கள் எழுதுபவர்களுக்கு உதவியாக இருக்கிறது.

அக்காலத்தில் நாவல்கள் பல இருந்தன. பள்ளிக்கூடத்துக்கு வெளியே அதிகமாகப் படிக்கப் பெற்ற வசன புத்தகம் நாவல்தான். நூறு நூற்றைம்பது பக்கம் உள்ள நாவல்

களல்ல; பெரும்பாலும் முந்நூறு நானூறு பங்கங்கள் அடங்கிய நாவல்கள். எல்லாம் ஆங்கிலத்தில் உள்ள சாமரன்ய நாவல்களைத் தழுவியவை. தழுவியதென்றால் இந்திய நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப மாற்றிக் கொள்வது அல்ல; ஊர்ப் பெயர்களும், மனிதர்களின் பெயர் களும் மாறியிருக்கும்; அவ்வளவுதான். ரெயினால்ட்ஸ் நாவல்களும், ஆறுபென்னி நாவல்களும் இப்படி உருமாறித் தமிழில் வந்ததற்குக் கணக்கு வழக்கில்லை. தனசிங்கம் பிரபுவும், அமராவதி சீமாட்டியும் கதையில் உலவுவார்கள். பெயர்தான் இந்த நாட்டினர் பெயரைப் போல் இருக்கும். ஆணும் பெண்ணும் கூடிக் குலவுவதும், திருடர்கள் தந்திர சாமர்த்தியங்கள் செய்து பிரபுக்களை ஏமாற்றுவதும் பிறவும் அப்படியே ஆங்கிலத்திலிருந்து இறக்குமதியான சரக்குகள். நடு நடுவே, "பார்த்தீர்களா' மேல்நாட்டு நாகரீகக் கோலத்தை!" என்று ஆசிரியர் நமக்கு அது மேல் நாட்டுக் கதை என்பதை மறந்து விடாமல் நினைப் பூட்டுவார்.

துப்பறியும் நாவல்களுக்கு அந்தக் காலத்தில் அபார மான மதிப்பு. பள்ளிக்கூடப் பிள்ளைகள் துப்பறியும் நாவல் களை உத்ஸாகமாகப் படிப்பார்கள். அக்காலத்துப் பெரியவர் கள், சிறுபிள்ளைகள் துப்பறியும் நாவல் படித்தால் கெட்டுப் போய் விடுவார்கள் என்று சொல்லி வந்தார்கள். அவர்கள் தடுக்கத் தடுக்க நாவல்கள் அதிகமாக உலவினவே ஒழியக் குறையவே இல்லை.

பழைய சம்பிரதாயங்களையும் கிராமவாசத்தின் இயல்புகளையும் விளக்கும் நாவல்கள் ஒன்றிரண்டே வெளிவந்தன. கமலாம்பாள் சரித்திரம், பிரதாப முதலியார் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் என்பன போன்ற நாவல் கள் அதிகம் இல்லை. அந்த மூன்று நாவல்களுக்கும் சரித்திரம் என்று பெயர் வைத்தது வேடிக்கையாகத்

தோன்றுகிறதல்லவா? அந்தக் காலத்தின் ஓதம் அவைகளை யும் விடவில்லை.

தழுவலும் அல்லாமல் சொந்தமும் அல்லாமல் சில நாவல்கள் எழுந்தன. கதை கடைசியில் கொட்டு மேளத்துடன் முடிவாக வேண்டுமென்பதை ஒரு நியதியாகவே நாவல் ஆசிரியர்கள் வைத்துக்கொண்டிருந்தார்கள். இடையிடையே ஆசிரியர் பிரசங்க மேடையைப் போட்டுக்கொண்டு வாசகர்களுக்குக் கற்பைப்பற்றியோ தேசாடனத்தைப்பற்றியோ உபதேசம் செய்யத் தொடங்குவார். மேற்கோட் செய்யுட்கள் இடையிடையே வந்து விழும்.

இக்காலத்தில் நாவல்களின் விஷயத்தில் நாம் முன்னேற்றம் அடைந்து விடவில்லை. ஆனால் நல்ல நாவல் எப்படி இருக்க வேண்டுமென்ற அறிவு நமக்கு வந்திருக்கிறது. துப்பறியும் நாவல்களுக்குப் பதிலாக ஹிந்தி நாவல்களும், வங்காளி நாவல்களும் தமிழ்ப் புத்தக சாலைகளை நிரப்பியிருக்கின்றன. எழுத்தாளர்களுடைய உள்ளத்தில் தமிழிலே சொந்தமாக நாவல்கள் எழுத வேண்டுமென்ற உணர்ச்சி தோன்றியிருக்கிறது. சிலர் முயற்சியும் செய்து வருகிறார்கள். நாளடைவில் நல்ல நாவல்கள் தமிழில் உண்டாகும் என்ற நம்பிக்கைக்கு இடம் உண்டு.

சிறுகதைகள் என்ற பேச்சை எடுத்தாலே தமிழ்நாட்டார் பெருமைப்பட வேண்டியவர்களென்று சொல்லத் தோன்றுகிறது. உலகம் முழுவதுமே பெரிய நாவல்களைக் காட்டிலும் சிறு கதைகளுக்கு மதிப்புத் தரும் நிலை வந்திருக்கிறது. நீண்ட கதைகளை வாசிக்கச் சோம்பலோ, அல்லது இக்காலத்தவருடைய வேகத்திற்கு நெடுங்கதைகள் ஒத்துவரவில்லையோ என்னவோ சிறு கதைகள் கணக்கு வழக்கில்லாமல் எல்லாப் பாஷைகளிலும் குவிகின்றன.

அந்தக் காலத்தில் சிறுகதை என்ற ஓர் இலக்கிய வகை இருப்பதே தமிழ் நாட்டாருக்குத் தெரியாது. பாட்டி சொல்லும் கதையும், நீதியை உபதேசிக்கும் கதையுமே அளவி

னால் சுருங்கிய கதைகளாக இருந்தன. சிறு கதைகளை அப்பொழுதே உலகத்தில் பலவேறு பாஷைகளிலும் எழுத ஆரம்பித்து விட்டார்கள். வ. வே. சு. ஐயரும், பாரதியாரும், மாதவையாவும் அந்தத் துறையை முதல் முதலில் தமிழில் கொண்டு வந்தார்கள். அதனுடைய அருமையை அன்று ஒருவரும் உணரவில்லை.

வரவரத் தமிழ் எழுத்தாளர்களுக்குச் சிறு கதைப் பித்துப் பிடித்துவிட்டது. பத்திரிகைகளில் எல்லாம் சிறு கதைகளை எழுதித் தள்ளினார்கள். அவற்றை தொகுத்துப் புத்தகமாக வெளியிட்டார்கள். இன்று தமிழில் எத்தனையோ விதமான சிறு கதைத் தொகுதிகள் வந்திருக்கின்றன. ஒருவரே எழுதிய கதைகள் அடங்கிய தொகுதிகள் பல; பலர் எழுதிய கதைகளின் தொகுதிகள் சில. இக்காலத்தில் தமிழ் எழுத்தாளன் என்று ஒருவன் பெயரெடுக்க வேண்டுமானால் அவன் முதலில் சில சிறு கதைகளை எழுத வேண்டும். பிறகு அவன் எதையாவது எழுதிக்கொள்ளட்டும், சிறுகதை எழுதுபவனைத்தான் ஜனங்கள் கவனிக்கிறார்கள்.

முன் காலத்தில் அரசியல் சம்பந்தமான புஸ்தகங்கள் இல்லை; பிறநாட்டுச் சரித்திரங்கள் இல்லை; நம் நாட்டுச் சரித்திரங்களும் தமிழில் இல்லை. இப்பொழுதோ ஒவ்வொரு வகையிலும் பல புத்தகங்கள் வந்துவிட்டன.

சிறுகதை எப்படி நன்றாகத் தமிழ்நாட்டில் வளர்ந்திருக்கிறதோ அப்படி அதற்குச் சமானமாக வளர்ந்தது ஒன்று உண்டென்றால் அது பத்திரிகை. தினசரிப் பத்திரிகைகள், வாரப் பத்திரிகைகள், பட்சப்பத்திரிகைகள், மாதப் பத்திரிகைகள் என்ற பலவகைப் பத்திரிகைகளை இன்று தமிழ் நாட்டில் பார்க்கிறோம். அக்காலத்தில் ஒரு தினப் பத்திரிகையும் ஒன்றிரண்டு வாரப் பத்திரிகையும் அப்படியே ஒன்றிரண்டு மாதப் பத்திரிகைகளும் இருந்தன. சமாசாரப் பத்திரிகைகளில் பாதி ஆங்கிலம் கலந்த நடையைத்தான் காணலாம். தமிழில் தலைப்புப் போடுவதோடு ஆங்கிலத்தி

திலும் போடுவது அந்தக் காலத்துச் சம்பிரதாயம். பாரதியார் இந்தியா என்ற வாரப் பத்திரிகை நடத்தி வந்தார். அதில்கூடத் தமிழ்த் தலைப்பும் இங்கிலீஷ் தலைப்பும் அவர் போட்டு வந்தார்.

மாதப் பத்திரிகைகள், கற்பையும், பொறுமையின் சிறப்பையும் போதித்தன. இந்த உலகத்து விஷயங்களை விட்டு விட்டுப் பரலோகத்து விஷயங்களை வேதாந்தமென்ற பெயரைச் சொல்லிக்கொண்டு வெளியிட்டன.

இப்பொழுது தமிழ்ப் பத்திரிகைகளில் விநோதத்தை உண்டாக்குவதற்கும் எத்தனையோ விஷயங்கள் வருகின்றன பத்திரிகைகளில் வராத விஷயம் ஒன்றும் இல்லை. சுடச்சுடச் செய்திகளையும் விஷயங்களையும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பதில் பத்திரிகைக்காரர்கள் ஒருவரை ஒருவர் முந்திக் கொள்கின்றனர்.

பொதுவாக, இந்தக் காலத்துப் புத்தகங்களிலும், பத்திரிகைகளிலும் வாசகருடைய கவனத்தை எடுத்தவுடன் இழுப்பதற்கு வேண்டிய தந்திரங்களை ஆள்கிறார்கள். எந்த விஷயத்தையும் சுலபமாகக் கதைபோலச் சிரமம் தோன்றாமல் சொல்ல வேண்டும் என்ற நினைவு ஒவ்வோர் எழுத்தாளனுக்கும் இருக்கிறது. சொல்கின்ற விஷயம் ஆழ்ந்ததாகவும் புஷ்டியாகவும் இருக்க வேண்டும். சொல்வதில் பெரும்பாலும் வாசகருக்குப் புரிய வேண்டும் என்பதே இக்காலத்து எழுத்தாளனது நோக்கம்.

புத்தகத்தின் உருவ அழகைப் பற்றிச் சொல்லப் போனால் அடே அப்பா! அந்தக் காலம் எங்கே, இந்தக் காலம் எங்கே! மடுவுக்கும் மலைக்கும் உள்ள வித்தியாசம் என்று சொல்லலாமா? மண்ணாங்கட்டிக்கும் பொன்னாபரணத்துக்கும் உள்ள வித்தியாசம் என்று சொல்லலாமா? இன்னுங்கூட அதிகமாகச் சொல்லலாம்.

நல்ல காகிதம், தெளிவான அச்சு, வாங்கு வாங்கு என்று

தூண்டும் அட்டை, அழகான பைண்டு ஆகியவை இக்காலத்துப் புத்தகத்தின் லட்சணங்கள். அந்தக் காலத்தில் வெள்ளைக் காகிதத்தைக் கறுப்பாக்கினார்கள்; கந்தைத் துணியைத் தைக்கும் நூலால் அந்தக் காகிதத்தைத் தைத்தார்கள்; அதற்கு மேலே அட்டையென்று ஒரு வஸ்துவைப் பூட்டினார்கள். தமிழ்ப் புஸ்தகங்களுக்கெனவே ஏற்பட்ட சிருஷ்டி மார்பின் காகிதம். அதைப் போர்த்துக் கொண்டு கடைவீதியில் உலவப் புறப்படும் அந்தக் காலத்துத் தமிழ்ப் புத்தகத்தை இன்றைத் தமிழ் நாட்டார் தொடக்கூட அருவருப்பு அடைவார்கள்.

வர்ணங்களும் சித்திரங்களும் பத்திரிகைகளின் அட்டைகளையும் புத்தகத்தின் புறத்தையும் மெருகிட்டுப் பொலிவுறுத்திக் கண்ணைக் கவர்கின்றன. விலையை யார் கவனிக்கிறார்கள்? புத்தக உருவ அமைப்பு (Getup) சரியானபடி அமைந்து விட்டால் உள்ளே விஷயம் இரண்டாம் பட்சமாக இருந்தாலும் குற்றமில்லை, விற்பனையாகிவிடும் என்பது இன்றைய புத்தக வியாபாரிக்கு நன்றாகத் தெரியும்.

அந்தக் காலத்தில் இந்த வர்ண விசித்திரம் உண்டா? கதைபோல விஷயத்தைச் சொல்லும் தோரணை உண்டா? விஷய விரிவு உண்டா?—நீங்களே சொல்லுங்கள். அந்தக் காலம் வேறுதான்; இந்தக் காலம் வேறுதான்.

# கலையும் தொழிலும்

அழகிய சோலையில் நெடு மரம் ஒன்று பூத்துக் காய்த்துக் கனிந்து நிற்கிறது. மலரின் மணம் எங்கும் பரந்து இன்பத்தைத் தருகிறது. நெடுந் தூரத்திலிருந்து வருவாரைத் தன்பால் இழுக்கும் கவர்ச்சி அந்த மரத்திற்கு இருக்கிறது.

மரத்தின் கிளைகள் வேர்கள் எல்லாம் நன்றாக வளர்ந்திருக்கின்றன. ஆழ்ந்து சென்ற வேரும் படர்ந்து சென்ற கிளைகளும் மரத்தின் வளர்ச்சியை அளவிட்டுரைக்கின்றன. அந்த மரத்திற்குப் பெருமை வேரினாலும் கிளைகளாலும் வந்ததா? மலரினால் வந்ததா?

மரத்திற்குப் பெருமை சந்தேகமில்லாமல் மலரினால் உண்டாவதுதான். வேரும் கிளையும் மலருக்கு ஆதாரமாக இருந்தாலும் அவற்றின் சமுதாயத்துக்கே புகழை வருவிப்பது மலரே. ஆனால் அந்த மலரின் மணமும் பொலிவும் எப்படி வந்தன? வேரின் செம்மையாலும் கிளையின் வளப்பத்தாலும் மலர் ம◌ர்கிறது; மணக்கிறது.

தொழிலுக்கும் கலைக்கும் வேரையும் மலரையும் உபமானமாகச் சொல்லலாம். ஒரு நாட்டின் பெருமைக்குக் காரணமாக இருப்பது அந்நாட்டின் கலைச் செல்வந்தான். எத்தனையோ ஆண்டுகளாகப் பண்பட்டு வந்த சமுதாயத்திலேதான் கலை மலர்ச்சி உண்டாகும். உடல் வளப்பம் மாத்திரம் கலைக்குப் போதாது. உள்ளத்தின் வளப்பமும் வேண்டும்; உயிர் வளப்பமும் வேண்டும். காவியமும் ஓவியமும், சிற்பமும் இன்னிசையும் ஆகிய கவின் கலைகள் பண்பட்ட உள்ளத்திலிருந்து பிறப்பவை; பண்பட்ட சமுதாயத்திலே படர்பவை; பண்பட்ட நாட்டிலே கால் கொள்பவை.

ஒரு நாட்டில் கலைமலர்ச்சி வரவேண்டுமானால் அங்கே முதலில் தொழில் வளர்ச்சி மலிய வேண்டும். வேர் ஊன்றிக் கிளை பரந்து தழை மலிந்து பிறகு மலர் தோன்றுவது போலே தொழில் வன்மை மிக மிகக் கலையின் மலர்ச்சிக்கு வாய்ப்பு உண்டாகும். ஆயிரம் தொழிலாளர்கள் கூடிய சமுதாயத்தில், அவருடைய தொழில் முயற்சியால் உண்டான வலிமையைப் பெற்ற நிலத்தில், ஒரு கலைஞன் பிறப்பான். ஆதலின் தொழிலாளர்கள் நாட்டுக்கு வேரைப் போன்றவர்கள்; கவின் கலைஞர்கள் மலரைப் போன்றவர்கள்.

நாட்டில் தொழில் பல்க வேண்டும். பலவகைத் தொழில்களும் சிறக்க வேண்டும். வெறுந் தொழில்களே மலிந்தால் மனிதன் வாழ்விலே சுவை இராது. அவன் யந்திரமாகி விடுவான். கலையும் வேண்டும். கலையினால்தான் மனித சாதி இம்மையிலே இன்பம் காண முடியும். நித்தியமான அழகைத் தருவது கலை. தொழிலால் உரம் ஏறுகிறது; கலையால் அந்த உரத்திற்கு மெருகு ஏறுகிறது. தொழில் செல்வத்தைத் தரும்; கலை இன்பத்தைத் தரும்; தொழில் ஊக்கத்தைத் தரும்; கலை அமைதியைப் பாய்ச்சும்.

தொழிலும் கலையும் வளர வேண்டுமென்பதே நம் நாட்டினர் குறிக்கோள். அம்மி பொளியும் கல் தச்சன் வீட்டில் விக்கிரகம் அமைக்கும் சிற்பி பிறக்கிறான். பாரதியார் தொழிலும் கலையும் ஒருங்கே வளர வேண்டும் என்று சொல்கிறார்.

காவியம் செய்வோம்—நல்ல
  காடு வளர்ப்போம்
கலை வளர்ப்போம்—கொல்லர்
  உலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம்—நல்ல
  ஊசிகள் செய்வோம்
உலகத் தொழில் அனைத்தும்
  உவந்து செய்வோம்!

தொழிலுக்கும் கலைக்கும் தெய்வமாகிய கலைமகளை இந்த நாட்டில் நவராத்திரியில் கொண்டாடுகிறார்கள். சரஸ்வதி பூஜையன்று கலைஞர்கள் கலைமகளை வழிபடுகிறார்கள். அடுத்த நாளை ஆயுத பூஜையென்று தொழிலாளிகள் கொண்டாடுகிறார்கள். இதை நினைத்தே பாரதியார்,

கைவருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம்

என்று வெள்ளைத் தாமரைப் பூவில் இருக்கும் வாணியைப் பாடுகின்றார். 'தொழில்' என்னும் பாட்டில் 'இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே' என்பது முதலாகப் பலபல தொழில் களைச் செய்யும்படி ஊக்குகிறார்.

அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே!

என்கிறார். பல தொழில்களையும் சொல்லிவிட்டுக் கடைசியில் கலைக்கு வருகிறார் :

பாட்டுஞ் செய்யுளும் கோத்திடு வீரே
பரத நாட்டியக் கூத்திடு வீரே.

தொழில் நிரம்பியும் கலை நிரம்பாவிடில் மலர் இல்லாத மரம் போல நாடு இருக்கும். ஆதலின் தொழிலின் பயனும் கலையின் இன்பமும் ஒருங்கே கிடைக்கும் வண்ணம் கலைமகளை வேண்டுவதே நவராத்திரி வணக்கம் ஆகும்.

# தமிழ் வசன நடை

## "தமிழில் அந்தக் காலத்தில் வசன நடை உண்டா?"

இந்தக் கேள்வியை என் நண்பர் கேட்கிறார். அவர் இப்படிக் கேட்பதைவிட, "தமிழர்கள் அந்தக் காலத்தில் பேசினார்களா?" என்று கேட்கலாம்; அல்லது, "தமிழர் களுக்கு வாய் இருந்ததா?" என்றுகூடக் கேட்டிருக்கலாம்.

"அதென்ன, அப்படிச் சொல்கிறீர்கள்? தமிழர்கள் பேசுவதற்கும் தமிழ் வசன நடைக்கும் என்ன சம்பந்தம்?" என்று அந்த நண்பர் என்னோடு வாதிக்க வரலாம். வரட்டுமே; "தமிழருக்கு வாயிருந்தால் பேச்சு உண்டு; பேச்சிருந் தால் வசன நடை உண்டு" என்று காரணகாரியத் தொடர்பு படுத்திப் பதில் சொல்கிறேன்.

மனிதன் தன்னுடைய உள்ளக் கருத்துக்களை வெளியிடுவதற்கு மொழியைக் கண்டுபிடித்தான். காக்கை குருவி முதலிய பறவைகளும், ஆடு மாடு முதலிய விலங்குகளும் தங்களுடைய கருத்தை ஓரளவுதான் தம்முடைய குரலால் தெரிவித்துக்கொள்ளுகின்றன. மனிதன் அந்தக் குரலை வசப்படுத்தி அதிலே பலபல கட்டுப்பாடுகளையும் விசித்திரங்களையும் அமைத்துப் பாஷையாகச் செய்துகொண்டான். தன் தேவைக்கு ஏற்றபடி வார்த்தைகளை உண்டாக்கி, அவற்றால் மயக்கம் உண்டாகாதபடி கட்டுப்பாட்டையும் ஏற்படுத்திக் கொண்டான். ஒரு பொருளுக்கு முதல் முதலில் 'கல்' என்று பெயர் வைத்து வழங்கத் தொடங்கினால், அதே பெயரை அவன் எப்போதும் சொல்லிப் பழகினான்; பிறரையும் சொல்லச் செய்தான். இந்த வரையறையினால் பேச்சு வழக்கம் ஒரு கூட்டத்தாருக்குள் பொதுவாகி அதுவே மொழியும் ஆயிற்று.

நாளடைவில் எழுத்துப் பழக்கம் மனித சமுதாயத்தில் தோன்றியது பேசுவதை எழுத முதலில் பழகினான். பேசிப் பேசிச் செம்மையாகி ஓர் உருவத்தை அடைந்த மொழி அப்போது எழுத்துருவத்தையும் பெற்றது. அந்த ஆரம்ப காலத்தில் மனிதன் கவிதையையா எழுதியிருப்பான்? பேசுவதைத்தான், உரைக்கும் நடையைத்தான், எழுதினான்.

ஆகவே, முதலில் எழுத்தில் வந்தது வசனந்தான். தமிழர் மிகப் பழைய சாதியினர்; அவர்களுடைய மொழி பழமையானது. எழுத்துருவம் பெற்று எவ்வளவோ காலத்துக்குப்பின் இலக்கியங்களும் இலக்கணங்களும் ஒரு மொழியில் உண்டாகின்றன. தமிழில் அப்படி உண்டான இலக்கிய இலக்கணங்கள் கொள்ளையோ கொள்ளை!

தமிழ்மொழியும் உலக வளர்ச்சியோடு வளர்ந்து வந்ததேயாகையால் இதில் வசன நடை, எழுத்தில், இலக்கிய உருவத்தில் வந்திருப்பது இயல்பே. அதிருஷ்டவசத்தால்

கடல் நீருக்கும் கறையானுக்கும் இரையாகாமல் பிழைத்து நிற்கும் பழைய தமிழ் நூல் ஒன்று இப்போது நமக்குக் கிடைக்கிறது. **'தொல்காப்பியம்'** என்ற இலக்கண நூலைத் தான் சொல்கிறேன். அதிலுள்ள இலக்கண வகைகளையும், ஒழுங்கான அமைப்புகளையும் பார்த்தால் தமிழர் எவ்வளவோ காலமாகப் பாஷையைப் பண்படுத்திக் கொண்டு வந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது.

அந்தப் பழைய இலக்கண நூலுக்கு ஆராய்ச்சிக்காரர்க ளெல்லாம் இன்னும் ஜாதகம் கணித்துக்கொண்டிருக்கிறார் கள். ''அது பிறந்த மேனிக்கு இல்லை; என்ன என்னவோ புதிய சரக்குகளைப் பின்னாலே வந்தவர்கள் அதில் சேர்த்தி ருக்கிறார்கள்'' என்று சிலர் சொல்லுகிறார்கள். ''அதிலே இருக்கும் ஒவ்வொரு சூத்திரமும் தமிழர் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவது. பொருளதிகாரம் முழுவதும் தமிழர் வீட்டுச் சரித்திரமும் நாட்டுச் சரித்திரமும் கலந்தது'' என்று சிலர் சொல்லுகிறார்கள். இந்தச் சண்டை எப்படி யாவது போகட்டும். அது மிகப் பழமையான நூல் என்பதில் ஒருவருக்கும் ஒரு தடையும் இல்லை. கடைச்சங்க காலத்தை இரண்டாயிரம் வருஷங்களுக்கு முற்பட்டதென்று உத்தேச மாகச் சொல்கிறார்கள். அதற்கு முந்திய தொல்காப்பியத் தின் காலம், மூவாயிரம் வருஷங்களுக்கு முன்பென்று அந்த உத்தேசத்தின் சார்பிலே சொல்லி விடலாம்.

ஒரு பொருள் இருந்தால்தான் அதைப்பற்றிய ஆராய்ச்சி யும் எழும். இலக்கியம் இருந்தால்தான் அதிலுள்ள பண்பை இலக்கணமாக வகுக்கலாம். தொல்காப்பியத்தில் உள்ள இலக்கணக் கருத்துக்கள் அதற்கு முன்பு தமிழ் நாட்டில் வழங்கி வந்த இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு எழுந் தன. ஆகையால் தொல்காப்பியத்தில் ஒருவகையான நூலைப்பற்றிய பிரஸ்தாபம் வந்தால் அத்தகைய நூல்கள் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னே வழங்கி வந்ததென்று

ஊகித்துக் கொள்ளலாம்; ஏன்? நிச்சயமாகவே சொல்லி விடலாம்.

X X X

இலக்கணம் செய்பவர்கள் உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்ற இரண்டையும் ஆதாரமாகக் கொண்டு இலக் கணங்களைத் தொகுப்பார்கள். தொல்காப்பியரும் அப்படித் தான் தொல்காப்பியத்தை இயற்றினார். தமக்கு முன்பு இருந்த இலக்கணங்களையும் ஆராய்ந்தார். உலகத்தில் வழங்கும் உயிருள்ள பாஷையாகிய வசனத்தையும் ஆராய்ந் தார். ஆம்! சான்றோர்-கல்வியறிவிற் சிறந்தோர்-எப்படிப் பேசுவார்களோ அதுதான் வசன நடை; அதையே வழக் கென்று சொல்கிறார்கள். அந்த வழக்கையும் ஆராய்ச்சி பண்ணினார். தொல்காப்பியத்தைப் பாராட்டிச் சிறப்புப் பாயிரம் இயற்றிய புலவர் சொல்வதைப் பார்க்கலாம் :

தமிழ்கூறும் நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி.''

இங்கே சொல்லப்பெறும் வழக்கிலே வசனப்போக்கும் சேரும்.

எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் பொருளதிகாரம் என்று மூன்று பகுதியாகத் தொல்காப்பியர் தம் நூலைப் பிரித்து அமைத்திருக்கிறார். எழுத்ததிகாரத்திலும், சொல் லதிகாரத்திலும் இந்த வழக்கைப்பற்றிய செய்திகள் பல இடையிடையே வருகின்றன. ஆயினும் பொருளதிகாரத் தில்தான் உரைநடை நூல்கள் பலபல துறையில் அமைந் திருந்தன என்பதைத் தெரிவிக்கும் ஆதாரம் இருக்கிறது.

இலக்கிய இலக்கணங்களின் பாகுபாட்டைத் தொல் காப்பியர் ஓரிடத்தில் சொல்கிறார். இலக்கணம், உரைநடை புதிர், பழமொழி, மந்திரம், குறிப்பு என அடிவரையறையில்

லாதவை ஆறு கூறப்படுகின்றன. அவற்றுள் உரைநடையும் ஒன்று.

அந்த உரைநடையை நான்கு பகுப்பாகப் பிரிக்கிறார் தொல்காப்பியர்.

X X X

இலக்கிய வகைகளில் சில காவியங்கள் பாட்டும்உரையும் கலந்தனவாக இருக்கும். வடமொழியிலுள்ள சம்புக்கள் அந்த முறையில் அமைந்தவையே. தமிழில் 'தொன்மை' என்று அவற்றைப் பழங்காலத்தில் சொல்லி வந்தார்கள். உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளென்று சொல்வதும் உண்டு. சங்க காலத்தில் இருந்த இராமாயணமும், பாரதமும் அந்த வகையைச் சார்ந்தவையே. தகடூர் யாத்திரை என்ற பழைய நூலிலும் பாட்டும் உரையும் கலந்திருந்தன. அவை இப்போது நமக்குக் கிடைக்கவில்லை. சிலப்பதிகாரத்தில் இடையிடையே உரை இருக்கிறது. இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் இருந்த வசன நடைக்கு உதாரணம் வேண்டுமானால் அதைப் பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது கிடைக்கும் மிகப் பழமையான தமிழ் வசனம் அது. இப்படி, 'பாட்டிடை வைத்த குறிப்பு'க்களை உரை வகையில் ஒரு பகுதியாகப் பகுத்தார் தொல்காப்பியர்.

இரண்டாவது வகை பாட்டின் தொடர்பு இல்லாமல் தனியே எழுதி வந்த வசனம். பாடல்களுக்கு உரையாக எழுதப் பெற்றவற்றை இந்தப் பகுதியால் தொல்காப்பியர் குறிக்கிறாரென்று உரையாசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள்.

"பாவின் றெழுந்த கிளவி" என்பது அந்த இரண்டாவது வகை. 'பாட்டில்லாமல் எழுந்த உரை' என்பது அதன் பொருள். 'பாட்டின்றிச் சூத்திரத்திற்குப் பொருளெழுதுவன போல்வன' என்று இதற்கு உரை வகுத்த பேராசிரியர் எழுதுகிறார். சூத்திரத்தின் உரைகளைப்பற்றி

தனியாக, இலக்கணத்தைப்பற்றிச் சொல்லும்பொழுது, இரண்டிடங்களில் தொல்காப்பியர் சொல்லி யிருக்கிறார்.

நூலெனப் படுவது நுவலுங் காலை
... ... ... ...
உண்ணின் றகன்ற உரையொடு பொருந்தி

என்று சொல்கிறார். நூலென்பது அக்காலத்தில் இலக்கணத்துக்கே வழங்கி வந்த பெயர். இந்த இடத்தில் இலக்கண நூலைப்பற்றிச் சொல்லும் தொல்காப்பியர், உரையை அதற்கு உறுப்பாகவே சொல்லி விடுகிறார். பின்னால் மரபியல் என்னும் பகுதியில் இலக்கண நூலைப்பற்றி விரிவாகச் சொல்லும் பொழுதும் உரையையும் சேர்த்தே சொல்கிறார். ஆகையால் இலக்கண நூல்களின் உரை, இலக்கணத்தின் பகுதியாகி விடும். நூலைப்பற்றிச் சொல்லி அதனோடு தொடர்புபடுத்திய உரையை விரித்துச் சொன்ன தொல்காப்பியர், ''பாவின்றெழுந்த கிளவி'' என்பதில் மீட்டும் அதையே தனியாகச் சொன்னாரென்று சொல்வது சரியாகத் தோன்றவில்லை. ''பாட்டின் சம்பந்தமே இல்லாமல் தனி வசனமாக வந்தவை' என்று சொல்வதுதான் பொருத்தம்.

அடுத்தபடி மூன்றாவது வசனப் பகுப்பு, ''பொருளொடு புணராப் பொய்ம்மொழி'' என்பது. உண்மையல்லாமல் கட்டுக் கதையாக அமையும் இலக்கியம் அது. 'ஒரு பொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து சொல்லுவன. அவை, ஓர் யானையும் குருவியும் தம்முள் நட்பாடி இன்னுழிச் சென்று இன்னவாறு செய்தனவென்று அவற்றுக்கு இயையப் பொருள்படத் தொடர்நிலையான் ஒருவனுழை ஒருவன் கற்று வரலாற்று முறையான் வருகின்றன' என்பது பேராசிரியர் விளக்கம். நீதியை உணர்த்தும் உருவக விநோதக் கதைகளை (Parables) இவர் குறிக்கின்றாரென்று தோற்றுகிறது. பழங்காலத்தில் கட்டுக்கதைகள் யாவும் இந்த ரீதியிலே அமைந்திருந்தன என்பதற்கு உலகத்துப் பழைய

இலக்கியங்கள் சாட்சி. கிறிஸ்தவர் வேதமாகிய பைபிளி லுள்ள கதைகளும், உபநிடதக் கதைகளும், பஞ்சதந்திரம் முதலியனவும் இந்த வகையைச் சார்ந்தனவே. தமிழர்களுக் கும் இந்தக் கட்டுக் கதைச் செல்வம் உண்டென்பதையே தொல்காப்பியத்தால் அறிகிறோம்.

நான்காவது பகுதியாகச் சொல்லப் பெறுவது "பொரு ளொடு புணர்ந்த நகைமொழி" என்பது. 'பொய்யெனப் படாது மெய்யெனப்பட்டும் நகுதற்கு ஏதுவாகும் தொடர் நிலை. அதுவும் உரையெனப்படும். அவையாவன : சிறுநீர் குரீஇயுரையும், தந்திர வாக்கியமும் போல்வனவெனக் கொள்க. இவற்றுட் சொல்லப்படும் பொருள் பொய்யெனப் படாது உலகியலாகி நகை தோற்றுமென்பது' என்று விளக்குகிறார் பேராசிரியர். உலகத்திலே நிகழும் நிகழ்ச்சிகளைப் பரிகசித்து நகை தோற்றும் வண்ணம் வெளியிடுவது இப்பகுதி. ஆங்கிலத்தில் உள்ள கிண்டல் (Satire) வகை இலக்கியத்தைப் போன்றது இதுவென்று சொல்லலாம். நகைச் சுவையுடைய வசன நூல்களாகிய இவ்வகைக்கு, சிறு குரீ இயுரை, தந்திர வாக்கியம் என்னும் இரண்டு நூல்களை உரைகாரர் உதாரணமாகக் காட்டு கிறார். அந்த இரண்டும் இப்போது நமக்குக் கிடைக்க வில்லை.

இந்த நான்கு வகைகளிலும் முன் இரண்டும் யாவருக் கும் உரியனவாம். பின் இரண்டும் செவிலி கூறுவதற்கு உரியனவாம். பாட்டிதான் கதை சொல்லும் ஆற்றலுடை யவள்; கட்டுக் கதைகளையும், பரிகாசப் பேச்சுக்களையும் சொல்லிக் குழந்தைகளின் உள்ளத்தைக் கொள்ளை கொள் ளுபவள். இன்னும் கர்ணபரம்பரையாகப் பாட்டிகள் சொல்லி வரும் கதைகள் எல்லாத் தேசங்களிலும் உலவு கின்றன. இவ்விரண்டு பகுப்பையும் இலக்கியங்களாகக் கருதி ஏற்றுக்கொண்டது தமிழுலகம்.

முன் இரண்டு பகுதியில் "பாட்டிடை வைத்த குறிப்பு" என்பது பாட்டினிடையே கதைப்போக்கை இணைக்க வருவதாதலின் அதுவும் பாட்டைப்போலவே கருதுதற்குரியது. சிலப்பதிகாரத்திலுள்ள "உரைப்பாட்டு மடை" முதலிய பகுதிகளைப் பார்த்தால் அவையும் செய்யுளைப்போன்ற நடையிலே இருத்தலைக் காணலாம். உரைக்கும் செய்யுளுக்கும் இடைப்பட்டது அது.

"பாவின் றெழுந்த கிளவி" என்பதுதான் வசனப்பரப்பின் பெரும் பகுதியைச் சுட்டுவதாக இருக்க வேண்டும். தொல்காப்பியர் காலத்தில் இந்த நான்கு வகை வசன நூல்களும் வழக்கில் இருந்தன. இலக்கண நூலொன்றில் தனியாக வகைப்படுத்திச் சொல்ல வேண்டுமாயின்' அதற்குத் தக்கபடி அவை மிகுதியாகவே இருந்திருக்க வேண்டும்.

பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்று
உரைவகை நடையே நான்கென மொழிப

என்று வரும் இந்தத் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு ஆதாரமாகிய வசன நூல்களில் ஒரு சிறு பகுதிகூட நமக்குக் கிடைக்கவில்லை.

மற்றொரு விஷயம்: இந்தப் பகுப்பு, தொல்காப்பியராலே முதல் முதலாக அமைக்கப்பட்டது என்று சொல்வதற்கில்லை. அதற்கு முன்பே ஏற்பட்டதென்று தெரிகிறது. மேலே காட்டிய சூத்திரத்தில் 'நான்கென மொழிப' என்று தொல்காப்பியர் சொல்கிறார். 'நான்கு என்று சொல்வார்கள்' என்பது அதன் பொருள். 'மொழிப' என்ற அடையாளம் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே இப்பாகுபாடு வழக்கத்தில் இருந்ததென்பதைக் குறிக்கிறது. அந்தக் குறிப்பைக் கொண்டே, அப்படி வகுத்த மிகப் பழங்காலத்தி

லேயே, தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே, தமிழ் வசனத்திற்கு இலக்கிய மதிப்பு உண்டாகிவிட்டது என்று நாம் சொல்லலாம் அல்லவா?

# தமிழ் வசனத்துக்கு விஷயம்

ஒரு ராஜகுமாரன் ஓரிடத்தில் உலாவிக்கொண்டிருக்கையில் அவன் கண்ணில் மிகவும் நீளமாகவும் பளபளப்பாகவும் கறுப்பாகவும் ஒரு பொருள் தோன்றியது. யாருடைய தலைமயிரோ அப்படிச் சுருளாக அங்கே கிடந்தது. அதன் அழகைப் பார்த்தபோது அவனுடைய உள்ளம் ஓர் அழகிய மங்கையைச் சித்திரித்துப் பார்த்தது; 'இத்தகைய கூந்தலை உடையவள் ஒரு கட்டழகியாகத்தான் இருக்க வேண்டும்' என்று அவன் உறுதியாக நம்பினான்.

அதை எடுத்துக்கொண்டு ஒரு சித்திரக்காரனிடம் போனான். அவன் சித்திரக்கலையின் வரம்பைக் கண்டவன். "இந்த அழகியின் உருவத்தை எழுதிக் கொடு" என்று அவன் கையில் ராஜகுமாரன், தான் கொண்டு சென்ற தலைமயிரைக் கொடுத்தான்.

சித்திரக் கலைஞன் 'தலைமயிரைக் கொடுத்துவிட்டு அழகியின் படத்தைக் கேட்கிறானே!' என்று ராஜகுமாரனைப் பரிகாசம் செய்யவில்லை. "அப்படியே செய்கிறேன்" என்று ஒப்புக்கொண்டான். தனது சித்திர சாமர்த்தியத்தினால் அந்த கூந்தலுக்கு ஏற்ற உருவம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்து ஓர் அழகியின் படத்தை அவன் வரைந்து கொடுத்தான். அதை வைத்துக்கொண்டு ராஜகுமாரன் உலகமெல்லாம் தேடிக் கடைசியில் அதேமாதிரி ஒருத்தி இருப்பதைக் கண்டு அவளைக் கல்யாணம் செய்து கொண்டானாம்.

இப்படி ஒரு பழங்கதை உண்டு. கதையில் சொல்லப்பட்ட நிகழ்ச்சி சாத்தியமோ சாத்தியமன்றோ-அந்த விஷயம் வேறு. இந்த வரலாறு கலையின் தத்துவம் ஒன்றை அழகாக வெளியிடுகிறது. அழகின் ஓர் அம்சத்தைக் கலைஞன் கண்டு விட்டால் அதையே பற்றுக்கோடாகக் கொண்டு அந்த அழகைச் சம்பூர்ணமாக்கி மனோரம்யம் வாய்ந்ததாகச் செய்துவிடுவானென்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

சித்திர சிருஷ்டிக்குமட்டும் பொருந்தியது இந்த உண்மை என்று கொள்ள வேண்டாம். எல்லா விதமான கலைகளின் விஷயத்திலும் இது பொருந்தும். இலக்கியமாகிய பெருங் கலைக்கு அதிகப் பொருத்தமுடையது. கவிஞனது கருத்து அவனது கற்பனா சக்தியொடு கலந்து பரிமளிக்கிறது. ஒரே கருத்தைப் பல மொழிகளில் பல கவிஞர்கள் தெரிவித்திருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் அவ்வளவும் தனித்தனியே வெவ்வேறு அழகுடையனவாக விளங்குகின்றன. இந்த அழகின் பேதங்களைச் சிருஷ்டிப்பது கவிஞனது கவித்துவ சக்தியே ஆகும்.

இருபதாம் நூற்றாண்டில், இலக்கியப்பரப்பில் வசனம் ஒரு பெரும் பதியாக விளங்குகிறது. மேல்நாட்டில் ஆங்கிலம் முதலிய மொழிகளில் வசனமும் கவிதையின் அளவுக்கு-ஏன், உபயோகத்தில் கவிதைக்கு ஒருபடி மேலேகூட-உயர்ந்து விட்டதென்று சொல்லலாம். உலக முழுதும் உள்ள மொழிகளில் வசன இலக்கியங்கள் மலிந்து வருகின்றன. தமிழ் மாத்திரம் அதற்கு எப்படி விலக்காக இருக்க முடியும்?

வசன சிருஷ்டிக்குக் கற்பனாசக்தி வேண்டுவது அவசியம். ஆனால் அந்தக் கற்பனை படர்வதற்கு ஊன்றுகோல் வேண்டாமா? கவிஞன் கண்ணும் கருத்தும் கொண்டு பிடிக்கும் படங்களை விரிவாக்கிக் கற்பனை வர்ணம் பூசிச் சித்திரிக்கிறான். வசன இலக்கிய கர்த்தாவும் அப்படித்தான் செய்கிறான்.

"வசனத்துக்குத் தமிழில் சரக்கு எங்கே இருக்கிறது?" என்று கேட்கின்றனர். மேல்நாட்டு வசனத்துக்குச் சரக்கு, விஷயம், எங்கே இருந்தது? மனோபாவனையின் வளப்பம் ஒன்றையே துணையாகக் கொண்டு அவர்கள் வசன சிருஷ்டி செய்து விட்டார்களா? இல்லை. அவர்களுக்குப் பழைய இலக்கியங்கள், சரித்திரங்கள் முதலியவை மூலப் பொருள்களாக உதவின. அவற்றையெல்லாம் அவர்கள் எவ்வளவு கூடுமோ அவ்வளவு உபயோகப்படுத்திக் கொண்டு விட்டார்கள். பழைய சரக்கையெல்லாம் அவர்கள் பயன்படுத்திக் கொண்டபடியால் புதிய சரக்குகளைத் தேடுகிறார்கள்.

ஒவ்வொரு நாட்டுக்கும் தனித்தனியே அமைந்த சில பழஞ்சரக்குகள், மூலக் கருவிகள் இருக்கின்றன. அவற்றை இலக்கிய சிருஷ்டியிலே பயன்படுத்திக் கொண்டால் அந்த இலக்கியத்தில் ஒரு தனிப்பண்பு புலனாகும்.

தமிழில் வசன சிருஷ்டி இளம் பருவத்தில் இருக்கிறது. பழைய கருவிகள் பலவற்றை இன்னும் நாம் தொடாமலே இருக்கிறோம். பழைய இலக்கியத்திலே புதைந்து கிடக்கும் காட்சிகளையும் கருத்துக்களையும் எடுத்து அவற்றின் பழைய தோற்றத்தை மாற்றிப் புது மெருகிட்டுக் கொடுக்கலாம். தமிழ்நாட்டு சரித்திரத்திலே மனிதனுடைய உணர்ச்சியைக் கிண்டிவிடும் நிகழ்ச்சிகள் ஆயிரக்கணக்காக உண்டு. அவற்றைக் கண்டு பிடித்து விரித்து இனிய வசனத்தில் புதிய சிருஷ்டிகள் செய்யலாம். ஊர்தோறும், குடும்பங்கள்தோறும் கர்ண பரம்பரையாகச் சொல்லப்பட்டுவரும் பல சுவையுள்ள வரலாறுகளை அறிந்து அழகுபடுத்திக் காட்டலாம். தமிழ் நாட்டில் எவ்வளவோ ஸம்ஸ்தானங்கள், ஜமீன்கள் இருந்தன. ஒவ்வொரு ஸம்ஸ்தான சம்பந்தமாகவும் எழுதப்படாமல் நிற்கும் சரித்திரங்கள் பல உண்டு. வீரத்தையும் மனிதனுடைய உயர்குணங்களையும் இழி குணங்களையும் சித்திரிக்கும் செய்திகள் பலவற்றை அந்தச் சரித்திரங்களில்

காணலாம். அவை நல்ல வசனத்துக்கு ஏற்ற விஷயங்களல்லவா?

இலக்கியத்தைப் பார்ப்போம். கவிஞர்களுடைய உள்ளத்தைக் கவருகின்ற காதலையும் வீரத்தையும் பழைய சங்க நூல்களிலே காண்கிறோம். கவிஞர்களுடைய பாவனா சித்திரங்களையும், சரித்திரத் துணுக்குகளையும் அந்தக் காலத்துப் பாஷையில் அந்தக் காலத்துச் சம்பிரதாயத்தில் அவை காட்டுகின்றன. அவற்றை மாற்றி அவற்றிலுள்ள விஷயத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு நவீன வசனத்திலே நவீன அமைப்பிலே பொருத்திக் காட்டினால் எவ்வளவு அழகாக இருக்கும்!

ஒரு சிறிய காட்சி: காதலனும் காதலியும், மரங்கள் இல்லாமல் வெறுமையாக உள்ள பாலைவனத்தில் சென்று கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய காதலை உணர்ந்து கொள்ளாத பெற்றோரைப் பிரிந்து வேறு ஊருக்குப் போகிறார்கள்; வெம்மை மிகுந்த பாலையின் கொடுமையைக் காதலின்பத்தில் மறந்து செல்கிறார்கள்.

எதிரே சில கிழவர்கள் வருகிறார்கள். இயற்கையாகவே கூர்மையை இழந்திருந்த அவர்கள் கண்களுக்குப் பசுமையென்பதே மருந்துக்கும் காணாத பாலைநிலத்தின் வறண்ட காட்சி மிக்க அயர்ச்சியை உண்டாக்குகிறது.

காதலனும் காதலியும் தோன்றுகின்றார்கள். முதியவர்களுடைய கண்கள் அவ்விருவருடைய உவகை ததும்பும் முகங்களிலே சென்று பதிந்து விடுகின்றன. பசுமைக்கு வெறித்துப்போயிருந்த அவை அந்த இரண்டு முகமலர்களில் தோற்றிய குளிர்ச்சியையும் அழகையும் முகந்து முகந்து உண்கின்றன.

ஒரு கிழவர் மனத்தில் இந்தத் திருப்திக்கு இடையே மின்வெட்டுப் போல ஒரு பழைய ஞாபகம் பளிச்சென்று தோற்றியது. அகத்தே தோற்றிய அந்தக் காட்சியையும்

புறத்தே கண்ட இவ்விரு காதலருடைய காட்சியையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார். "என்ன ஆச்சரியம்! தெய்வ சக்தி எவ்வளவு ஆச்சரியமானது" என்று கூறி வியக்கின்றார்.

காதலர்கள் தம் வழியே சென்றனர். அந்தக் கிழவர் சிறிது நேரம் இப்படி ஸ்தம்பித்து நின்றார். உடன் செல்பவர்கள் அவர் வாயிலிருந்து வந்த வார்த்தைகளைக் கேட்டார்களே ஒழிய, அவர் அகற்துள்ளே கண்ட காட்சியை அறியவில்லை.

"என்ன ஆச்சரியத்தைக் கண்டுவிட்டீர்?" என்று ஒருவர் கேட்கிறார்.

"இப்போது போனார்களே, இந்த ஜோடியைப் பார்த்தீரா! எவ்வளவு ஒற்றுமையாக, சந்தோஷமாக இணைந்து செல்கிறார்கள்! இவர்களைக் கண்டவுடனே அந்தக் காட்சி நம் கண்களில் எவ்வளவு ஜில்லென்று படுகிறது! இரண்டு மலர் மாலைகளை ஒன்று சேர்த்துக் கட்டி வைத்தாற்போல அல்லவா இருக்கிறது? ஆனால்—" கிழவர் மறுபடியும் தம் உள்ளக் காட்சியிலே ஈடுபட்டு விட்டார்.

"என்ன ஆனால்? சீக்கிரம் சொல்லும்" என்று ஆவலாய்க் கேட்கிறார் நண்பர்.

"இவர்களையே நான் எட்டு வருஷத்துக்கு முன் பார்த்திருக்கிறேன். அப்போது இவ்விருவரும் சிறு குழந்தைகள். படுசுட்டிகள். இந்த இரண்டு பேரும் இவ்வளவு இணைந்து செல்கிறார்களே; அன்றைக்குப் பார்க்க வேண்டும் அந்தக் கோலத்தை: இவன் அவள் மயிரைப் பிடித்து இழுக்கிறான்; இவள் அவன் மயிரைப் பிடித்து உலுக்குகிறாள். இந்த மயிர்பிடி சண்டையில் இரண்டு வீட்டுப் பாட்டிமார்களும் வந்து விலக்கிப் பார்த்தார்கள். தெருவே கூடி விட்டது. ஏக அமர்க்களம். குழந்தைச் சண்டை குடும்பச் சண்டையாக மாறிப் பிரமாதமாகி விட்டது. அந்தச் சிறு பெண் இவன் தலை மயிரை இழுக்க, இவன் அவள் மயிரை

இழுக்க நின்ற அந்தக் காட்சி என் மனசிலே அப்படியே பதிந்திருக்கிறது."

நண்பருக்கு இதில் நம்பிக்கை உண்டாகவில்லை. "அவர்களே இந்த ஜோடியென்பது உமக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்கிறார்.

"ஏன் தெரியாது? அன்று கண்ட முகவெட்டு அப்படியே இருக்கிறதே. நான் எப்படி மறக்க முடியும்? இப்போதுதான் நன்றாகக் கவனித்தேனே! அப்பா! என்ன ஆச்சரியம்! நினைக்க நினைக்க ஆச்சரியம் வளர்கிறது. எல்லாம் தெய்வத்தின் விளையாட்டு!" இப்படிச் சொல்லி நிறுத்துகிறார் கிழவர்.

இது குறுந்தொகை என்னும் சங்க நூலில் உள்ள ஒரு காட்சி. இப்படியே பலவேறு இயல்புகளை விளக்கும் காட்சிகளை அந்தக் காலத்து நூல்களிலே காணலாம்.

இனி, சரித்திரத்திற்கு வருவோம். தமிழில் சரித்திரத்தைப் பாதுகாப்பதில் சிரத்தை பல நூற்றாண்டுகளாக இல்லை. அது முக்கியமானதல்ல என்று கூடச் சிலர் கருதியிருந்தார்கள். அந்தக் காலம் மலையேறிவிட்டது. சரித்திரமும் இலக்கியமும் இணையும் காலம் வந்துவிட்டது. தமிழ் நாட்டின் சரித்திரம் விரிந்தது. அரசர்கள் சரித்திரம், ஜமீன்தார்கள் சரித்திரம், ஸம்ஸ்தானாதிபதிகள் சரித்திரம் இவைகளைத் துப்புத்துலக்கி ஆராய்ச்சிக்காரர்கள் வெளியிடட்டும்; அவர்களோடு வசன எழுத்தாளர் சேர்ந்து அந்தச் சரித்திரத்திலிருந்து விஷயத்தை எடுத்துப் புதிய உருவம் கொடுக்கலாமே. மருதபாண்டியரென்ற ஜமீன்தார் சிவகங்கையில் இருந்து வந்தார். அவருடைய வீரத்தையும் தர்ம சிந்தனையையும் வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகள் கர்ணபரம்பரையாக வழங்கி வருகின்றன. கட்டபொம்முவின் கதையிலேதான் வீரத்திற்குக் குறைவுண்டா? இவை சில உதாரணங்கள்.

தலைமுறை தலைமுறையாகப் பாட்டிமார்கள் சொல்லி வருகின்ற கதைகளைத் தொகுத்து உருவாக்கினால் அந்தத் தொகுதி எவ்வளவு ருசியுள்ளதாக இருக்கும்! நாடோடிக் கதைகளில் இளங்குழந்தைகள் கூடச் சொக்கி விடுகிறார்களே. வசன இலக்கிய சிருஷ்டியிலே அவற்றிலிருந்து எவ்வளவு சரக்கை எடுத்துக்கொள்ளலாம்!

ஒவ்வோர் ஊரிலும் வழங்கும் பழைய கதைகளுக்குக் கணக்கே இல்லை. காதுடையவர்களும் கருத்துடையவர்களும் இந்தத் துறையில் வேலை செய்ய முற்பட்டால் அது சிறந்த இலக்கியத் தொண்டாக இருக்கும். இப்படிக் கேட்டு அறிந்த பல விஷயங்களை வைத்துக்கொண்டு தற்காலத் தமிழ்வசன ஆசிரியர்களில் முதல் ஸ்தானத்தை வகிக்கும் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் அழகுபடுத்தி எழுதிய வரலாறுகளில் எல்லா வகை ரஸங்களையும் காண்கிறோமே.

ஐயரவர்கள் தூத்துக்குடிக்குப் போயிருந்தபோது மீளவிட்டானென்ற ஊரிலிருந்து ஒரு நண்பர் வந்திருந்தாராம். "உங்கள் ஊருக்கு அந்தப் பேர் வரக் காரணம் என்ன?" என்று ஐயரவர்கள் விசாரித்தார்களாம். அவர் சொல்லத் தொடங்கினார்:

கம்பர் இந்த வழியே வந்திருந்தபோது ஒருநாள் விடியற் காலையில் எங்கள் ஊரில் ஒரு தோப்பில் தங்கினார். அங்கே சிலர் ஏற்றம் இறைத்து மரங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார்கள். தண்ணீர்ச் சாலைப் பிடிக்கிறவன் பாட்டுப் பாடிக்கொண்டே இறைத்தான். அவனுடைய பாட்டிலே கம்பருடைய கவனம் சென்றது. அதில் மனத்தைப் பறிகொடுத்தவராய் இருக்கும்போது ஏற்றக்காரன் ஒரு புதிய பாட்டைத் தொடங்கினான்.

மூங்கிலிலை மேலே

என்று அவன் ஆரம்பித்தான். அதைச் சாவதானமாகப் பாடிவிட்டு,

மூங்கிலிலை மேலே
தூங்குபனி நீரே

என்று தொடர்ந்து பாடினான். மறுபடியும் இரண்டையும் திருப்பிச் சொன்னான்.

மூங்கிலிலை மேலே
தூங்குபனி நீரே

என்று சொல்லிவிட்டு மீண்டும் பல தடவை அவற்றையே சொன்னான். நடுவிலே சால் கணக்கையும் வழக்கம்போல அந்த ராகத்திலேயே கூறினான்.

தூங்குபனி நீரை

என்று மூன்றாவது அடியை எடுத்தான். அதைத் திருப்பிச் சொல்வதற்குள் போதுமான தண்ணீர் இறைத்தாய்விட்டது. ஆனால், ஏற்றத்தை விட்டுவிட்டு அக்குடியானவர்கள் போய் விட்டார்கள்.

அந்தப் பாட்டைக் கவனித்துக் கொண்டிருந்த கம்பர் அவன் பாடின மூன்றடிகளையும் ஞாபகப்படுத்திக் கொண்டார்.

மூங்கிலிலை மேலே
தூங்குபனி நீரே
தூங்குபனி நீரை—

என்று பாட்டு அரைகுறையாக நின்றது. ஏற்றம் இறைக்கும் காலைப்பொழுதின் காட்சியை அந்தப் பாட்டுப் படம் பிடித்துக் காட்டுகிறது. ஆனாலும் குறைப் படமாக நின்றது அது. கம்பர் அதன் முடிவு எப்படி இருக்குமென்று சிந்தித்துப் பார்த்தார். அவருக்குத் தட்டுப்படவே இல்லை. அதை முழுவதும் தெரிந்துகொள்ளாமல் அவர் மனம் சமாதானம் அடைவதாக இல்லை. எப்படித் தெரிந்து கொள்வது? ஏற்றக் காரர்களைத் தேடிச் சென்று கேட்பதற்கு மனம் வரவில்லை. மறுநாள் பார்ப்போம் என்று எண்ணி அடுத்த

நாள் விடியற்காலையில் அங்கே வந்தார். நல்ல வேளையாக அன்று ஏற்றம் இறைப்பவர்கள் வந்திருந்தார்கள். சால் பூட்டியாகிவிட்டது. சால் பிடிப்பவன் கனைத்துக்கொண் டான். கம்பர் காதை நெறித்துக்கொண்டு கேட்டார். "ஆண்டவனே, இவன் அந்தப் பாட்டை ஆரம்பிக்க வேண்டும்" என்றுகூட வேண்டிக் கொண்டிருப்பார்.

ஏற்றப் பாட்டு ஆரம்பமாயிற்று.

மூங்கிலிலை மேலே
தூங்குபனி நீரே

என்னும் பகுதியை அவன் தன் வழக்கப்படி பாடி முடிப்பதற் குள் கம்பருக்கு ஆத்திரம் பொறுக்க முடியவில்லை. அடுத்த அடிகூட அவருக்குத் தெரிந்தது தானே? அதையும் ஏற்றக் காரன் நிதானமாகப் பாடினான்:

தூங்குபனி நீரை.

இனிமேல்தான் புதையல் கிடைக்கப் போகிறதென்று கம்பர் ஆவலாய் நின்றார். பாவம்! ஒரு சிறிய பாட்டின் ஓரடியின் அழகு தெரிவதற்கு அவர் ஒருநாள் முழுவதும் காத்திருந்தாரென்றால் அவருடைய ஆசை எவ்வளவு அதிக மாக இருக்க வேண்டும்!

தூங்குபனி நீரை

என்கிறான் தண்ணீர் இறைப்பவன். "தெரியுமப்பா; மேலே சொல்லு" என்று சொல்லிக்கொள்கிறார் கம்பர். மறுபடியும் தடங்கல் வரக் கூடாதே யென்பது அவர் பிரார்த்தனை.

தூங்குபனி நீரை
வாங்குகதி ரோனே.

கம்பர் துள்ளிக் குதித்தார். "என்ன அழகு! மூங்கில் இலையையும் பனித் துளியையும் கதிரவனையும் பொருத் திக் காட்டும் இதில் எவ்வளவு அழகுணர்ச்சி ததும்புகிறது!

இந்த அடியை, இந்த பாவத்தை நாம் தலை நோவ யோசித்தோம்; வரவில்லையே!'' என்று எண்ணி அவர் வெட்கம் அடைந்தார். மேலே, தாம் நினைத்த இடத்திற்குச் செல்ல அவருக்கு மனம் வரவில்லை. அவர் மீளப் போய் விட்டார். அவரை மீளவிட்ட இடம் இது. அதனால்தான் மீளவிட்டான் என்ற பெயர் வந்தது.

இவ்வாறு அந்த நண்பர் சொன்னாராம்.

இதைப் போன்ற ரஸமான வரலாறுகளைத் தொகுத்து எழுத எழுத்தாளர்கள் முற்பட்டால் 'வசனத்துக்குச் சரக்கு இல்லை' என்று குறை கூறுவது நிச்சயமாக ஒழிந்துவிடும்.

# கொச்சைத் தமிழ்

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் மறுபடியும் பிறந்தால் அவர் ஞாபகம் எதிலே அதிகமாகச் செல்லும்? எந்த விஷயம் அவருக்கு அதிக ஆச்சரியத்தைக் கொடுக்கும்?

அவர் காலத்தில் இல்லாத புதிய பொருள்களைப் பார்த்து அவர் ஆச்சரியப்படுவார் என்பது நிச்சயம். ஆனால் எந்தப் புதிய பொருள் அவர் கண்களை முதலில் கவரும், தெரியுமா? ''மின்சார விளக்குத்தான்'' என்று ஒருவர் சொல்லலாம். ''இல்லை, இல்லை, ரயில் வண்டி தான் அவருக்கு முதலில் ஆச்சரியத்தை உண்டாக்கும்'' என்று மற்றொருவர் சொல்வார். ''அவர் இராமாயணத்தில் கற்பனை செய்து சொல்லி யிருக்கிறாரே, அந்த வான ஊர்தி இப்போது ஆகாச விமானமாக வந்திருப்பதைப் பார்த்துப் பிரமித்துப் போவார்'' என்று முடிவு கட்டுபவர்களும் இருக்கிறார்கள். ''ஒன்றும் சரியல்ல; ரேடியோப் பேச்சைக் கேட்டாரானால் இதைக் காட்டிலும் ஆச்சரியமாவது ஒன்றுமே இல்லை யென்று சத்தியம் செய்வார்'' என்று

ஒருவர் சொல்லும்போது அதுதான் உண்மையாகத் தோன்றுகிறது. ஆனால், எனக்கு ஒன்று தோன்றுகிறது. உங்கள் அபிப்பிராயத்துக்குப் பொருத்தமாயிருந்தால் வைத்துக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால்...நான் சொல்லுவானேன்? உங்கள் இஷ்டம்.

அவர் முதலில் இராமாயணம் தமிழ் நாட்டில் எந்த நிலையில் இருக்கிறதென்று பார்ப்பார். ஓலைச்சுவடியில் எழுத்தாணியை ஓட்டி எழுதிய காலத்தில் வாழ்ந்த அவருக்கு, கம்பராமாயணப் புஸ்தகம் ஆயிரக்கணக்காகத் தமிழ் நாட்டில் அச்சில் பதிப்பித்து வெளிவந்து உலவுவதைக் கண்டால், "அடே, இது என்னடா பெரிய ஆச்சரியம்!" என்று வியந்து போவார். இப்போது நாம் வெகு சுலபமாக வாங்கிப் படித்து வரும் புஸ்தகம் அவருக்கு முதலில் ஆச்சரியத்தை உண்டாக்கும்.

மொழியின் சரித்திரத்தில் அச்சு யந்திரம் உண்டாக்கின மாறுதல் மிகவும் பெரிது; அதிக ஆச்சரியமானது. கண்முன்னால் நடப்பதால் அதன் மதிப்பு உள்ளபடியே நமக்குத் தெரியவில்லை. அச்சு யந்திரமும் அதன்றால் வெளிவரும் புஸ்தகங்களும் இல்லாவிட்டால், நாளுக்கு நாள் வளர்ந்து வரும் வசனம், செய்யுளுக்கு உரைகாணும் அளவோடு நின்றிருக்கும். இலக்கணமென்றால் சூத்திரங்கள், இலக்கியமென்றால் செய்யுட்கள் என்ற பழைய நிலைக்குக் கேடு இல்லாமல் தமிழ் இருந்திருக்கும்.

இப்போது பாருங்கள்: தமிழ் வசனத்துக்கு எத்தனை உபயோகங்கள்! காலையில் எழுந்திருந்தால் நம் தெருவில் புதிதாக வைத்திருக்கும் வெண்ணெய்க் கடையைப் பற்றியுள்ள விளம்பரத்தை ஒரு பையன் நம் முகத்தில் விசிறி எறிந்துவிட்டுப் போகிறான். வீதியிலே சினிமா விளம்பரங்கள் கதைச் சுருக்கத்தோடு நம் கையில் துறுத்தப்படுகின்றன. தபால் நேரத்தில் நண்பர்களிடமிருந்து கடிதங்கள் வருகின்றன. ஒழிந்த நேரங்களிலெல்லாம், பெண்கள், குழந்தைகள்

கிழவர்கள் உட்பட எல்லோரும் கதைகள், நாவல்கள் வாசிக்கிறார்கள். சாயங்காலம் ஆனாலோ, சமாசாரப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் தமிழ் வசனம்.

இப்படிக் காலை முதல் மாலை வரையில் தமிழ் வசனத்திலே உலவி வருகின்ற நமக்கு, "நம் மொழி எவ்வளவோ முன்னுக்கு வந்துவிட்டது. எத்தனை இடங்களில் எத்தனை விதமாகத் தமிழ் வசனம் விளங்குகிறது!" என்ற எண்ணம் உண்டாகிறது. தமிழ் வசனம் இருக்கிறதென்பது வாஸ்தவம்; உண்மையிலே அது விளங்குகின்றதா. தமிழ் மொழிக்குப் பெருமை உண்டாகின்றதா என்பது வேறு விஷயம்.

விளம்பரம், பத்திரிகைகள், கதைகள், கட்டுரைகள் எல்லாவற்றிலும் வசனம் இருக்கிறது. வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்ட வேண்டுமென்ற ஆவலோடு எவ்வளவோ எழுத்தாளர்கள் முயலுகிறார்கள்.

"நனந்தலை யுலகில் தண்கதிர் சுருக்கிக் கதிரவன் குடதிசை மாய, முண்டகம் இதழ் குவிய, முல்லை மலர் வாய் மலர, யாண்டும் தன் கதிர் பம்ப, விசும்புமிசை இவர்ந்தது திங்கள்" என்று ஒரு தமிழ்ப் புலவர் எழுதும்போது அர்த்தம் விளங்காத செய்யுளைக் கேட்பதுபோல் இருக்கிறது. மறு முறை-ஏன்?- பல முறைகள் படித்துப் பார்த்து அர்த்தம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த நடையில் சிறிதேனும் பிழையில்லை. ஆனால் படித்த மாத்திரத்தில் மனதைக் கவரும் தெளிவும் இல்லை.

"அவள் தன் காதலனுக்காகக் கார்த்துக் கொண்டு நிற்கிறாள். பந்தலில் பூர்த்த மல்லிகையும், சுவற்றின் மேல் ரோஜாப்பூவும் இருக்கிறது. மல்லிகைப் பூவைப் பறிச்சுக் கோர்த்தாள். ரோஜாப் பூவைப் பறிச்சு முகர்ந்தாள். அகண்ட கண்களால் நாலா பக்கமும் பாத்துண்டே எப்போ வருவாரோ என்று ஏங்கி நின்றாள்."

இது ஒரு நடை. இந்த நடை எல்லோருக்கும் விளங்குகிறது. ஆனால் இதில் கொச்சை வார்த்தைகள் அதிகமாக இருக்கின்றன. காதலனுக்காக அவள் கார்ப்பதும், மல்லிகை பூர்ப்பதும், அவள் அதைக் கோர்ப்பதும் நல்ல காட்சிகளே. நாம் பேசும்போது கார்ப்பது, பூர்ப்பது, கோர்ப்பது என்னும் வார்த்தைகளை உபயோகிக்கிறோம். நம்முடைய பேச்சிலே எங்கிருந்தோ ஒரு-ர்-வந்து குதிக்கிறது. காப்பது, கார்ப்பது ஆகிறது; பூக்கிறது, பூர்க்கிறது ஆகிறது; கோவை சர்வ சாதாரணமாகக் கோர்வை ஆகிவிடுகிறது. ஆனால் அந்த வார்த்தைகளை எழுதுபவர்கள் அப்படியேதான் எழுத வேண்டுமா?

'சுவற்றில்' என்ற வார்த்தையை அடிக்கொருதரம் எழுத்தாளருடைய வசனத்தில் பார்க்கிறோம். ''சுவத்திலே ஆணி அடி என்றுதானே பேசுகிறோம்? அதை ஏன் எழுதக் கூடாது?'' என்று வாதம் செய்யவும் புறப்படுகிறார் எழுத்தாளர். ''நீங்களோ சுவத்திலே என்பதைச் சுவற்றிலே என்று மாற்றிக் கொள்ளுகிறீர்களே; இன்னும் சிறிது யோசித்து, சுவரிலே என்று சரியான வார்த்தையை எழுதி விடலாமே?'' என்று கேட்டால், இலக்கணம் பேசுகிறான் என்ற கோபம் வந்து விடுகிறது.

''இப்படி, எடுத்ததற்கெல்லாம் இலக்கணம் பார்த்துக் கொண்டிருந்தால் இலக்கியத்தில் ஜீவன் இல்லாமற் போகுமே? பேச்சிலே எப்படிப் பேசுகிறோமோ, அந்த மாதிரி எழுதினால் தான் சரியான பாவம் உண்டாகும்'' என்று புதிய எழுத்தாளர் வாதிக்கிறார்.

ஜீவன் இல்லாமற் போனால் அதை விட இலக்கியத்திற்கு வேறு நஷ்டம் இருக்க முடியாது. ஜீவன் எதில் இருக்கிறது? பேச்சிலே வார்த்தைகள் எவ்வளவோ மாறி உருத் தேய்ந்து போகின்றன. அவைகளை அப்படியே உபயோகிப்பதென்றால் தமிழ்ப் பாஷை நூறு வருடங்களுக்கு ஒரு முறை புதிய

பாஷையாக மாறிக்கொண்டு போக வேண்டி யிருக்கும். இலக்கிய சிருஷ்டி ஒரு கலை. எழுத்தாளன் வாழ்க்கையி லுள்ள விஷயங்களை அழகாகக் காட்டுகிறான். பிழை இல்லாமல் தெளிவும் அழகும் சம்பூர்ணமாக இருக்கும்படி அமைக்கும் ஒருகடினமான காரியத்தை அவன் செய்கிறான். வாழ்க்கை வேறு; வாழ்க்கையைப் பற்றிய இலக்கியம் வேறு; வாழ்க்கையில் எல்லோரும் இன்பத்தைக் காணுவது அரிது. ஆனால் வாழ்க்கையைப் பற்றிய இலக்கியத்திலே இன்பத் தைக் காணலாம். கள் குடித்தவன் பேச்சை நாம் நேரே கேட்பதற்கும் அதை இலக்கிய மூலமாகக் கேட்பதற்கும் வித்தியாசம் உண்டு. முன்னது வெறும் வாழ்க்கை; பின்னது ரஸமுள்ள இலக்கியம்.சோகத்தை நாம் விரும்பமாட்டோம். சோக ரஸத்தை விரும்புகிறோம்.

இலக்கியத்திலே ஓர் ஒழுங்கு அவசியம். ஆனால் அந்த ஒழுங்கு, அழகுக்கு வேலி போடுவதாக இருக்கக் கூடாது; ஆபாசத்தைத் தடுப்பதாகவே இருக்க வேண்டும்.

''மாடும் ஆடும் வந்தது'' என்று பேசுகிறோம் 'மாடும் ஆடும்வந்தன' என்று எழுதுவதனால் அதன் அழகு குறைந்து விடவில்லையே. பலவகை என்ற அர்த்தம் உள்ள நானா விதம் என்ற தொடரை, நாலா விதம் ஆக்கி, நாலா பக்கம், நாலா திசைகளில் என்று எழுதுகிறோம். நானா பக்கம் என்றாவது நாலுபக்கம் என்றாவது இருப்பதுதான் ஒழுங்கு. ''நாலா பக்கம் என்று பேசுகிறோமே; அதில்தான் ஜீவன் இருக்கிறது'' என்றால், இனிவரும் அகராதியில் அதிகப் பக்கம் சேர்வதைத் தவிர அழகு அதிகப்படுவதாகத் தோன்ற வில்லை.

''ராமனாகப்பட்டவன் அம்புகளை எடுத்தான், அது களைப் பிரயோகம் பண்ணிண்டே போனான்'' என்று ராமாயண சாஸ்திரிகள் பிரசங்கம் செய்கிறார். அவர் எவ்வளவோ கொச்சை வார்த்தைகளைப் புங்கா நுபுங்க மாகப் பொழிகிறார். கேட்பவர்கள் ரசிப்பதில் குறை

வில்லை. அதனால் நாமும் அதுகளைப் பிரயோகம் செய்ய லாமா? இல்லை, அவைகளை விலக்க வேண்டுமா? விலக்கித் தெளிவான மொழியில் பிழையில்லாமல் எழுதுவதில் அழகு இராதா?

பேச்சு வழக்கைப் பின்பற்றினால் இயல்பான அழகு ஏற்படுகிறதென்பதில் ஓரளவு உண்மை இருக்கிறது. பேச்சு வழக்கைப் பார்த்தாலோ, அதற்கு ஒரு வரையறை இல்லா மல் ஊருக்கு ஒரு மொழியாகவும் காலத்துக்கு ஒரு மொழி யாகவும் மாறிக்கொண்டே வருகிறது. எழுத்துத் தமிழை ஒரே அடியாகக்கொச்சைத் தமிழ் நிலைக்குத்தள்ளிவிடுவதை விடக் கொச்சைத் தமிழை மாற்ற முற்படுவது உபயோக மான காரியம். வாழ்க்கையில் எண்ணங்களும் செயல்களும் இழிவாக இராமல் உயர்தரமாக இருப்பதை நாகரிகமாக அறிஞர்கள் கருதுகிறார்கள். அதற்கு ஏற்றபடியே, பேச்சும் கொச்சைத் தன்மை ஒழிந்து தெளிவாகவும் பிழையின்றியும் அமைதலே பொருத்தமாகும்.

கொச்சைத் தமிழைக் கணக்கு வழக்கில்லாமல் எழுத் திலே உபயோகப்படுத்தி வந்தால் இலக்கியத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கும் உள்ள வித்தியாசம் அதிகமாகி, இரண்டும் வெவ்வேறுமொழியாகிப்போனாலும் போகலாம்: அத்தகைய அபாயம் வராமல் காப்பாற்றுவதற்குப் பேசும் தமிழில் கொச்சை வார்த்தை பலவற்றிற்கு விடை கொடுத்துவிட்டு அதன் நடையைச் சிறிது உயர்த்தவேண்டும். இப்படி எழுத்திலும்பேச்சிலும்கொச்சைத்தமிழின்உபயோகத் துக்கு வரையறை ஏற்படுமானால், இப்பொழுது இவ்விரண் டுக்கும் இடையே உள்ள வித்தியாசமும், அதனைப் போக்க முயல்பவர்கள் சங்கடங்களும் வரவரக் குறைந்து விடும்.

# கட்டுரை

நான் மூன்றாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். அப்போது வகுப்பாசிரியர் தமிழ் வியாசம் எழுதுவதற்கு விஷயம் கொடுத்தார். ஒரே ஒரு வியாசத்தின் பெயர் மாத்திரம் இன்னும் என் ஞாபகத்தில் இருக்கிறது. "விளக்கெண்ணெய்" என்ற தலைப்பில் ஒரு வியாசம் எழுதும்படி அவர் கட்டளையிட்டதோடு அதற்கு வேண்டிய குறிப்புக்களையும் கொடுத்தார். அவர் சொல்லிக் கொடுத்த "விளக்கெண்ணெய்"க் கட்டுரை எப்படி இருந்ததோ அது கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

விளக்கெண்ணெயைப் போன்ற பல விஷயங்கள் உபாத்தியாயர் உபதேசத்தால் எழுதினோம். ஒன்றாவது மனதில் தங்கவில்லை. காரணம் அந்தப் பெயரைப் போலவே விஷயங்களும் வழவழ கொழ கொழாவா யிருந்ததுதான்.

அந்தக் காலத்தில் அதற்கு 'வியாசம்' என்று பெயர். மேல் வகுப்பிற்கு வந்தால் அது 'காம்போஸிஷன்' என்ற வேறு ஆங்கிலப் பெயரால் கௌரவத்தை அடைகிறது. பள்ளிக்கூடத்தை விட்டு வந்தால் பத்திரிகை உலகத்தில் 'கட்டுரை' என்ற பட்டம் அதற்குக் கிடைக்கிறது.

பள்ளிக்கூடத்துப் பையன் எழுதுகிற வியாசம், மேல் வகுப்புப் பிள்ளைகள் எழுதுகிற காம்போஸிஷன், பத்திரிகைகளில் வரும் கட்டுரை ஆகிய எல்லாம் ஒரே ஜாதி; கட்டுரையின் இனம். ஆனால் எல்லாம் கட்டுரைகளாக இருக்கின்றனவா என்பது வேறு விஷயம்.

இலக்கியத்தில் பலவேறு வகைகளில் கட்டுரை ஒன்று. கதை, கவிதை முதலிய வேறு பல விஷயங்கள் இருக்கின்றன. அவற்றைப் பள்ளிக்கூடத்தில் உற்பத்தி பண்ணும்படி சொல்லிக் கொடுக்கிறதில்லை. அதனால் ஆசை உள்ளவர்

கள் அந்தத் துறைகளில் ஈடுபட்டு இலக்கிய சிருஷ்டி செய்கிறார்கள்.

தமிழ் நாட்டில் இப்போது உற்பத்தியாகி யிருக்கும் இலக்கியத்தில் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு கதைகளே; பள்ளிக்கூடத்தில் மூன்றாம் வகுப்பு முதல் பி. ஏ. வகுப்பு வரையில் கற்றுக்கொள்வதோ கட்டுரை எழுத. ஆனால் இன்று தற்காலத் தமிழிலக்கியத்தில் முக்கியமான குறை நல்ல கட்டுரைகள் அதிகமாக இல்லாமையே. பள்ளிக் கூடச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுக் கற்றுக்கொண்ட சரக்கு ஒன்றும் வாழ்விலே பிரயோசனப்படுவதில்லை என்ற அபக்கியாதிக்கு இந்தக் கட்டுரையும் சாட்சி சொல்கிறது. அதற்கு நாம் என்ன செய்வது! கல்வியின் கோணலோ, கட்டுரையின் கோணலோ!

கோணல் எங்கே இருந்தாலும் சரி, நமக்கு அழகான கட்டுரை கிடைப்பதில்லை என்பதை யாரும் மறுக்க முடியாது. ஒன்றுமே இல்லை என்று துக்கப்படும் நிலையில் நாம் இருக்க வில்லை யென்பதை நினைக்கும்போது நமக்குச் சிறிது திருப்தி உண்டாகிறது. தமிழ் நாட்டில் பத்திரிகைகள் மலிய மலியக் கட்டுரைகள் உதயமாகிக்கொண்டு வருகின்றன.

வாசிக்கும்போது மனதை இழுத்துக்கொண்டு செல்வது எதுவாயிருந்தாலும் அதை இலக்கியமென்று சொல்லிவிட லாம். இலக்கியத்தின் பயன் ஆனந்தம். கட்டுரையை இலக்கியமாகச் செய்ய வேண்டுமென்றால் அது கவர்ச்சியும் இன்பமும் உடையதாக இருக்க வேண்டும்.

கட்டுரையில் முக்கியமாக மூன்று விஷயங்களைக் கவனிக்க வேண்டும்· (1)விஷயம், (2)அமைப்பு, (3)நடை. இந்த மூன்றும் ஒன்றைவிட ஒன்று முக்கியமானவை. நன்றாக எழுதும் ஆற்றல் படைத்த ஓர் எழுத்தாளன் எந்த விஷயத்தைப் பற்றியும் ரஸமாக எழுதிவிடக் கூடும்.

இரண்டாவது அமைப்பு. இதுதான் கட்டுரையின் ஜீவன். படிக்கிறவனுக்குச் சிரமமே தெரியாதபடி ஒன்றன் பின் ஒன்றாக விஷயங்களைப் பரிமாறும் முறை இருக்கிறதே அதில்தான் எழுத்தாளனுடைய உலகியல் அறிவும் எழுத்துத் திறமையும் வெளிப்படும். மேல்நாட்டுக் கட்டுரை எழுத்தாளர்களிடத்தில் காணப்படும் சிறந்த இயல்பு இதுதான். சிலர் தலைப்புக்குச் சம்பந்தமே இல்லாமல் விஷயத்தை ஆரம்பிப்பார்கள். படிப்பதற்கு மிகவும் ருசியாக இருக்கும். படிக்கப் படிக்க நம் சிந்தை அதனுள் ஆழ்ந்துவிடும். முடிக்கிறபோது ஒரு திருப்தியும் இன்பமும் அடைவோம்.

மூன்றாவது நடை. நடையில் ஒவ்வொருவரின் தனி இயல்பையும் காணலாம். சாதாரணமாக, நடக்கும் நடையிலிருந்து ஒருவரைக் கண்டுபிடித்து விடுகிறோமே; அது போலவே எழுத்து நடையிலிருந்தும் ஒருவரைக் கண்டு பிடித்து விடலாம். அழகான நடையென்றால் இன்னதென்று வரையறுத்துச் சொல்ல முடியாது. தெளிவான நடையில் தமிழ் எழுத எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். ஆனால் ஒரு பெருங் குறை இன்னும் தீர்ந்தபாடில்லை. குற்றமற்ற நடை வேண்டுமென்ற நினைப்புப் பலருக்கு இருப்பதில்லை. ஆங்கிலம் முதலிய மொழிகளில், நடையில் விறுவிறுப்பையும் அழகையும் எப்படிப் போற்றுகிறார்களோ, அப்படியே குற்றமில்லாமல் இருக்க வேண்டு மென்பதிலும் அதிகக் கவனத்தைச் செலுத்துகிறார்கள்.

கட்டுரைகளில் பலவகைகள் இருக்கின்றன. இனிய மென்மையான் ஹாஸ்யச் சுவை கலந்து, ஆழ்ந்த கருத்து ஒன்றும் இல்லாவிட்டாலும் படிக்கப் படிக்க ரஸமுள்ளவை ஒரு வகை. ஆங்கிலத்தில் கார்டினர் முதலிய சிலருடைய கட்டுரைகள் இந்த வகையைச் சேர்ந்தவை. தமிழ் நாட்டில் அவரைப் பின்பற்றி எழுதுபவர்களில் ஒருவராகத் தி. ஜ. ர வைச் சொல்லலாம். கருத்து இருந்தாலும் அக்கருத்தைக்

காட்டிலும் கட்டுரை அமைப்பிலே சுவை ததும்பி நிற்பவை அக்கட்டுரைகள்.

ஹாஸ்யச் சுவையை அதிகமாகக் கொண்டுள்ள கட்டுரைகளும் தமிழில் வந்திருக்கின்றன. 'கல்கி' எழுதிய கட்டுரைகளிற் பலவும், **சிட்டியின்** சிருஷ்டிகளும் இந்த ரகத்தைச் சேர்ந்தவை.

சிந்தனையைக் கிளர்த்தக் கூடியனவாய், படிக்கப் படிக்க ஆழ்ந்த கருத்தைத் தோற்றுவிக்கும் கட்டுரைகள் ஆங்கிலத்தில் ஆயிரக்கணக்காக உள்ளன. தமிழில் வ. ரா. வின் கட்டுரைகளில் ஒரு பகுதியை அந்த வகையிலே சேர்க்கலாம்.

உணர்ச்சி யூட்டுவனவாய் விறுவிறுப்பான போக்கோடுள்ள கட்டுரைகள் தமிழில் கணக்கில்லாமல் வெளிவந்திருக்கின்றன. அந்தக் கட்டுரைகளுக்கு வழி காட்டியவர் தேசிய கவி சுப்பிரமணிய பாரதியாரே. அவருடைய கட்டுரைகளிற் பல சிறந்த கட்டுரைகளோடு சேர்ப்பதற்குரியன அல்ல. அவருடைய கவிதையில் உள்ள ஆழம் அவற்றில் காண்பது அரிது. ஆனாலும் மின்சார ஓட்டம்போல இருக்கும் அவரது நடை கட்டுரைகளுக்குச் சுவையூட்டுகிறது. உணர்ச்சி வெறி பிடித்த ஒருவர் நம்முன் நின்று பேசும்போது நிமிஷத்திற்கு நிமிஷம் ஸ்வரம் ஏறி இறங்குகிறதே, அந்த மாதிரி அவருடைய கட்டுரைகளின் போக்கு இருக்கிறது. சில கட்டுரைகள் தீயைக் கக்கும். அத்தகைய கட்டுரைகளிலிருந்துதான் இந்தக் காலத்து அரசியல் பிரசாரகர்களும், மறு மலர்ச்சி எழுத்தாளர்களும் நடையைக் கற்றுக்கொண்டார்களென்று சொல்வது தவறாகாது

ஒருவருடைய குணத்தைச் சித்திரித்துக் காட்டுவது, ஒரு நிகழ்ச்சியை வருணித்து அமைப்பது முதலிய கட்டுரைகள் ஓவியத்தைப் போன்றவை. அறிந்த விஷயத்தை எழுத்தாளன் தன் கலைத் திறமையால் மெருகு கொடுத்து வெளிப்படுத்துகிறான். இந்தத் துறையில் மகா மகோபாத்தி

யாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் சிறந்து விளங்கினார். அவர் தம்முடைய வாழ்க்கையில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளையும், தாம் சந்தித்த பல மனிதர்களையும் படம் பிடித்துக் காட்டுவது போல எழுத்தில் காட்டியிருக்கிறார். நிகழ்ச்சி எந்தக் காலத்தில் எந்த இடத்தில் நிகழ்ந்ததோ அதன் மணம் (Atmosphere) பூர்ணமாக அந்தக் கட்டுரையில் நிலவுகிறது. அதனால் படிக்கிறவர்கள் அந்த மனிதர்களோடும் பண்டங்களோடும் மனத்தால் குலாவத் தொடங்குகிறார்கள். ஜனங்களுடைய குண சித்திரங்களை வகுப்பதற்கு நல்ல அநுபவம் வேண்டும். பல மனிதர்களோடு பழகிய மூதறிவுடைய அப்பெரியாருடைய கட்டுரைகளில் அத்தகைய சித்திரங்கள் பலவற்றைக் காணலாம். வ. ரா. எழுதிய நடைச் சித்திரங்கள், சி. ஆர். ஸ்ரீநிவாசன் எழுதிய தராசு, "கல்கி" சிலரைப்பற்றி முன்பு எழுதிய கட்டுரைகள் இவைகளெல்லாம் இந்த வகையில் சேர்வதற்குரியன.

இலக்கிய சம்பந்தமான கட்டுரைகளைச் சில அறிஞர்கள் எழுதியிருக்கிறார்கள். ஆராய்ச்சிக் கட்டுரைகளென்று அவற்றைச் சொல்லலாம். வ. வே. சு. ஐயர் கம்பராமாயணத்தின் அழகை அலசிக் காட்டி எழுதியுள்ள விமரிசனக் கட்டுரை தமிழ் நாட்டுக்கு ஒரு செல்வம்.

தமிழ் மொழியின் பரப்புக்கு இவ்வளவு போதாது. தமிழ் நாட்டில் இன்று யாரேனும் எழுத்தாளரென்று பெயரெடுக்க வேண்டுமானால் கதை எழுதுகிறார்கள்; கதை எழுதுவதோடு நின்றுவிடுபவர்களே பலர்.

உலக அநுபவத்தையும் நூலறிவையும் பயன்படுத்துவதற்குக் கட்டுரையைப் போன்ற மார்க்கம் வேறு இல்லை. சிந்தனா சக்தியும் எழுத்துத் திறமையும் உடையவர்கள் கட்டுரைகளை எழுத முயன்றால் தமிழில் சிறந்த கட்டுரைகள் இல்லையென்ற குறை தீர்ந்துவிடும்.

மாணாக்கர்கள் வகுப்பில் எழுதும் கட்டுரைகளிலே இலக்கியச் சுவை அமையும்படி பழக வேண்டும். விஷயங்

களைக் கடன் வாங்கியாவது திணித்தும், மேற்கோள்களை நிரப்பியும் எழுதும் வழக்கம் இப்போது மாணாக்கர்களிடம் இருக்கிறது. அது முதலில் ஒழிய வேண்டும். விஷயத்தில் குறை இருந்தாலும் அது பெரிதன்று. எழுதின அளவில் திருத்தமாகவும் பொருத்தமாகவும் இருக்க வேண்டும். எந்த விஷயத்தைப்பற்றியும் பூரணமாக எழுதி விடுபவர் யாரும் இல்லை. அறிவுக்கு வரம்பிட முடியாது. அறிவு வளர வளர விஷய ஞானமும் அதிகமாகும். ஆகையால் தெரிந்த விஷயத்தை அழகாகவும் குற்றம் இல்லாதபடியும் எழுதிப் பழகவேண்டும். அந்த எழுத்திலே கவர்ச்சி இருக்கவேண்டும். நடையில் எளிமையும் தெளிவும் வேண்டும். இந்தக் கருத்தோடு கட்டுரை எழுதுவதற்குப் பழகினால் இன்றைய மாணாக்கர்களே நாளைய எழுத்தாளர்களாக வருவார்களென்று சொல்வதற்குத் தடையில்லை. அப்படி எழுதினால் விளக்கெண்ணெயைப்பற்றி எழுதினாலும் தேனைப் போல அனுபவிக்கலாம்.

# நாடோடிப் பாடல்கள்

மாணிக்கவாசகர் சிவபெருமான் கோயில் கொண்டிருக்கும் ஸ்தலங்களுக்கெல்லாம் போய் இறைவனைத் தரிசித்து ஆனந்தத்தால் பல அழகிய பாடல்களைப் பாடிக்கொண்டு வந்தார். அனுபவம் கனிந்த பாடல்களை உருகி உருகிப் பாடினார். சிவபெருமான் புகழை எத்தனை எத்தனையோ மாதிரியாகப் பாடினார்.

ஒரு ஸ்தலத்திலே ஸ்வாமி தரிசனம் செய்து கொள்வதற்குமுன் அந்த ஸ்தலத்தில் நீராட எண்ணிச் சென்றார். நீர் நிரம்பி அல்லி மலர்கள் நிறைந்து பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது அந்தப் பொய்கை, நீராடாமலே அதன்

கரையில் நின்று அந்த அழகிய காட்சியைப் பார்த்து இன்புற்றுக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு சிறு கூட்டம் அங்கே வந்து மளமளவென்று நீரில் இறங்கி அல்லி மலர்களைப் பறிக்க ஆரம்பித்தது. அவ்வளவு பேரும் இளம் பெண்கள்.

மிகவும் உற்சாகத்தோடே அவர்கள் பூக்கொய்யத் தொடங்கினார்கள். வெறுமனே கொய்யவில்லை. தம்முடைய இனிய குரலினால் பாட்டுப் பாடிக்கொண்டே கொய்தார்கள். கண்ணாலே அழகைப் பருகி இன்புற்று நின்ற மாணிக்கவாசகர் அப்பெண்களுடைய பாட்டின் இசையிலும் மனத்தைப் பறிகொடுத்து நின்றார். நெடுநேரம் இப்படி நின்றவர் அந்தப் பாட்டின் அமைப்பை நன்றாக உள்ளத்தில் வாங்கிக்கொண்டு அந்த மாதிரியே தாமும் பாட ஆரம்பித்தார். அல்லி மலர் கொய்யும் அந்தப் பெண்களுக்குள் ஒருத்தியாகத் தம்மைப் பாவித்துக் கொண்டார்.

> இணையார் திருவடி என்றலைமேல் வைத்தலுமே
> துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்
> அணையார் புனற்றில்லை அம்பலத்தே ஆடுகின்ற
> புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ!

என்று பாட ஆரம்பித்தார். இப்படியே பத்துப் பாட்டுக்களைப் பாடினார். திருவாசகத்தில் திருப்பூவல்லி என்னும் பெயரோடு இந்தப் பாட்டுக்களை இன்றும் பார்க்கலாம்.

மாணிக்கவாசகர் பாடல்கள் சைவத் திருமுறையிலும் இலக்கிய வரிசையிலும் சேர்ந்திருப்பதால் அவை ஏட்டுச் சுவடிகளில் இடம் பெற்றுப் பிறகு புஸ்தக ரூபத்தில் வந்து இன்றளவும் பக்தர்களாலும் புலவர்களாலும் படித்துப் பாராயணம் செய்யப்படுகின்றன. ஆனால் அந்தப் பெரியார் எந்தப் பாடல்களைக் கேட்டுத் திருப்பூவல்லி பாடும் உணர்ச்சியைப் பெற்றாரோ, அந்த மூலப்பாடல்கள்

இன்று இல்லை. நாடோடியாகக் காற்று வாக்கிலே வழங்கி வந்த அவை காற்றோடு கலந்து மறைந்து போயின.

மாணிக்கவாசகர் இந்தமாதிரியே பெண்கள் விளையாடும் போது பாடும் பாட்டுக்களைக் கவனித்து அவற்றைப் போலப் பல பாடல்களைப் பாடியிருக்கிறார். இவர் மாத்திரமல்ல; வேறு புலவர்களும் அத்தகைய பாடல்கள் பாடியிருக்கிறார்கள். அவற்றை நாம் இலக்கியமாகக் கொண்டு படித்து வருகிறோம். அந்தப் பாடல்களுக்கு உருவத்தை த்தந்த மூலப்பாடல்களாகிய நாடோடி இலக்கியத்தை நாம் நழுவ விட்டுவிட்டோம்; வழக்கில் உள்ளவற்றைக் கவனிப்பதும் இல்லை.

பாரதியார் அவற்றைப் புறக்கணிக்கவில்லை; காது கொடுத்துக் கேட்டார். நெஞ்சைப் பறி கொடுத்தார். குயிற் பாட்டில் சொல்கிறார்:

ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும் நெல்லிடிக்கும்
கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணம் இடிப்பார்தஞ் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலித்து
கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
............நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்.

வயல்களிலே ஏற்றம் இறைக்கும்போது ஏற்றக்காரன் பாடும் பாட்டை முதலிலே வைத்திருக்கிறார் பாரதியார். "ஏற்றப் பாட்டிற்கு எதிர்ப்பாட்டில்லை" என்று தமிழ்ப் பழமொழி சொல்கிறது. ஏற்றப் பாட்டுக் கச்சேரிக்கு வானமே பந்தல்; பூமியின்மேல் பச்சைக் கம்பளம் விரித்தாற்போலப் பரந்து படர்ந்துள்ள வயற்பரப்பிலே நிலைக்களம். கிறீச்சிட்டுக் கொண்டு மேலுங்கீழும் எழும்பித் தாழும் ஏற்றந்தான் பக்க வாத்தியம். நீர்ச்சால் தண்ணீரில் மொள்ளும் போது உண்டாகும் சலக்கென்ற ஓசையே தாளம். சால்

பிடிப்பவன்தான் தலைமைப் பாடகன். அவன் பாடும் பாட்டைப் பாரதியார் கேட்டு அதன் இசையிலும் பொருளிலும் மயங்கி நின்றார். நாமும் கவனித்தால் மயங்கி நிற்போம். காதலும், வீரமும், சோகமும், ஹாஸ்யமும் அந்தப் பாட்டிலே கலந்து வரும். புராணமும் புதுமையும், வருணனையும் வாழ்க்கைக் காட்சிகளும், வேடிக்கையும் வேதாந்தமும் விரவிவரும். புலவர்கள் பாடும் இலக்கியத்தைப் போலச் செந்தமிழும் பொருள் நயமும் அலங்காரமும் அதில் அதிகமாக இல்லாவிட்டாலும் அதற்கு அமைந்த எளிமையழகு உண்டு. பலபல வண்ணங்கள் மலிந்த மலர் மாலைகள் இல்லை; ஆனால் உள்ளங் கொள்ளை கொள்ளும் சின்னஞ் சிறிய காட்டு மல்லிகைகள் உண்டு.

திருப்பூவல்லி கொய்யும் பெண்ணாகத் தம்மை வைத்து மாணிக்கவாசகர் பாடிய செய்யுளை முன்னே கேட்டீர்கள். ஏற்ற இலக்கியத்தில் மலர் பறிக்கும் பாட்டு ஒன்றைக் கேளுங்கள்.

எட்டிப்பறி பூவை விட்டுவிடு அரும்பை
தாவிப்பறி பூவை தள்ளிவிடு அரும்பை
ஓடிப்பறி பூவை ஒதுக்கிவிடு அரும்பை
தள்ளிவிட்ட அரும்பு தானாய்மல ராதோ
ஒதுக்கிவிட்ட அரும்பு உடனேமல ராதோ
பூவைப்பறி யேனோ புள்ளையார்க்குச் சாத்த
காயைப்பறிப் பேனோ கந்தருக்குச் சாத்த
மொக்கைப் பறிப் பேனோ விக்னருக்குச் சாத்த
...... ...... ...... ......
முல்லைபறி பெண்ணே முன்மடியைக் கோலி
தாவிப்பறி பெண்ணே தளர்மடியைக் கோலி
முல்லையுஞ் சிறிசு முன்மடியும் பொத்தல்
மல்லிகை பெரிசு மார்மடியும் பொத்தல்.

பாரதியார் ஏற்றப் பாட்டோடு நெல்லிடிப்பவர் சுண்ணாம்பு இடிப்பவர் பாடும் பாடல்களையும் கும்மி முதலிய

பாடல்களையும் சேர்த்துச் சொல்கிறார். அவற்றையெல்லாம் பாமரர் பாட்டுக்களென்று (Folk Songs) மேல்நாட்டார் வழங்குகின்றனர்.

குழந்தைகள் விளையாடும் விளையாட்டுப் பாடல்களும் இந்த வகையைச் சேர்ந்தவகைகளே. சிலப்பதிகாரத்தின் உரையில் அடியார்க்கு நல்லார் அவற்றைப் பல்வரிக் கூத்து என்று குறிக்கின்றார். நூற்றுக்கு மேற்பட்ட பெயர்களை வரிசையாக அடுக்கிச் சொல்லும் ஒரு பாட்டை அங்கே மேற்கோளாகக் காட்டுகிறார். அதில் சொல்லப்படும் விளையாட்டுக்களுள் கொந்தி, பாண்டி, பாம்பாட்டி, காமன் சிந்து, சித்து, குரவை, கிள்ளுப்பிறாண்டி, அம்மனை, பந்து, கழங்காடல், பல்லாங்குழி, பள்ளி முதலிய சிலவகையான விளையாட்டுக்களே இக்காலத்தில் உள்ளன. தொல்காப்பியத்தில் 'பண்ணத்தி' என்று ஒருவகைப் பாட்டைப்பற்றிய செய்தி வருகிறது. அது பாட்டும் உரையும்போல இருக்குமென்றும், எழுதும் பயிற்சியில்லாத புறவுறுப்புக்களை உடையதென்றும் தெரிகிறது. வஞ்சிப் பாட்டு, மோதிரப் பாட்டு, கடகண்டு என்ற மூன்று பாட்டின் பெயர்களை உதாரணமாகக் காட்டுகிறார் பேராசிரியர் என்ற உரைகாரர். எழுதும் பயிற்சி இல்லாத தென்பதையும் மற்ற இலக்கணங்களையும் கவனித்தால் அது நாடோடிப் பாட்டாக இருக்கலாம் என்று தோற்றுகிறது.

தொல்காப்பியரோ, பாரதியாரோ யார் சொல்லியிருந்தால் என்ன? நாம் அந்தப் பாடல்களை மதிப்பதில்லை. கேட்பதும் இல்லை. கேட்டாலல்லவா பாதுகாக்க வேண்டும் என்ற உணர்ச்சி தோன்றும்?

மற்ற மொழிகளில் நாடோடிப் பாடல்களைச் சேகரிக்கும் முயற்சிகள் நடந்து வருகின்றன. பல தொகுதிகளும் வெளிவந்திருக்கின்றன. நமது மொழியில்—? இனிமேலா

கி—6

வது தொகுக்க வேண்டுமென்னும் ஆசை பிறந்தால் நல்ல காலம் என்று எண்ணிக் கொள்ளலாம்.

இனி நாடோடிப் பாடலின் ருசியைக் கொஞ்சம் பார்க்கலாம். அதிலே உள்ள கவிதைக்கு உதாரணம் வேண்டுமா? சிறிது கேளுங்கள் :—

தென்னை மரத்துப் பாளைக்குள் ளேரெண்டு
தேரை இருந்து முழிக்குதுபார்
தென்ன லடிக்குது என்னை மயக்குது
தேன்மொழி யேமுத்து வீராயி !

சாந்துப் பொட்டடி நானுனக்குச்
சவ்வாதுப் பொட்டடி நீ எனக்குச்
சாந்துப் பொட்டுக்கும் சவ்வாதுப் பொட்டுக்கும்
சம்மத மோமுத்து வீராயி.

முல்லை அரும்படி நீயெனக்குச் சின்ன
மூக்குத்தி நத்தடி நானுனக்கு
முல்லை யரும்புக்கும் மூக்குத்தி நத்துக்கும்
மோசமுண் டோமுத்து வீராயி.

இந்தப் பாட்டுக்களைத் திருப்பித் திருப்பிச் சொல்லி அனுபவிக்க வேண்டுமேயல்லாமல் வியாக்கியானம் செய்து கொண்டிருந்தால் ரஸமே தோன்றாது. ஹாஸ்ய ரஸத்தைக் கொஞ்சம் ருசி பாருங்கள்:-

காலிலே பாடகங் கிலுக்குதடி—தங்கமே
இடையிலே சேலை இழுக்குதடி—தங்கமே
காதிலே தோடு கனக்குதடி—தங்கமே
மூக்கிலே தோடு மினுக்குதடி—தங்கமே
எல்லாம் சரிதானடி—தங்கமே
இடுகண் தான் பொட்டையடி.

வீராயியின் வீரத்தைப்பற்றிய ஒரு பாட்டு :

வீராயிக்கு ஒரு சோம்பேறிப் புருசன்வந்து வாய்த்தான். கல்யாணமான புதிசு. அவனுக்குச் சம்பாதிக்கவோ வழியில்லை. எங்கெங்கோ சுற்றிவிட்டு வீட்டுக்கு வருகிறான். புதுமாப்பிள்ளைவந்தால் உபசாரம் பண்ண வேண்டாமோ? வீராயியைப் பார்த்து ஒரு சிநேகிதக்காரி சொல்லுகிறாள் :

ஏகுட்டி வீராயி, உன்புருசன் வாராண்டி
வீட்டை மொழுகடி வெள்ளிப்பாயைப் போடடி
கிள்ளிமுள்ளிச் சந்தனத்தைக் கிட்ட எடுத்து வையடி
மதுரைக் கோட்டை வெத்தலை மடிச்சு மடிச்சு வையடி
ஒழுக ஒழுகச் சந்தனத்தை மார்நிறையப் பூசடி
ஏகுட்டி வீராயி உன்புருசன் வாராண்டி

இதற்குள்ளே அவன் பக்கத்தில் வந்து விட்டான். "இந்தச் சோம்பேறிக் கழுதைக்குச் சந்தனமாம், வெற்றிலையாம்!" என்று வீராயி எண்ணுகிறாள். எத்தனை தடவை அவனை வேலைக்குப் போகும்படி அவள் இடித்துச் சொல்லியிருக்கிறாள் தெரியுமா? அவனுக்கு உறைத்தால்தானே? அவனும் ஆண் பிள்ளையா? சீ!

அவனைப் பக்கத்தில் வைத்துக்கொண்டே தன் சிநேகிதக்காரிக்குப் பதில் சொல்கிறாள் வீராயி :

பச்சைநெல்லும் கிச்சநெல்லும் குந்துவான்னா இருக்கறே
பதினெட்டுப் பணியாரம் சுடுவான்னா இருக்கறே
கொட்டாங்கச்சி மாப்பிள்ளையை அழைப்பான்னா இருக்கறே
ஒழுகஒழுகச் சந்தனத்தைப் பூசு வான்னா இருக்கறே
பாக்குமரத்திலே பாக்கில்லே
பண்டாரத் தோப்பிலே பூவில்லை
நேத்தறுத்த சாவலுக்கு நெத்தமும் இல்லை—இந்தப்
புத்திகெட்ட மவனுக்கு வெக்கமும் இல்லை.

'இந்தப் புத்தி கெட்ட மவனுக்கு வெக்கமும் இல்லை' என்ற முத்தாய்ப்பு வெறுமனே வந்திருக்குமென்றா நினைக்

கிறீர்கள்? இல்லவே இல்லை. அவன் கன்னத்திலே ஓர் இடி இடித்து, 'இந்தப் புத்தி கெட்ட மகன்' என்றல்லவா அவன் சொல்லி யிருக்க வேண்டும்!

திருமாலைப்பற்றிக் குழந்தைக்குச் சொல்லுகிறது ஒரு பாட்டு. சங்குச்சக்கரச்சாமியின் புகழைக் குழந்தையுள்ளத்திலே ஆச்சரியம் உண்டாகும்படி சொல்வதாக அந்தப் பாட்டு அமைந்திருக்கிறது :

சங்குச் சக்கரச் சாமி வந்து
சிங்குச் சிங்கென ஆடுமாம்—அது
சிங்குச் சிங்கென ஆடுமாம். (சங்)

கொட்டுக் கொட்டச் சொல்லுமாம்—அது
கூத்து மாடப் பண்ணுமாம். (சங்)

உலகமூணும் அளக்குமாம்—அது
ஓங்கி வானம் பிளக்குமாம். (சங்)

கலகலென்று சிரிக்குமாம்—அது
காணக் காண இனிக்குமாம் (சங்)

இந்தப் பாட்டைக் கேட்கும்போது குழந்தை தன்னை மறந்து சிங்குச் சிங்கென ஆடிப் புறப்பட்டு விடுமே!

இன்னும், தத்துவ ஞானம் வேண்டுமானால் நாடோடிப் பாடல்களிலே எவ்வளவு ரஸமாகச் சொல்லியிருக்கிறது, கேளுங்கள்.

தூங்கையிலே வாங்குகிற மூச்சு—மேலே
சுழிமாறி வாங்கையிலே போனாலும் போச்சு.

சுழல்கின்ற பம்பரக் கட்டை—விசிறித்
தூங்கையிலே கயிறறுந் தாலோ லொட லொட்டை

பணமென்ற ஆஸ்தியை நம்பி—மெத்தப்
பலநாளுந் தலைகீழாய் விழுகாதே தம்பி.

இப்படியே எல்லாவிதமான ரஸங்களையும் நாடோடிப்

பாடல்களிலே காணலாம். கேட்கக் காதும் சிந்திக்க உள்ளமும் வேண்டும். அதோடு விடாமல் கூடியவரையில் எல்லாவற்றையும் தொகுத்துப் பாதுகாக்கும் காரியத்தையும் செய்ய வேண்டும்.

# குறி சொல்லுதல்

மனிதனுக்கு எத்தனையோ ஆசைகள் இருக்கின்றன. வருங்காலத்தில் இன்னும் நல்ல நிலைபெற்று வாழ வேண்டுமென்று ஆசைப்படுகிறான். ஒவ்வொருவனும் தன் வாழ்க்கையில் சுகமும் துக்கமும் கலந்துதான் அனுபவிக்கிறான். சென்று போன நாட்களிலே அனுபவித்த துன்பங்களே இல்லாமல், தான் முன்னே பெற்ற சுகங்களைவிடப் பல மடங்கு அதிகமான சுகங்களைப் பெற வேண்டுமென்று அவனுடைய பேதை மனத்தில் ஆசை எழுகிறது.

இந்த ஆசை எல்லா மனிதர்களுக்கும் நிறைவேறி விடுகிறதா? அநேகமாக இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். ஆனாலும் வருங்காலம் நன்றாக இருக்க வேண்டுமென்றும், அதை முன்பே தெரிந்துகொண்டு சந்தோஷப்பட வேண்டுமென்றும் நினைக்கும் இயல்பு எல்லோருக்கும் இருக்கிறது. அந்த இயல்பு இருப்பதனால்தான் ஜோஸியர்களுக்கும் ரேகை சாஸ்திரிகளுக்கும் உலகத்தில் கிராக்கி உண்டாகிறது.

ஜோஸியமும் ரேகை சாஸ்திரமும் உலக முழுவதும் இருக்கின்றன. அந்தச் சாஸ்திரங்கள் இருக்கின்றனவோ இல்லையோ ஜோஸியரென்றும் ரேகை சாஸ்திரங்கள் என்றும் பெயர் வைத்துக்கொண்டு எவ்வளவோ பேர்கள் ஜீவனம் நடத்தி வருகிறார்கள். வருங்காலத்திலே மனிதனுக்கு இருக்கிற மோகத்துக்கு அவர்களே சாட்சி. இந்த

மோகம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. மனிதன் சமுதாய உணர்ச்சியோடு பலபேராகக் கூடி வாழும் முயற்சியை எப்பொழுது ஆரம்பித்தானோ அப்பொழுது முதலே இது பிறந்து வளர்ந்து வந்திருக்க வேண்டும். அதைத் தணிக்கும் மனிதர்களும் இருந்து வந்திருக்கிறார்கள். ஆனால் இக் காலத்தில் விளம்பரப் பலகையோடு தொழில் நடத்துபவர் களைப்போல அவர்கள் இருக்கவில்லை.

தமிழ் நாட்டில் பழங்காலத்தில் ஒருவிதமான ஜோஸ்யர் களும், ரேகை சாஸ்திரிகளும் இருந்தார்கள். அவர்கள் சமுதாயத்தின் ஆதரவிலே வாழ்ந்து வந்தார்கள். அந்த ஜோஸ்யர்களும் ரேகை சாஸ்திரிகளும் இப்பொழுதும் இருக் கிறார்கள். ஜோஸ்யர் யார் தெரியுமா? வள்ளுவர் என்று கிராமங்களிலே சொல்வார்கள். அவரே பழங்கால முதற் கொண்டு ஜோஸ்யர் ஸ்தானத்தை வகித்து வந்திருக்கிறார். ரேகை சாஸ்திரி இன்னார் என்று உங்களுக்குத் தெரிந் திருக்காது. அந்த ரேகை சாஸ்திரி கை ரேகைகளைப் பார்த் துத்தான் பலன் சொல்வார்? ஆடம்பரம் இல்லாமல் ஊர் ஊராகத் திரிந்து கை ரேகைகளைப் பார்த்துப் பலன் சொல்லி அரிசியோ, உப்போ, புளியோ, குழந்தை தலைக்கு எண்ணெயோ, பிண்ணாக்கோ, ஸம்மானமாக வாங்கிக் கொள்ளும் அந்த ரேகை சாஸ்திரியை நீங்கள் பார்த்திருக்க லாம். குறி சொல்லும் குறத்தியைப் பார்த்ததில்லை? அந்த நாடோடிதான் நான் சொல்லும் ரேகை சாஸ்திரி.

நாடோடியாக வாழ்க்கை நடத்தும் இக்காலக் குறத்தி களுக்கு ரேகை சாஸ்திரம் அவ்வளவாகத் தெரியாது; கூடை முறம் கட்டத் தெரியும். 'ஊசி வாங்கலையோ, ஊசி; லவுக்கை தெக்கற ஊசி' என்று முழங்கத் தெரியும். அவர் களுடைய முன்னோர்கள் குறி சொல்லி ஜனங்களுக்குச் சந்தோஷம் உண்டாக்கி ஜீவனம் செய்து வந்தார்கள்.

இந்தக் கவிஞர்கள் இருக்கிறார்களே, அவர்கள் எதைக் கண்டாலும் கவிதையாகப் பாடி விடுகிறார்கள். நம்முடைய

கண்ணுக்குப் புலப்படாத கற்பக விருக்ஷத்தையும் பாடுவார்கள். இதோ நம் கண் முன்னாலே இருக்கிறதே, இந்தத் தென்னந் தோப்பையும் பாடுவார்கள். இந்திராதி தேவர்களைப் பற்றியும் பாடுவார்கள்; கூடை முறம் கட்டும் குறத்தியையும் பாடுவார்கள்.

ஆம். வாஸ்தவத்தைச் சொல்கிறேன். குறவஞ்சி என்று ஒருவகைப் பிரபந்தம் இருக்கிறது. பல புலவர்கள் பல குறவஞ்சிகளைப் பாடியிருக்கிறார்கள். அவைகளெல்லாம் குறத்தியைப் பற்றிய பாட்டுக்கள் அடங்கிய நாடகங்களே! அவர்களெல்லாம் அந்தப் பிரபந்தங்களைப் பாடுவதற்கு நாடோடி இலக்கியத்தைச் சேர்ந்த குறத்தி பாடல்களே ஆதாரம். குறவஞ்சிகளில் கவிஞர்கள் நினைத்துக் கோத்த அலங்காரங்கள் இருக்கும். வேதாந்தம் இருக்கும். நீதி இருக்கும். ஆனால் நாடோடிப் பாடல்களிலோ குறி சொல்லும் இயற்கைக் குறத்திகளையே பார்க்கலாம். சரி, இனி அந்தக் குறத்தியையே அணுகிப் பார்க்கலாம்.

இதோ 'செக்கச் செவலையாய்ச் சிறு பெண் குறத்தி' ஒருத்தி வருகிறாள்.

அக்குமணி சொக்குமணி அழகான பால்மணி
பச்சைமணி பவளமணி பாங்காய் அலங்கரித்துக்
குறத்தி யொருத்தியிங்கே கூடை யிடுக்கிவந்தாள்.

அந்த ரேகை சாஸ்திரிக்கு ஒரு கூடையும் கையில் ஒரு பிரம்புமே அடையாளப் பொருள்கள்.

குறத்தியானாலும் அவள் அதிரூப சுந்தரியாக இருக்கிறாள். அவள் நடக்கின்ற ஒயிலை நாடோடிப் பாவலன் வருணிக்கிறான்:

வாடைக் கிளிபோலே வாறாளே அக்குறத்தி
வஞ்சி யிடைதுவள மாது ஸ்தனங்குலுங்க
மின்னற் கொடிபோல மெல்லி வருகிறாளே

அழகு குலுங்குறது ஆனந்தங் கொஞ்சுறது
வடிவு குலுங்குறது மாணிக்கங் கொஞ்சுறது.

அந்த அழகு குலுங்கும் வடிவழகி வீதியிலே போனால் எத்தனை ஆயிரங் கண்கள் அவளைப் பார்த்துப் பிரமித்துப் போகும்! ஆடவர்கள் குறத்தியைப் பார்த்துச் சொக்கி நிற்கிறார்கள். அவளை வியக்கிறார்கள்.

எழுதவொண்ணா வடிவழகி இவ்வீதி வந்தாள்காண்
காய்க்கும் பிராயமவள் கண்ணிகட்டும் காலமவள்
பூக்கும் பிராயமவள் பிஞ்சு விடுங் காலமவள்
கொஞ்சும் பிராயங்கண்டீர் கொழுந்தெல்லாம் பிஞ்சுகண்டீர்
பாதி வயசுகண்டீர் பக்கமெல்லாம் பிஞ்சுகண்டீர்.

அவர்கள் வருணித்துக்கொண்டிருக்கும் போதே அவள் அடுத்த வீதிக்குப் போய் விடுகிறாள். அங்கேயும் அவளுடைய வடிவழகின் விமரிசனம் நடக்கிறது. அப்பப்பா! என்ன பொல்லாத கண்!

பார்த்தார் குறத்தியரைப் பங்கயச்சீர்க் கண்ணாலே
இதுபுதுமை இதுபுதுமை இதுநெடுநாள் கண்டதில்லை
கண்டும் அறியோமே கதையிலுங் கேட்டறியோம்
பார்த்தும் அறியோமே படத்திலுங் கண்டறியோம்

விமரிசனத்தோடு நின்று விடுகிறார்களா? இல்லை. அவளைப் பார்த்து மயல்பெருகித் தங்கள் வீட்டுக்கு அழைக்கிறார்கள்.

வாடி மலைக்குறத்தி எங்களுக்குக் கைபார்க்க
வீதிவீதி யாகவே விரும்பித் திரிவானேன்
கானலிலும் வெய்யிலிலும் கடுகித் திரிவானேன்
உள்ளங்கால் கொப்புளிக்க உச்சி வெடித்துவிட
வேண்டி விடாய்த்து வெளியில் திரிவானேன்?

ஐயோ, பாவம்! அவளிடத்தில் எத்தனை இரக்கம்!

வாடி பலைக்குறத்தி மாளிகையில் இட்டுப்போறோம்
மெத்தையின்மேல் வைக்கிறோம் வேணபணி பூட்டுகிறோம்
சிங்கா தனத்தில்வைத்துச் சேவித்துப் பார்க்கிறோம்
பொன்னடிக்கீழ்த் தெண்டனிட்டுப் புஷ்பம் அலங்கரிப்போம்

அடடா! என்ன பக்தி விசுவாசம்! என்ன உபசாரம்! அப்புறம்?

மெத்தையுண்டு மேடையுண்டு வீற்றிருக்கச் சோலையுண்டு
சுத்தி யுலாவுதற்குச் சிங்காரச் சோலையுண்டு
கட்டிலுண்டு மெத்தையுண்டு கால்பிடிக்கத் தாதியுண்டு
படுக்க இடமுமுண்டு பள்ளிகொள்ளத் தாவுமுண்டு
தின்னநல்ல பாக்குமுண்டு செம்பொன் அநேகமுண்டு
அணியப் பரிமளமும் அள்ளித்தரப் புனுகுமுண்டு

என்று சொல்லித் தொடர்கிறார்கள். இளைஞர்கள் மாத்திரமா? கிழங்கள் பழங்களெல்லாம் கிட்டிவந்து பல் திறந்தார்களாம்.

இந்தப் பேர்வழிகளைப் பயமுறுத்தியும் நியாயம் சொல்லியும் எல்லோரையும் ஏமாற்றிவிட்டுப் போய்விடுகிறாள் குறத்தி. அவள் ஆடவர் கைகளைத் தொட்டுப் பார்த்துக் குறி உரைப்பவள் அல்ல. கட்டுக்கு அடங்காத அவள் நடையுடையால் அவள் குணமும் கட்டுக்கு அடங்காத தென்று நினைக்கக் கூடாது. நாகரிகம் மிக்க ஜனங்களை விட அவன் இனத்தாரே ஒழுக்கத்தில் சிறந்தவர்கள்.

குறத்தி ஓர் அரண்மனை வாசலுக்கு வருகிறாள். அந்த அரண்மனையில் ஒரு பெண்ணரசி தன் நாயகன் பிரிந்திருப்பதனால் மிகவும் துக்கமடைந்து இருக்கிறாள். **மின்னொளியாள்** என்பது அவள் பெயர். அவள் நாயகன் அர்ச்சுனன்.

அவள் கோலமே அவளுடைய துயரத்தைப் புலப்படுத்துகிறது.

மை மெழுதாக் கண்ணும் மலர்புனையாக் கேசமும்
யாக்குத்தின் னாவாயும் பத்தினியாள் தன்முகமும்
வெற்றிலை தின்ன விரும்பாள் விடாய்முகமும்
மஞ்சள் அணு காத வடிவுடையாள் மார்பழகும்
பொன்னான மேனியது புழுதிபட

அவள் இருக்கிறாள். அவளுடைய தோழிமார்கள் குறத்தியை வீதியிலே கண்டு தம்முடைய எஜமானிக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருக்குமென்று எண்ணி அவளைக் கொண்டுபோய் விடுகிறார்கள்.

குறத்தி உலகியல் தெரிந்த மகா சாமர்த்தியசாலி. புகும் போதே நல்ல சகுனமெல்லாம் ஆவதாகச் சொல்லிக் கொண்டு மின்னொளியாளை அணுகுகிறாள்.

தலைப்புறத்தில் கெவுளி நின்று சொல்லுதடி பெண்ணே
மலைக்குரியான் வாள்விசையன் வருவானடி பெண்ணே.

நல்ல சகுனத்தோடு குறத்தி வரும்போது மின்னொளியாளுக்கு நம்பிக்கை உதயமாகிறது. வாடிய முகம் சிறிதே ஒளி விடுகிறது. இதை மின்வெட்டும் நேரத்திலே அந்தக் கைகாரக் குறத்தி கண்டுகொள்கிறாள். முதலிலேயே தன்னுடைய சொந்த விஷயத்தைப் பேசிக்கொள்கிறாள் :

எனக்குநல்ல கறிசோறு இடுவாயோடி பெண்ணே
ஆக்கின சோறுகறி பாக்குமெனக் கருள்வாய்
அருகெட்டு முழச்சேலை பழந்துணியுந் தருவாய்
அருளாகுஞ் செல்வமுண்டு ஆளன்வரப் போறான்
அறுமுகவன் திருவருளால் ஆளன்வரு வாண்டி.

கையை நீட்டிக் குறி பார்க்காமலே சுபபலன் சொல்லும் அந்தக் குறத்தியை ஏற இறங்கப் பார்க்கிறாள் மின்னொளியாள். "நீ எந்த நாடு? எந்த ஊர்?" என்று கேட்கிறாள். குறத்தி புராணத்தைப்போல ஆரம்பித்து விடுகிறாள்.

என்றனிட திருநாடு கேட்கிறையோ பெண்ணே
ஏத்தமுள்ள இந்திரனார் ஆளுமெங்கள் நாடு
சந்திரர்கள் சூரியர்கள் தவம்புரியும் நாடு
தவமுனிவர் ரிஷிகளெல்லாம் வாழுமெங்கள் நாடு
கொச்சிமலை குடகுமலை எங்களது நாடு
குமரேசர் வாழுவதும் எங்களது நாடு
பச்சைமலை பவளமலை எங்களது நாடு
பரமசிவம் வாழுவதும் எங்களது நாடு
வங்காளம் சிங்காளம் மகதமெங்கள் நாடு
வளம்பாடிக் குறியுரைக்க வந்தேனடி பெண்ணே.

பாரத தேசத்தில் எல்லா இடமும் அவளுக்குச் சொந்தம் போல் இருக்கிறதே!

மின்னொளியாள் தன் நாயகன் வருவானா என்று கேட்டுத் தெரிந்துகொள்ள எண்ணுகிறாள். குறத்தியை உட்காரச் சொல்கிறாள். அவள் மனைமேலே இருந்து மின்னொளியின் கையைப் பார்த்துத் தெய்வகணங்களையெல்லாம் அழைக்க ஆரம்பித்து விடுகிறாள்.

தினதெந்தினா தினதெந்தினா தினத்தெந்தினா தினனா
தெந்நாதி நாதினனா தினதெந்தினா தினனா
திங்கள்மதி பிறைசூடும் சிவனுடைய மகனே
திருத்தணிகை வாழ்முருகா சேவையருள வேண்டும்
வனக்குறத்தி வள்ளியம்மை வந்துதவ வேண்டும்
மலையாள பகவதியே வாக்கருள வேண்டும்
அலர்மேலு மங்கையரே மலைமேலுஞ் சிந்தை
அனைவோரும் வந்துகுறி அன்புதர வேண்டும்
ஆகாய வர்ணிதுர்க்கை ஐயனார் பிடாரி
அம்மைவல்லி யுமையவளும் அரியகுறி சொல்லும்.

இவ்வளவு தெய்வங்களைக் கூவி அழைக்கும்போது அவர்களில் ஒருவராவது வராமல் இருப்பாரா? இதோ.

அவள் ஆவேசம் வந்தவளைப்போல் உடம்பெல்லாம் சிலிர்த்துக் கொள்கிறாள்.

தெய்வங்களை நினைத்தாலே சிலிர்த்துக்கொள்ளு துடம்பு
தேகமெல்லாம் மயிர்க்கூச்சல் இடுகிறதே பெண்ணே
வாடைமணம் வீசுதிங்கே மயிலவர்வந் தாப்போல்
மயக்குகின்ற தென்னுடம்பைச் சன்னதங்கொண்டதுபோல்.

சாக்ஷாத் முருகக் கடவுளே வந்துவிட்டதைப்போல இருக்கிறதாம். குறவர்களுடைய குலதெய்வம் மயிலவர் அல்லவா?

கூடைகொண்டு கவியுதடி கோமளமே பெண்ணே
கோலவிழி துடிக்கிறதே குறிசொல்வேன் கேளு.

இவ்வளவு பீடிகையுடன் அவள் குறி சொல்லத் தொடங்குகிறாள். மின்னொளியாளுடைய கைக்குறி மெய்க் குறி முதலியவற்றைப் பார்த்து, அர்ச்சுனன் விரைவிலே வந்துவிடுவான் என்று சொல்லுகிறாள்.

மனமகிழக் கணவனிப்போ வருவாண்டி பெண்ணே
வாள்விசையன் மேலாசை தோணுதடி உனக்கு
தயவுள்ள புருஷனிப்போ வருவாண்டி பெண்ணே
வரவேணும் பார்த்தனிப்போ வள்ளியம்மை யருளால்
இன்னமரை நாழிகையில் அர்ச்சுனமகா ராசன்
வண்ணமுடன் இக்கோயில் வரப்போகிறான் பெண்ணே
கொச்சைக் குறத்தியிட குறிகளும்பொய் யாது
கொச்சியம்மை ஆணையென்று கூடையின்மேல் அடித்தாள்.

அவள் அவ்வளவு நிச்சயமாகச் சொல்லி வற்புறுத்துவ தற்குக் கைக்குறியும் பார்க்க வேண்டாம்; கெவுளி சொல்லும் பார்க்க வேண்டாம். ரகசியம் என்னவென்றால், மின்னொளி யாள் நிலைமையைச் சோதிப்பதற்காக அர்ச்சுனனே குறத்தி வேஷம் போட்டுக்கொண்டு குறத்தி மாதிரியே பாடிக் கொண்டு வந்திருக்கிறான்.

குறத்தி மறைகிறாள்; அடுத்த கணத்திலே அர்ச்சுனன் வருகிறான். கதை மங்களமாக முடிகிறது.

மின்னொளியாள் குறம் என்ற நாடோடிக் கதைப் பாட்டிலே இந்தக் காட்சிகளையெல்லாம் காணலாம். இப்படியே வேறு சில குறங்களும் உண்டு.

கடவுள் சம்பந்தமோ நமக்குத் தெரிந்த மனிதர் சம்பந்தமோ இல்லாமல் நாடோடிப் பாடல்களில் ஒரு குறவஞ்சி இருக்கிறது. குறத்தி குறி சொல்லிவிட்டு வரும்பொழுது அவளுடைய நாயகனாகிய சிங்கன் தன் கையாள் ஒருவனோடு வேட்டையாடிக் கொண்டிருப்பான். திடீரென்று குறத்தியின் ஞாபகம் அவனுக்கு வந்துவிடும். அவளைக் காணாமல் தவியாய்த் தவிப்பான். வேட்டையை விட்டு விட்டு அவளைத் தேடிக் கண்டுபிடித்துத் தன்னுடைய ஆவலைக் காட்டிப் பேசுவான். அவளிடம் காணப்பட்ட மாறுபாடுகளைக் கண்டு சந்தேகம் உண்டாகிக் கேள்வி கேட்பான். அவள் உசிதமாகப் பதில் உரைப்பாள்.

அள்ளி முடிக்குங்கூந்தல் அறுபத்து மூணுபாகம்
அவிழ்ந்து வயணமென்னடி—வங்கணச் சிங்கி

கோபுர வாசலிலே குனிந்து நடக்கும்போது
குரங்கு கலைத்ததடா—வங்கணச் சிங்கா
மூக்கிலே நான்இட்ட முந்நூறு பொன்பெற்ற
மூக்குத் தளுக்கெங்கடீ—வங்கணச் சிங்கி

மொந்தையிற் கள்ளைநான் மொண்டு குடிக்கும்போது
முன்கையில் பட்டதடா வங்கணச் சிங்கா.

இந்தமாதிரி வாக்குவாதம் நடந்த பிறகு அவள் எங்கெங்கே போயிருந்தாள் என்பதைக் குறவன் தெரிந்துகொள்வான். அவள் சம்மானமாகப் பெற்று அணிந்த ஆபரணங்கள் முதலியவற்றை அவன் பார்ப்பான். அவனுக்கு அவை இன்ன பொருளென்று புரியாது. அராக்கொடி பாம்புபோல இருக்கும். அது என்ன என்று கேட்பான். காதிலுள்ள ஆபர-

ணத்தை, "வண்டி உருளை மாதிரி காதிலே மாட்டிக்கொண்டிருக்கிறாயே, அது என்ன?" என்று கேட்பான். அவள் அவனுடைய பேதைமையை நினைத்துச் சிரித்துக்கொண்டே அவை இன்ன இன்ன நகையென்று சொல்லி விளக்குவாள். பிறகு இருவரும் தங்கள் இருப்பிடத்திற்குப் போய் விடுவார்கள்.

இப்படி அமைந்த நாடோடிப் பாடல்களைப் பார்த்துக் கொண்டு புலவர்கள் தங்களுக்கு விருப்பமான தெய்வத்தையோ அரசனையோ பிரபுவையோ நாயகனாக வைத்துக் குறத்தி குறி சொல்லுவதாகக் குறவஞ்சிகளைப் பாடியிருக்கிறார்கள். குறத்தி முதல்தரமான நாடோடி; அவள் பாட்டோ முதல்தரமான நாடோடிப் பாட்டு. அதில் உள்ள சுவை புலவர்கள் உள்ளத்தைப் பிணித்தது என்பதற்கு அதை அடியொற்றி அவர்கள் இயற்றிய குறவஞ்சிகளே சாட்சியாகும்.

# சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்

சாயங்காலம் நாலுமணி ஆகிவிட்டது ஒரு பெரிய ஹோட்டலுக்குப் போகிறோம். பையனைக் கூப்பிட்டு, "என்னப்பா இருக்கிறது?" என்று கேட்கிறோம். அவன் சடசடவென்று அடுக்குகிறான். "ஜிலேபீ, மைசூர்ப்பாகு, பாதாம் ஹல்வா, பாஸந்தி, மலையகாஜா, பாதுஷா, மஹ்மல்பூரி............" இரண்டு நிமிஷம் இப்படி அவன் சொல்லி முடிக்கிறான். அவன் சொல்லும் இனிப்புப்பண்டங்கள் அவ்வளவையும் சர்க்கரை, நெய், மா என்று மூன்று தத்துவங்களாகப் பிரித்து அமைத்து விடலாம்.

அந்த மூன்று பண்டங்களைக்கொண்டு எத்தனை உருவம், எத்தனை பெயர், எத்தனை வகையான ருசிகளை ஹோட்டல்காரர்கள் உண்டு பண்ணுகிறார்கள்! நாமும் சலிக்காமல் அதே சர்க்கரையையும் அதே நெய்யையும் அதே மாவையும் வேறு வேறு உருவத்திலே வாங்கி உண்டு ஏப்பம் விடுகிறோம்.

இந்த மிட்டாய்ச் சரக்கிலே ருசியொன்றுதான் கணக்கு என்பது இல்லை. அதன் உருவங்கூட நமக்குக் கவர்ச்சியைத் தருகிறது. உருவ பேதங்கள் அதிகமாக ஆக நம்முடைய ஆசையும் அதிகமாகிறது. நமக்குச் சலிப்பே உண்டாவதில்லை என்று சொல்வது இன்னும் பொருத்தமாக இருக்கும்.

உருவ பேதங்களைச் சிருஷ்டிப்பது கலையின் முக்கியமான தந்திரம். கதையும் அப்படித்தான்.

ஒரு மனிதன் நல்ல கொடையாளி- அவனை நாம் புகழ வேண்டும். ''அவன் நல்ல கொடையாளி'' என்று சொல்லலாம். ஆனால் அது வெள்ளைச் சொல்; உண்மையை உள்ளபடியே சொல்வது. அதையே மாற்றி, ''அவன் கர்ணன்'' என்றால் அதற்கு ஓரளவு நிறம் ஏறுகிறது; ''கர்ணனுக்குப் பிறகு இவன்தான்'' என்று சொன்னால் அந்த ரஸம் சிறிது அதிகமாகிறது. ''அவனை அண்டினவர்கள் பிறகு யாரிடமும் கை நீட்டுவதே இல்லை'', ''அவனிடம் போனவர்கள் ஆயிரம் பேருக்குத் தர்மம் செய்கிறார்கள்''—இப்படியாக இந்த ருசியை ஏற்றிக்கொண்டே போகலாம். இந்த வித்தையைத் தான் புலவர்கள் செய்கிறார்கள்.

கடவுளையோ மனிதர்களையோ புகழ வேண்டுமென்றால், அந்தப் புகழுக்கு எவ்வளவோ உருவங்களை உண்டாக்கி யிருக்கிறார்கள். பாட்டிலே பலவகை, அலங்காரங்கள், பிரபந்தங்கள், காவியங்கள் எல்லாம் அந்த உருவங்களின் பலவேறு அளவுடைய வகைகளே.

அப்படிப் பிறந்த உருவங்களே பிரபந்தங்கள். தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களென்று ஒரு கணக்கை முன்பு சொல்லி வந்தார்கள். புலவர்களின் கற்பனைக்கு வரம்பு ஏது? நூற்றுக்கு மேம்பட்ட வகைகளை இப்போது பார்க்கலாம். குறவஞ்சி என்பது அந்தக் கணக்கைக் கடந்து உண்டான பிரபந்தங்களுள் ஒன்று.

''மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட முடியுமா?'' என்று பழமொழி சொல்வார்கள். கவிஞர்கள் அந்தக் காரியத்தைச் செய்துவிடுகிறார்கள். ஒரு புலவருக்குப் புகையிலையின்மேலே விருப்பம் அதிகம். பழனியாண்டவரிடத்தில் அவருக்கு அளவிறந்த பக்தி. புகையிலையையும் பழனியாண்டவரையும் புலவர் சேர்த்து விட்டார்; ஆண்டவரிடத்தில் காதல் கொண்ட மங்கை ஒருத்தி, புகையிலையை அவரிடத்தில் தூதுபோய் வரும்படி சொல்வதாக ஒரு பிரபந்தத்தை இயற்றினார். ''**புகையிலை விடு தூது**'' என்பது அதன் பெயர். புகையிலையை முதலில் புகழ்ந்து பிறகு பழனியாண்டவரையும் புகழ்கிறார், அந்தச் சிறு நூலில்.

புகையிலைக்கே பொருத்தம் இருக்கிறதென்றால் குறத்திக்கா இடமில்லை? குறவஞ்சியென்பதற்குக் குறப் பெண் என்று பொருள். குறத்தியைப் பற்றிய செய்திகளை முக்கியமாக வைத்துப் பாடுவதனால் குறவஞ்சி யென்ற பெயர் இத்தகைய நூல்களுக்கு வந்தது. கதாபாத்திரங்கள் பேசும் தோரணையில் நூல் அமைந்திருப்பதால் இது நாடகப் பிரபந்தம். ஆதலால் குறவஞ்சி நாடகம் என்று சொல்லுகிறார்கள்.

இந்தக் காலத்தில் குறத்தி கூடை முறம் கட்டுவதும், ஊசி விற்கிறதுந்தான் நமக்கு ஞாபகத்துக்கு வருகின்றன. அந்தக் காலத்தில் குறத்தி குறி சொல்வதில் பேர் போனவள். குறமகள் குறி எயினி என்ற ஒரு பெண் சங்க

காலத்தில் இருந்தாள். அவள் குறி சொல்வதில் தேர்ந்தவள்; தமிழிலும் புலமை நிரம்பியவள்.

பிரபந்தமென்றால் அதற்கு ஒரு நாயகன் வேண்டும். சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகத்தில் சரபோஜி மகாராஜாவே நாயகன். 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தஞ்சாவூரில் மகாராஷ்டிர அரசர் பரம்பரையில் ஒருவராக அரசாண்டவர் சரபோஜி. அவருடைய ஆஸ்தான வித்துவானாக விளங்கிய கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகரென்னும் தமிழ்ப் புலவர் இந்த நாடகத்தை இயற்றினார்.

கதா நாயகனாகிய சரபேந்திர மன்னர் பவனி வருகிறார். ஓரிடத்தில் நாயகியாகிய மதனவல்லி பந்து விளையாடிக் கொண்டிருக்கிறாள். அவள் சரபோஜி மன்னரைக் கண்டு மயல் கொள்ளுகிறாள். மயல் அதிகமாகிறது. தூக்கம் இல்லை; சந்திரன் தகிக்கிறான். தென்றல் வருத்துகிறது. அவள் துடி துடிக்கிறாள்.

அப்போது அவளுடைய சகி வருகிறாள். அவளைச் சரபோஜி மகாராஜாவிடத்தில் தூது போகச் சொல்லி அனுப்பிவிட்டு, "இன்னும் அவள் வரவில்லையே!" என்று நாயகி எதிர்பார்க்கிறாள். அந்தச் சமயத்தில் ஒரு குறத்தி ஜாம்ஜாமென்று வருகிறாள்.

குன்றிமா மணியும் குலச்சங்கு மணியும்
துன்றிடு கவடியும் தொகுத்திடு பணிகளும்
புலிப்பல் தாலியும் புனைந்துமாத் திரைக்கோல்
வலக்கையி லேந்தி மணிக்குறக் கூடை
மருங்கினில் இடுக்கி

வருகிறாள். வரும்போதே சரபோஜி மன்னருடைய புகழைப் பாடிக்கொண்டு வருகிறாள். அவள் பெண்களுக்கு,

கி—7

சையினில் காலில் கலந்திடு ரேகையும்
மெய்யுறும் மறுவொடு விளங்கிடு தழும்பும்
சுழிகளும் இன்னும் தோற்றுசில் குறிகளும்

பார்த்துக் குறி சொல்வதில் தேர்ந்தவள்.

கூடை கட்டலைமுறங் கட்டலையோ வென்னக்
குயில்கூ வுதல்போலக் கூவிக்கொண் டன்னப்
பேடென்ன நடந்தெழில் மயிலென மின்ன
பச்சை குத்தலையா அடியம்மே பச்சை
பகற்குறி கேளுங்கள் சொல்கிறேன் பிச்சை
இச்சகத் தனைவரும் கேட்பவர் இச்சை
எனச்சர பேந்திரன் தனைப்போற்றி மெச்சிக்

குறவஞ்சி வருகிறாள்.

தன்னுயை காதலன் புகழைப் பாடிக்கொண்டு வரும் குறத்தியைப் பார்க்கிறாள் மதனவல்லி. அவளுடைய கைவீச்சும் அன்ன நடையும் பேச்சும் அவளைக் கவர் கின்றன. "நீ யார்? என்ன சாதி? எந்தத் தேசம்? எந்த ஊர்?" என்று அவளைக் கேட்கிறாள். அவள் ஆரம்பித்து விடுகிறாள் தன்னுடைய ராமாயணத்தை.

"எங்கள் சாதி குறச் சாதி. எங்கள் பெருமை என்ன தெரியுமா?

மானினொடு பன்றிமறை யொளிவிருந்து கொல்வோம்
வந்தெதிர்த்தோர் தங்களைமேல்மிஞ்சவிடோம் வெல்வோம்
கானகத்தில் இழங்கானை மருப்பதனால் கெல்வோம்
கைக்குறிகள் மெய்க்குறிகள் எக்குறியும் சொல்வோம்."

தங்கள் குலத் தொழிலைச் சொல்லி அதன்பெருமையை யும் சொல்கிறாள். செந்திருமால் அவளுக்கு மைத்துனனாம் வேடனாகிய குகனுக்கு அண்ணன் திருமாலாகிய ராமன். குகனுடைய வம்சம் அந்தக் குறத்தி. திருமால் 'மச்சினன்' தானே? "திங்களணி சிவனெனக்குத் தமையன் முறை

அம்மே'' என்கிறாள். அவர் பன்றியைக் கொல்ல வேடராகி வந்தாரல்லவா? அதனால் அண்ணன் உறவு கொண்டாடுகிறாள். கந்தன் மருமகனாம்! வள்ளி மகள் முறையாம்.

அவள் தனக்குத் தெரிந்த மலைகளின் வளத்தைப் பிறகு விவரிக்கிறாள். மேரு மலையிலே குடிசை தொடுத்தார்களாம்; யாரோ சாப மலை அது என்று சொன்னார்களாம். சாபம் என்பது வில்லுக்கும் பெயர்; சபித்தலுக்கும் பெயர். சிவபெருமானுக்கு வில்லான மலை மேரு என்ற அர்த்தத்தில் அவர்கள் சொன்னார்கள். குறவர்கள் தங்களுக்குச் சாபம் கிடைக்குமோ என்று பயந்து போனார்களாம். காளத்திக்குப் போனார்களாம். ''இந்த மலை ஒரு வேடன் கண்ணைப் பறித்த மலை'' என்றார்களாம். அதையும் விட்டுவிட்டு வந்தார்களாம்.

இப்படி ஒவ்வொரு மலைக்கும் குற்றம் காட்டுகிறாள் அந்த வாயாடிக் குறத்தி. கடைசியில் நேரி மலையிலே வந்து குடி புகுந்தார்களாம். நேரிமலை சோழநாட்டுக்கு உரியது. புஸ்தகத்தில் இருக்கிறதே ஒழிய உலகத்தில் இருக்கிறதோ இல்லையோ சந்தேகந்தான். இது கவிஞன் கற்பனைதானே? சோழ அரசனுடைய ஸ்தானத்தில் இருந்த சரபோஜிக்கும் நேரியே மலை. எப்படியாவது பிரபந்த நாயகனுடைய செய்தியைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.

பிறகு குறத்தி தான் கண்ட ஸ்தலங்களை யெல்லாம் சொல்கிறாள். நதிகளின் வளத்தை வருணிக்கிறாள். தேசங்களின் அழகைப் புகழ்கிறாள். கடைசியில் சோழ நாட்டின் வளத்தை விரிவாகச் சொல்கிறாள்.

''நீ எங்கெங்கே போய் யார் யாருக்குக் குறி சொன்னாய்? என்ன என்ன சம்மானம் கிடைத்தது?'' என்று மதனவல்லி கேட்கிறாள்.

குறத்தி பதில் சொல்கிறாள். அந்தப் பதிலைப் பார்த்

தால் அவள் எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் நித்திய யௌவன சுந்தரியாக இருப்பவளென்று தோற்று கிறது. 'கங்கைக்கு, உனக்குப் பன்னிரண்டு கைகளுடன் பிள்ளை தோன்றுவன் என உரைத்தனன்; இதோ இந்தச் சூடிகை தந்தாள்' என்று கையினாலே சுட்டிக் காட்டுகிறாள். மீனாட்சிக்கும் சீவந்தினிக்கும் அவள் குறி சொன்னாளாம். அந்தக் குறத்தி சகலகலா வல்லியாகவும் இருக்கிறாள்; பல மொழிகளில் அவளுக்குப் பரிசயம் இருக்கிறது; ஒரு தெலுங்க மானினி "நா செய் சூடெனச்" சொன்னாளாம். "நாடி நற்குறி ஓதினேன்; இந்த நாசிகாபரணம் ஈந்தாள்" என்று அந்தப் பாஷையிலேயே சொல்கிறாள்.

மராட்டி, கன்னடம், உருதுப் பேச்சிலே அந்த அந்தத் தேசத்துப் பெண்கள் கேட்டார்களாம். அவள் குறி சொன்னாளாம். இங்கிலீஷ் பெண் ஒருத்திக்குக்கூடச் சொன்னாளாம். அவள் சொல்வதைக் கேளுங்கள் :

ஒண்ணு தல்பெறும் இங்கிலீஷ் மாது
ஒருத்தி லுக்மைஹாண் டென்றாள்
ஓதி னேனவள் பாணி ரேகைகண்டு
உதவினாள் இந்த மேகலை.

குறத்தி பிறகு சரபோஜி மன்னருக்குக் குறி சொல்லித் தான் பெற்ற வரிசையை அடுக்குகிறாள். மதனவல்லிக்கு உயிர் வருகிறது. "அப்படியானால் என் கையையும் பார்த்துச் சொல்" என்று தன் கையை நீட்டுகிறாள்.

குறத்தி சும்மா சொல்லி விடுவாளா குறி? சாமிக்குப் பூசை போட வேண்டிய பண்டங்களெல்லாம் வாங்கிக் கொள்ளுகிறாள். எத்தனையோ வரிசைகளெல்லாம் பெற்று அவளுக்குக் கஞ்சியும், அவள் பிள்ளை தலைக்கு எண்ணெ யும் பஞ்சமாயிருக்கின்றன!

உள்ளபடி குறியுனக்குக் கூறிடுவே னம்மே-முன்னம்
ஒருசிறங்கைக் கஞ்சிபசி யாறிடவா ரம்மே

பிள்ளைதலைக் கொருகரண்டி எண்ணெயூற்றி டம்மே
'அந்தப்
பிள்ளையார்க்குப் படைத்தவெல்லாம் எடுத்துதவிங் கம்மே.

எப்படி அவள் வியாபாரம்! சாமிப் பேரைச் சொல்லி வைத்த பண்டங்களையெல்லாம் முதலில் வாங்கிக்கொள்கிறாள். அப்புறந்தான் குறி சொல்ல ஆரம்பிக்கிறாள். ஊரிலுள்ள தெய்வங்களையெல்லாம் அழைக்கிறாள்; வாழ்த்துகிறாள். இந்த ஆர்பாட்டத்தினால் மதனவல்லியின் ஆசை அதிகமாகிக் கொண்டே வருகிறது. மனோவேகம் பெருகுகிறது. குறத்தி லேசிலே விஷயத்துக்கு வருகிறாளா?

"உன் கருத்திலே ஒரு கவலை இருக்குது; அதைச் சொல்லுகிறே னம்மே. ஆனை ஒண்ணு தோணுது. அதன் மேலே ஒருத்தன் பவனி போனான். ஆனையைக் கண்டு நீ மருண்டு போய் விட்டாய்" என்று மேலாகச் சொல்கிறாள்.

"என்னடீ மலைக்குறத்தி; குறி சொன்னால் வரிசையாகச் சொல்ல வேண்டாமோ! யாரோ வந்தானென்று சொன்னாய். பிறகு யானையைக் கண்டு மருண்டா யென்கிறாயே!" என்று கேட்கிறாள் மதனவல்லி.

"அதுதானே சொல்ல வருகிறேன்? உள்ளதைச் சொல்லி விடுகிறேன். ஒரு யானை வந்ததா? அந்த யானை மேலே வந்த 'வள்ளலினைக் கண்டு உள்ளத்தில் ஆசை கொண்டாய். கொண்ட, வன்மையினால் நண்ணியதிவ் வுள்மயக்க மம்மே'" என்று சொல்லி விடுகிறாள். "நீ நயந்த நாயகன் சரபோஜி. நீ அவனைச் சேர்வாய். நீ அனுப்பிய தூது, மாலையுடன் வந்துவிடும்" என்று சுபமான செய்தியைச் சொல்லி முடிக்கிறாள் குறத்தி. மதனவல்லி ஆடையாபரணங்களெல்லாம் வழங்குகிறாள்.

இதனுடன் குறவஞ்சியின் ஒரு பகுதி முடிகிறது. அடுத்தபடி குறவன் காட்சி அளிக்கிறான். அவன்தான் அந்தக் குறத்தியின் புருஷன். அவன் தன்னுடைய கையாளாகிய

குளுவனுடன் சேர்ந்துகொண்டு பறவை வேட்டையாட வருகிறான்.

வெறிக்கச் சிலர்களை உறுக்கிக்கொண்டு-நீடு
மேல்மீசை தன்னை முறுக்கிக்கொண்டு
நெறிக்குள் பறவைமேல் நாட்டமோடு

வருகிறான். வரும்போதே தன் சிஷ்யனாகிய குளுவனுக்கு எப்படியெல்லாம் வேட்டையாட வேண்டுமென்று உபதேசம் செய்கிறான். பல பறவைகள் அப்போது வருகின்றன. அதைப் பிடிக்க முயலும்போது அவை ஏமாற்றிவிட்டுப் போய் விடுகின்றன. குளுவன், "நீ சும்மா இங்கே குந்தி இருந்தாங்க போய் வர்றோமின்னு எல்லாம் போயிட்டுது. இனிமே நீ பறவை வேட்டை ஆடினது போதும். உன் உசிர் போல இருந்தாளே சிங்கி, அவளைத் தேடு" என்று சொல்லுகிறான். அதைக் கேட்டவுடன் குறச் சிங்கனுக்குக் குறவஞ்சியாகிய சிங்கியின் ஞாபகம் வந்துவிடுகிறது. அவளை நினைந்து பிரலாபிக்கிறான். அவளுடைய அழகையும் செயல்களையும் வருணிக்கிறான்.

"இன்றைக்கெல் லாமவ ளழகைப் பார்த்துக்கொண்
  டிருக்கலாம் சற்றும் பசியாது—மேலும்
என்றும் அவள்வடிவைக் கண்டோர் தமக்குரம்பை
  எழிலும் மனசுக்கு ருசியாது"

என்கிறான். குளுவன், "உன் குறத்தி எப்படி இருப்பாள்?" என்று கேட்கிறான். சிங்கன் வருணிக்கத் தொடங்குகிறான்:

"கன்னமதி லேயிரண்டு சின்னவடு வுண்டு"

அது எப்படி வந்தது தெரியுமா?

"கள்குடித்த வெறியினால் நான் கடித்த துண்டுபண்டு."

"அடேடே. நீ சொல்கிற இந்த அடையாளத்தோடே தஞ்சாவூரில் ஒரு குறத்தி இருக்கிறாளே. நான் காட்டுகிறேன் வா" என்று சொல்லி அந்தச் சிஷ்யன் குறவனைக்

கூட்டிக்கொண்டுபோய்க் குறவஞ்சிக்குமுன் நிறுத்துகிறான். இரண்டு பேரும் உலகத்தையே மறந்துவிட்டுக் குசலப் பிரச்னம் செய்கிறார்கள். அவள் சம்மானமாகப் பெற்ற ஆபரணங்களைக் கண்டு இன்னவென்றுதெரியாமல் குறவன் மயங்குகிறான்.

"இருதன் மேலும் இலுப்பைப்பூ வருவானேன் சிங்கி"
என்று கேட்கிறான்.

"அது, சரபோஜி மன்னர் அருள்முத்து மாலையடா சிங்கா"

என்கிறாள். அவளுடைய நெற்றியிலே என்னவோ தொங்குகிது. பூனைக் கண்ணைப்போலப் பளபளக்கிறது அது.

"புதுமதி நெற்றியிற் பூனைக்கண் இருப்பானேன் சிங்கி"
என்று கேட்கிறான்.

"மதனவல்லி ஈந்த வைடூரியச் சுட்டியடா சிங்கா"

என்கிறாள்.

இருவரும் சந்தோஷமாக, "நாம் இருவரும் கூடி நயந்து வாழ்வோம்" என்று சொல்லிச் சரபோஜியை வாழ்த்துகிறார்கள்.

இதோடு நாடகம் முடிகிறது.

குறத்தியின் சாமர்த்தியமான பேச்சுக்கள் இந்த நாடகத்தின் சுவை நிரம்பிய பகுதி. நாகரிகம் மிக்க கதாநாயகியின் காதலுள்ளமும், நாடோடியாகிய குறவனது காதலுள்ளமும் அவரவர் மனப்பாங்குக்கு ஏற்றபடி சித்திரிக்கப் பெற்றிருக்கின்றன.

இதில் இயல் தமிழ்ச்சுவை இருக்கிறது; இசைப்பாட்டுக்கள் இருக்கின்றன; நாடக ரஸமும் மிகுதியாக இருக்கிறது.

# வாத்தியார் ஐயா

## 1

"ஊருக்கு இளைச்சவன் பிள்ளையார் கோவில் ஆண்டி; அதற்கும் இளைச்சவன் பள்ளிக்கூடத்து வாத்தியார்" என்ற பழமொழி இக்காலத்தில் எங்கும் வழங்குகிறது. இந்தப் பழமொழி ஏதோ நடுவில் வந்த புதுமொழி என்றுதான் தெரிகிறது. ஏனென்றால் நம்முடைய தேசத்தில் கோவில் பூசகர்களையும் உபாத்தியாயர்களையும் இழிவாக நினைக்கும் வழக்கம் பழங்காலத்தில் இல்லை. கோவில் ஒவ்வோர் ஊருக்கும் அவசியம் என்று பழந்தமிழர்கள் நினைத்தார்கள்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஒரு பழமொழி.

"திருக்கோயில் இல்லாத திருவில் ஊர்" என்று அப்பர் சுவாமிகள் சொல்கிறார். கோவில் இல்லாத ஊரில் திருமகளின் விலாசம் இராதாம். அதை மூதேவி பிடித்த ஊர் என்றே சொல்ல வேண்டுமாம்.

இந்தமாதிரியே வாத்தியார் இல்லாத ஊரும் பிரயோசனம் அற்றது என்று சொல்லியிருக்கிறார்கள் :

> கணக்காயர் இல்லாத ஊரும்......
> நன்மை பயத்தல் இல்

என்று ஒரு பழைய நூல் சொல்கிறது. உபாத்தியாயருக்கு அந்தக் காலத்தில் கணக்காயர் என்ற பெயர் வழங்கி வந்தது. கணக்கு என்பது நூலுக்குப் பெயர். அதைக் கற்பிக்கிற தலைவர் கணக்காயர். நக்கீரர் என்ற புகழ் பெற்ற சங்கப் புலவருடைய தகப்பனார் மதுரையில் வாழ்ந்த ஒரு சிறந்த உபாத்தியாயர். இப்போதும் மரியாதையாக ஒரு கிராமத்

தில் உள்ள உபாத்தியாயரைப் பேர் சொல்லாமல் ''வாத்தியார் ஐயா'' என்று சொல்வதில்லையா? அதுபோல அவரை எல்லோரும் 'கணக்காயர்' என்றே அழைத்து வந்தார்கள். அதனால் நாளடைவில் அவர் பெயர் மறந்து போகவே 'மதுரைக் கணக்காயனார்' என்ற பெயர் நிலைத்துவிட்டது. பழைய புஸ்தகங்களில் நக்கீரர் பேர் வரும் இடங்களில் எல்லாம் 'மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்' என்று எழுதி யிருப்பதைக் காணலாம்.

இந்தக் காலத்தில் வாத்தியார் ஐயா இளப்பமானவஸ்து ஆகிவிட்டார். போதாக் குறைக்கு அவரைப்பற்றி எத்தனையோ கதைகள் கட்டி அவற்றின் மூலமாகவும் அவரைச் சேர்ந்தவர்களுக்குப் பெயர் வைத்திருக்கிறார்கள். 'டானாக் கூட்டம்' என்றும், அண்ணாவிகளென்றும் சமுதாயத்தின் ஒதுக்குப்புற வாசிகளாக அவர்கள் இருக்கிறார்கள். சமூகத்தில் அவர்களுக்கு மதிப்பு கொடுப்பதில்லை என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். அவர்களே ஒருவருக்கு ஒருவர் மதிப்பு வழங்குவதில்லை. வேறு ஒரு வேலையும் கிடைக்காவிட்டால் தான் படித்தவர்கள் வாத்தியார் வேலைக்கு வருகிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் உத்ஸாகம் இல்லாமல் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்களுடைய சம்பளந்தான். மற்ற உத்தியோகஸ்தர்களெல்லாம் தொப்பியும் நிஜாரும் அணிந்துகொண்டு டாக் டீக்கென்று உலவும் உலகத்தில் மூலைக்கச்சத்தையும் அங்கவஸ்திரத்தையும் ஈசல் சிறகை விரித்துப் பறப்பதுபோல் பறக்கவிட்டுக்கொண்டு செல்லும் வாத்தியார் ஐயா நிலை பரிதாபகரமானதுதான்.

பழைய காலத்தில் வாத்தியார் ஐயா இப்படி இருக்கவில்லை. அவர் ஒவ்வொரு கிராமத்திலும் இளைஞர் கூட்டத்துக்குத் தலைவர்; எதிர்கால சந்ததிகளுக்கு அவரே கடவுள்.

''எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்'' என்று அதிவீரராம பாண்டிய மன்னர் சொல்கிறார். இறைவன் போன்றவன் என்று சொல்லாமல் இறைவனே ஆவான்

என்று சொல்லிவிட்டார். அகக்கண்ணைத் திறந்து வைக்கும் தெய்வம் அவன்தானே? தெய்வம் என்று சாமான்ய மனிதனைக் கண்டால் நமக்கு மதிக்கத் தோன்றுகிறதா? ஊரார் எல்லோரும் ஒரு மனிதனை அப்படி மதிக்க வேண்டுமானால் அதற்கு ஏற்ற காரணம் இருக்க வேண்டும். அந்த மனிதனிடத்தில் அதற்கு ஏற்ற குணங்களும் ஆற்றலும் இருந்தால் தான் ஜனங்களுடைய மதிப்பு நிரந்தரமாக இருக்கும். இல்லாவிட்டால் வெறும் சம்பிரதாயத்துக்காக உபாத்தியாருக்குப் பூசை செய்யும் நிலைதான் வரும்.

வாத்தியார் ஐயா எப்படி இருந்தார்? எப்படி இருந்தால் வாத்தியார் ஐயா என்ற பட்டம் கொடுக்கலாம்? அவர் குணம், பழக்க வழக்கங்கள், கல்வி, சொல்லிக் கொடுக்கும் முறை முதலியவைகளின் இயல்பு என்ன?—இந்த விஷயங்களைத் தமிழர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். அநேகமாக இலக்கண நூல் ஒவ்வொன்றிலும் ஆரம்பத்தில் இந்த விஷயங்களைத் தெரிவிக்கிறார்கள். இலக்கணத்தில் பொதுப்பாயிரம் என்ற ஒரு பகுதி வருகிறது. அங்கே புஸ்தகம் எப்படிப் இருக்க வேண்டும், அதைச் சொல்லிக் கொடுக்கும் வாத்தியார் ஐயா எப்படி இருக்க வேண்டும், அவர் எப்படிப் பாடம் சொல்ல வேண்டும், மாணாக்கன் எப்படி இருக்கவேண்டும், எப்படிப் படிக்க வேண்டும் என்ற விஷயங்கள் வருகின்றன. இவற்றைப் பற்றிய விரிவான இலக்கணங்களைச் சொல்லும் சூத்திரங்களைப் பழைய நூல்களிலிருந்து உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். அவற்றைக் கொண்டு, வாத்தியார் ஐயாவைப் பற்றித் தெரிந்துகொள்ளக்கூடிய விஷயங்களை இனிப் பார்க்கலாம்.

## 2

வாத்தியார் முதலில் நல்ல மனிதராக இருக்க வேண்டும். நற்குண நற்செய்திகள் உடையவராக இருந்தால்தான் பொது ஜனங்களுடைய மதிப்புக்குப் பாத்திரராக முடியும்.

"நான் சொல்வதை மாத்திரம் கேள்; நான் செய்வதைக் கவனிக்காதே" என்றால் வாத்தியார் ஐயாவை ஒரு வாரத்தில் ஊரார் அவமானப்படுத்தி அனுப்பி விடுவார்கள். நல்ல ஒழுக்கமும் நல்ல பழக்கங்களும் இருப்பதற்கு, அவர் நல்ல மனிதர்களுடைய குடும்பத்தில் பிறந்திருக்க வேண்டும்; இல்லாவிட்டால் நல்ல குருவினுடைய பழக்கத்தை உடையவராக இருக்க வேண்டும். இவ்வளவும் சேர்ந்த ஒரு தகுதியை, **'குலன்'** என்று ஆசிரியர்கள் குறிக்கிறார்கள்.

ஆசிரியரைத் தெய்வமாகக் கருத வேண்டுமென்று சொன்னார்களே, அதற்கு ஏற்றவாறு ஆசிரியருக்கும் தெய்வத்தின் குணம் இருக்க வேண்டும் அல்லவா? தெய்வத்துக்கு என்ன என்னவோ விசேஷ குணங்கள் இருப்பதாக வேத சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. பக்தர்களுக்கு அவற்றைப் பற்றிக் கவலை யில்லை. கடவுள் நம்முடைய பிரார்த்தனைக்கு இரங்கி அருள்புரிய வேண்டுமென்ற ஒன்று தான் அவர்களுடைய நோக்கம். அருள் என்னும் குணம் இருப்பதனால்தான் தெய்வத்தை நாம் கொண்டாடுகிறோம்; சிற்றுயிர்க்கு இரங்கும் பேரருளாளன் என்று பாராட்டுகிறோம். குருவுக்குத் தெய்வத்தைப் போன்ற மதிப்பு வேண்டுமானால் அவரிடமும் **அருள்** இருக்க வேண்டும். பிறருக்கு உபகாரம் செய்ய வேண்டுமென்ற நினைவு அருளிலிருந்து பிறப்பதே. அறியாமை நிரம்பிய உலகத்தில் உள்ளவர்கள்பால் இரக்கம் பூண்டு, அறிவு ஊட்டும் சிறந்த தொண்டை ஆசிரியர் மேற்கொள்ள வேண்டும். அறியாமையால் செய்யும் பிழைகளைப் பொறுக்கும் இயல்புக்கும் அவ்வருளே காரணமாக நிற்கும்.

குலமும் அருளும் ஒருங்கு இயைந்த குருவுக்குத் தெய்வ பக்தியும் அவசியமானது. கல்வியின் பயனே கடவுளை அறிதல் என்ற கொள்கையில் ஊறிய இந்நாட்டில் கடவுளை நினைத்தே கல்வியைத் தொடங்குகிறார்கள். மாணாக்கர்

களுக்குக் கல்வி புகட்டி அவர்களுடைய வாழ்நாள் நற்பயன் பெறும்படி செய்யும் வழியை உபதேசிக்கும் ஆசிரியர் **தெய்வ நம்பிக்கை** உடையவராக இருந்தால்தான் மாணாக்கர்களிடத்திலும் அது வளரும்.

குரு பெருந்தன்மை யுடையவராக இருக்க வேண்டும். சிறிய விஷயத்தைப் பெரிதாக்கி வீண் சச்சரவுகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. வாழ்க்கை முழுவதும் பயன்படும் சாதனைகளை மாணாக்கர்களுக்குப் பயிற்றும் மாபெருந் தொண்டில் ஈடுபட்டவர் உபாத்தியாயர். அவர் சில்லறை விஷயங்களில் கவனத்தைச் செலுத்தினால் அவருடைய குறிக்கோள் சிதறிவிடும்; திண்மை கலங்கும். இந்தப் பெருந் தன்மையை **"மேன்மை"** என்று இலக்கணக்காரர்கள் குறிக்கிறார்கள்.

குலமும், அருளும், தெய்வக்கொள்கையும், மேன்மை யும் ஆகிய உயர் குணங்கள் ஆசிரியர்பால் இருக்க வேண்டு மென்று சொல்லுவதன் மூலமாக இலக்கண நூல்கள், அவர் மனிதருட் சிறந்தவராக இருக்க வேண்டும் என்பதையே வற்புறுத்துகின்றன.

## 3

**வாத்தியார்** ஐயா மனிதருட் சிறந்தவராக இருக்கிறார் போதுமா? அவர் நன்றாகப் படித்திருக்க வேண்டும். பல நூல்களை வெறுமனே கணக்குப் பண்ணிப் படித்திருந்தால் மட்டும் போதாது. படித்ததைத் தெளிவாகத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். தெளிவு இல்லாமல் அவருக்கே சந்தேகம் இருந்தால் அவரிடம் படிக்கும் மாணாக்கர்கள் உருப்படுவது எப்படி? ஆகவே அவர் கலைகள் பயின்றிருக்க வேண்டும்; பரிக்ஷை கொடுத்துப் பட்டம் பெற்றிருந்தால் இந்தக் காலத்துக்குப் போதுமானது. அந்தக் காலத்தில் இதெல்லாம் பலிக்காது; படித்ததைச் சந்தேக விபரீதமின்றிப் படித்திருக்க வேண்டும்.

நன்றாகப் படித்தவரெல்லாம் வாத்தியாராக முடியுமா? எவ்வளவோ படித்தவர்களைப் பார்க்கிறோம். புஸ்தகத்தில் பிள்ளையார் சுழி முதல் முற்றிற்று வரையில் படித்துத் தெரிந்துகொண்டிருப்பார்கள். ஏதாவது ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்லுமையா என்றால் ஒரே குழப்பம் வந்து விடும். முன்னுக்குப் பின் பொருத்தமில்லாமல் உழப்புவார். சொல்லுகிற விஷயம் இன்னதென்றே விளங்காது. கொஞ்சம் விளங்கினாலும் அழுத்தமாகப் பதியாது. உலக அநுபவமும் கல்விப் பழக்கமும் உடைய நமக்கே புரியாதபடி இருந்தால், குழந்தைகளுக்கு அவர் எதைச் சொல்லித் தரப் போகிறார்? படிப்பு வேறு; படித்ததைக் கற்றுத் தரும் சக்தி வேறு. இரண்டும் யாரிடம் பொருந்தி யிருக்கின்றனவோ அவரே உபாத்தியாயர் வேலைக்குத் தகுதியானவர்.

**கலையில் தெளிவு** வாத்தியாருக்கு வேண்டுமென்று நிறுத்தி விடாமல் மேலே "**கட்டுரை வன்மை**" வேண்டுமென்று சொல்கிறது இலக்கணம். ஒரு விஷயத்தை, கேட்பவர் உள்ளத்தில் பதியும்படி சொல்லும் திறமைதான் அது. கட்டுரை என்பது ஒரு கலை. அதில் நல்ல வன்மை இருக்க வேண்டும். சும்மா 'என்னைத் தெய்வம் என்று கொண்டாடுங்கள்' என்று வாத்தியார் ஐயா சொன்னால் ஜனங்கள் கொண்டாடி விடுவார்களா என்ன? உரைகல்லில் உரைத்துப் பார்த்து, ஐயா நல்ல மனுஷர்; நன்றாகப் படித்திருக்கிறார். சாமர்த்தியமாகச் சொல்லித் தருகிறார்' என்று தேர்ந்தால் தான் கிராமத்து ஜனங்கள், "வாத்தியாரையா, நமஸ்காரம்' என்று கும்பிடு போடுவார்கள். இல்லாவிட்டால், "அழுகற் பழம் அண்ணாவுக்கு" என்ற பழமொழியைச் சொல்லிக் குப்பைத் தொட்டியில் போடும் பதார்த்தத்தைத்தான் நிவேதனம் செய்வார்கள்.

இவ்வளவும் சொன்னது போதாதென்று வாத்தியாரை வடிகட்டிப் பார்க்கும் இலக்கணக்காரர்கள், வாத்தியார்

இன்ன இன்ன பொருளைப்போல இருக்க வேண்டும் என்று வேறு சொல்லி யிருக்கிறார்கள். மிகவும் விரிவாகவும் நுணுக்கமாகவும் சொல்ல வேண்டியதைச் சுருக்கமாகச் சொல்வதற்கு, உபமானம் ஒரு நல்ல வழி. உபமானத்தை மனம் போன மட்டும் விரித்துப் பார்த்துக் கொள்ளலாம். வேதாந்தத்தில் வரும் உபமானங்களுக்கு கணக்கு வழக்கு உண்டா? இந்தத் தந்திரத்தை வேதகாலத்து ரிஷிகளும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்; ஏசுகிறிஸ்துவும் தெரிந்திருக்கிறார்; ராமகிருஷ்ண பரம ஹம்ஸரோ உபமானக் கதைகள் சொல்லி விளங்காதவற்றையெல்லாம் விளங்க வைத்து விடுகிறார்.

வாத்தியார் ஐயாவை எந்த எந்தப் பொருளுக்குச் சமமாகச் சொல்கிறார்கள் என்பதை இனிமேல் கவனிப்போம்.

## 4

"வாத்தியார் ஐயா பூமி தேவியைப்போல் இருக்க வேண்டும்; மலையைப்போல் இருக்க வேண்டும்; துராசைப் போலவும் மலரைப் போலவும் இருக்க வேண்டும்" என்று பழைய தமிழர்கள் சொல்லி யிருக்கிறார்கள்.

பூமிதேவியை உபமானம் சொல்லும்போது நமக்கு ஒரு விஷயம் நிச்சயமாக ஞாபகத்துக்கு வந்துவிடுகிறது. பொறுமைக்குப் பூமி தேவியைச் சொல்லிச் சொல்லி அலுத்துப் போயிருக்கிறோமே!

படிக்கும் பிள்ளைகள் அறிவு பெறுவதற்காக ஆசிரியரை அணுகுகிறார்கள். பிழை செய்வது அவர்களுக்கு இயல்பு. அதை மாற்றித் திருத்தமாக இருப்பதையே இயல்பாகப் பண்ணும் பொறுப்பைத்தான் வாத்தியார் ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஆகையால் மாணாக்கர்களிடம் சிடுசிடுவென்று விழுந்தால் அவர்கள், 'வாத்தியார் என்றால் காட்டு மிருகம்' என்று நினைத்து விடுவார்கள். தமிழ் நாட்டில் வாத்தியாருடைய பேரைப் பூச்சாண்டியாகச் சொல்லிப் பயமுறுத்தி

வந்த காலமும் உண்டென்பது நமக்குத் தெரியுமே! பயப்படுவதற்குரிய பொருளாக ஆசிரியர் இருக்கக் கூடாது.

நிலத்தைப் பொறுமைக்கு உபமானமாகச் சொல்வதோடு, பெருமைக்கும், திண்மைக்குங்கூட உவமையாக எடுத்தாளுவார்கள். "நிலத்தினும் பெரிதே" என்று பெருமைக்கு அதைச் சொல்வதை இலக்கியங்களிலே காணலாம். ஆசிரியர் பெருமையில் நிலத்தைப்போல இருக்க வேண்டும். பெருமை என்பது அவருடைய குணப் பெருமையையும் கல்விப் பெருமையையும் குறிக்கும்.

அடுத்தபடி நிலத்திற்குரிய சிறப்பியல்பு திண்மை. "மண் கடின மாய்த்தரிக்கும்" என்று சாஸ்திரம் சொல்கின்றது. மனத் திண்மை ஆசிரியரிடம் இருக்க வேண்டும். எந்த விஷயத்தையும் சந்தேகமின்றி உறுதியாகத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். எத்தகைய கேள்வி வந்தாலும் மாறாத திண்மை இருந்தால்தான் எக்காலத்தும் மாணாக்கர்களுடைய அறிவை வளர்க்க உபயோகமாக இருக்கும்.

நிலமானது பருவத்துக்கு ஏற்றபடியும் வேளாளர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு உழுது எருவிட்டுச் சிரமப்பட்டுப் பயிரிடுகிறார்களோ அதற்கு ஏற்றபடியும் பயன்கொடுக்கும். கையைக் கட்டிக்கொண்டு வீட்டில் உட்கார்ந்திருந்தால் நிலம் வளம் சுரக்காது. நினைத்தபொழுதெல்லாம் விளைச்சலையும் தராது. பயிர்விளையப் பருவம் உண்டு; முயற்சியும் அவசியம்.

வாத்தியார் ஐயா நிலம்; மாணாக்கன் உழவன். மாணாக்கனுடைய பருவத்துக்கு ஏற்றபடி வாத்தியார் ஐயா சொல்லித் தர வேண்டும். தமக்குத் தெரிந்த சமாசாரங்களை யெல்லாம் பையனுடைய மூளையில் ஏற்றிவிட வேண்டுமென்ற பெருங் கருணை வியர்த்தமாகிவிடும். யார் யார் எந்த எந்தப் படியில் இருக்கிறார்கள் என்பதை நன்றாகத் தெரிந்துகொண்டு அவர்களுடைய பக்குவத்துக்கு

ஏற்ற விஷயங்களைக் கற்பிக்க வேண்டும். எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் இன்னவென்று தெரியாத மாணாக்கனுக்குத் தொல்காப்பியச் சூத்திரங்களைச் சொல்லித் தந்தால் அவனுக்குத் தலைவலி உண்டாவதுதான் லாபம். வாத்தியார் ஐயா தம்முடைய சக்தியை வீணாகச் செலவிடுகிறார். "என்னடா இது, பேரிழவாக இருக்கிறதே!" என்று மாணாக்கன் தொல்காப்பியச் சூத்திரத்தையும் தொல்காப்பியரையும் சேர்த்துத் திட்ட ஆரம்பிப்பான். ஆசிரியருக்குத் தொல்காப்பியரிடத்தில் பக்தி இருக்கலாம்; தொல்காப்பியத்தில் நல்ல பயிற்சி இருக்கலாம். 'பாத்திர மல்லாத இடத்தில் பிச்சை இட்ட' வாத்தியார் குற்றத்துக்காகத் தொல்காப்பியர் நிந்தனைக்கு ஆளாகிறார்.

மாணாக்கனுடைய முயற்சிக்கு ஏற்ற அளவில் போதிக்க வேண்டும். சிறு முயற்சி செய்பவனுக்குப் பெரிய பொருளைப் போதித்தல் அந்தப் பொருளினிடத்தில் மாணாக்கனுக்குக் கௌரவ புத்தி ஏற்படாது. இலவசமாக இறைபடும் பண்டமென்று எண்ணிக்கொள்வான். 'வாத்தியாருடைய பெருங்கருணையைப் பாராட்டக் கூடாதோ?' என்று நீங்கள் கேட்கலாம். அதெல்லாம் அறிவு நிரம்பின பெரியவர்கள் கடமையல்லவா? மாணாக்கன் அவ்வளவு உயர்ந்த பண்புடையவனாக இருந்தால் ஆசிரியனிடம் எதற்காக வருகிறான்?

எந்தத் தொழிலிலும் உலக இயல்பு தெரிந்து நடக்க வேண்டும். பொருளைச் சிக்கனமாகச் செலவு பண்ண வேண்டும் என்று சொல்கிறோம். அறிவுச் செல்வத்தையும் சிக்கனமாகத்தானே வழங்க வேண்டும்? முயற்சி செய்யச் செய்ய வஞ்சகமின்றி வாரி வழங்கினால் வாங்கிக்கொள்பவனுக்கும் மகிழ்ச்சி, கொடுப்பவனுக்கும் திருப்தி உண்டாகும். ஆகவே பருவம், முயற்சி என்பவற்றின் அளவறிந்து வாத்தியார் ஐயா தம் தொழிலை நடத்தி வரவேண்டும். இலக்கண

நூல் ஆசிரியருக்குப் பூமியை உவமையாகச் சொல்லும் போது, இந்த மாதிரி இயல்புகளையே குறிக்கின்றது.

தெரிவரும் பெருமையும்
திண்மையும் பொறையும்
பருவம் முயற்சி
அளவிற் பயத்தலும்
மருவிய நன்னில
மாண்பா கும்மே.

[பொறை-பொறுமை. பயத்தல்-பயன்படுதல். மாண்பு-இயல்பு.]

மலை என்ற மாத்திரத்திலே அதனுடைய உன்னதமான சிகரங்களும் பரப்பும் நம் ஞாபகத்துக்கு வருகின்றன. மலை அளப்பதற்கு அரியது. எத்தனையோ உபயோகமான பொருள்கள் அதன்கண் விளைகின்றன. அவற்றிற்கும் ஓர் எல்லை இல்லை. பெரிய மனிதர்களை மலைக்கு ஒப்பிட்டுப் பேசுவது நம்மவர் வழக்கம். மலையைப் போன்ற சரீரம் உடையவராக இருப்பவரையா அப்படிச் சொல்கிறார்கள்? இல்லை, இல்லை. நிலப் பரப்பில் மேடும் பள்ளமும், ஆறும் குளமும், வயலும் பொழிலும் இருந்தாலும் மலைதான் எல்லோருடைய கண்களிலும் முதலில் படுகிறது. அதுபோல ஒரு நாட்டிலோ, ஓர் ஊரிலோ யார் வந்தாலும் அவர்கள் காதில் யாருடைய புகழ் முதலில் விழுகிறதோ அவரே பெரிய மனிதர். அந்த ஊருக்கு வராமலே அந்தப் பெரிய மனிதருடைய புகழைப் பலர் அறிந்துகொண்டிருப்பார்கள். வாத்தியார் பெரிய மனிதராக இருக்க வேண்டும். 'அளக்கலாகா அளவு' உடைய மலையைப்போல விளங்க வேண்டும்.

மலையில் அளக்கலாகாத பொருள்கள் விளைகின்றன. ஆசிரியரிடத்தில் உள்ள பொருள்களும் அப்படியே இருக்க வேண்டும். 'இவரிடம் உள்ள சரக்கு இவ்வளவுதான்'

என்று அறுதியிடும் நினைவு யாருக்கும் வரக்கூடாது. 'எந்த விஷயத்தைக் கேட்டாலும் இவர் சொல்கிறாரே- இவருக்கு இன்னது தெரியும், இன்னது தெரியாது என்ற வரையறையோ இல்லைபோலும்!' என்று ஜனங்கள் வியக்கும்படி ஆசிரியர் இருந்தால் அவரை மலையென்றும் சொல்லலாம்; கற்பகமென்றும் சொல்லலாம்.

மலைக்கு அசலம் என்பது வடமொழியில் வழங்கும் பெயர்களில் ஒன்று. 'அசையாதது' என்பது அதன் பொருள். வாத்தியார் சுகதுக்கங்களுக்கும், ஐயந்திரிபுகளுக்கும் எதிர் நின்று அசையாமல் இருக்க வேண்டும். கல்வியென்பது உலகத்தில் பணம் படைக்கவும் புகழ் படைக்கவும் மாத்திரம் ஏற்பட்டதன்று. உயிருக்கு உறுதி பயக்கும் முயற்சியில் தலைப்படவும், இறைவனை உணரவும், இறுதியில்லாத இன்ப வீட்டை அடையவும் அது சாதனமாக உதவுவது. ஆகவே கல்வியென்பது ஒரு வகையான சாதனை. மனத்தைப் பண்படுத்தும் சாதனையென்றே சொல்ல வேண்டும். ''வைத்ததொரு கல்வி ''மனப் பழக்கம்'' என்று ஔவைப்பாட்டி சொல்கிறாள். அந்தப் பழக்கம் முறுக முறுக மனிதனுக்குத் தெளிவும் திருப்தியும் உண்டாகும். நெஞ்சார நல்ல நெறியில் நடக்கும் திறமை ஏற்படும். ''நெஞ்சத்து, நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால், கல்வி அழகே அழகு'' என்று நாலடியாரில் வருகிறது. கல்வியினால் உள்ளத்தைப் பண்படுத்தியவன் பிறருடைய மதிப்பினால் தான் நல்லவனென்ற பெயரை அடைய வேண்டும் என்பது இல்லை. அவனே தன்னை நடுநிலையில் நின்று சோதித்துக் கொள்வான். அவனுடைய பயிற்சி மிகுதியாக ஆக, 'நாம் நல்ல மனிதர்களோடு சேரத் தகுதியுடையோம்' என்ற நம்பிக்கை உதயமாகும்.

இத்தகைய உள்ளப் பயிற்சியையே கல்வி முறையாக முன்னோர்கள் போற்றினார்கள். இந்த மாணாக்கர்களுக்கு

கற்பித்துத் தரும் ஆசிரியர் நடுங்கும் உள்ளத்தோடு இருக்க லாமா? அசையாத உறுதியும் நிலையான இயல்பும் அவர் உள்ளத்தில் நிலவ வேண்டும் அல்லவா? ஆதலால் ஆசிரியர் அசலத்தைப்போலத் 'துளக்கலாகா நிலை'யை உடையவ ராவது அவசியம்.

ஆசிரியர் பிறருடைய கவனத்தை ஈர்க்கும் தோற்றம் படைத்தவராக இருக்க வேண்டும். தோற்றம் என்பது உடலின் தோற்றமன்று. அவருடைய இயல்பு, வார்த்தைகள் எல்லாம் சேர்ந்த ஓர் உருவம். (Personality) அகத்திய முனிவர் உருவத்தால் சிறியவர். ஆனாலும் அவருடைய தோற்றம் பெரிது. எவ்வளவு மக்கள் கூடியிருந்தாலும் அவரைத் தனியே கண்டுபிடித்து விடலாம்; உருவச் சிறுமை யாலன்று. அந்தப் பெரிய கூட்டத்தில் அவரைச் சூழ மக்கள் பணிவோடு நிற்பார்கள். எல்லோருடைய கண்ணும் கருத் தும் அவரிடமே செல்லும்.

ஆசிரியரிடம் இத்தகைய தோற்றம் இருக்க வேண்டும். வேகமாகக் காற்று அடிக்கிறது. மேகங்கள் கலைந்து ஓடு கின்றன. உன்னதமான மலை ஒன்று இருந்தால் மேகங்கள் தடைப்பட்டு நின்று விடுகின்றன. மலையின் தோற்றம் எல்லாப் பொருள்களையும் தன்னிடத்தில் நிற்கும்படி செய் கின்றது. வெகு வேகமாக ஒரு காரியத்தைச் செய்ய ஒரு மனிதன் ஓடுகிறான். இடையே வாத்தியாரையாவைச் சந்திக்க நேர்ந்தால் அவன் வேகம் குறைந்து சட்டென்று நின்று ஒரு கும்பிடு போடுகிறான். அவர் பேச ஆரம்பித்தால் பொறுமையோடு கேட்கிறான். சிலசமயங்களில் அவருடைய நல்லுரைகளில் ஈடுபட்டுப் போய்த் தன் வேலையையே மறந்து போனாலும் போய்விடுவான். இப்படி ஒரு தோற்றம் ஆசிரியருக்கு இருக்க வேண்டுமென்றால் அவரை ஊரரெல் லாம் பாராட்டித் தொழுவதில் ஆச்சரியம் என்ன?

பஞ்சம் வந்துவிட்டது; அப்போது மற்ற இடங்களிலெல்

வாம் விளைவு குறைந்து விடும். மலையுள்ள இடங்களில் பஞ்சத்தின் கொடுமை உடனே தாக்காது. மரங்களும், அருவி களும் நிரம்பிய மலை பஞ்ச காலத்தில் மக்களுக்கு ஒரு சேம நிதிபோலப் பயன்படும். ஆசிரியர் 'வறப்பினும் வளந்தரும் வண்மை' உடையவராக இருக்கவேண்டுமென்று இலக்கணம் சொல்கிறது. பொருட் பஞ்சம் ஏற்பட்டாலும் அறிவுப் பஞ்சம் வராமல் பாதுகாப்பது அவர் கடமை. இவ்வளவு விஷயங்களையும் சேர்த்து இலக்கணம் ஒரு சூத்திரத்தில் சொல்கிறது.

அளக்கல் ஆகா அளவும் பொருளும்
துளக்கல் ஆகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளம்தரும் வண்மையும் மலைக்கே.

[துளக்கல்-அசைத்தல். வறப்பினும்-பஞ்சம் வந்தாலும்]

கலைபயின்ற தெளிவுடைய ஆசிரியர் துலாக்கோலைப் போல ஐயமின்றிப் பொருளின் மதிப்பைத் தெரிவிக்க வேண் டும். ஒரு பண்டத்தை நிறுக்கிறோம். தராசுமுள் நடுநிலை யில் நின்றால்தான் பொருளின் உண்மைக் கனம் தெளி வாகும். ஒரு பொருளையும் நிறுக்காமல் தராசை முதலில் தூக்கிப் பார்த்து முள் நடுநிலையில் நிற்கிறதா என்று தெரிந்துகொண்ட பிறகே நிறுப்பது வழக்கம். முள் ஒரு பக்கமாகச் சாய்ந்தால் நியாயமான வியாபாரி அதைக் கையால்கூடத் தொடமாட்டான். ஆசிரியர் நூற்பொருளை நிறுத்து உணர்ந்துகொள்ள வேண்டும். தம்முடைய விருப்பு வெறுப்பினால் நூலில் உள்ள கருத்தைக் கூட்டியோ குறைத்தோ சொல்லக் கூடாது. சாதி, சமயம், கொள்கை களால் வேறுபட்ட புலவர் ஒருவர் இயற்றிய நூல் ஒன்றைப் பாடம் சொல்லும்போது, தம் கொள்கைக்கு மாறுபட்டது என்ற காரணத்தால் அதைக் குறைத்துக் கூறக் கூடாது. நூல்களைத் தாம் ஆராய்ந்தாலும், கற்பித்தாலும் நடுநிலை

யில் நின்று, நூற்பொருளில் தம் கருத்தை நுழைக்காமல் இருப்பவரே சிறந்த ஆசிரியர்.

ஐயம் திரப் பொருளை உணர்த்தலும்
மெய்ந்நடு நிலையும் மிகும்நிறை கோற்கே

என்று இலக்கணம் கூறுகிறது.

சமூகமாகிய விருட்சத்தில் வாத்தியார் ஐயா மலரைப் போல விளங்குகிறார். மலர் அழகிய பொருள்; மங்கலமான பொருள். வாத்தியார் ஐயா இருந்து விட்டால் சமுதாயம் சோபையை அடைகிறது. சமுதாயத்துக்கு அவசியமான பொருள் அவர். ஊரில் எந்தப் பொதுக் காரியமானாலும் வாத்தியார் ஐயாவுக்கு முதல் அழைப்பு. யாராக இருந்தாலும் அவரை வரவேற்று உபசரிப்பார்கள். அவர் யாவருக்கும் இனியவர்; இதமான வார்த்தைகளைச் சொல்பவர். மென்மையான இயல்புடையவர். 'மலர் மங்கலமானது; நல்ல காரியங்களுக்கு இன்றியமையாதது; யாவரும் மகிழ்ந்து கொள்வதற்குரியது; மெல்லியது' என்று புகழ்கிறோம். அந்தப் புகழை அப்படியே வாத்தியார் ஐயாவுக்கும் சொல்லும்படி அவர் இருக்க வேண்டுமாம்.

மலருக்குப் போது என்று ஒரு பெயர் உண்டு. தக்க பொழுதில் தவறாமல் மலர்வதனால் அதற்கு அப்பெயர் வந்ததாம். இயற்கையிலே அமைந்த கடிகாரம் அது. ஆசிரியர் அதைப் போலக் காலந்தவறாமல் மாணாக்கர்களுக்கு முகமலர்ச்சியோடு பாடம் சொல்லித் தர வேண்டும். காலக் கணக்கைக் கவனிப்பதில்லை என்ற குறைபாடு நம்மவர்களுக்கு இருப்பது உலகம் அறிந்தது. வாத்தியார் ஐயா அந்த அபவாதத்துக்கு உட்படக் கூடாது. பொழுதறிந்து கடமையைப் புரியும் இயல்பு அவரிடம் இருக்க வேண்டும்.

மங்கலம் ஆகி இன்றியமை யாது
யாவரும் மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே

என்று மலரின் இயல்பைச் சொல்லும் வாயிலாக வாத்தியார் ஐயாவின் இயல்பையும் குறிப்பாக இலக்கண ஆசிரியர்கள் தெரிவிக்கிறார்கள்.

இவ்வளவு உபமானங்களால் உபாத்தியாயருடைய தகுதியை அளவிட்டு விட்டு. "உலகியல் அறிவும் இவை போன்ற வேறு சிறந்த குணங்களும் உடையவன் ஆசிரியன்" என்று தமிழிலக்கணக்காரர் சொல்கிறார். எவ்வளவு தான் படித்தாலும், நல்ல குணம் உடையவராக இருந்தாலும் உலகம் தெரியாவிட்டால் என்ன பிரயோசனம்? காலத்துக்கு ஏற்றபடி போதனா முறைகள் மாறும்; உதாரணங்கள் மாறும்; கொள்கைகள் மாறும்; இலக்கணமே மாறும். இவற்றை யெல்லாம் உணர்வதற்குப் பழைய நூலறிவு மாத்திரம் போதாது. உலகமே ஒரு பெரிய புஸ்தகம். அதை உணராவிட்டால் வாத்தியார் படித்த புஸ்தகங்கள் அவ்வளவும் பயன்படாமற் போய்விடும். ஆகையால் எல்லாவற்றையும் சொல்லிவிட்டுக் கடைசியில் உலகியலறிவு வேண்டுமென்று விதிக்கிறார்கள்.

வாத்தியார் ஐயா எப்படி இருக்க வேண்டும் என்பதைச் சுருக்கமாக ஞாபகப்படுத்திக்கொள்ள இதோ இலக்கணச் சூத்திரம் இருக்கிறது.

குலன் அருள், தெய்வம் கொள்கை, மேன்மை,
கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை,—
நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்,
உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்
அமைபவன் நூல்உரை ஆசிரி யன்னே.

[நிறைகோல்-தராசு. மாட்சி-பெருமை. இனைய-இத்தகையவை]

## 5

வாத்தியார் ஐயா எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லுவதோடு நில்லாமல் இலக்கணம் எழுதினவர்கள்

''எப்படி இருக்கக் கூடாது?'' என்றும் கூறுகிறார்கள். அப்படிச் சொல்லும்பொழுதும் வாத்தியாரின் குணங்களை யும் தொழில்களையும் சொல்லிவிட்டு, உபமானங்கள் மூலமாகவும் பொல்லாத வாத்தியார்கள் இப்படி இருப்பார் கள் என்று தெரிவிக்கிறார்கள்.

நல்ல குணங்கள் இல்லாமல் இருந்தால் பிள்ளைகளுக்கு அவரிடத்தில் வேலை இல்லை; வெறும் படிப்பை மாத்திரம் கற்றுக்கொள்வது என்பது பழைய தமிழ் நாட்டில் இல்லை. நடை, உடை, பாவனை எல்லாவற்றிலும் நல்லவைகளைப் பிள்ளைகள் ஆசிரியரிடத்தில் கற்றுக்கொள்ளுவார்கள். தாம் கற்ற கல்வியை ரூபா, அணா, பைசாவாக மாற்றுவது அக்காலத்தவர் நோக்கமல்ல. கல்வியை வாழ்க்கையாக மாற்றுவார்கள். கற்றவற்றைச் சோதனை யிடுவதையே வாழ்க்கையாக எண்ணுவார்கள். வாழ்க்கை முழுவதும் பயன்படும் கல்வியைச் சிறந்த குணங்களைப் பெற்ற ஆசிரியர்களிடம் கற்க வேண்டுமே யொழியச் சாதாரண மனிதர்களிடம் கற்பதில் சிறப்பு ஒன்றும் இல்லை.

சிறந்த குணங்கள் இல்லாவிட்டாலும், குற்றமில்லை யென்று வாத்தியார் ஐயா ஒருவரிடம் குழந்தைகளை ஒப்பிக்கிறோம். 'லட்சிய வாழ்க்கைக்குரிய வழியை அவர் கற்றுத் தர வேண்டாம்; சாமான்ய வாழ்க்கைக்குப் போதியவற்றைக் கற்பித்தால் போதும்' என்று எண்ணு கிறோம். அந்த வாத்தியார் கெட்ட குணம் உடையவராக இருந்தால் பையனுக்கு முதலில் அதுதானே படியும்? இளம் பருவத்தில் நல்லது ஏறாவிட்டாலும் கெட்ட பழக்கங்கள் மிக விரைவாக ஏறிவிடும். ஆகையால் 'வாத்தியார் ஐயா ஒரு மகாத்மாவாக இல்லாமற்போனாலும் குற்றம் இல்லை; போக்கிரியாக இருக்கக் கூடாது' என்று நாம் நினைக் கிறோம். அதையே இலக்கணக்காரர்களும் சொல்கிறார்கள்.

வாத்தியார் மற்றவர்களுடைய நலத்தைக் கண்டு

பொறாமை கொள்ளும் பேர்வழியாக இருக்கக் கூடாது. பையனே ஆசிரியரைவிடச் சில சமயங்களில் அறிவுத்திறன் உடையவனாக இருக்கும்படி நேர்ந்து விட்டால் பொறாமைக்குணமுள்ள ஆசிரியர் சும்மா இருப்பாரா? ஆபத்து வந்துவிடும். அது மட்டும் அல்ல. உலகத்தில் எத்தனையோ ஆசிரியர்கள் இருக்கிறார்கள். எல்லோரும் ஒரே மாதிரியானவர்கள் அல்ல. ஏற்றத்தாழ்வு இருப்பது இயல்பு. தம்மைவிடக் கல்வியறிவிலோ, பொருள் நிலையிலோ உயர்வையுடைய ஆசிரியர் ஒருவர் பக்கத்தில் வாழ்பவராகவோ, அடுத்த வீட்டுப் பையனுக்குச் சொல்லிக் கொடுப்பவராகவோ இருந்துவிட்டால் பொறாமைக்கார வாத்தியார் ஐயா என்ன செய்வார், தெரியுமா? தினந்தோறும் அவரைப் பற்றிக் குறை கூறுவார்; பாடம் பாதி நேரம் நடந்தால், 'அவனுக்கு என்ன தெரியும்? சுத்த முட்டாள். அவனிடம் வாசிக்கிறவன் உருப்பட்டாற்போலத்தான்!' என்ற பாடம் பாதி நேரத்தைக் கபளீகரித்துவிடும். பையன் படிப்பு கெட்டுப்போவதோடுகூட, வாத்தியார் ஐயா சொன்ன சமாசாரங்களைப் பலர் காதில் விழும்படி செய்யும் ஊக்கம் அவனுக்கு உண்டாகிவிடும். அதன் பயன் வீண் கலகமும் மனஸ்தாபமுமே.

வாத்தியாருக்குப் பேராசை கூடாது. மாணாக்கன் பெரிய செல்வனாக இருக்கலாம். அவன் வாத்தியார் ஐயாவிடம் தானாக மதிப்பு வைத்து எது வேண்டுமானாலும் தரலாம். அவன் கொடுப்பதைப் பெறுவதுதான் நல்லது. அவன் சொத்திலே தமக்கும் ஒரு பங்கு உண்டென்று உரிமை பாராட்டுபவரைப் போலச் சில ஆசிரியர்கள் பேசுவார்கள். "எனக்கு நூறு ரூபாய் தரக்கூடாதோ! இவனுக்குப் பணமா இல்லை? கொடுத்தால் குறைந்துவிடுமோ? நான் வாங்கிக் கொள்ளத் தகாதவனா?" என்று கேட்பார்கள். அவன் பணக்காரனாக இருப்பதற்கு வாத்தியார் ஐயாவா

காரணம்? அவருடைய பாடத்திற்கும் அவனுடைய பணத்திற்கும் என்ன சம்பந்தம்? ஆகவே அவாவை உடையவரை ஆசிரியர் பதவியில் வைத்திருக்கக் கூடாதென்று தமிழர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'கொடுக்க வில்லையே!' என்ற குறை வாத்தியார் ஐயா உள்ளத்தில் தோன்றி விட்டால், பிறகு அவர் எப்படி நன்றாகக் கல்வியைக் கற்பிக்க முடியும்?

அடுத்தபடியாக வாத்தியார் ஐயாவுக்கு விரோதி வஞ்சகம். ஆசிரியர் உண்மையான ஞானம் வாய்ந்தவராக இருக்க வேண்டும். ஆசிரியர் கூட்டத்தில் அடிப்படியில் இருப்பவர் போதகாசிரியர்; மேற்படியில் உள்ளவர் ஞானாசிரியர். அவர்கள் ஒரே ஜாதியினர். ஆகையால் உள்ளத்தால் பொய்யாது ஒழுக வேண்டியது அவர்கள் கடமை. நேர்மைக்குணம் அவர்களுக்கு இன்றியமையாதது. தெரிந்ததை மறைத்து வைப்பதும், மாணாக்கனை வஞ்சிப்பதும் ஆசிரியரைப் பாவிகளாக்கிவிடும். மெய்யன்பு உடையவர்களிடம் வஞ்சகம் இராது. வஞ்சகம் உள்ளவர்களிடம் அன்பு இராது. மாணாக்கர்களைச் சொந்தப் பிள்ளைகளைப் போலப் பாதுகாக்கக் கங்கணம் கட்டிக் கொண்ட வாத்தியார் ஐயா அந்த மாணாக்கர்களிடத்தில் அன்பில்லாமல் பழகுவது நியாயமன்று. ஆகவே வஞ்சகம் அவரிடத்தில் எள்ளளவும் தலைகாட்டக் கூடாது.

மெத்தென்று விஷயங்களைக் கற்பிக்காமல் மாணாக்கர்களைப் பயமுறுத்திக் கற்பித்தல் கூடாது. வாத்தியார் ஐயாவின் குரலைக்கேட்டால் மாணாக்கர்கள் நடுங்கிவிடுவார்கள் என்று சொல்வது அவருடைய பெருமைக்குக் காரணமாகாது. இனிமையாகப் பேசத் தெரியாதவன் வாத்தியார் வேலைக்கே வரக் கூடாது. வாத்தியார் வேலை முழுவதும் நாவில் இருக்கிறது; அந்த நாக்கு எவ்வளவு மிருதுவாக இருக்கிறது! பின்னும் அதில் இனிமை சேர வேண்டும். கடுமையான பேச்சினால் அச்சத்தை உண்டாக்கும் வாத்தியார் ஐயா, தம்முடைய பலஹீனத்தைத்தான் வெளிப்படுத்

தினவர் ஆகிறார். அறிவுப் பலமும், ஒழுக்க உயர்வும் உடையவர்கள் அச்சம் உண்டாகும்படி வார்த்தையாட மாட்டார்கள்.

## 6

முன் நல்ல ஆசிரியர்களுக்கு வேண்டுமென்று மொழிந்த குணங்கள் இல்லாமையும், இழிந்த குணத்தோடுகூடிய இயல்பும், பொறாமையும், பேராசையும், அச்சமுண்டாகப் பேசுவதும் கெட்ட வாத்தியாருடைய லட்சணமென்று சொன்ன இலக்கண நூலாசிரியர்கள், மேலும் அவரைக் கழற்குடம் மடற்பனை, பருத்திக் குண்டிகை, முடத்தெங்கு என்று வைகிறார்கள். "நாயே, பேயே, கழுதையே" என்று ஒருவனை அவன் குணங்களுக்கு ஏற்ற உபமானங்களால் நாம் அழைக்கும்போது, "ஆகா, என்ன அழகான உவமை! என்றா கேட்பவர்கள் நினைக்கிறார்கள்? அதை வசவென்று உலக சம்பிரதாயத்தில் சொல்கிறோம். அந்த மாதிரியே உபமானமென்ற உருவத்தில் மேலே சொன்ன கழற்குடம் முதலிய வார்த்தைகளால் கெட்ட வாத்தியாரைப் பெரியவர்கள் சொல்கிறார்கள். வசவென்று சொன்னாலும் ஒன்றுதான்; உபமானம் என்று சொன்னாலும் ஒன்றுதான். ஏன் அப்படிச் சொன்னார்கள் என்பதைக் கவனிக்கலாம்.

பழைய காலத்தில் எந்தப் பொருள்களையேனும் கணக்குப் பண்ண வேண்டுமானால் கழற்சிக் காயை வைத்துக் கொண்டு எண்ணுவது ஒரு வழக்கம். ஒவ்வொன்றாக எண்ணும்போது ஒவ்வொரு கழற்சிக் காயை ஒரு குடத்திற்குள் போடுவார்கள். இப்படிப் போட்ட கழற்சிக் காய்களைக் கடைசியில் எடுத்து எண்ணுவார்கள்.

கழற்சிக் காய்களில் எல்லாம் ஒரே அளவாக இருப்பதில்லை. சின்னதும் இருக்கும், பெரியதும் இருக்கும். நல்ல உருண்டையாகச் சில இருக்கும்; சில ஒழுங்கற்ற உருவத்

தோடு இருக்கும். முதலில் குடத்திலே போடும்போது எந்த முறையில் காய்கள் விழுகின்றனவோ அதே வரிசையில் ஒன்றன்பின் ஒன்றாக மீட்டும் எடுக்கும்போது வருவது இல்லை. ஒரேடியாகச் சேர்ந்து விழுந்துவிடும். போடும்போது விழுந்த முறைப்படியே எடுக்கும்போதும் வரவேண்டுமென்றால் கழற்குடத்தில் நடக்காது. செங்கல்லாக இருந்தால் ஒன்றன் மேல் ஒன்றை அடுக்கி மீட்டும் அப்படியே எடுக்கலாம். கழற்சிக்காய் ஒன்றனோடு ஒன்று ஒட்டாது; போட்ட இடத்தில் இராது. ஆகவே எடுக்கும்போது முறைமாறி வருவதிலும் பல சேர்ந்து விழுவதிலும் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

கழற்சிக் காய் பெய்த குடத்தில் காணப்படும் இந்த முறை மாற்றம் போலி வாத்தியார் ஐயாவிடம் இருக்கும். அவர் வாசித்த காலத்தில் இன்னதன்பின் இது என்ற முறைப்படியே ஒழுங்காகக் கற்றுக்கொண்டிருப்பார். சொல்லிக் கொடுக்கும் போதோ, அந்த முறையெல்லாம் மறந்து போய்விடும். தெரிந்தவற்றைத்தான் சொல்லிக் கொடுப்பார். ஆனால் முறைமாறிப் போய்விடும். ஒவ்வொன்றாகச் சொல்லுவதை விட்டு ஒரேடியாகப் பல விஷயங்களைத் திணித்து விடுவார். கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்று மூன்று முறையாகச் சொல்லிக் கொடுக்காமல் வகுத்தலிலிருந்து ஆரம்பித்தால் பையனுக்கு ஒன்றுமே வராது. இலக்கிய இலக்கணத்திலும் இப்படி முறை உண்டு. அந்த முறை பிறழ்ந்தால் மாணாக்கனுக்கு வீண் சந்தேகங்கள் கிளம்பும். முறைமாறிச் சொல்லிக் கொடுக்கும் வாத்தியாரைக் கழற்குடத்தோடு ஒப்பிட்டுப் பேசுவதில் பிழை என்ன?

> பெய்தமுறை யன்றிப் பிறழ உடன்தரும்
> செய்தி கழற்பெய் குடத்தின் சீரே.

[பெய்தல்-இடுதல். பிறழ-மாறுபடும்படி. உடன்தரும் — ஒருங்கே கொடுக்கும். செய்தி-இயல்பு.]

இன்னும் சில வாத்தியார்கள் உண்டு. நன்றாகப் படித்திருப்பார்கள். ஆனால் அவரிடமுள்ள கல்வியை லேசில் நாம் பெற முடியாது. அவர்களிடம் நடையாய் நடந்து அவர்களுடைய கோபதாபங்களுக்கு உட்பட்டுக் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்களாக மனம் வந்து சொல்லிக்கொடுத்தால் ஏதாவது தெரிந்து கொள்ளலாம். மாணாக்கன் சொந்த முயற்சியினாலும் பத்தியினாலும் அவர்கள் உள்ளத்தைக் கனிவிக்க இயலாது. இந்த இனத்தாரை இலக்கணக்காரர்கள் பனை மரம் என்று சொல்கிறார்கள்.

மடல் அடர்ந்து நிற்கும் பனை மரத்தில் பன நுங்கோ பழமோ இருக்கிறது. விடுவிடுவென்று ஏறினோம், பறித்தோம், தின்றோம் என்பதற்கு இல்லையே! எவ்வளவு கஷ்டப்பட்டு உடம்பிலே காயத்தை ஏற்றுக்கொண்டு காயைப் பறிக்க வேண்டும்! இல்லாவிட்டால் பனம் பழம் தானே விழும் வரைக்கும் காத்திருக்க வேண்டியதுதான். பனைமர வாத்தியாரால் மாணாக்கர்களுக்கு என்ன பிரயோஜனம் இருக்கப் போகிறது?

தானே தரக்கொளின் அல்லது தன்பால்
மேவிக் கொளக்கொளா இடத்தது மடற்பனை.

பருத்திக் குடுக்கை வாத்தியாரென்று ஒரு ஜாதியை இலக்கண நூலில் காணலாம். பழைய காலத்தில் சிக்கிமுக்கிக் கல்லால் நெருப்பு உண்டாக்கி வந்தார்கள் சிக்கிமுக்கிக் கல்லை உராயும்போது நெருப்புப் பொறி உண்டாகும். அதைப் பருத்தியிலே பற்றச் செய்து அதிலிருந்து தேங்காய் நார், உமி முதலியவைகளில் பற்ற வைப்பது வழக்கம். இந்தக் காரியத்துக்காக ஒரு குடுக்கையில் பருத்தியை அடைத்து வைத்திருப்பார்கள். அதிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக அவ்வப்போது பஞ்சை எடுத்து உபயோகிப்பார்கள்.

பருத்திக் குடுக்கையில் பஞ்சை அடைப்பதும் கஷ்டம்; அதிலிருந்து எடுப்பதும் கஷ்டம்; கொஞ்சங் கொஞ்சமாகத் தான் அடைக்க வேண்டும்; அப்படியே சிறிது சிறிதாகவே எடுக்க வேண்டும். பருத்திக் குடுக்கை வாத்தியாரிடத்தில் உள்ள படிப்பும் அந்தப் பஞ்சைப் போன்றதே. அவர் மூளை கொஞ்சங் கொஞ்சமாகவே கல்வியை ஏற்றுக்கொண்டிருக்கும். பாடம் சொல்லித் தரும்போதும் சிறிது சிறிதாகவே சொல்லிக் கொடுப்பார். மாணாக்கனுக்கு எவ்வளவு ஆர்வம் இருந்தாலும் சரி, அவருடைய ஆமை நடை மாறாது. பழங் காலத்தில் இப்படிச் சில தமிழாசிரியர்கள் இருந்தார்கள். ஏதாவது ஒரு நூலைச் சிரமப்பட்டுக் கொஞ்சங் கொஞ்ச மாகப் படித்துத் தேர்ச்சி பெற்றிருப்பார்கள். அவர்களிடம் யாரேனும் போய்ப் பத்துப் பாடல்களை ஒருங்கே கேட்க வேண்டுமென்று ஆசைப்பட்டால், ''தமிழ் கிள்ளுக் கீரையா? சுலபமாக வாரி இறைக்கக் கடலைச் சுண்டலா? நான் எவ்வளவு கஷ்டப்பட்டுக் கற்றுக் கொண்டேன். தெரியுமா?'' என்று சொல்வார்கள். அவர்கள் கஷ்டப்பட்டதற்கு மாணாக்கன் எப்படிப் பிணையாவான்?

பருத்திக் குடுக்கையின் இயல்பைச் சொல்லும் சூத்திரம் பின்வருமாறு:

> அரிதிற் பெயக்கொண்டு அப்பொருள் தான்பிறர்க்கு
> எளிதீ வில்லது பருத்திக் குண்டிகை.

[அரிதின்-கஷ்டத்தோடு. பெய-செலுத்த. எளிது ஈவு இல்லது-எளிதிலே கொடுக்கும் இயல்பு இல்லாதது.]

முடத்தெங்கு வாத்தியார் ஒரு வகை. கண்ணபிரானைப் பற்றி ஒரு கதை கேட்டிருக்கிறோம். சத்தியபாமைக்காக அப்பெருமான் பாரிஜாத மரம் கொணர்ந்து அத்தேவி வீட்டில் நட்டானாம். அது வளைந்து வளர்ந்து ருக்மிணியின் வீட்டில் பூவை உதிர்த்ததாம். முடத்தெங்கு என்பதற்கு வளைந்த தென்ன மரம் என்று பொருள். அதுவும் வேர்

படர்ந்த இடம் ஒன்றானால், தேங்காய் விழும் இடம் வேறாக இருக்கும். ஒருவன் தன் வீட்டுப் புறக்கடையில் மரத்தை வைத்துத் தண்ணீரூற்றிக் காப்பாற்றினால் முடத் தெங்கு அடுத்த வீட்டுப் புறக்கடையில் தலையை நீட்டும். அதிலிருந்து விழும் மட்டையோ தேங்காயோ அடுத்த வீட்டுச் சொத்தாகப் போய்விடும்.

எவ்வளவோ பயபக்தியோடு வந்து வழிபடும் மாணாக்கரைப் புறக்கணித்து விட்டு வருவார் போவோருக் கெல்லாம் உபதேசம் செய்யும் வாத்தியார் ஐயாவை முடத்தெங் கென்று சொல்கிறார்கள்.

> பல்வகை உதவி வழிபடு பண்பின்
> அல்லோர்க்கு அளிக்கும் அதுமுடத் தெங்கே.

வழிபடும் மாணாக்கன் அறிவுப் பசியோடு ஏமாந்து நிற்கச் செய்வது பாவம் அல்லவா?

போலி வாத்தியாரின் லட்சணங்களைத் தொகுத்து இலக்கண நூல் சொல்வதைப் பாருங்கள்:

> மொழிகுணம் இன்மையும் இழிகுண இயல்பும்
> அழுக்காறு அவாவஞ்சம் அச்சம் ஆடலும்
> கழற்குடம் மடற்பனை பருத்திக் குண்டிகை
> முடத்தெங்கு ஒப்பென முரண்கொள் சிந்தையும்
> உடையோர் இலர்ஆ சிரியர்ஆ குதலே

[அச்சம் ஆடல்-பயம் உண்டாகப் பேசுதல்]

'இந்தக் குணங்கள் கெட்ட வாத்தியார்களுக்கு உரியன' என்று சொல்லவில்லை; இந்த லட்சணங்களை உடையவர்கள், ஆசிரியர் ஆகலாம் என்ற சிந்தனைக்கே உட்படாதவர்களாம். ஆசிரியர் ஆகுதல் அவர்பால் இல்லையென்று சாதுரியமாகச் சொல்கிறது சூத்திரம்.

எல்லாவற்றையும் பார்க்கும்போது 'வாத்தியார் ஐயா

என்ற பட்டம் சுலபமாகக் கிடைக்கக் கூடியதென்று தெரிய வில்லை.

## 7

வாத்தியார் ஐயா தொழிலாளி அல்ல. தமிழர் கொள்கைப்படி அவர் ஒரு தாதா; வள்ளல். மாணாக்கர்கள் இரவலர். திருவள்ளுவர், "பணக்காரருக்கு முன்னால் நின்று யாசிக்கும் இரவலரைப் போல ஆசிரியரிடம் கல்வியை யாசித்து ஏங்கி நின்று கற்றவர் மேன்மை அடைவார்; அப்படிக் கல்லாதவர் கடைப்பட்டவர்" என்று சொல்கிறார். பாடம் சொல்லிக் கொடுப்பது ஒரு தொழில் அல்ல; கலை. அது ஒரு தியாகம். அழியும் பொருட்செல்வத்தை வழங்கும் வள்ளலைக் காட்டிலும் அழியாத கல்விச்செல்வத்தை வழங்குப் வள்ளல் பெரியவர்; சமுதாயத்தின் கொழுந்து அவர். அவர் பாடம் சொல்வதை "ஈதல்" என்றே இலக்கணக்காரர் சொல்கிறார்.

'கல்விக் கொடை எப்படி நிகழ வேண்டும்?' என்பதை இலக்கணக்காரர்கள் வகுத்திருக்கிறார்கள். வாத்தியார் ஐயா பாடம் சொல்லிக் கொடுக்கும் முறைதான் அது. பாடம் சொல்லும் காலம் ஏற்றதாக இருக்க வேண்டும். மூளையைப் பொறுத்த விஷயம். ஆகையால் இயற்கையின் சார்பினால் சோர்வோ, துன்பமோ இல்லாத காலம் நன்மை பயக்கும். சந்தையிரைச்சலுள்ள இடத்திற்கு நடுவே பள்ளிக் கூடம் இருக்கலாமா? கல்விக்கு மன ஒருமைப்பாடு அவசியம். கடவுளைக் கும்பிடும் கோயில் நல்ல இடத்தில் அமைந்திருப் பதைப் போலக் கல்விச் சாலையும் நல்ல இடத்தில் இருக்க வேண்டும். நல்ல இடத்தைத் தேர்ந்தெடுப்பது அந்தக் காலத்தில் வாத்தியார் கடமை.

பழங் காலத்து வாத்தியார் ஐயா பாடம் சொல்லத் தொடங்குகிறார்.

நல்ல ஆசனத்தில் அமர்கிறார். கடவுளுக்கு முதலில் ஆசனத்தைச் சமர்ப்பிக்கிறோம் அல்லவா? பிறகு அவர் தெய்வத்தைத் தியானித்துக் கொள்கிறார். தமக்கும் பிறருக்கும் நல்ல பயனை உண்டாக்கும் ஒரு கைங்கரியத்தைத் தொடங்குபவர் கிரமமாகத் தெய்வ வணக்கத்தோடு ஆரம்பிப்பதுதானே நல்லது?

பாடம் சொல்லும்போது எந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லப் போகிறோம், எப்படிச் சொல்ல வேண்டும் என்று வாத்தியார் ஐயா திட்டம் பண்ணிக் கொள்வார். சொல்லுகிற விஷயம், முறை இந்த இரண்டையும் இக்காலத்தில் கூட வாத்தியார் மேலதிகாரிக்குக் காட்டுவதற்காக எழுதி வைத்துக் கொள்கிறார்கள். உரைக்க வேண்டிய பொருளை உள்ளத்தில் அமைத்துக் கொண்டு பாடம் சொல்ல ஆரம்பிப்பார். அவருக்கு அதில் சந்தேகம் இராது; அதனால் விடுவிடுவென்று சொல்லிக்கொண்டு போகலாம். அப்படிச் செய்தால் மாணாக்கர்களுக்குப் புரிவது கஷ்டம். ஆகையால் விரையாமல் பாடம் சொல்வார். மாணாக்கர்களெல்லாம் ஒரே மாதிரியான அறிவு படைத்தவர்களாக இருக்க மாட்டார்கள். சிலர் தீவிரமான அறிவுடையவர்களாக இருக்கக் கூடும்; சிலர் சற்று மந்தமாக இருக்கலாம். பாடம் சொன்னவுடன் கிரகிக்கவில்லையே என்று வாத்தியார் ஐயா கோபித்துக்கொள்ள மாட்டார். பாடம் சொல்வதிலே அவருக்கு ஓர் இன்பம் உண்டு. ஆகையால் விருப்பத்தோடு சொல்வார். மலரைப் போன்ற பண்புடைய அவர் பாடம் கேட்கிறவன் எப்படி விஷயத்தை ஏற்றுக்கொள்கிறான் என்பதை ஆசிரியர் நன்றாகக் கவனிப்பார். அவன் தகுதிக்கு ஏற்றபடி, அவனுக்கு எப்படிச் சொன்னால் விளங்கும் என்பதை யோசித்துப் பாடஞ் சொல்வார். அவன் சக்திக்கு எவ்வளவு சொல்லித் தந்தால் போதுமோ அந்த அளவையும் தெரிந்து அவன் உள்ளம் கொள்ளும்படி சொல்வார். சொல்

லும்போது மனம் கோணாமல் நடுநிலையில் நின்று வித்தியாசமாகிய தொண்டைச் செய்து வாழ்வார்.

இந்த மாதிரியான வாத்தியார் ஐயா இன்று தமிழ் நாட்டில் இருந்தால்,—அதைப்பற்றி இப்போது நினைத்து என்ன பிரயோசனம்! பழைய காலத்தில்தான் இப்படி இருந்தார்களென்பது என்ன நிச்சயம்? இருந்தார்களோ, இல்லையோ, வாத்தியார் ஐயா இன்னபடி இருக்க வேண்டும் என்று ஒரு திட்டம் வகுத்திருக்கிறார்கள்: அவ்வாறு நடக்க முயன்றும் இருப்பார்கள். அந்தத் திட்டத்தின் உயர்வையும் அதை அமைத்துக் கொண்டவர்களின் வாழ்க்கை லட்சியத்தையும் நாம் போற்றிப் பாராட்ட வேண்டும். நல்லதை நல்லதென்று சொல்வதில் லோபத்தனம் எதற்கு?

# புறநானூறும் சரித்திரமும்

## முன்னுரை

'இந்தியர்களிடம் சரித்திர உணர்ச்சி இல்லை' என்ற குறைபாடு மேல்நாட்டினர் பலரால் அவ்வப்பொழுது சொல்லப்படுவதுண்டு. அல்பெருனி என்னும் அராபியர் வெளிப் படையாக அப்படியே எழுதி யிருக்கிறார். மெக்கன்ஸிதுரை என்பவர் பிற்காலத்தில் தமிழ் நாட்டிலும் தெலுங்கு தேசத்திலும் கர்ண பரம்பரையாக வழங்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுவித்தவர். அவர் தொகுத்த கையெழுத்துப் பிரதிகள் இன்று சென்னைச் சர்வகலா சாலையினரின் ஆராய்ச்சிக்கு உட்பட்டிருக்கின்றன. அந்த மெக்கன்ஸி துரையும் இந்நாட்டினருக்குச் சரித்திர உணர்ச்சி இல்லை என்று சொல்லியிருக்கிறார்.

இந்தக் குறைபாடு ஓரளவு உண்மையானதே; பிற்காலத்தில், நம் நாட்டின் பழைய மரபுகள் சீர்குலைந்து கலை இலக்கியம் முதலிய செல்வங்களையே இழக்கும் நிலை வந்த காலத்தில், நாம் எல்லா உணர்ச்சிகளையும் இழந்து விட்டோம். சரித்திர உணர்ச்சி ஒன்றுதானா? தமிழர்கள் தங்கள் பண்டை இலக்கியங்கள் பலவற்றை இழந்தனர். இசை நாடகக்கலைகளை இழந்தனர். தங்கள் வாழ்க்கையினையே இழந்துவிட்டார்கள். ஆதலால் மெக்கன்ஸி துரையவர்கள் சொல்வதில் உண்மை இருக்கிறதென்று சொல்லலாம்.

ஆனால், எந்தக் காலத்திலும் இந்தியர்கள் அப்படி இருந்ததில்லை; தமிழர்களோ கலைகளையும் இலக்கியத்தையும் வாழ்க்கையின் ஜீவநாடியாகக் கருதி ஓம்பி வந்தனர். வாழ்க்கையையும் கற்பனையையும் பிணைத்து உடம்பையும் உள்ளத்தையும் உயிரையும் வளர்த்து வந்தனர். வாழ்க்கையின் உண்மைகளையெல்லாம் பகுத்துப் பகுத்துப் புறப் பொருளாக வைத்துப் போற்றினர். இல்லது இனியது என்று சொல்லப்படும் நிகழ்ச்சிகளை அகப்பொருளென வைத்து ஆயிரமாயிரமாகக் கவி பாடிக் குவித்தனர். அவர்களுடைய புறப்பொருளுக்கு உடலாக அமைந்த செய்திகள் யாவும் உலகியல் நிகழ்ச்சிகளே; அவைகளே சரித்திரம்.

தமிழில் இப்போது கிடைக்கும் பழைய நூல்களுக்குள் கடைச்சங்க நூல்களாகக் கருதப்பெறும் பத்துப்பாட்டு எட்டுத்தொகை என்பவற்றுள் புறப்பொருள்பற்றிய பனுவல்கள் யாவும் பண்டைத் தமிழ்நாட்டுச் சரித்திரத்துக்கு அடிப்படையான மூலப்பொருள்களாகும். அவற்றைப் பாடினவர்களுக்கும், அப்பாடல்களைப் போற்றிப் பாதுகாத்தவர்களுக்கும் சரித்திர உணர்ச்சி இல்லையென்று சொல்லுதல் முறையாகுமா? ஊர் பேர் இல்லாமல் புறப்பொருளமைதியுடைய பாடல்களாகப் பாடிச் சென்றிருந்தால் அந்நவ்விசைச் சான்

றோர்களுக்கு ஒரு குறைவும் வந்திராது. ஆனால் அவர்கள் அங்ஙனம் செய்திலர். புறத்துறைப் பாடல்களிற் பெரும்பாலான உண்மை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்தனவென்றே சொல்லலாம். பண்டைத் தமிழர் சரித்திரமென்னும் கோயிலுக்கு அவற்றில் ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு செங்கல் போன்றதாம். அகத்துறை அமைந்த பாடல்களிலும் சார்த்துவகையால் சங்கத்துச் சான்றோர்கள் பதித்து வைத்த சரித்திரச் செய்திகள் பல உண்டு. பரணரென்னும் நல்லிசைப் புலவர் தாம் பாடும் பாடல்களிலெல்லாம் சரித்திரத் துணுக்குகளைப் பொருத்தியமைக்கும் இயல்புடையவர். அகநானூறு முதலிய நூல்களில் அவர் செய்யுட்களைப் பார்த்தால் அவ்வுண்மை வெளியாகும்.

புறப்பொருள் அமைதியையுடைய சங்கப் பாடல்களுள், பத்துப்பாட்டிலுள்ள பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன சரித்திரச் செய்திகள் பலவற்றை நமக்கு அறிவிக்கின்றன. எட்டுத் தொகையுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்து; தனியே சேர அரசர்களைப் பாடிய பாடல்களையுடையது, ஆதலால் சேரர் சரித்திரத்திற்குச் சிறந்த கருவியாக இருக்கிறது. புறநானூறோ தமிழ்நாட்டுச் சரித்திரத்தை அறிவதற்கு இன்றியமையாததாய்ப் பெரிய சரித்திரக் கருவூலமாய் விளங்குகிறது. இதனைத் தேடிக் கண்டுபிடித்துத் தமிழுலகுக்கு அளித்த என்னுடைய ஆசிரியப் பெருந்தகையாகிய **மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள்**, "பண்டைக்காலத்தே இத் தமிழ் நாட்டில் இருந்த சேர சோழ பாண்டியர்களாகிய முடியுடை வேந்தர், சிற்றரசர், அமைச்சர், சேனைத் தலைவர், வீரர் முதலிய பலருடைய சரித்திரங்களும், கடையெழு வள்ளல்களின் சரித்திரங்களும், கடைச்சங்கப் புலவர் பலருடைய

வரலாறுகளும், அக்காலத்தாருடைய நடை முதலியனவும், இன்னும் பற்பலவும் இந்நூலால் நன்கு புலப்படும்'' என்று எழுதி யிருக்கிறார்கள்.

## புறநானூற்றின் காலம்

புறநானூறு கடைச்சங்க காலத்துத் தொகுக்கப் பெற்ற நூல். ஆயினும் இதன்கண் உள்ள பாடல்கள் அனைத்தும் ஒரே காலத்தில் பாடப்பெற்றன அல்ல; பல நூற்றாண்டு களாகப் பாடப் பெற்றவற்றின் தொகுதி என்று சொல்ல வேண்டும். சேர சோழ பாண்டிய மன்னர்கள் பலரைப் பற்றிய பாடல்கள் இதில் இருக்கின்றன. கி. பி. இரண்டா வது நூற்றாண்டில் வாழ்ந்த ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன் என்னும் அரசனே சிலப்பதிகாரத்தில் வரும் நெடுஞ்செழியனென்று தெரிகின்றது. கடைச்சங்கத்தின் இறுதிக்காலம் அது. அவனுக்கு முன்னரே இருந்த கரிகாலன் முதலியோருடைய காலத்தில் எழுந்த பாடல்களையும் இந் நூலிற் காணலாம்.

இறையனா ரகப்பொருளுரையினால் தலைச்சங்கத்துப் புலவர்களில் முரஞ்சியூர் முடிநாகராயரென்பவரும் ஒருவர் என்று தெரிய வருகிறது. தலைச்சங்க காலம் இன்னதென்று வரையறுக்க இயலாவிடினும், மிகப் பழங்காலத்துப் புலவர் களைச் சேர்ந்தவர் அவர் என்று தெரிந்துகொள்ளும் அளவில் நாம் அச்செய்தியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். புறநானூற்றில் கடவுள் வணக்கத்துக்கு அடுத்தபடி உள்ள முதல் பாட்டு அவருடையதேயாகும். அதில் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனை முடிநாகராயர் பாடி யிருக்கிறார். உதியஞ் சேரலாதன் என்ற அச்சேர அரசன் பாரதப் போரில் வீரர்களுக்குச் சோறு அளித்தான் என்று புலவர் பாடுகிறார். பெருஞ்சோறு என்பது பலருக்கு ஒரே சமயத்தில் இடும் அன்னதானத்துக்குப் பெயர்.

அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்

என்று வருகிறது பாட்டு. இவ்வாறு பெருஞ்சோறு அளித்த சிறப்பால் அந்தச் சேரனுக்கு, பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனென்னும் பெயர் வழங்கலாயிற்று. பாண்டவர் படைக்கும் கௌரவர் படைக்கும் ஒருங்கே அவன் சோறு அளித்தானாம். வடநாடு முழுவதும் போர்க்களரியாகி அந்நாட்டு மக்கள் போரில் ஈடுபட்டு நின்றபொழுது இந்நாட்டிலிருந்து அரிசி சென்றதென்றும், அங்ஙனம் அரிசியைச் சேகரித்து அனுப்பியவன் சேரனென்றும் கொள்வதில் பிழையொன்றும் இல்லை.

366-ஆம் புறப்பாட்டு, 'தருமபுத்திரனைக் கோதமனார் பாடியது' என்ற குறிப்புடன் இருக்கிறது. "அறவோன் மகனே" என்று புலவர் பாட்டுடைத் தலைவனை விளிக்கிறார். இதனுள் கூறப்பெற்ற தருமபுத்திரன் பஞ்சபாண்டவர்களுள் மூத்தவனாகிய தருமபுத்திரனோ, அன்றிப் பாரத காலத்துக்குப் பிறகு அறவோன் மகனாகிய அவனுடைய இயல்புகளில் ஈடுபட்டு அவன் பெயரை வைத்துக்கொண்ட தமிழ்நாட்டரசனோ தெரியவில்லை. அவ்வரசன் பாரத காலத்தை அடுத்து இருந்தவன் என்று கொள்வதற்கு இடமுண்டு.

தலைச்சங்கப் புலவர்களுள் வான்மீகனார் என்பவர் ஒருவர். புறநானூற்றில் 358-ஆம் பாட்டை இயற்றியவர் வான்மீகியார் என்பவர். 'உலகத்தையும் தவத்தையும் தனித்தனியே இரண்டு தட்டில் வைத்து நிறுத்தால் தவத்திற்கடுகளவிற்குக் கூடச் சமானமாக உலகம் நில்லாது' என்று தவத்தைப் பாராட்டுகிறார் அவர்.

வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக்கு
ஐயவி யனைத்தும் ஆற்றாது.

தவம் புரிந்து இராமாயணமாகிய ஆதி காவியத்தை வடமொழியில் இயற்றிய வான்மீகி முனிவரை நாம் அறிவோம். அம்முனிவர் பெயரும், தவத்தைப் பாராட்டும் இயல்பும் உடைய இப்புலவர் முரஞ்சியூர் முடிநாகராயரைப் போலப் பழந்தமிழ்ப் புலவர் வரிசையில் சேர்ந்தவரென்றே தோன்றுகிறது.

மார்க்கண்டேயரைப்பற்றிய வரலாறுகள் தமிழ்நாட்டிலே தான் அதிகமாக வழங்குகின்றன. தமிழ்நாட்டுத் திருக்கடவூரில் மார்க்கண்டேயர் காலனை வென்ற கதை புராணமாக வழங்கி வருகிறது. புராண வரலாறு முழுவதையும் நம்பாவிடினும், அப்பெரியார் தமிழ் நாட்டினர் என்று கருதுவதற்கு ஒரு சிறு ஆதாரம் புறநானூற்றில் இருக்கிறது. தமிழ் நூல்களில் மார்க்கண்டேயனாரென்ற புலவரைப்பற்றிய சில குறிப்புகள் கிடைக்கின்றன. அவர் இயற்றி நூல் 'தலையாய வோத்து,' படிக்கவேண்டிய நூல்களில் முதல் வரிசையில் உள்ளதென்று நச்சினார்க்கினியர் சொல்கிறார்.

மார்க்கண்டேயனார் காஞ்சி என்ற ஒரு நூற்பெயரும் ஒருபாடலும் யாப்பருங்கல விருத்தியில் மேற்கோளாக வந்திருக்கின்றன. புறநானூற்றில் மார்க்கண்டேயனார் என்னும் புலவர் பாடியதாக உள்ள ஒரே ஒரு பாடலும் (365) பெருங் காஞ்சி யென்னும் துறையைச் சார்ந்தது. மக்கள் அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கு உறுதிப் பொருளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். அவற்றைத் தெரிவதற்குரிய நூல்களை ஆராய வேண்டுமென்பது நம்மனோர் கொள்கை. அந்நான்கு பொருள்களுள்ளும் வீட்டுநெறி பற்றிய நூல்கள் சிறந்தன.

ஆதலின் தலையாய ஓத்தென்று நச்சினார்க்கினியரால் பாராட்டப் பெறும் மார்க்கண்டேயனார் நூல் உலக நிலையாமையை அறிவுறுத்தி வீட்டு நெறியைக் கூறுவதாக இருத்

தல் கூடும். காஞ்சி யென்னும் புறத்திணை உலக நிலையா மையைக் கூறும் செய்திகளை உடையது. நச்சினார்க்கினியர் கூறும் தலையாய வோத்து, மார்க்கண்டேயனார் காஞ்சி புறநானூற்றிலுள்ள பெருங்காஞ்சிஎன்னும் மூன்றும் ஓரினப் பாடல்களேயாதலால் இம்மூன்றன் ஆசிரியரும் ஒருவரே என்று கொள்ளலாம். தவம் புரிந்த சிவபக்தராகப் புராணத் தில் கூறப் பெறும் மார்க்கண்டேயரும், நிலையாமையை அறிவுறுத்தி வீட்டு நெறி காட்டும் மார்க்கண்டேயரும் ஒருவரேயோ என்ற ஐயத்தை ஆராய்ச்சியாளருக்கு விட்டு விடுகிறேன்.

## பழஞ் செய்திகள்

புறநானூற்றில் நேரே ஒரு நிகழ்ச்சியை அது நிகழ்ந்த காலத்திலேயே பாடிய பாடல்களே பெரும்பாலும் உள்ளன. அப்பாடல்களிடையே முன் நிகழ்ந்த சில பழஞ் செய்திகள் சார்த்து வகையாற் சொல்லப் பெறுகின்றன. அவை தமிழ் நாட்டுப் பழஞ்சரித காலத்தைச் சார்ந்தவை.

தமிழ் நாட்டின் தென் பகுதியில் குமரியாறு, பஃறுளி யாறு என்னும் ஆறுகளும் குமரியென்னும் மலையும் ஒரு காலத்தில் இருந்தன. தலைச் சங்கமும் இடைச் சங்கமும் இருந்த காலத்தில் அப்பகுதி இருந்தது என்பர். பிற்காலத் தில் அத் தென்பகுதி கடலாற் கொள்ளப்பட்டது.

அந்தப் பழங் காலத்தில் கடல்வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்ற அரசன் ஒருவன் இருந்தான். அவனுடைய பெருமையை மதுரைக் காஞ்சியும், சிலப்பதிகாரமும் கூறுகின்றன. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெரு வழுதியை வாழ்த்த வந்த நெட்டிமையாரென்னும் புலவர், "நீ உன்னுடைய முன்னோனாகிய நெடியோனுக்குரிய பஃறுளியாற்று மணலைக் காட்டிலும் பல காலம் வாழ்வா யாக" என்று வாழ்த்துகிறார்.

தம்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே. (9)

சோழர்களுள் தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன் என்னும் ஒருவனைப் பற்றிய பழஞ் செய்தி ஒன்று வருகிறது. ஆகாயத்தில் தொங்கிய மதிலொடு கூடிய நகரத்தை எரிந்து வெற்றிகொண்டான் அச்சோழன் என்று தெரிகிறது. பிற்காலத்தில், அவுணருக்குரிய மதிலை அழித் தானென்று இச்செயலை மிகையாகக் கூறின புலவரும் உண்டு. அக்காலத்தில் ஏதோ உபாயத்தால், வளைத்த மலை யைச் சார ஒரு மதிலைத் தொங்கச் செய்து அதன் கண்ணே பிறர் புகற்கரிய நிலையில் இருந்த பகைவரை வேறொருபா யத்தால் மதிலை யழித்து, வென்ற வீரச் செயல் நாளடை வில் இப்படி மாறி யிருத்தல்கூடும். சிபிச் சக்கரவர்த்தியைப் பல இடங்களில் சோழர்களின் முன்னோன் என்று புறநானூற்றுப் பாடல்கள் சொல்கின்றன. கடலில் சென்ற நாவாயை அலைத்த காற்றை அடக்கிய சோழன் ஒருவனை 'வளிதொழி லாண்ட உரவோன்' என்று வெண்ணிக் குயத்தியார் குறிக்கின்றார்.

சேரமானுடைய உறவினனும் ஏழு வள்ளல்களில் ஒருவனுமாகிய அதிகமான் நெடுமானஞ்சியைப் பாடும் ஒரு புலவர் அவனுடைய முன்னோர்கள் இந்நாட்டிற்குக் கரும்பைக் கொணர்ந்தனரென்று சொல்கிறார்.

இவற்றையன்றி, மௌரிய மன்னர் இந்நாட்டுக்கு வரும் போது மலைகளைப் பிளந்து வழி செய்தனரென்ற பழஞ்செய்தியை,

விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைந்த
உலக விடைகழி யறைவாய் (175)

என்று ஒரு புலவர் பாடுகிறார்.

இருங்கோவேள் என்னும் சிற்றரசன் ஒருவனைப்பற்றிச் சொல்லும் கபிலர் அவனைப் 'புலிகடி மாஅல்' என்று விளிக்கின்றார். ஹொய்ஸளரென்னும் வமிசத்தைச் சேர்த்தவன் அவன். தபங்க ரென்னும் முனிவர் ஒரு காட்டில் தவம் செய்கையில் ஒரு புலி அவர்மேற் பாய்தற்கு நெருங்க, அது கண்ட அம்முனிவர் அங்கு வேட்டையாடி வந்த சளனென்னும் யாதவ அரசனை நோக்கி 'ஹொய்ஸள' என்று கூறினாராம். அவன் அப்புலியைத் தன் அம்பால் எய்து கடிந்தமையால் ஹொய்ஸளனென்றும், அவன் வழி வந்தோர் ஹொய்ஸளரென்றும் வழங்கப்பட்டனர்.

## பாடப்பட்டோர்

புறநானூற்றில் பாடப்பட்டவர்களிற் பெரும்பாலோர் சேர சோழ பாண்டியர்களே; பாரி, காரி, ஆய் முதலிய சிற்றரசர்களும், சில படைத் தலைவர்களும், சில வேளாளர்களும், அந்தணர் சிலரும் புலவராற் புகழப் பெறுகின்றனர். இரண்டாவது பாட்டு முதல் பதினாறாம் பாட்டு வரையில் சேரர், பாண்டியர், சோழர் என்ற முறையில் பாடல்கள் அமைந்திருக்கின்றன.

அதன்பின் இம்மூவரும் ஒரு முறையின்றிப் பாடப்பெறுகின்றனர்; சோழர்களும் பாண்டியர்களுமே பல பாடல்களாற் புகழப்படுகின்றனர். முதல் 85 பாடல்கள் முடிமன்னர்களாகிய இம்மூவரின் புகழைச் சொல்வன. அதன்பின் அதிகமான், பாரி, காரி, ஆய், பேகன், ஓரி முதலிய வள்ளல்களும், நாஞ்சில் வள்ளுவன், பிட்டங்கொற்றன் முதலிய வீரர்களும், பல வேளாளர்களும் புகழப் பெறுகின்றனர். 182 முதல் 185 பாடல்கள்வரை சில மன்னர்கள் தாமே இயற்றிய பாடல் உள்ளன. 186 முதல் 195 வரையில் பொது வகையில் அமைந்த தனிப் பாடல்களும், 196 முதல் 211 வரையில் பரிசில் துறைபற்றிய பாடல்களும், 212 முதல் 223 வரையில் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த செயலைப்

பற்றிய பாடல்களும் அமைந்திருக்கின்றன. 217 முதல் 256 முடியக் கையறு நிலையும் பிறவுமாகிய அவலச்சுவை அமைந்த துறைப் பாடல்களையும், 257 முதல் ஒரு வரை யறையின்றிப் பல புறத்துறை யமைந்த செய்யுட்களையும் காணலாம். இடையிடையே பாண் பாட்டு, பாடாண்டிணை, காஞ்சித்திணை பற்றிய பாடல்கள் ஒருசேரக் காணப்படும். பொதுவாகப் புறநானூற்றுப் பாடல்களின் தொகுப்புக்கு உரிய முறை இன்னதுதான் என்று வரையறுத்துச் சொல்ல இயலவில்லை; ஆகவே அந்த முறைபற்றிச் சரித்திரத்தை உணர்ந்து கொள்ளல் இயலாது.

## அரசியல்—அரசன்

தமிழர் அரசியலில் நடுவண் இருந்து திகழ்பவன் அரசன் தான். அரசன் இல்லாத நாட்டை அவர்கள் கற்பனை செய்து பார்த்தும் இருக்க மாட்டார்கள். நாட்டை உடலாக வும் அரசனை அதன் உயிராகவும் எண்ணி அவனுக்குச் சிறப்புச் செய்தார்கள்.

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால், யான் உயிர் என்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே

என்று மோசிகீரனார் பாடுகிறார். அரசன் அறிவு, அன்பு, ஆற்றல் என்பன உடையவனா யிருத்தல் வேண்டும். அறிவினால் நாடு காவலுக்குரியன ஓர்ந்து முறை தவறாது காப்பாற்றுதலும், அன்பினால் குடிமக்கள் நலன் கருதி ஆவன செய்தலும் இரவலருக்கு ஈதலும், ஆற்றலினால் பகையரசரால் வரும் ஏதத்தைத் தடுத்தலும் போரில் வெற்றி பெருதலும் அவன்பால் அமைகின்றன.

கிள்ளிவளவனை மாறோக்கத்து நப்பசலையார் என்னும் பெண் புலவர் பாடுகிறார்: ''கிள்ளிவளவனே,

அரசர்களுக்கு வேண்டிய ஈகை, அடுதல், நீதி செலுத்துதல் என்பவை நின் பரம்பரைக்கே சிறப்பாக உரியவை; வழி வழி வந்த பிதுரார்ஜித சொத்து. ஆகவே நீயாகச் சம்பாதித்தது ஒன்றும் இல்லை'' என்று சொல்லுகிறார். அவனைப் புகழாமல் புகழும் முறை பாராட்டுதற்குரியது.

புறவின் அல்லல் சொல்லிய கறையடி
யானை வான்மருப் பெறிந்த வெண்கடைக்
கோனிறை துலாஅம் புக்கோன் மருக
ஈதல்நின் புகழும் அன்றே.

சிபிச்சக்கரவர்த்தி தன் உடம்பையே அறுத்துக் கொடுத்தான்; கடைசியில் தானே தராசுத் தட்டில் ஏறி உட்கார்ந்து கொண்டான். உடலைக் காட்டிலும் கொடுக்கக் கூடிய வேறு சிறந்த பொருள் என்ன இருக்கிறது? நீ கொடுக்கிறாய் என்றால் இது சிபியிலிருந்து வழிவழி வந்த பழக்கம்.

பகைவரைக் கொன்று வெற்றி பெறுவது உனக்குச் சொந்தமா? அதுவும் இல்லை.

சார்தல்
ஒன்னா ருட்குந் துன்னருங் கடுந்திறல்
தூங்கெயில் எறிந்தநின் ஊங்கணோர் நினைப்பின்
அடுதல்நின் புகழு மன்றே.

உன்னுடைய முன்னோர்கள் வீரம் சாமான்யமானதா? ஆகாசத்தில் தொங்கிக் கொண்டிருந்த மதிலை அழித்து வென்றார்கள்; வீரம் உங்கள் பரம்பரையினருடன் பிறந்தது. ஆகையால் அதையும் உனக்குப் புகழாகச் சொல்லக் கூடாது.

முறைமை? அது தான் நியாயம் வழங்குதல்.

கெடுவின்று
மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம்நின்று நிலையிற் றாகலின், அதனால்
முறைமைநின் புகழும் அன்றே.

கெடுதலின்றி வீரம் பொருந்திய சோழர்களுக்குரிய உறையூரில் அறங்கூரவையத்தில் தர்மம் எப்போதும் நின்று நிலவுகிறது. அப்படியிருக்க நீ இன்று புதிதாக முறைமை செய்கிறாய் என்று சொல்லலாமா? அதுவும் உனக்குரிய சிறப்பன்று.

> கண்ணார் கண்ணிக் கலிமான் வளவ
> யாங்கனம் மொழிகோ யானே!

கிள்ளி வளவனே! உன் புகழை எவ்வாறு நான் வரையறுத்துத் தனியே எடுத்துச் சொல்ல முடியும்?

இப்படிக் கேட்கிறார் அந்த அறிவுடை நங்கையாகிய நப்பசலையார். ஈகையும், வீரமும், நீதி வழங்கும் அறிவும் மன்னனுக்குரிய சிறப்புக்களுள் தலைமையானவை என்ற செய்தியை அப்பெண் புலவர் இதன் வாயிலாகத் தெரிவித்திருக்கிறார்.

அரசனுடைய இலக்கணங்களுள் அவனுடைய உயர் குணங்கள் முக்கியமானவையே. அவற்றோடு நாடு, நகர், ஆறு, மலை முதலிய இயற்கை உறுப்புகளும், தார், கொடி, முரசு முதலியவையும், மந்திரி, மறவர் முதலிய சுற்றத்தினரும் சேர்ந்தால்தான் அரசு உண்டாகும். அரசன் உயிரானால் நாடு உடல்; ஏனையவை அவ்வுடலின் உறுப்புக்கள்.

## நாடு

தமிழருடைய பூகோள அறிவு புறநானூற்றால் ஓரளவு தெரிகிறது. அந்தர் மத்திய பாதலமென்ற புராணப் பகுப்பை, "முப்புண ரடுக்கிய முறை" என்று குறிப்பிடுவர் பண்டைத் தமிழர். இந்த மூன்று உலகங்களில் இவ்வுலகம், "முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப், பரந்துபட்ட வியன் ஞாலம்" என்பதை உணர்வர். பாரத நாட்டின் எல்லையும் அவர்களுக்குத் தெரியும்.

"தென்குமரி வடபெருங்கல், குணகுடகடலாவெல்லை" யாகிய நாட்டை ஒருவன் ஆள்வதுதான் அவர்களுடைய ஆசைக்கு எல்லை. இந்த எல்லைக்குள் அடங்கிய நாட்டை நாவலந்தீவென்று வழங்குவரெனப் பிற நூலால் தெரிய வருகின்றது. தென்குமரி என்பதால் இப்போதுள்ள குமரி முனையையன்றிச் சில பழைய பாடல்களில் குமரியாற்றை யும் குறிப்பதுண்டு. வடபெருங்கல்லை, 'பனிபடு நெடுவரை' என்று சொல்வதனால் இமாசலத்தைத்தான் குறிக்கின்றன ரென்பதில் சந்தேகம் வேண்டாம். அதுமாத்திரம் அன்று; இன்று கிஞ்சின்ஜிங்கா என்று நாம் ஆங்கிலப் பள்ளிக்கூடத் தில் கற்றுக்கொள்ளும் மழலைப் பெயரின் மூல உருவமாகிய காஞ்சன சிருங்கம் என்னும் ஒரு பகுதி, அவ்விமய மலையில் உண்டென்பதையும் தமிழர் தெரிந்துகொண்டிருக்கின்றனர். இல்லாவிட்டால் "பொற்கோட்டிமயம்", "பொன்படு நெடுங்கோட்டிமயம்" என்றெல்லாம் சொல்ல வராதே? அந்த இமயச் சாரலில் முனிவர்கள் பலர் வாழ்வார்களாம்.

அம்முனிவர்கள் அக்கினி காரியம் செய்யும்போது பெண் மான்களெல்லாம் அந்த ஆசிரமங்களில் சிறிதும் அச்ச மின்றித் தூங்குமாம். புலி முதலிய விலங்குகள் 'முத்தீ விளக்குக்'குப் பயந்து வராமற் போகும். இமயச் சாரலில் கவரிமான்கள் அதிகமென்று தமிழர் அறிந்திருக்கிறார்கள். ஒரு சேரன் இமயமளவும் சென்று தன்னுடைய விற் கொடியை அதன் மேலே பொறித்துவிட்டு வந்தான்.

இன்று நாம் வங்காளக்குடாக் கடலென்று வழங்குவ தாகிய குண கடலைப்பற்றி ஒரு புதுமை புறநானூற்றிலும் வேறு நூல்களிலும் காணப்படுகிறது. அதைத் தொடுகடல் என்று சொல்லி யிருக்கிறார்கள். "கரைபொருதொடு கடல்" என்பர். அதற்குத் தோண்டிய கடல் என்பது பொருள். உரையாசிரியர், "சகரரால் தோண்டப்பட்ட சாகரம்" என்று எழுதுகிறார். இது புதிதாகத் தோண்டிய கடலாகிவிடவே, மேல்கடலாகிய அரபிக்கடல் "குடாஅ துதொன்றுமுதிர்

பெளவம்'' என்று பழம் பெருமையை அடைந்து விட்டது. இந்த இரண்டு கடல்களையும் இப்படி வேறுபடுத்திச் சொல்வதற்கு ஆதாரமான நிகழ்ச்சியொன்று மிகப் பழங்காலத்தில் நிகழ்ந்திருக்க கூடும். இமய மலையே புதியதாக உண்டானது என்று,முன்னைப் பழம்பொருட்கும்முன்னைப்பழம்பொருள் ஆராயும் நிலவியல் நூல் வல்லார் (Geologists) சொல்கிறார்கள். அது வியப்பாகாமல் அறிவொடு பொருந்திய செய்தியானால், இந்தத் தொடுகடற் கதைக்கும் தக்க காரணம் இருக்குமென்று கொள்வதும் பொருத்தமேயாகும்.

பாரத தேசத்துக்குள்ளே தமிழ் நாடு இருக்கிறது; இந்த நாட்டைத் தமிழகம் என்ற அருமைப் பெயரால் வழங்குவார்கள்.

வையக வரைப்பிற் றமிழகம்,
தண்டமிழ் வரைப்பகம்

என்ற புறப்பாட்டுப் பகுதிகளில் இப்பெயரைக் காணலாம்.

இத்தமிழகத்தில் தலைமை பெற்ற நாடுகள் சேர நாடு, சோழநாடு, பாண்டிய நாடு என்பன. காட்டு நாடு, காரி நாடு, கொங்கு நாடு, கோணாடு, நாஞ்சில் நாடு, பறம்பு நாடு, பெண்ணை நாடு, முக்காவனாடு, வேங்கட நாடு என்னும் சிறு நாடுகளைப் போன்ற பல இத் தமிழகத்தில் இருந்தன. இந்நாட்டுக்குள் கூற்றம் என்னும் சிறு பிரிவுகள் உண்டு. அரசனுடைய தலைநகரங்களும், கடற்கரையில் வாணிகச் சிறப்புற்ற நகரங்களும், அரசர்களுடைய சமாதிகளையுடைய ஊர்களும், போர் நடைபெற்ற இடங்களும், புலவர்களைப் பெற்ற ஊர்களுமாகப் பல ஊர்கள் புறநானூற்றுப் பாடல்களில் விரவிக் கிடக்கின்றன. சோழனுடைய உறையூரும் பாண்டியனுடைய மதுரையும் சேரனுடைய வஞ்சியும் பெரும் புகழ் பெற்றவை. தகடூர், அரையம், மாவிலங்கை, முள்ளூர் முதலியன சிற்றரசர்களுக்குரிய நகரங்கள். ஆடுதுறை, ஆலங்குடி, இடைக்குன்றூர்,

எறிச்சிலூர், பீசிர் என்பன போன்றவை புலவர்களுக்குரிய ஊர்கள். இலவந்திகைப் பள்ளி, குராப்பள்ளி, குளமுற்றம், கோட்டம்பலம் முதலியன அரசர்கள் துஞ்சின இடங்கள். கோவலூர், தலையாலங்கானம், திருப்போர், வெண்ணி முதலிய இடங்கள் போர் நிகழ்ந்த ஊர்கள். காவிரிப்பூம் பட்டினம், தொண்டி, முசிறி என்பன கடற்கரைப் பட்டினங்கள்.

கரும்பும் நெல்லும் உடைய சோழநாடுதான் நிலவளம் சிறந்ததென்பதைப் பிற்காலக் கவிஞர் பலவாறு வர்ணித்திருக்கிறார்கள். மழையின்றிக் கோள்நிலை மாறுபட்டாலும் அந்தண் காவிரி வந்து பல கால்வாயாக ஓடி ஊட்டும் சோழ நாடுதான் நாடு என்று ஒரு பழம் புலவர் புறநானூற்றில் பாடுகிறார். ஆவூர் மூலக்கிழார் என்னும் அப்புலவர் சோழ நாட்டின் நிலவளத்தை ரசமாகச் சொல்கிறார். 'யானையைக் கட்டித் தீனி போடுவது' என்று இப்போது ஒரு பழமொழி வழங்குகிறது உங்களுக்குத் தெரியும். செல்வம் நிரம்பியவர்களே யானையை வைத்துக் கொள்ளலாம். சோழ நாட்டில் ஒரு பெண் யானை படுத்துக்கொள்ளும் அளவுக்குள்ள நிலத்தை வைத்துக் கொண்டு ஏழு ஆண் யானைகளுக்குத் தீனி போடலாம்; அவ்வளவு வளச்செறிவுடைய பூமியாம்.

ஒருபிடி படியும் சீறிடம்
எழுகளிறு புரக்கும் நாடுகிழ வோயே

என்று பாராட்டுகிறார் புலவர்.

இப்படி நிலவளத்தால் ஒரு நாடு சிறந்திருந்தால் மட்டும் போதாது, அந்நாட்டில் வாழ்வோரும் சிறந்திருத்தல் வேண்டும். அது பள்ளமானாலும் சரி, மேடானாலும் சரி; சான்றோர் எங்கே தங்குகிறார்களோ, அவ்விடந்தான் நல்ல இடம்.

எவ்வழி நல்லர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே!

நல்ல அரசன் இருக்கும் நாட்டில் நல்லவர்கள் சேருவார்கள். (117) "கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கி," ஆகவே இயற்கை வளனும் செங்கோல் அரசனும் சேர்ந்த நாடுதான் தமிழரின் லட்சிய நாடென்று சொல்லலாம்.

சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன் என்னும் அரசன் சோழ பாண்டிய நாடுகளைத் தன் அடிப்படுத்தி ஒரு தனி மன்னனாக ஆண்டிருந்தான் போலும். அவனுடைய நாடு கிழ்கடல் முதல் மேல்கடல் வரையில் பரந்திருந்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பரப்பைச் சொல்லும்போது, 'பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிப்பதில்லை' என்று சதுர்படச் சொல்லுவார்களே, அந்தமாதிரி ஒரு புலவர் சேரனது நாட்டுப் பரப்பைச் சொல்கிறார்.

நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந. (2)

## நாடு காவல்

செங்கோல் திறம்பாத அரசனைக் குடிகள் புகழ்வர், "குடிபழி தூற்றும் கோல"னாதலை அரசர் விரும்பார். குழந்தையை வளர்ப்பவரைப்போல அன்பும் அருளும் உடையராகி நாட்டைப் பாதுகாப்பார். இல்லையாயின் நரகம் பெறுவர். செங்கோல் மன்னனுடைய நாட்டில் மழையின்றிப் பஞ்சம் நேர்தல் இல்லை என்று பழந்தமிழர் நம்பினர். நியாயம் வேண்டுமென்று குடிமக்கள் தன்பால் வந்தபொழுது எளிதில் நீதி கிடைக்கும்படி செய்யும் அரசனது நாட்டில் மழை தவறாமற் பெய்யும். மாரி பொய்த்தாலும், விளைவு குறைந்தாலும், இயற்கையில் நிகழாத உற்பாதங்கள் தோன்றினாலும் உலகத்தார் அரசரைப்

பழிப்பார்கள். ஆதலின் குடிமக்களைக் காக்கும் திறமை மிக்கவனாக அரசன் இருக்க வேண்டும்.

மக்களுக்கு இயற்கைப் பகையாக இருப்பது பசி; செயற்கைப் பகையாக இருப்பது பிறரால் வரும் துன்பம். பசியைத் தீர்க்க நல்ல உணவு கிடைக்கும்படி செய்ய வேண்டும். உணவு கிடைப்பதற்கு நிலத்தை வளம்படுத்த வேண்டும். வானோக்கி விளையும் புலன்களாக இருந்தாலும் ஏரி, குளங்கள் முதலிய நீர் நிலைகளைச் செப்பனிட்டுக் கரையை உயர்த்தி நீரைத் தேக்க வேண்டும். அப்பொழுது விளைவு குன்றாமல் இருக்கும். குடபுலவியனாரென்னும் புலவர் இந்த 'ஆக்க வேலைகளை'ப் பற்றி மிக அழகாகப் பாண்டியன் நெடுஞ்செழியனுக்குச் சொல்கிறார்.

நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தோடு நீரே
நீரும் நிலனும் புணரி யோரீண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே
நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம இவட்டட் டோரே
தள்ளா தோரிவட் டள்ளா தோரே.

படைவலியால் பெறும் வெற்றிக்கும் காரணமாக இருப்பது உணவுதான். ஆதலின் அவ்வுணவை விளைக்க வேண்டியன ஆற்றுதலன்றி, உழுதொழில் புரியும் குடிமக்களையும் பாதுகாத்தல் வேண்டும்; "பகடு புறந்தருநர் பாரம் ஓம்பிக், குடிபுறந் தருகுவை யாயின், அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே" என்று ஓரரசனுக்கு ஒரு புலவர் அறிவுறுத்துகிறார். அவ்வேளாளரிடம் கொள்ளுந் திறையை நெறியறிந்து கொள்ள வேண்டுவது அரசன் கடமை. அப்படியன்றிப் பேராசையினால் அளவுக்கு மிஞ்சிய வருவாயை

அவர்களிடமிருந்து தண்டத் தொடங்கினால் அரசனுக்கும் குடிகளுக்கும் ஒருங்கே கேடு வரும்.

பாண்டியன் அறிவுடை நம்பி என்னும் அரசனிடம் சில துர்மந்திரிகள் இருந்தார்கள். அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு அரசன் அதிக வரியை வாங்கலாமென்று யோசித்தான். பிசிராந்தையாரென்ற புலவர் இதை அறிந்தார். பாண்டியனிடம் போய் வேடிக்கையாக ஒரு கதை சொல்பவரைப்போல ஆரம்பித்தார். "ஒரு யானை: வயலில் முற்றி விளைந்த நெல்லை அதற்குக் கவளமாகக் கொடுத்தால், ஒரு மாநிலத்துக்குக் குறைவாக இருந்தால் கூட, அந்த யானைக்குப் பல நாள் உணவுக்கு ஆகும். யானையை அதன் போக்கிலே அவிழ்த்து விட்டுவிட்டால் என்ன ஆகும்? நூறு செய்யாகத்தான் இருக்கட்டுமே; அதன் வாய்க்குள்ளே போவதைக் காட்டிலும் அதன் காலாலே மிதிபட்டு வீணாகப் போவது தான் அதிகமாக இருக்கும்." இந்த உபமானத்தைச் சொல்லிவிட்டு மெல்ல விஷயத்துக்கு வருகிறார் புலவர்.

"அறிவுடைவேந்தன் முறைப்படி குடிமக்களிடம் வரியை வாங்கினால் நாடானது கோடி பொருளைக் கொடுத்து மேலும் மேலும் தழைக்கும். அறிவில்லாதவன் ஆளப் புகுந்து, அவனுடன் தலையாட்டும் மந்திரிகளும் சேர்ந்து கொள்ள, அன்பின்றி, மிகுந்த பணத்தை விரும்புவானானால் யானை புகுந்த வயலைப்போலத் தானும் உண்ணான்; உலகமும் கெட்டுப் போகும்" (184) என்று தைரியமாகச் சொல்லி விட்டார். கேட்டவன் பெயரளவில் அறிவுடை நம்பியாக இல்லாமல் செயலிலும் அப்படி ஆகவேண்டுமென்று தான் அவர் எடுத்துரைத்தார். இதே விஷயத்தை ஓர் அரசனே வேறு விதமாகச் சொல்கிறான். சோழன் நலங்கிள்ளி என்பது அவ்வரசன் பெயர்.

"ஒருவர் பின் ஒருவராகப் பெரியவர்களை யமதர்ம

ராஜன் கொண்டு போய் விட்டான். ஏதோ நல்ல வினைப் பயன் இவனிடம் அரசுரிமையையும் அரசச் செல்வத்தையும் கொண்டு வந்து தள்ளி யிருக்கிறது. இது தனக்குக் கிடைத்து விடவே 'நமக்குப் பெரிய அதிகாரம் கிடைத்து விட்டது' என்றெண்ணிக் குடிகளிடம் வரியை வேண்டி இரக்கின் றானே, அந்த அரசன் சின்னத்தனம் உடையவன்'' என்று அவன் சொல்கிறான். புறநானூற்றுப் பாஷையில் 'கூரில் ஆண்மைச் சிறியோன்' என்று இருக்கிறது. 'மிகுதியில்லாத ஆண்மையையுடைய உள்ளஞ் சிறியோன்' என்று உரையாசி ரியர் உரை எழுதுகிறார்.

வேந்தன் தன்னலம் கருதாமல் குடிமக்களின் நலத்தைக் காக்க வேண்டியவன். ''நீ வைத்திருக்கிற குடை உன்னுடைய உடம்பின்மேல் வெயில்படாமல் காப்பாற்றுவதற்காக இருப் பதன்று. குடிமக்களுக்கெல்லாம் நிழலாகிப் பாதுகாப்பது'' என்று குடையின் கருத்தை ஒரு புலவர் தெரிவிக்கிறார்.

பகைவர்களால் நாட்டிற்கு எவ்வகைத் துன்பமும் நேராமல் அரசன் பாதுகாப்பான். அவனுடைய அன்பும் ஆற்றலும் குடிமக்களுக்கு இன்பத்தை உண்டாக்கித் துன்பத் தைப் போக்கும். சோறுண்டாக்கும் தீமையின்றி அவன் நாட்டினர் பகைவர் வைக்குந் தீயை அறியார். சூரியனது வெம்மையையன்றி வேறு வெம்மையை அவர்கள் அறியார். வானவில்லையன்றி வேறு வில்லை அறியார். உழவுக்குரிய கலப்பையன்றி வேறு படையை அவர்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை. புலி தன் குட்டிகளைக் காப்பதுபோல அரசன் குடிகளைப் பாதுகாப்பான்.

## முறை வழங்குதல்

அரசன் நீதி வழங்குவதில் நடுநிலை பிறழாமல் இருக்க வேண்டியவன். அரசின் பெருமை யெல்லாம் அறநெறியை அடிப்படையாகக் கொண்டது. பிறர் கூறுவதைக் கேட்டு, ஆராயாமல் முடிவு செய்தல் தவறு. ''பிறர் பழி கூறுவோர்

மொழியை" உண்மையென்று தெளிதல் கூடாது. தான் உண்மையாக ஒரு தீமையைக் கண்டால் அக்குற்றத்துக் கேற்ற தண்டனையை அளித்தலே முறை. நமரெனக் கோல்கோடாது, பிறரெனக் குணங்கொல்லாது நீதி வழங்க வேண்டும். இதன் பொருட்டுத் தமிழ் மன்னர்கள் அறங்கூர் அவையம் ஒன்றை நிறுவிக் குணநலஞ் சான்றவர்களை அந்த அவையத்தில் நாட்டி முறை வேண்டினவர்க்கு முறை வழங்கச் செய்தனர். உறையூரில் இருந்த அறங்கூரவையம் மிக்க புகழ்பெற்றது. அந்த அவையத்தில் தமக்கொரு குறை யுள்ளவ ரெல்லாம் வந்து முறையிடுவார்கள். சான்றோர் அதனைக் கேட்டுந் தீர்ப்பர்.

> சான்றோ ரிருந்த அவையத் துற்றோர்
> ஆசா கென்னும் பூசல் போல (266)

என்று ஒரு புலவர் வழக்குடையோனது முறையீட்டை உவமையாகச் சொல்கிறார்.

பூதப் பாண்டியன் தன் பகைவரைத் தோல்வியுறச் செய்ததாகச் சொல்லும் வஞ்சினம் ஒன்றில்,

> அறநிலை திரியா அன்பி னவையத்துத்
> திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
> மெலிகோல் செய்தே னாகுக (71)

என்று கூறிக் கொள்கிறான். இதனால் அறங்கூர் அவையத்தில் தக்க சான்றோர் இருத்தலின் அவசியம் புலப்படும்.

## புலவர்

பண்டைத் தமிழ் மன்னர் புகழென்றால் உயிருங் கொடுக்கும் இயல்பினர். அப்புகழ் வீரத்தாலும் ஈகையாலும் கிடைக்கும். வீரத்தாற் கிடைக்கும் புகழினும் ஈகையாற் பெறும் புகழே சிறந்ததென்று கருதினர். ஈகையைப் பெறும் இரவலர்கள் பல வகையினர். அந்தணர், புலவர், பாணர்,

விறலியர், கூத்தர் என்பவர்களையே பரிசிலரென்றும் இரவல ரென்றும் வழங்குகின்றனர். வயிற்றுக்கில்லாமல் சோம்பிக் கிடக்கும் வறியர்களாகிய பிச்சைக்காரர்களோ இரவலரென்னும் பிரிவில் வருவதில்லை. நல்வளமுள்ள நாட்டில் பசியும் நோயும் பகையும் இன்மையின் அத்தகைய இரவலர் இரவலர் இல்லை போலும். புலவர் முதலியோர் தாம் பெற்ற பொருள்களை உடனுக்குடன் பிறருக்கு அளித்து விடுதலின் மீட்டும் மீட்டும் உபகாரிகளை நோக்கிச் சென்று பாடியும், இசை பயின்றும் பொருள் பெற்றனர். அவர்கள் பொருள் பெற்ற வரலாறுகளை ஆராய்ந்தால் அது யாசகமாகத் தோன்றாது. 'அரசராகிய உங்களைப் போன்ற தலைமையை உடையது எங்கள் வாழ்க்கை' என்று கோவூர்கிழார் பாடுகிறார்.

தம்முடைய கலைத்திறத்தை உணர்ந்து பாராட்டும் உபகாரிகளிடத்திலேதான் அவர்கள் சென்றார்கள். வரிசை அறிந்து நல்கும் திறமை யார்பால் உண்டோ அவர்களே புலவர்களுடைய புகழுக்கு உரியவர்கள். "வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை" என்று ஒரு புலவர் சொல்கிறார்.

> ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்
> பலரும் வருவர் பரிசில் மாக்கள்
> வரிசை அறிதலோ அரிதே

என்று கபிலர் மலையமான் திருமுடிக் காரிக்குச் சொல்கிறார். வரிசையறிந்து அன்பு பாராட்டிக் கொடுப்பது சிறிதாயினும் புலவர் போற்றிக்கொள்வர். பெருஞ்சித்திரனார் என்ற புலவர் அதியமான் நெடுமான் அஞ்சியைப் பார்க்கப் போயிருந்தார். அவன் ஏதோ வேலையாக இருந்தமையினால் ஓர் அதிகாரி மூலமாகப் பரிசிலைக் கொடுத்தனுப்பினான். புலவருக்கு கோபம் வந்துவிட்டது. "இந்த அரசன் நான் இதற்காகத்தான் வந்திருக்கிறேனென்று எப்படி அறிந்தானோ! அவன் என்னை நேரில் பாராமல் அனுப்பிய இந்தப்

பரிசிலை, நமக்கு வேண்டியது இதுதான் என்று வாங்கிக் கொண்டு போவதற்கு நான் ஒரு வாணிகப் பரிசிலன் அல்லேன். வரிசையறிந்து அன்புடன் கொடுப்பதானால் தினையளவானாலும் இனிதாக இருக்கும்'' என்று பாடிப் புறப்பட்டு விட்டார். அவரே குமணனைப் பார்த்து,

உயர்ந்தேந்து மருப்பிற் கொல்களிறு பெறினும்
தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலென், உவந்துநீ
இன்புற விடுதி யாயிற் சிறிது
குன்றியுங் கொள்வல்

என்று சொல்லுகிறார்.

இத்தகைய பெருமிதமுடைய புலவர்களோடு பழகுவதைப் பெரிய இன்பமாகக் கொண்டனர் அரசர். புலவர் பாடும் புகழுடையோர் சுவர்க்க பதவியை அடைவரென்பது அவர்கள் கொள்கை. நெடுஞ்செழியன் வஞ்சினம் கூறுகையில், ''என் பகைவர்களை நான் புறங்காணா விட்டால்,

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை''

என்று சபதம் செய்கிறான். புலவர் பாடாதொழிதலை அவன் எவ்வளவு இழிவாகக் கருதுகிறானென்பதை இந்தச் சொற்கள் தெரிவிக்கும். கழாத்தலையார் என்ற புலவரை இகழ்ந்த ஓர் அரசனது ஊராகிய அரையம் கெட்டது. பெண் கொலை புரிந்து பழிபூண்ட நன்னனென்னும் அரசனையும் அவன் வழி வந்தோரையும் புலவர் பாடாமல் வெறுத்து ஒதுக்கினர்.

புலவருக்கு அஞ்சியொழுகும் ஒழுக்கம் மன்னர்களிடத்தில் இருந்தது. அவர்கள் அறிவுரை மிகவும் கடுமையாக இருந்தாலும் மன்னர் ஏற்றுக்கொண்டனர். கோவூர்கிழார்

என்னும் புலவர் பெருமான் நலங்கிள்ளி நெடுங்கிள்ளி என்னும் இரண்டு தாயத்தினர்க்கிடையே நின்று சமாதானம் செய்தார். கிள்ளிவளவன் மலையமான் மக்களை யானைக்காலின் கீழ் இடறப் புக்கபோதும், இளந்தத்தனென்னும் புலவனை ஒரு சோழன் பகையரசனுடைய ஒற்றனென்று கருதி, கொலைத் தண்டனை விதித்தபோதும் கோவூர் கிழாரின் அறிவுரையினால் அவர்களின் உயிர்கள் காலன் வாயினின்றும் மீண்டன. அரசன் ஆணையை அடைக்கும் ஆற்றல் பெற்றன புலவர் வாய்மொழி.

புலவர்களுக்கு, எல்லோரும் இன்புற்று வாழ வேண்டுமென்பதே நோக்கம். அதனால் மனம் வேறுபட்டவர்களை எல்லாம் தம்மாலான வரையில் முயன்று சமாதானம் செய்வித்து ஒன்றுபடுத்துவர். கோப்பெருஞ் சோழனுக்கும் அவன் மக்களுக்கும் இடையே போர் மூண்டபொழுது புல்லாற்றூர் எயிற்றியனாரென்ற புலவர் அச்சோழனுக்கு நல்லுரைகூறிச் சமாதானஞ் செய்வித்தனர். ஏழு வள்ளல்களில் ஒருவனாகிய பேகனென்பவன் தன் மனைவியாகிய கண்ணகியை அகன்று வாழ்ந்தானாக, கபிலர், அரிசில்கிழார் முதலிய புலவர்கள் அவனிடம் சென்று இரந்து மனைவியையும் கணவனையும் ஒன்றுபடுத்தினர்.

ஒற்றுமை கண்டவிடத்து மனமகிழ்ச்சி இன்புற்று மேன்மேலும் அது வலி பெறும்படி செய்வதில் புலவர்கள் கண்ணும் கருத்தும் உடையவர்கள். சோழன், பாண்டியன் என்னும் இருவரும் ஒன்று சேர்வதென்பது மிகவும் அரிய காரியம். ஒருவரை ஒருவர் பகைவராக எண்ணுவதுதான் வழிவழி வந்த சம்பிரதாயம். எப்போதாவது இந்தப் பகை நீங்கி ஒன்றுபட்டுவிடப் போகிறார்களென்று எண்ணிய சில புண்ணியவான்கள் அங்கங்கே பகைக் கொள்ளியை யிட்டு மூட்டிவிடுவார்கள். இந்த நிலையில் அவர்கள் ஒன்றுபடுவது எங்கே?

ஒன்றுபட்டார்கள்; இந்த அதிசயத்தை ஒரு புலவர் கண்ணாரக் கண்டார். சோழன் பெருந்திருமாவளவனும் பாண்டியன் பெருவழுதியும் ஒருங்கிருந்தாரைக் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார் பார்த்தார்; ஆச்சரியத் தால் 32 அடிகள் கொண்ட ஒரு பாட்டைப் பாடி விட்டார் (58).

"பலராமனும் கண்ணபிரானும் ஒன்றாகச் சேர்ந்து நிற் பதுபோல எவ்வளவு அழகாக ஒன்றுபட்டு இருக்கிறீர்கள்! இதைக் காட்டிலும் இனிய காட்சியும் உண்டோ? நும் இசை வாழ்க! என்றும் இப்படியே நீங்கள் இருக்க வேண்டும். ஒருவர் ஒருவருக்கு உதவி செய்யுங்கள். இருவரும் சேர்ந்தி ருந்தால் இந்த உலகம் உங்கள் கையில் அகப்படுவது நிச்சயம் அன்புடன் இருக்கும் உங்களுக்கிடையே சில பேர் வருவார் கள்; மிகவும் நல்ல வார்த்தைகளைப் போல நயமாகச் சொல்வார்கள்; தொல்லோர் சென்ற நெறியென்று பேசு வார்கள். அந்தப் பேச்சை நம்பாதீர்கள். உங்களிடையே அவை பிளவை உண்டு பண்ணிவிடும். அவர்களுடைய வார்த்தைகளைக் கொள்ளாதீர்கள். இன்றே போல்க நும் புணர்ச்சி?" என்று வாயார வாழ்த்துகிறார்.

இதைவிடப் பெரிய அதிசயத்தைத் தமிழ்ப்பாட்டி ஔவையார் கண்டார். சேரசோழபாண்டியர் மூவரும் ஒருங் கிருந்த புதுமையைக் கண்டு அவர் ஒரு செய்யுளால் வாழ்த் தினார். "நீங்கள் வாழ்க! உங்களைப் பார்த்தால் அந்தணர் வளர்க்கும் மூன்று அக்கினிகளைப்போல இருக்கிறீர்கள். வானத்து வயங்கித் தோன்றும் மீனினும், இம்மென இயங் கும் மாமழை உறையினும், உயர்ந்துமேந் தோன்றிப் பொலிகநும் நாளே" (367) என்று மூவரையும் ஆசீர்வதிக் கிறார்.

## பாணன் முதலிய பரிசிலர்

புலவர்களின் நிலை இங்ஙனம் ஆக, பாணன், விறலி முதலிய கலைஞர்களும் அரசனுடைய ஆதரவை முற்றும்

பெற்றனர். பாணன் தன் இசையாலும் விறலி தன் இசையாலும் கூத்தாலும் மன்னரை மகிழ்விப்பர். புலவர், பாணன் முதலியவர்களுக்குப் பலவகைப் பொருளும், அருங் கலங்களும், யானை முதலியனவும் பரிசிலாக அரசர் தருவது வழக்கம். சிறப்பாகப் பாணர்களுக்குப் பொன்னாலாகிய தாமரைப்பூவையும், விறலியர் அணிந்துகொள்ள இழையையும் தருவர்.

## போர்

போர்க்கலையில் அரசர்கள் திறம்பெற நின்றதைப் புறநானூறு நன்கு விளக்குகிறது. புறப்பொருள் துறைகளில் பெரும்பாலான போர் சம்பந்தமான செய்திகளை உடையனவே தமிழர் போர் முறையைப்பற்றி சொல்ல வேண்டுமானால் அது மிக மிக விரியும்.

அவர்களுடைய போரை, "அறத்தாறு நுவலும் பூட்கை மறம்" என்று பாராட்டுகின்றனர். மதிலைப் பொருதலும், ஊரை முற்றுகையிட்டு உணவு வெளியிலிருந்து செல்லாமல் தடுத்தலும், மதிற்கதவுகளை யானையைக் கொண்டு உடைத்தலும் , நால்வகைப் படைகளோடு போர் புரிதலும் பிறவுமாகிய போர்வகை பல. கடலில் நாவாய் செலுத்திக் கடற்போர் செய்தலும் தமிழருக்குப் புதிதன்று.

மறவர்களின் வீரமும், படைத்தலைவர்களாகிய ஏனாதிகளின் சிறப்பும், இளைப்புற்ற மன்னர்களைத் தாங்கும் துணையாக உதவும் தேர்வண் மலைவனைப் போன்ற வீரர்களின் பெருமையும், மறக்குடிப் பிறந்த பெண்டிரின் வீர உணர்ச்சியும் இன்ன தன்மைய என்று புலப்படுத்தும் பாடல்கள் பல.

அரசர் தம் பகையரசர்களை வென்று களங்கொள்ளுதலும், அவர்களுடைய முரசு முதலியவற்றை அகப்படுத்தலும் கடிமரத்தை வெட்டுதலும், ஊரை எரித்தும் நீர்நிலைகளை உடைத்தும் வயல்களில் எரிபரப்பியும் பகைவர் நாட்டைப்

பாழாக்குதலும் அஞ்சுதகு செய்திகளாம். பகைவர் பாற் பெற்ற கலங்களைப் பரிசிலர்க்கு ஈந்தும், பகைவர்களின் முடிப் பொன்னால் கழல் செய்து தாம் அணிந்தும், அவர் களுடைய யானையின் ஓடைப் பொன் கொண்டு பொற்றா மரைப் பூச்செய்து பாணர்க்கு உதவியும் அரசர் தம் வெற்றியைக் கொண்டாடுவர்.

களவேள்வி, இராஜசூயம் முதலிய வேள்விகளைச் செய்த அரசர் சிலர் உண்டு. போர்க்களத்து மடிந்த வீரர் களுக்கும், வேந்தர்களுக்கும் வீரக்கல் நட்டுப் போற்றுவது தமிழர் மரபு. வலியச் சாவை எதிர்கொண்டழைக்கும் வீரர் களைப்போல் வடக்கிருத்தலென்னும் விரதத்தை மேற் கொண்டு, "முழூஉ வள்ளூரம் உணக்கும்" மன்னர்களாக உயிர்நீத்த பெரு வீரர்களாகிய கோப்பெருஞ் சோழன் முதலியவர்களும் நடுகல்லாயினர்.

இங்ஙனம் ஈகையாலும், முறை செய்தலாலும், வீரத் தாலும் புகழ் பெற்ற மன்னர்களும் பிறரும் தமிழ் நாட்டை நல்ல நிலமாக்கி இருக்கிறார்கள். அவர்களுடைய சரித்திரத் தைப் புலப்படுத்தும் மூலபண்டாரமாகப் புறநானூறு விளங்குகின்றது.

# கனம் கிருஷ்ணையர்

எவ்வளவோ சங்கீத வித்துவான்களுடைய கச்சேரி களை நாம் கேட்கிறோம். அந்த வித்துவான்களுடைய சாரீரத்தைப் பாராட்டுகிறோம். சில பேரைப்பற்றிச் சொல்லும் போது, "அவருக்கு நல்ல சாரீரம்" என்று கூறு கிறோம். நாம் எந்த விஷயத்தை நினைத்து கன சாரீரம் என்று கூறுகிறோம்? ஆள் கனமாக இருக்கிறாரென்றா? இல்லை. அந்தச் சாரீரம் கனமாக வெள்ளம் வருவதுபோல்

வருகிறது. பெண்களுடைய சாரீரத்திலே அந்தக் கனத்தைப் பார்ப்பது அருமை; அது சிற்றருவிபோல் வருவது. சங்கீதத்திலே கனமென்றால் பாடுபவருடைய சாரீர லட்சணத்தை அனுசரித்த ஒரு வகை என்று மாத்திரம் நீங்கள் ஊகித்துக் கொள்ளலாம். கனம், நயம், தேசிகம் என்னும் மூன்று மார்க்கங்களிலே அது ஒன்று. மூலாதாரத்திலிருந்து பிரம்மரந்திரம் வரைக்கும் ஊடுருவி நிற்கும் தொனியோடு பாடுவது அந்த மார்க்கமாம். பழைய காலத்திலே இந்த மாதிரி மார்க்கம் தமிழ்நாட்டிலே இருந்ததாம். அதற்கு உள்ளாளப் பாட்டு என்ற தமிழ்ப் பெயர் இருந்தது. அதைப் பாடும்போது யானையின் முழக்கமும் சிங்க கர்ஜனையும் நினைவுக்கு வருமாம்.

கனம் கிருஷ்ணையர் சங்கீதத்திலே மத்தகஜந்தான். அவருடைய காலத்துக்குமுன் கனமார்க்கம் இந்தத் தமிழ் நாட்டிலே அதிகமாகப் பிரசாரத்தில் இல்லை. அவர் அதைப் புதிதாக அப்பியாசம் பண்ணி மிகவும் வல்லவரானார்.

ஏறக்குறைய நூறு வருஷங்களுக்கு முன் திருச்சிராப்பள்ளி ஜில்லா, உடையார்பாளையம் தாலூகா பெரிய திருக்குன்றம் என்ற ஊரில் வாழ்ந்த இராமசாமி ஐயரென்ற சங்கீத வித்துவானுக்குக் குமாரராகக் கிருஷ்ணையர் பிறந்தார். அவருக்கு நான்கு தமையன்மார் இருந்தனர். அவர்கள் அனைவரும் சங்கீதத்தில் தேர்ச்சி பெற்றவர்களே. ஆயினும் சுப்பராமையர் என்றவரும் கிருஷ்ணையருமே சங்கீத உலகத்தில் பிரசித்தியை அடைந்தவர்கள்.

ராமசாமி ஐயர் தம் குமாரர்கள் எல்லோருக்கும் சில காலம் சங்கீத அப்பியாசம் செய்து வைத்தார். பிறகு தஞ்சாவூர் ஸம்ஸ்தான வித்துவானாக விளங்கிய பச்சைமிரியன் ஆதிப்பையரிடம் சிட்சை பயிலும்படி அவர்களை அனுப்பினர். கிருஷ்ணையர் அந்தப் பெரியாரிடம் சங்கீத அப்பியாசம் செய்தார். அவருக்கு அப்பொழுதே கீர்த்தனங்

களை இயற்றும் பழக்கம் ஏற்பட்டது. அப்பியாச நிலை கடந்த பிறகு அவர் தஞ்சாவூர் ஸம்ஸ்தானத்தைச் சேர்ந்த சங்கீத வித்துவான்களில் ஒருவரானார்.

ஒரு சமயம் பொப்பிலி ஸம்ஸ்தானத்துச் சங்கீத வித்துவானாகிய கேசவையா என்பவர் தஞ்சாவூருக்கு வந்திருந்தார். அவர் கனமார்க்கத்திலே சிறந்த திறமை வாய்ந்தவர். அவருடைய கச்சேரி தஞ்சை அரசருடைய முன்னிலையில் நடைபெற்றது. அவர் பாடும் பாணியே புதிதாக இருந்தது. அதை அறிந்த அரசரும் மற்ற வித்துவான்களும் பிரமிப்பை அடைந்தனர். சங்கீதத்தின் பலவகைத் துறைகளிலும் வல்ல வித்துவான்கள் தஞ்சை ஸம்ஸ்தானத்தில் அக்காலத்தில் இருந்தனர். சங்கீதத்திற்கு உரிய தாயகமாக அந்த ஸம்ஸ்தானம் விளங்கியது. ஆயினும் அந்த வித்துவான்களுடைய கூட்டத்தில் கனமார்க்கம் தெரிந்தவர் ஒருவரும் இல்லை. அரசர் கேசவையாவின் சங்கீதத்தைக் கேட்டு அனுபவிக்கும் போது அதன் இனிமையால் ஒரு பக்கம் சந்தோஷமும் ஒரு பக்கம் துயரமும் உண்டாயின. 'இந்த அரிய மார்க்கத்திற் சிறந்தவர் யாரும் இங்கே இல்லையே!' என்பதே அவருடைய துயரத்திற்குக் காரணம். இப்படியே இருந்து விடுவதா? சங்கீதத் துறைகள் பலவற்றுக்கும் புகழ் வாய்ந்த நம் ஸம்ஸ்தானத்தில் கனமார்க்கம் இல்லையே என்ற குறை நிரம்புவதற்கு வழியில்லையா?' என்று எண்ணினார்.

தம்முடைய ஸம்ஸ்தான வித்துவான்களை அழைத்து, "கனமார்க்கத்தை இனிமேல் யாரேனும் அப்பியசித்துத் திறமை பெற முடியுமா?" என்று கேட்டார். முதியவர்களாக உள்ளவர்கள் தங்களால் அது முடியாத காரியம் என்று சொல்லி விட்டார்கள். இளைஞர்களாக உள்ளவர்களுக்கோ போதுமான தைரியம் உண்டாகவில்லை. கிருஷ்ணையருக்கு மாத்திரம், "நாம் இதைச் சாதிப்போம்" என்ற நம்பிக்கை இருந்தது. அவர் அரசரைப் பார்த்து, "கேசவையாவை எனக்கு இந்த மார்க்கத்தின் போக்கைச் சொல்லிக்

கொடுக்கச் செய்து இதை அப்பியசிக்க வேண்டிய சௌகரியங்களும் செய்து கொடுத்தால் நான் பிரயத்தனம் செய்கிறேன்'' என்று சொன்னார். அவருடைய இளமையையும், வன்மையையும், தைரியத்தையும் கண்டு, அந்த முயற்சியில் வெற்றியுறுவாரென்றே யாவரும் எண்ணினர். அரசர் அப்படியே செய்யலாமென்று கூறினார்.

கேசவையாவிடம் கிருஷ்ணையர் அப்பியாசம் செய்யத் தொடங்கினார். சில நாட்களில் அந்த மார்க்கத்தின் இரகசியங்களையும் அதன் பல துறைகளில் ஒன்றாகிய சக்கரதானம் பாடும் முறையையும் தெரிந்து கொண்டார். அந்தச் சங்கீதத்திலே திறமை பெற வேண்டுமாயின் பல நாள் அப்பியாசம் செய்ய வேண்டும். தனியான இடத்தில் இருந்து செய்து வந்தால் நலமாக இருக்குமென்பது கிருஷ்ணையருடைய எண்ணம்.

அந்தச் சமயத்தில் கிருஷ்ணையருடைய குடும்பத்திற்கே நண்பராகிய கபிஸ்தலம் ராமபத்திர மூப்பனாரென்பவர் தஞ்சைக்கு வந்திருந்தார். அவர் கிருஷ்ணையரோடு பேசிக் கொண்டிருக்கையில், அவ்வித்துவான் நாம் கனமார்க்கத்தை அப்பியாசம் செய்யத் தொடங்கி யிருப்பதாகச் சொல்லி விட்டு, ''தனியான இடமும் தக்க வசதிகளும் இருந்தால் மிக்க விரைவில் இதிலே நல்ல பழக்கம் உண்டாக்கிக் கொள்ளலாம்'' என்றார். கேட்ட ராமபத்திர மூப்பனார், ''எங்கள் ஊருக்கு வந்துவிடுங்கள்; தனியாக இடம் அமைத்துத் தருகிறேன். வேறு என்ன வசதிகள் வேண்டுமோ அவைகளைச் செய்து தருகிறேன்'' என்றார்.

''இதை அப்பியாசம் செய்யும்போது மூலாதாரத்திலிருந்து தொனி வருகிறது. அதனால் உஷ்ணம் அதிகமாகிறது. தொண்டை காய்ந்து விடுகிறது. அடிக்கடி வெண்ணெயை உபயோகித்தால் அநுகூலமாக இருக்குமாம்'' என்று கிருஷ்ணையர் சொன்னார்.

"இதுதானா பிரமாதம்? நல்ல பசு வெண்ணெயாகக் கொடுக்கச் செய்கிறேன்" என்று மூப்பனார் கூறினார்.

கிருஷ்ணையரை ராமபத்திர மூப்பனார் கபிஸ்தலத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே உள்ள ஆற்றங்கரையில் அமைந்த நாணற்காட்டில் மூப்பனாரால் ஒரு சிறு குடிசை அமைக்கப்பட்டது. கிருஷ்ணையர் அங்கே நாள்தோறும் விடியற்காலையிலும், மாலையிலும் சென்று சாதகம் செய்யத் தொடங்கினர். அக்காலத்தில் அவருடைய தொனி நெடுந்தூரம் கேட்குமாம். இவ்வாறு சாதகம் செய்து வருங்காலத்தில் மூப்பனாருடைய வேலைக்காரர்கள் கையில் பசு வெண்ணெயை வைத்துக்கொண்டு காத்திருப்பார்கள்; வேண்டியபோது அதைக் கிருஷ்ணையர் உபயோகப்படுத்திக் கொள்வார்.

இவ்வாறு அசுர சாதகம் செய்ததனால் கிருஷ்ணையர் கனமார்க்கத்தில் நல்ல தேர்ச்சி பெற்றார். ராஜ சபையில் பாடலாமென்ற தைரியம் அவருக்கு வந்தது. அந்தச் செய்தி தஞ்சை அரசருக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் கிருஷ்ணையருடைய கனமார்க்கம் அரங்கேற்றப்படும் நாளை ஆவலோடு எதிர்பார்த்திருந்தார். பொப்பிலி கேசவையாவும் அதுவரையில் தஞ்சையிலேயே தங்கியிருந்தனர்.

அரங்கேற்ற நாளன்று தஞ்சை வாசிகளுக்கும் வித்துவான்களுக்கும் உண்டான குதூகலத்தைக் கேட்கவா வேண்டும்? பெரிய வித்துவான்களும் பொப்பிலி கேசவையாவும் கூடிய சபையில் அரசருடைய முன்னிலையில் கிருஷ்ணையர் பாடத் தொடங்கினார். உயிரைப் பிடித்துக்கொண்டு அவர் பண்ணிய பயிற்சியின் வலிமை அந்தப் பாட்டில் தெரிந்தது. கனமார்க்கத்தின் உயிர்நிலைகளை யெல்லாம் கிருஷ்ணையர் தம்முடைய பாட்டிலே காட்டினார். யாவரும் அந்தக் கானாமுத மாரியிலே திளைத்திருந்தனர். எல்லோரையும் விட, பொப்பிலி கேசவையாவுக்கு உண்டான ஆச்சரியத்

துக்கு அளவே இல்லை; 'இந்தப் பிள்ளையாண்டான் என்னிடம் சில நாளே இந்த நுணுக்கங்களைத் தெரிந்துகொண்டான். அப்பியாசம் பண்ணின காலங்கூடப் போதாது. இதற்குள் இவனுக்கு இவ்வளவு சக்தி வந்துவிட்டதே. நமக்கு எவ்வளவோ சிஷ்யர்கள் இருந்தும் இப்படி ஒருவன்கூட இல்லையே?' என்றெல்லாம் அவர் மனம் எண்ணியது. அப்போதப்போது அவர் தலையை அசைத்த காலங்களில் கிருஷ்ணையருக்கு மேலும் மேலும் ஊக்கம் பிறக்கும். கேசவையா அடிக்கடி தம்முடைய வியப்பை வெளிப்படுத்திக்கொண்டேயிருந்தார்.

கிருஷ்ணையருடைய பாட்டு நின்றது. அரசர் கேசவையாவைப் பார்த்து, "இவர் பாடியதெல்லாம் சரியாக இருந்ததா?" என்று கேட்டார். அவர், "மஹாராஜாவினிடம் என்னுடைய வியப்பை எப்படித் தெரிவித்துக் கொள்வது? இவர் அஸகாய சூரர்; மிகவும் அருமையாக அப்பியாசம் பண்ணியிருக்கிறார். இந்த மண்ணின் பெருமையே பெருமை! இவர் புகழ் இனிமேல் விருத்தியாகும்" என்று சொன்னார். அரசருக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாயிற்று. "எல்லாம் நீங்கள் காட்டின வழிதான்" என்று உசிதமாகப் பதில் கூறிவிட்டு அவருக்கும் கிருஷ்ணையருக்கும் உயர்ந்த சம்மானங்களைச் செய்தார். அதுமுதல் கிருஷ்ணையர் கனம் கிருஷ்ணையரானார்.

கனம் கிருஷ்ணையர் வரவரச் சங்கீதத் திறமையிலே விருத்தி அடைந்தார். அவருடைய சங்கீதத்திற்குத் தனிப் பெருமை உண்டாயிற்று. அவர் அவ்வப்போது இயற்றி வந்த கீர்த்தனங்களும் தமிழ் நாட்டிலே பரவின. தஞ்சை ஸம்ஸ்தானத்தில் இருந்து வந்த அவர், பிறகு சில காலம் திருவிடைமருதூரில் அமரசிம்மரென்னும் சிற்றரசரிடம் இருந்தார். பிறகு உடையார்பாளையம் ஸம்ஸ்தானாதிபதியாகிய கச்சிரங்கரென்பவரால் அழைக்கப் பெற்று அங்கே சென்று வசிக்கலாயினர். அது முதல் அவர் உடையார்

பாளையம் ஸம்ஸ்தான வித்துவானாகவே விளங்கினார். திருவிடைமருதூரில் அவர் இருந்த காலத்தில், நந்தன் சரித்திரக் கீர்த்தனையை இயற்றிய கோபாலகிருஷ்ணபாரதியார் அவரிடம் சில காலம் சங்கீதப் பயிற்சி பெற்றாராம்.

ஒரு சமயம் கிருஷ்ணையர் திருவையாற்றுக்குச் சென்றார். அங்கே ஸ்ரீ தியாகையரவர்கள் ராம பஜனை செய்து கொண்டும், பல புதிய கீர்த்தனங்களை இயற்றிக்கொண்டும் வாழ்ந்திருந்தார். கனம் கிருஷ்ணையர் அவர்பாற் சென்று வணங்கி அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றார். அப்பெரியாருடைய விருப்பப்படியே, "சும்மா சும்மா வருகுமா சுகம்" என்னும் அடாணா ராகக் கீர்த்தனத்தைப் பாடிக் காட்டினார்.

உடையார்பாளையம் ஸம்ஸ்தானாதிபதியாகிய கச்சிரங்கர் கனம் கிருஷ்ணையரை மிகவும் அன்போடு ஆதரித்து அவருடைய மனம் கோணாதபடி நடந்து வந்தார். கச்சிரங்கருடைய அன்பிலே ஈடுபட்ட கிருஷ்ணையர் வேறு எங்கும் செல்லாமல் அவ்விடத்திலேயே இருக்கலாயினர்.

உடையார் பாளையத்திற்கு அப்பொழுதப்பொழுது சில சங்கீத வித்துவான்கள் வருவதுண்டு. அவர்கள் கனம் கிருஷ்ணையரை முன்னிட்டுக்கொண்டு தங்கள் சங்கீதத்தால் ஸம்ஸ்தானாதிபதியை உவப்பித்துச் சம்மானம் பெற்றுச் செல்வார்கள். கிருஷ்ணையர் சிறிதும் பொறாமையின்றி அவர்களுக்கு வேண்டிய உதவிகளைப் புரிவார். இங்ஙனம் வரும் வித்துவான்களிற் பலர் கிருஷ்ணையருடைய தனிச் சிறப்புள்ள கனமார்க்க சங்கீதத்தின் பெருமையை அறிந்து வியப்பார்கள். 'இத்தகைய வித்துவான் இந்தக் காட்டுப் பிரதேசத்தில் இருக்கிறாரே. பெரிய ஸம்ஸ்தானங்களில் இருந்தால் இவர் எவ்வளவு சிறந்த நிலையில் விளங்கலாம்!' என்று எண்ணுவார்கள். இந்தக் கருத்தை ஒரு முறை கிருஷ்ணையரிடம் தெரிவித்தபோது, "வாஸ்தவந்தான்; வேறு பெரிய இடங்களில் இருந்தால் என்னுடைய பதவி

உயரலாம். ஆனால் என் சந்தோஷம் உயர்வதற்கு நியாய மில்லை. என்னுடன் மனம் கலந்து பழகும் இந்தத் துரை யைப் போல வேறொருவர் இந்த உலகத்தில் எனக்குக் கிடைக்க மாட்டார்கள். நான் பாடும்போது இவர் செய் கின்ற சிரக்கம்பத்திற்கு மற்றவர்கள் கொடுக்கும் ஆயிரக் கணக்கான சம்மானங்கள் ஈடாகா'' என்று சொல்லிவிட்டுத் தம் கருத்தை அமைத்து ஒரு செய்யுளும் கூறினார்.

கச்சிரங்கருக்குப் பின் அவர் குமாரராகிய கச்சிக் கல்யாண ரங்கர் என்பவர் உடையார்பாளையம் ஸம்ஸ் தானாதிபதியானார். தம்முடைய தந்தையாருக்குக் கனம் கிருஷ்ணையர்பால் இருந்த மதிப்பை அவர் அறிந்தவராத லின் அந்தச் சங்கீத வித்துவானை ஒரு தெய்வம்போலப் பாதுகாத்து வந்தார்.

ஒரு சமயம் ஏதோ ஒரு காரணத்தால் கச்சிக்கல்யாண ரங்கர் கனம் கிருஷ்ணையரிடம் பாராமுகமாக இருக்க நேர்ந் தது. வழக்கம் போல ஸம்ஸ்தானாதிபதியைப் பார்க்கலா மென்று கிருஷ்ணையர் சென்றபோது, ''ஏதோ வேலையா யிருப்பதாகவும், பின்பு பார்ப்பதாகவும் அவர் சொல்லி அனுப்பினார். இவ்வாறு சொல்வது எந்தக் காலத்திலும் வழக்கம் இல்லை. ஆதலின் கல்யாணரங்கருக்கு ஏதோ மன வேறுபாடு இருக்கு மென்று கிருஷ்ணையர் ஊகித்து அறிந் தனர். அப்பால் மறுநாள் போகும்போது கல்யாணரங்கர் முகம் கொடுக்காமல் எதையோ கவனித்துக்கொண்டிருந் தார். வித்துவானுக்குக் கோபம் வந்துவிட்டது. ஒரு பெண் சொல்வது போல ஒரு கீர்த்தனத்தைச் சுருட்டி ராகத்திலே பாடத் தொடங்கினார்.

> பத்துப்பை முத்துப்பை வச்சிரப் பதக்கமும்
> பைபையாப் பணத்தைக் கொடுத்தவர் போலப்
> பாடின பாட்டுக்கும் ஆட்டுக்கும் நீரென்னைப்
> பசப்பின தேபோதும் பலனறி வேன்காணும்

என்று பல்லவியை முடித்தார்.

ஸம்ஸ்தானாதிபதிக்கு அப்போதுதான் தாம் பண்ணியது தவறென்று பட்டது. 'கிருஷ்ணையர் பெரிய பெரிய ஸம்ஸ்தானங்களிலே சிறந்த நிலையில் விளங்கும் தகுதி வாய்ந்தவர். அவர் உடையார்பாளையத்தில் இருப்பது ஸம்ஸ்தானாதிபதிக்கு அதிருஷ்டம்' என்ற வார்த்தை தமிழ் நாட்டில் உலவுவதை அறிந்தவர். அதை அவர் அப்போது நினைத்துப் பார்த்தார். உடனே எழுந்து, "ஸ்வாமி, என்னை மன்னிக்க வேண்டும். நான் பண்ணினது பிழை. உங்கள் பெருமையை உணர்ந்தும் நான் இப்படி இருந்த குற்றத்தை மன்னிக்க வேண்டும். தங்களுடைய கீர்த்தனத்தை மேலே கூறி என்னுடைய குற்றத்தை என்றும் நிலைநிறுத்த வேண்டாம். அதை மறந்து விடுங்கள்" என்று வேண்டினார்.

கனம் கிருஷ்ணையர் புன்னகை பூத்தார். "நான் கீர்த்தனத்தை முடிக்காமல் விடமாட்டேன்" என்று சொல்லி விட்டுப் பல்லவியை மறுபடியும் மாற்றிப் பாடத் தொடங்கினார்.

பத்துப்பை முத்துப்பை வச்சிரப் பதக்கமும்
பரிந்து கொடுத்து மிகச்சுகந் தந்துபின்
பஞ்சணை மீதினிற் கொஞ்சி விளையாடி
ரஞ்சிதமும் அறிந்த மகராஜனே

என்று பல்லவியை ஆரம்பித்து கீர்த்தனையை முடித்தார். முதலில் அமைந்த பல்லவி இகழ்ச்சியாக இருந்தது. அதை இதில் அவர் புகழ்ச்சியாக மாற்றிவிட்டார்.

இப்படி அந்த வித்துவான் பல சந்தர்ப்பங்களிலே பாடின கீர்த்தனங்கள் பல உண்டு. பல நிகழ்ச்சிகளும் உண்டு. அவர் அறுபது பிராயம் வாழ்ந்திருந்தனர். அவருடைய சரித்திரத்தை மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் விரிவாக எழுதி யிருக்கிறார்கள். அவருடைய கீர்த்தனங்களில் ஏறக்குறைய அறுபது உருப்படிகள் இப்போது அச்சில் வெளிவந்து உலவுகின்றன. அவற்றில்

பெரும்பாலானவை பதங்கள். நாயக நாயகி பாவத்தை அமைத்துப் பாடிய அவை மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளன. தமிழ்க் கீர்த்தனங்களைப் பாட வேண்டுமென்ற உணர்ச்சியுள்ளவர்கள் அவற்றைப் பயின்று அடிக்கடி பாட வேண்டியது அவசியம். சிறந்த சங்கீத சாகித்திய வித்துவானாகிய அவருடைய பெயரும் புகழும் இந்த நாட்டிலே நிலைத்திருக்கச் செய்வதற்கு அதுதான் வழியாகும்.

# டாக்டர் உ. வே. சாமிநாதையர்

பழைய காலத்தில் சிறு வகுப்புகளில் உலகநீதி, நல்வழி, வாக்குண்டாம் முதலிய நீதிநூல்களைக் கற்றுக் கொடுப்பார்கள். கிரமமாகக் காப்புச் செய்யுளோடு பாடத்தை ஆரம்பிப்பது வழக்கம். நல்வழியை ஆரம்பிக்கும் போது அதன் காப்புச் செய்யுளாகிய விநாயக வணக்கத்தைப் பிள்ளைகள் படிப்பார்கள்.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்இவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன்-கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா

என்று அந்தக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொள்வார்கள். நாலு பண்டங்களை விநாயகருக்குக் கொடுத்துவிட்டு மூன்று தமிழ்களைக் கேட்பார்கள். விநாயகர் தம்முடைய பங்கிலே லாபம் இருப்பதை எண்ணிச் சங்கத் தமிழ் தந்து விடுவார் என்ற ஞாபகமோ என்னவோ! அது கிடக்கட்டும்.

விநாயகரிடம் சிறு வகுப்பிலேயே சங்கத் தமிழ் வேண்டுமென்று செய்துகொள்ளும் இந்தப் பிரார்த்தனை, தலைமுறை தலைமுறையாகத் தமிழ் நாட்டில் நடந்து வருகிறது.

இந்தப் பிரார்த்தனை சில காலம் நிறைவேறாமலே இருந்தது. நம்முடைய பாட்டனார் காலத்திலும் அவருடைய தகப்பனார் காலத்திலும் சங்கத் தமிழ் வேண்டு மென்று கரிமுகக் கடவுளைப் பிரார்த்திக்கும் பிரார்த் தனைக்குக் குறைவில்லை. ஆயினும் சங்கத் தமிழ் இருந்த இடந்தான் தெரியவில்லை. கிட்டத்தட்ட நூறு வருஷம் இந்தப் பிரார்த்தனை அர்த்தமில்லாத சம்பிரதாயமான வணக்கமாகவே இருந்தது. மறுபடியும் அதற்குப் பிரயோ சனம் கிடைத்தது. இப்பொழுதோ இந்தப் பிரார்த்தனை பூரணமான பலனைக் கொடுத்திருக்கிறது.

இதற்குக் காரணம் துங்கக் கரிமுகத்துத் தூமணி அல்ல; மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி திராவிட வித்யாபூஷணம் மகா வித்வான் டாக்டர் உத்தமதானபுரம் வே. சாமிநாதையரவர்களே. ஆம் இந்தப் பெரியார் தாம் இளமையில் படித்தறியாத சங்க நூல்களைத் தேடி எடுத்து ஆராய்ந்து பதிப்பிக்கத் தொடங்கியமையால்தான் தமிழ் சங்கத் தமிழாக விளங்கலாயிற்று. கம்ப ராமாயணம், பெரிய புராணம், குறள், புராணங்கள், பிரபந்தங்கள் என்ற அளவிலே எல்லைகொண்டு நின்ற தமிழ் உலகம் விரிந்தது. சங்கமலி செந்தமிழ் என்று புலவரெல்லாம் பாராட்டும் தமிழை யாவரும் உணரும் வாய்ப்பு உண்டாயிற்று.

தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள உத்தமதானபுரமென்னும் ஊர் இந்த உத்தமரைத் தமிழுலகுக்குத் தந்து தன் பெயரைப் பெருமைப்படுத்திக் கொண்டது. 1855-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் 19-ஆம் தேதி வேங்கடசுப்பைய ரென்னும் சங்கீத வித்துவானுக்கும் ஸரஸ்வதியம்மா ளென்னும் பெண்மணியாருக்கும் குமாரராக உதித்தவர் சாமிநாதையர். அந்தக் கால முறைப்படி கல்வி பயின்ற பிறகு திருவாவடுதுறை மடத்தில் ஆதீன வித்துவானாக விளங்கிய பெருங் கவிஞராகிய ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்

பிள்ளையவர்களைச் சார்ந்து பாடம் கேட்டார். பிறகு 1880-ஆம் வருஷம் கும்பகோணம் காலேஜில் தமிழ்ப் பண்டிதராக அமர்ந்து மாணாக்கர்களுக்குத் தமிழ்ப் பாடம் சொல்லி வந்தார். கும்பகோணம் காலேஜிலிருந்து சென்னைக்கு வந்து பிரஸிடென்ஸி காலேஜில் தமிழாசிரியராகப் பல வருஷங்கள் இருந்து விளங்கினார். சில காலத்திற்குப் பிறகு சிதம்பரம் மீனாட்சி தமிழ்க் காலேஜில் பிரின்ஸிபாலாகச் சில வருஷங்கள் இருந்தார். இவர்பால் படித்த மாணாக்கர்களெல்லாம் இவரைத் தெய்வம்போலக் கொண்டாடினர். பாட புஸ்தகங்களிலுள்ள பாடத்தைப் படிப்பதோடு நின்றுவிடாமல் மாணாக்கர்கள் மேலும் மேலும் தமிழ் நூல்களைக் கற்கும் வண்ணம் இவர் தமிழில் சுவையுண்டாகச் செய்தார். காலேஜ்களிலும் தனியே வீட்டிலும் இவரிடம் பயின்று தமிழறிவிற் சிறந்தவர்கள் பலர்.

கும்பகோணம் காலேஜில் வேலை பார்த்து வந்த காலத்தில் தமிழ் நூலாராய்ச்சியை இவர் தொடங்கினார். முதலில் தமிழ்ப் பெருங் காவியமாக சீவக சிந்தாமணியைப் பரிசோதித்து. வெளியிட்டார். 1887-ஆம் வருஷம் அதனை வெளியிட்டபோது இவருடைய பதிப்பைக் கண்டு அறிஞர்களெல்லாம் கொண்டாடினர்.

அடுத்த வருஷம் பத்துப் பாட்டை நச்சினார்க்கினியர் உரையோடு வெளியிட்டார். பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்று மூன்று வரிசையாகச் சங்க நூல்களைப் பிரித்திருக்கிறார்கள். பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இருந்த தமிழருடைய நிலைமையையும் கலையையும் நாகரிகத்தையும் வாழ்க்கை முறையையும் தெரிந்துகொள்வதற்கு முக்கியமான கருவிகள்; தமிழ் நாட்டுப் பழஞ் சரித்திரத்திற்குரிய அஸ்திவாரம் போன்றவை.

பத்துப் பாட்டு வெளியானது முதல் தமிழ் நாட்டில் சங்கத் தமிழாராய்ச்சி அரும்பியது. அதனால் தமிழர்களிடையே ஒரு குதூகலமும் கிளர்ச்சியும் எழுந்தன. தொடர்ந்து சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் காவியங்களும் புறநானூறும் இவருடைய பதிப்புக்களாக வெளிவந்தன. சங்க நூல்களோடு பழங் காவியங்களையும் புராணங்களையும் பிரபந்தங்களையும் சிறந்த முறையில் இவர் பதிப்பித்துத் தந்தார். தமிழ் இலக்கியம் விரிவுற்றது. தமிழர் சரித்திரம் பழையது, சிறந்தது என்ற உணர்வு உண்டாகிவிட்டது.

எட்டுத்தொகையுள் ஐந்து நூல்களை இவர் வெளியிட்டார். ஐம்பெருங் காப்பியங்களென்று வழங்கும் ஐந்து புஸ்தகங்களுள் நமக்குக் கிடைப்பன மூன்றே. சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணியென்ற அவற்றை இப்பெரியாரே வெளியிட்டார். அவற்றுள் ஒன்றும் பௌத்த மதக் கொள்கைகளைத் தெரிவிப்பதுமாகிய மணிமேகலைக்கு இவரே உரை எழுதியிருக்கிறார். மிகவும் அருமையான கதையமைப்பையும், பல அரிய செய்திகளையும் தன்பாற் கொண்ட பெருங் கதை என்ற அழகிய காவியம் இப்பெரியாருடைய பேருழைப்பினாலேயே, அழிந்து போகாமல் உயிர் பெற்றது. இவர் பதிப்பித்த புராணங்களிற் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய புராணங்களிற் சிலவற்றைக் குறிப்புரையுடன் பதிப்பித்ததோடு அவருடைய பிரபந்தங்களெல்லாவற்றையும் திரட்டி ஒரு பெரு நூலாகத் தந்திருக்கிறார். பரணி, கோவை உலா, தூது, அந்தாதி முதலிய பிரபந்த வகைகளிற் பலவற்றையும் சில இலக்கண நூல்களையும் தமிழ்நாடு இவருடைய தொண்டின் பயனாகப் பெற்றது.

ஏட்டுச்சுவடிகளாக இருந்த நூல்களைத் தேடி எடுத்து ஆராய்ந்து பதிப்பிக்கும் கலையில் இவர் நிகரற்று விளங்கினார். தமிழ்நாடு முழுவதும் பிரயாணம் செய்து தமக்கு உண்டாகும் சிரமத்தையும் அவமதிப்பையும் பொருட்செல

வையும் பொருட்படுத்தாமல் ஊரூராக வீடுவீடாகச் சென்று இவர் ஏடு தேடிய வரலாறுகள் பல. சுவடிகளைத் தொகுத்துப் பொறுமையோடு ஆராய்ந்து உள்ளதை உள்ளவாறே பதிப்புக்கும் குணம் இவரிடம் இருந்தது. அவசரப்பட்டுக் கொண்டு பொருள் செய்வதும், தம்முடைய கருத்தை நூல்களிற் புகுத்துவதும், மனம் போனபடி திருத்துவதும், வேண்டாதவற்றை விலக்கி வேண்டியவற்றைக் கொள்வதும் ஆகிய செயல்களை இவர் அறவே வெறுப்பவர். எழுத்தெழுத்தாகச் சோதித்து நூலாசிரியருடைய உள்ளத்தை உணர்ந்து மெல்ல மெல்ல விஷயங்களை ஆராய்ந்து செவ்வையாகத் தெரிந்த பிறகே ஒரு நூலை அச்சிடுவார். அதனால் இவருடைய பதிப்புக்களைத் தமிழுலகத்தார் மிகப் பாராட்டுகின்றார்கள். ஆராய்ச்சி செய்பவர்களுக்கு உபயோகமாகக் கூடிய பல செய்திகளை அப்பதிப்பில் இணைத்து வெளியிடும் திறமை மிக்கவர் இவர். ஆராய்ச்சித் திறமையோடு கூடிய முகவுரையும் நூலாசிரியர் உரையாசிரியர் வரலாறுகளும் குறிப்புரையும் அரும்பத அகராதியும் இவர் பதிப்பு நூல்களெல்லாவற்றிலும் காணலாம். இவர் பதிப்பித்த நூல்களில் ஒன்றைமட்டும் ஆழ்ந்து ஒரு மாணாக்கன் படித்தாற்கூடப் பல நூற் கருத்துக்களையும் பல அரிய மரபுகளையும் தெரிந்து கொள்வான். இவர் அறிவு ஆழ்ந்திருந்தது; அகன்றும் இருந்தது.

தேடுவாரும் படிப்பாரும் இன்றிக் குற்றுயிரும் குலையுயிருமாக இருந்த பழந்தமிழ் நூல்களை மாசுநீக்கிப் புதுக்கித் தந்த இப்பெரியார் காலத்திற்கேற்ற வசன இலக்கிய சிருஷ்டியையும் ஏற்றுக்கொண்டார். இரண்டாயிர வருஷங்களுக்கு முன் வழங்கிய தமிழிலே பழகிய இவர் நான்காம் வகுப்பில் படிக்கும் மாணாக்கனுக்கும் விளங்கும்படி தெள்ளத்தெளிந்த நடையிலே எழுதியதைப் பார்த்த தமிழுலகம் ஆச்சரியத்தில் மூழ்கியது. ஒவ்வொரு பொருளையும் ஒவ்வொரு மனிதரையும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் ஊன்றிக் கவனித்து அவற்

றைப்பற்றிச் சிறு சிறு வாக்கியங்களால் தென்றல் தவழ்வது போல இனிமை உண்டாகும்படி எழுதும் இவருடைய எழுத்துக்குத் தனியே ஒரு கவர்ச்சி இருக்கிறது. ஏறக்குறைய இருநூறு தமிழ் நூல்களை அச்சிட்டுப் பாதுகாத்த இந்த மகாமகோபாத்தியாயர் எழுதிய வசனப்பகுதிகள் இருபது புஸ்தகங்களாக வெளிவந்திருக்கின்றன. அவற்றுள் மிகவும் சிறந்தது இவருடைய சுயசரித்திரம். 122 அத்தியாயங்களே வெளிவந்தது; முற்றுப்பெறவில்லை. ஆனாலும் சென்ற நூற்றாண்டிலிருந்த தமிழ்நாட்டின் நிலையையும் உபகாரிகள், புலவர்கள், மடாதிபதிகள் முதலியவர்களுடைய இயல்புகளையும் புலப்படுத்தும் தமிழர் சரித்திரமாக அது விளங்குகிறது. அதில் இந்தத் தாக்ஷிணாத்ய கலாநிதி ஒவ்வொரு நூலையும் அச்சிடுவதற்குத் தாம் பட்ட சிரமத்தை மனமுருகும் முறையில் எடுத்துச் சொல்கிறார். தமிழ் வசன இலக்கியத்தில் அந்தச் சரித்திரம் ஒரு பெரிய நிதி.

தம்முடைய ஆசிரியராகிய ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரத்தை இவர் மிக விரிவாக எழுதி யிருக்கிறார். வேறு சில சரித்திரங்களையும் வெளியிட்டிருக்கிறார். இலக்கியத்திற் கண்ட செய்திகளையும் தாம் கண்டும் கேட்டும் தெரிந்த விஷயங்களையும் அழகுபட விரித்துரைக்கும் சாமர்த்தியம் இவர்பால் இருந்தது. அந்தத் துறையில் இவர் எழுதிய கட்டுரைகள் பல. ஆராய்ச்சித் துறையாக இருந்தாலும் எளிதிற் புலப்படும்படி எழுதுவதே இவருடைய போக்கு. பல இடங்களில் இவர் தம்முடைய சொற்களால் நம் மனக்கண்முன் ஒரு சித்திரத்தைத் தோன்றச் செய்து விடுகிறார்.

நந்தனார் சரித்திரக் கீர்த்தனையை இயற்றிய ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் இப்பெரியார் இளமையில் சில காலம் இசை பயின்றார். பாரதியாரை முதல் முதலில் சந்தித்ததைச் சொல்கிறார் கேளுங்கள்:

'வந்தவர் கோபாலகிருஷ்ண பாரதியாரென்பதை அறிந்த நான் மிக்க வியப்பை அடைந்தேன். அவருடைய புகழையும் நந்தனார் சரித்திரத்தின் அழகையும் உணர்ந்து ஈடுபட்டிருந்த என் இளைய உள்ளத்துக்குப் பாரதியார் ஓர் அழகிய உருவத்தை உடையவராக இருப்பாரென்ற காரணம் இல்லாத தோற்றமொன்று இருந்து வந்தது. நான் கண்ட காட்சியோ அதற்கு நேர் விரோதமாக இருந்தது.

'அகலமான புறங்கால்களுக்குமேல் சூம்பின கால்கள்; பருத்த முழங்கால்கள்; தடித்த இடை முழங்காலுக்குமேல் வஸ்திரம்; கூனல் முதுகு; இறுகின கழுத்து; பெருத்தமுண் டொன்று முன்வந்திருக்கும் குரல்வளை; அந்தக் கழுத்தில் ஏகருத்திராட்சம்; மார்பில் வில்வஓட்டு வில்லையோடுள்ள ருத்ராட்ச கண்டி; பூனைக்கண்; குறுக்கே நீண்ட தலை; அதன்மேல் நாணற்பூவைப்போலப் பறந்துகொண்டிருக்கும் பத்து மயிர்.- இந்தக் கோலத்தோடு பாரதியார் இருப்பா ரென்று நான் கனவிலும் நினைத்ததில்லை. அத்தகைய உருவத்தினால் இவருடைய சங்கீதத்துக்கோ சிவபக்தி வைராக்கியத்துக்கோ இழுக்கு ஒரு சிறிதும் உண்டாக வில்லை. கோணலையுடைய வீணையிலிருந்தல்லவா இனிய இசை எழுதுகின்றது? ஜடமாகிற அதற்கே அவ்வளவு சக்தி இருக்கும்போது, ஈசுவர சக்தியினால் உண்டாகிய சாரீர வீணைக்கு எவ்வளவு கோணல் இருந்தால்தான் என்ன?'

சங்ககாலத்துக் கவிதையின் இயல்பை இதோ எடுத்துக் காட்டுகிறார்:

'அக்காலத்துப் புலவர்களின் கவிதை இயற்கைத்தாயின் மடியில் தவழ்ந்து, தெய்விகக் காதலும் அறந்திறம்பா வீரத் திலும் விளையாடி, சமரஸ நிலையில் வீற்றிருக்கின்றது. கவிஞர்களுடைய சிருஷ்டிகளில், அருவிகள் இடையறாத சங் கீதத்தோடு வீழ்வதும், அதில் மகளிர் துளைந்து விளையாடி இன்புற்று மலர்களைப் பறித்துப் பாறையிலே குவித்து

அழகு பார்ப்பதும், நாயகன் ஒருவன் வேட்டையாடிக் கொண்டு வருவதும், அவன் அம்மகளிர் கூட்டத்திலுள்ள நாயகி ஒருத்தியைக் காண்பதும், இருவர் கண்களாகிய மடை வழியாகப் பாய்ந்த அன்பு வெள்ளத்தில் இருவருள்ளமும் கலந்து கரைவதுமாகிய நிகழ்ச்சிகளைப் பார்க்கிறோம்.

'ஏழை இடையன் வீட்டில் பந்தற்காலில் கட்டியிருக்கும் தழையை ஆட்டுக்குட்டி உண்பதும், கடற்கரையிள்ள வலையர் தெருக்களில் முத்துக்களைக் கிளிஞ்சலுக்குள் இட்டுக் குரங்குகள் குழந்தைகளோடு கிலுகிலுப்பை விளையாடுவதும், இடையன் மாலைக்காலத்தில் தன்னுடைய புல்லாங்குழற் கீதத்தினால் பசுக்களையெல்லாம் ஒன்று கூட்டி வீட்டுக்கு வருகையில் வழியிலே மலர்ந்துள்ள முல்லைப் பூக்களைக் கொத்தோடு பறித்துத் தலையிற் செருகிக் களிப்பதுமாகிய காட்சிகளைக் காண்கிறோம்—நெடுநாட்களாகத் தீமூட்டப் படாமையால் காளான் முளைத்த அடுப்பும் ஓட்டைக் கூரையும் உள்ள வறுமை நிலையம் ஒரு பக்கம் சித்திரிக்கப்படுகின்றது. பல பண்டங்களை விற்கும் இடங்களில், பகலில் கொடிகளாலும் இரவில் விளக்குகளாலும் பாஷை அறியாதவர்களும் அறிந்து கொள்ளும்படி இன்ன இன்ன பண்டங்கள் விற்கப்படும் என்பதைக் குறிப்பிக்கும் கடை வீதிகளிலும், அரண்மனைகளிலும் திருமகள் நடனம் புரியும் கோலம் ஒருபுறம் சித்திரிக்கப்படுகின்றது.'

இவருடைய ஹாஸ்யத்திற்குச் சில உதாரணங்கள்:

'வில்லைச் சேவகர்களே ஒரு தனி வகுப்பு. ஜனங்களுடைய ஆவலை அளந்து பார்த்துச் சமயத்தில் 'பிகு' பண்ணுவதும், கல் நெஞ்சர்களையும் கலங்க வைப்பதும், எந்தச் சமயத்தில் மனிதர்களிடமிருந்து லாபம் பெறலாமென்பதை அறிந்து நடப்பதும் அவர்களுடைய தொழில் இரகசியங்கள். பள்ளிக்கூடத்துச் சேவகனைப் பரம சாது வென்று சொல்ல வேண்டும்; கலெக்டர் கச்சேரி, மற்ற

ஆபீஸுகள், ஆஸ்பத்திரிகள் முதலிய இடங்களிலுள்ள வில்லைமார்ப வீரர்கள் எல்லோர் கண்ணிலும் விரலை விட்டு ஆட்டி விடுவார்கள். ஆஸ்பத்திரியைத்தான் பார்க்கலாமே. அந்தப் பியூன்களுக்குப் பிரீதி செய்யாவிட்டால் சாமான்யமாக ஆஸ்பத்திரிக் கோட்டைக்குள் நுழைய முடிகிறதா; எத்தனை கேள்விகளை அவர்கள் சரமாரியாகப் போடுகிறார்கள்? எவ்வளவு சட்டம் பேசுகிறார்கள்? அந்தப் பார்வையிலேதான் எத்தனை கம்பீரம்! அவர்கள் கையில் அதிகமாக வேண்டாம், இரண்டணாவை ரகசியமாக வைத்து அழுத்துங்கள்; அப்புறம் அவர்கள் உங்களுக்கு அடிமையாகி விடுகிறார்கள். அவர்களுக்குத் தெரியாமல், அவர்கள் தயையை எதிர்பாராமல், ஆஸ்பத்திரியில் நுழைபவர் யாரும் இல்லை; யமன் ஒருவனுக்குத்தான் அந்தச் சுதந்திரம் உண்டு.'

பிரஸிடென்ஸி காலேஜில் இவர் முதலில் வேலையை ஒப்புக்கொண்டபோது ஒரு பழைய மேஜை இவருக்கு அளிக்கப்பட்டதாம். அந்த மேஜையின் பிரபாவத்தைப் பற்றிப் பிரின்ஸிபாலிடம் இவர் சொன்னதைக் கேளுங்கள்:

'இங்கே சௌகரியங்களுக்கு என்ன குறை? இதோ இந்த மேஜையைப் போல வேறொன்றை எங்கும் பார்க்க முடியாது. ஏறக்குறைய நூறு வருஷ சரித்திரத்திற்குச் சாட்சியாக இது விளங்குகிறது. அக் காலத்துப் பண்டிதர்கள் கற்பலகையையும் பலப்பங்களையும் உபயோகப்படுத்தி வந்தனரென்பதை இந்தப் பள்ளங்கள் தெரிவிக்கின்றன. இதனோடு பழகிய புலவர்களைப்பற்றிய செய்திகள் எனக்குத் தெரியும். அவர்களுடைய ஞாபகத்தை இம்மேஜை உண்டாக்குகிறது. இந்த நாற்காலியும் இதற்கேற்ற ஜோடியென்றே தோற்றுகிறது. இந்த இரண்டினுடைய பெருமையையும் நான் மட்டும் அறிந்து மகிழ்வதுதான் ஒரு குறை. பலபேர் அறியும்படி ஒரு காட்சிச் சாலையில் இருந்தால் நன்றாக இருக்கும்.'

இவர் வாழ்க்கையிலும் பேச்சிலும் எழுத்திலும் எளிய நடையையே உடையவராக விளங்கினார்; ஆயினும் பலபேர் சேர்ந்தும் செய்ய முடியாத அரிய செயல்களைச் செய்தார். தம்முடைய 87-ஆம் ஆண்டில், 1942-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 28-ஆம் தேதி தமிழ் உலகத்தினின்றும் பிரிந்தார்.

தமிழ் உள்ளளவும் இவர் புகழ் நின்று நிலவும். இதைத் தான் சுப்பிரமணிய பாரதியார் சொல்கிறார்.

நிதியறியோம் இவ்வுலகத் தொருகோடி
　　இன்பவகை நித்தந் துய்க்கும்
கதியறியோம் என்றுமனம் வருந்தற்க
　　குடந்தைநகர்க் கலைஞர் கோவே
பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
　　காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய் அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்
　　இறப்பின்றித் துலங்கு வாயே.

இறவாத புகழுடைய நூல்களைத் தந்த இவர் இறந்தும் இறவாத வான்சுடர் மண்டலத்திலே ஒளிர்கிறாரென்பது உண்மையே அல்லவா?

# ஒரே எழுத்து

## 1

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் தமிழிலே ஒரு புதிய யுகத்தைப் புகுத்தியவர்கள். தமிழ் இலக்கிய சரித்திரத்திலே அவர்கள் தமிழ்த் தொண்டு புரிந்த காலம் ஒரு தனிச் சகாப்தம் போன்றது. தமிழிலக்கியத்தில் சங்க நூல்கள் மீண்டும் புத்துயிர் பெற்றுத் தமிழர்களுடைய உள்ளத்தில் ஊன்றத் தொடங்கிய இக்காலத்தைச் சாமிநாத சகாப்தம் என்றே சொல்லி விடலாம்.

ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து சத்திய சோதனை செய்வதற்கு அளவற்ற பொறுமை வேண்டும். வருஷக்கணக்காக ஏட்டுச் சுவடிகளில் ஏறியிருக்கிற புழுதியைத் தட்டிக் கொட்டிச் சுத்தம் செய்வது பெரிதல்ல; அந்த ஏட்டுச் சுவடிகளில் 'எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்; படித்தவன் பாட்டைக் கெடுத்தான்' என்றபடி அயர்ச்சியாலோ, அறியாமையிலோ புகுந்த பிழைகளெல்லாம் பிற்காலத்தில் கூலிக்குப் பிரதி பண்ணுவோரால் நித்தியத்துவத்தை அடைந்து விட்டன. அவற்றையெல்லாம் உணர்ந்து மாசு களைந்து உண்மை காண்பதற்குச் சாமான்ய ஆற்றல் போதாது. அதற்கென்று தனி உள்ளம், தனிக் கண் வேண்டும்.

பற்றற்ற உள்ளத்தோடு, உண்மையை உணர வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு, ஆராய்ச்சி செய்தமையால் ஐயரவர்கள் பிறராலே செய்வதற்கரிய காரியங்களைச் செய்தார்கள். அமெரிக்காவைக் கொலம்பஸ் கண்டு பிடித்தானென்று அவனைக் கொண்டாடுகிறோம். அந்தக் கொலம்பஸ் அப்பொழுது கண்டு பிடிக்காவிட்டால், அமெரிக்கா சமுத்திரத்தில் முழுகிப் போய் விடாது. வேறொரு கொலம்பஸ் வந்து அதைக் கண்டுபிடித்திருப்பான். ஐயரவர்கள் கண்டு எடுத்துத் துலக்கி வெளியிட்ட இலக்கியச் செல்வமோ அத்தகையதன்று; மனித சமுதாயத்தினருக்கு லட்சியமே இல்லாத ராமபாணப் பூச்சிகள் பல புலவர்களைக் கொன்று கொண்டிருந்தன. கறையான்கள் பல இலக்கியச் செல்வங்களை மண்ணாக மாற்றிக் கொண்டிருந்தன. அவற்றை இறவாமல் எடுத்துப் பாதுகாக்கும் திருத்தொண்டை ஐயரவர்கள் செய்திராவிட்டால் நாம் இது காறும் இழந்த நூல்களுக்குக் கணக்கு வழக்கே இராது.

ஏடு தேடித் தொகுத்து ஆராயும் பண்பு ஐயரவர்களுக்கு இளமை தொடங்கியே இருந்து வந்தது. அவர்கள் திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்

களிடத்திலே பாடம் கேட்டவர்கள். அக்காலத்தில் அச்சுப் புஸ்தகங்கள் அதிகமாக வெளி வரவில்லை. ஆதலால் சுவடிகளை வைத்துக்கொண்டு படிப்பதே பெரும்பாலோரின் வழக்கமாக இருந்து வந்தது. ஐயரவர்களும் இளமையில் ஏட்டுச்சுவடிகளை வாசிக்கக் கற்றுக் கொண்டார்கள். ஏட்டில் எழுதுவதையும் பழகினார்கள். மிக வேகமாக எழுதுவதில் அவர்கள் வல்லவர்கள். தம்முடைய ஆசிரியராகிய பிள்ளையவர்கள் புதிய நூலை இயற்றிச் சொல்லி வரும் போது ஐயரவர்கள் அதனை ஏட்டில் எழுதி வந்தார்கள்.

எந்த நூலானாலும் பல ஏடுகளை வைத்துச் சோதிக்கும் பழக்கம் அவர்கள் மாணாக்கராக இருந்த காலத்திலேயே ஏற்பட்டது. ஏதேனும் அச்சுப் புஸ்தகம் கிடைத்தால் ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு புஸ்தகத்திலுள்ள பிழைகளைத் திருத்திக் கொள்வதோடு நல்ல பாடங்கள் இருந்தால் அவற்றையும் குறித்துக் கொண்டார்கள். அக்காலத்தில் ஒவ்வொரு காண்டமும் ஒவ்வொரு புஸ்தகமாக வெளியிட்டிருந்த கம்பராமாயணம் அவர்களுக்குக் கிடைத்தது. பிள்ளையவர்களிடத்தில் இராமாயண பாடம் கேட்டார்கள். திருவாவடுதுறை மடத்தில் இருந்த ஏட்டுப் பிரதிகளோடும், பிள்ளையவர்களிடத்தில் இருந்த ஓலைச் சுவடியோடும் ஒப்பிட்டுப் பார்த்துத் திருத்தங்களைக் குறித்துக் கொண்டார்கள். அவ்வாறு ஒப்பு நோக்கியதில் விளங்காமல் இருந்த பல அழகிய பாட பேதங்கள் கிடைத்தன.

## 2

பிள்ளையவர்கள் காலமான பிறகு ஐயரவர்கள் திருவாவடுதுறையாதீனத்தில் வித்துவானாக இருந்து தம்பிரான்களுக்கும் பிறருக்கும் பாடம் சொல்லி வந்தார்கள். ஆயினும் ஆதீன வித்துவான் என்று சொல்லிக்கொள்வதோ, எழுதுவதோ அவர்களுக்கு வழக்கம் இல்லை. 'பிள்ளையவர்களும்

ஆதீன வித்துவான். நானும் ஆதீன வித்துவானா!' என்று அவர்களுடைய உள்ளம் எண்ணியது. அக்காலத்தில் ஆதீன கர்த்தராக விளங்கிய மேலகரம் சுப்பிரமணிய தேசிகர், ஐயரவர்களிடத்தில் அளவற்ற அன்பு பூண்டவர். சில நூல் களை அவர்களுக்குப் பாடஞ் சொன்னவர். ஐயரவர்களுக்கு இறுதிக் காலம் வரையில் தேசிகரிடம் இருந்த பேரன்பும் நன்றியறிவும் சொல்லில் அடங்குவன அல்ல. அவர்களோடு ஒரு நாள் பழகினாலும், திருவாவடுதுறை ஆதீனத்தையும் சுப்பிரமணிய தேசிகரையும் பற்றி அவர்கள் ஒரு முறை யாவது சொல்வதைக் கேட்கலாம். தேசிகர் ஐயரவர்களுக்கு எழுதிய கடிதங்களில் 'நமது ஆதீன மகாவித்துவான்' என்று எழுதியிருப்பதை நான் பார்த்திருக்கிறேன்.

ஒரு நாள் சுப்பிரமணிய தேசிகர் புலவர்களையும் அடியார்களையும் கண்டு சல்லாபம் செய்யும் இடமாகிய ஒடுக்கத்தில் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி வடமொழி தென்மொழி வித்துவான்களும் வேறு பல அடியார்களும் இருந்தனர். ஐயரவர்களும் அங்கே இருந்தார்கள்.

அப்பொழுது அங்கே ஒரு வைஷ்ணவத் தமிழ் வித்து வான் வந்தார். அவர் ஆங்கிலமும் தெரிந்தவர். தேசிகர் அவரை வரவேற்று உட்காரச் செய்தார். அவருடைய க்ஷேம லாபத்தை விசாரித்தார். பிறகு அங்குள்ள வடமொழி வித்துவான் ஒருவரோடு, வந்த வைஷ்ணவர் பேசத் தொடங் கினார். பேச்சு யோகக்ஷேமத்தில் ஆரம்பித்து சாஸ்திரத் திலே புகுந்து சைவ வைஷ்ணவ பேத சர்ச்சையில் இறங் கியது. திருமால் அவதாரங்களின் சிறப்பையும் சிவபெரு மான் அவதாரங்களின் இயல்பையும் ஐயங்கார் எடுத்துச் சொன்னார். வடமொழி வித்துவானாகிய சாஸ்திரிகள் அந்த அவதார தத்துவங்களைச் சாஸ்திரப் பிரமாணங் களுடன் விளங்கினார். வித்துவான்களுக்குள் விவாதம் நேர்ந்தால் கேட்பவர்களுக்கு லாபம் அல்லவா? சபையில்

உள்ளவர்கள் மிக்க சுவாரஸ்யத்தோடு இந்த விவாதத்தைக் கவனிக்கலாயினர்.

ஐயங்கார் பக்கம் சிறிது மெலிவடையலாயிற்று. அவருக்கு வாதம் செய்யப் போதிய சரக்கு இல்லை. ஆகையால் தம்முடைய குரலை உயர்த்திச் சப்தம் போட்டுப் பேச ஆரம்பித்தார். நயத்தக்க நாகரிகம் அறிந்த சுப்பிரமணிய தேசிகர் இதை உணர்ந்தார். மெல்ல இடையிலே பேச்சுக் கொடுத்து விஷயத்தை வேறு வழியிலே திருப்பிவிட்டார். ஐயங்காரைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லத் தொடங்கி, "இவர்கள் தமிழில் நல்ல பாண்டித்தியம் உடையவர்கள். கம்ப ராமாயணத்தில் நல்ல பழக்கம் உண்டு. இங்கிலீஷும் தெரிந்தவர்கள்" என்று பாராட்டினார்கள்.

அதைக் கேட்டு அங்கே அமர்ந்திருந்த ஐயரவர்கள், "கம்பராமாயணத்தில் இவர்களிடம் சந்தேகம் கேட்கலாமோ?" என்று தேசிகரைக் கேட்டார்கள்.

"நன்றாகக் கேட்கலாமே!" என்று அவர் சொல்லவே ஐயரவர்கள் ஐயங்கார் ஸ்வாமியிடம் சந்தேகம் கேட்கத் தொடங்கினார்கள்; ஒரு பாட்டைச் சொல்லி அதற்குத் தெளிவான அர்த்தம் வேண்டுமென்று சொன்னார்கள்.

அந்தப் பாட்டு அயோத்தியா காண்டத்தில் மந்திரப் படலத்தில் உள்ளது; தசரதனுடைய அமைச்சர்களின் இயல்பைப் புலப்படுத்துவது. அச்சிட்டிருந்த கம்பராமாயணத்தில் அந்தப் பாட்டு தவறான பாடத்துடன் காணப்பட்டது. அதை ஐயரவர்கள் படித்தபோது பொருள் விளங்காமல் தடுமாறினார்கள். பிறகு ஏட்டுச் சுவடியை வைத்து ஆராய்ந்த போது ஒரே ஓர் எழுத்து வித்தியாசமாக இருந்தது ஆனால் அந்த ஒரெழுத்தினது வித்தியாசத்தாலே பாட்டின் பொருள் பளிச்சென்று விளங்கிவிட்டது.

ஐயங்காரிடம் ஐயரவர்கள் அச்சிலே கண்ட உருவத்தில் பாட்டைச் சொன்னார்கள். பாட்டு வருமாறு:

அறுபதி னாயிரர் என்னும் ஆண்டகைக்கு
உறுதியில் ஒன்றிவர்க் குணர்வென் றுன்னலாம்
பெறலருஞ் சூழ்ச்சியர் திருவின் பெட்பினர்
மறிதிரைக் கடலென வந்து சுற்றினார்.

தசரதனுக்கு அறுபதினாயிரம் பேர் மந்திரிமார்கள். அவர்கள் பெறுவதற்கரிய முன் யோசனையையும் ஆலோசனை செய்யும் திறமையையும் திருமகள் அருளையும் உடையவர்கள். சமுத்திரமே பல அலைகளுடன் வந்தாற் போல வந்து தசரதனைச் சூழ்ந்து கொண்டார்களாம்.

பாட்டில் முதல் இரண்டடி விளக்கமாக இல்லை; பழைய அச்சுப் புஸ்தகப் பாடம் தெளிவாக இல்லை. முதல் அடி சுத்தமாக விளங்கவில்லை. 'அறுபதினாயிரர் என்னும் ஆண்டகைக்கு'—என்பதில் வார்த்தை ஒன்றும் கடினமாக இல்லை. ஆனால் வார்த்தைகள் ஒன்றோடொன்று இசைந்து பொருத்தமான பொருள் ஒன்றைத் தரவேண்டும்! அதுதான் இல்லை.

"இந்தப் பாட்டின் முதல் இரண்டடிக்குப் பொருள் விளங்கவில்லை. கிருபை செய்து தெரிவிக்க வேண்டும்" என்று ஐயரவர்கள் கேட்டார்கள். அவர்கள் ஏட்டுச் சுவடியில் கண்ட பாடம் பொருட் சிறப்பும் திருத்தமும் உடையதாக இருந்தாலும், அச்சுப் புஸ்தகத்தில் இருந்த பாடத்திற்கு ஏதாவது பொருத்தமான பொருள் இருக்கலாமோ என்று ஐயுற்றார்கள். கம்பராமாயணத்தில் வல்லவரென்று அந்த வைஷ்ணவ வித்துவானைப்பற்றித் தேசிகர் சொல்லவே, அவரிடம் இந்த விஷயத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்றே கேட்டார்கள்.

ஆனால் ஐயரவர்கள் கேட்ட கேள்வி அந்த வித்துவானைச் சிந்தனையில் ஆழ்த்தியது. பாட்டுக்குச் சரியான படி பொருள் செய்ய மார்க்கமில்லாமல் தவறான பாடம்

அமைந்திருக்கும் போது என் செய்வது! அவர் யோசித்துப் பார்த்தார்; ஒன்றும் புலப்படவில்லை. அதுவரைக்கும் சடசடவென்று சாஸ்திரிகளோடு பேசி வாதம் செய்தவர் பேசாமல் கல்லுருவம்போல் ஆகிவிட்டார். அவர் உடம் பெல்லாம் வேர்த்தது.

அவர் கோலத்தைப் பார்த்து அங்கிருந்த வித்துவான் கள் ஆச்சரியமுற்றார்கள். அவர்பால் முன்பு காணப்பட்ட படபடப்பும் பின்பு காணப்பட்ட மாறுபாடும் அவர்களை வியப்புக் கடலில் ஆழ்த்தின.

கடைசியில் வித்துவான், "இப்போது புலப்படவில்லை. ஆலோசனை செய்து சொல்லுகிறேன்" என்று சொல்லி, சிறிது நேரத்தில் எழுந்து விடைபெற்றுக்கொண்டு சென்று விட்டார்.

அச்சுப் புஸ்தகத்தில் அக்காலத்தினருக்கு இருந்த நம்பிக்கை அளவற்றது. அதில் பிழை இருக்கலாமென்ற நினைவே அவர்களுக்கு இராது. வைஷ்ணவ வித்துவான் பாட்டின் பாடம் பிழையாக இருக்கலாமென்று நினைக்கவே இல்லை.

அவர் எழுந்து சென்றவுடன் சுப்பிரமணிய தேசிகர் ஐயரவர்களைப் பார்த்து, "என்ன சாமிநாதையர், அந்தப் பாட்டுக்குப் பொருள் உமக்குத் தெரியாதா?" என்று கேட்டார்.

"இந்தப் பாடம் தவறென்று எண்ணுகிறேன். 'அறுபதி னாயிரர் எனினும் ஆண்டகைக்கு, உறுதியில் ஒன்றிவர்க்கு உணர்வு என்று உண்ணலாம், பெறலருஞ் சூழ்ச்சியர்' என்ற பாடம் ஏட்டுச்சுவடியில் இருந்தது. தசரதனுக்கு அறுபதி னாயிரம்பேர் மந்திரிகளானாலும் இவர்கள் அனைவருக்கும் உணர்வு ஒன்றே என்று சொல்லும்படியான ஆலோசனைத் திறமுடையவர் என்று பொருள் செய்வதற்கு இந்தப் பாடம் உதவியாக இருக்கிறது. பொருள் சிறப்பாக இருப்பதனால்

இந்தப் பாடமே நன்றாக இருக்கிறது. ஆனாலும் அச்சில் உள்ள பாடத்துக்கும் ஏதாவது நல்ல பொருள் உண்டோ என்று தெரிந்து கொள்ளத்தான் கேட்டேன்'' என்று விநயத்தோடு ஐயரவர்கள் விடை கூறினார்கள்.

எல்லாவற்றையும் வியப்போடு கவனித்துக் கொண்டிருந்தவரும் ஐயங்காரோடு வாதம் செய்தவருமாகிய சாஸ்திரிகள் ஐயரவர்களைப் பார்த்து, ''இந்தப் பாட்டு எந்தக் கிரந்தத்தில் உள்ளது?'' என்று கேட்டார்.

''கம்ப ராமாயணத்தில் உள்ளது.''

''அதில் இதைப்போல எத்தனை பாடல்கள் உண்டு?''

''பதினாயிரம் பாடல்கள் இருக்கின்றன.''

''அப்படியா! இந்த மாதிரி முரட்டுப் பேர்வழிகள் பதினாயிரம் பேரை அந்தக் கிரந்தத்தைக் கொண்டு அடக்கி விடலாம் போலிருக்கிறதே!'' என்று சொல்லிச் சிரித்தார் சாஸ்திரிகள். மற்றவர்களும் சேர்ந்து சிரித்தார்கள்.

## 3

அந்தப் பாட்டின் முதல் அடியில் 'அறுபதினாயிரர் என்னும்' என்ற பாட்டு ஏட்டுச் சுவடியின் உதவியால் 'அறுபதினாயிரர் எனினும்' என்று திருந்தியது. 'ன்' என்ற எழுத்து 'னி' என்று மாறியதால் பாட்டின் பொருளிலே புகுந்திருந்த இருள் விலகியது. 'அறுபதினாயிரர் என்று சொல்லும் தசரதனுக்கு' என்று அர்த்தம் பண்ணினால் பொருத்தமாக இல்லை. 'அறுபதினாயிரம் பேர் ஆனாலும் எண்ணத்தால் ஒருவர்' என்று சொன்னால் எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது! ஒரு குடும்பத்தில் ஒருவர் போன வழி மற்றவர் போகாமல் எவ்வளவு சங்கடங்கள் விளைகின்றன. நாட்டிலே ஆயிரம் கட்சிகள் மூண்டு பொது நலத்திற்கு எவ்வாறு கேடுசூழ்கின்றனவென்பதை இன்றைய உலகம் நன்கு அறியும். இத்தகைய உலகத்தில் ஓர் அரச

னுக்கு அறுபதினாயிரம்பேர் மந்திரிமார்களென்றால், அதுவும் அவர்கள் வேறுபாடான நோக்கம் கொண்டிருந்தவர்களானால், அரசனுக்கு அவர்களால் என்ன உபயோகம் உண்டாகப் போகிறது? ஆகவே 'அளவிலே அறுபதினாயிரர் என்று மலைக்க வேண்டாம். எல்லோரும் தசரதனுடைய நன்மையைக் கருதும் விஷயத்திலும் அரசியல் ஆலோசனைகளிலும் ஒரே மாதிரியான சிரத்தை உடையவர்கள்; ஒன்றுபட்ட நோக்கம் பெற்றவர்கள்' என்று கம்பர் தெரிவிக்கிறார். தசரதர் நிர்வாக சபையில் எந்தக் காலத்திலும் 'ஏகமனசாகவே' தீர்மானங்கள் நிறைவேறும் என்று இந்தக் காலத்து அரசியல் பாஷையிலே நாம் கொள்ளலாம்.

இத்தகைய சிறந்த பொருளைக் கொள்வதற்கு 'எனினும்' என்ற பாடந்தான் ஏற்றதாக இருக்கிறது. 'னி' என்ற ஓர் எழுத்து அங்கே இல்லாமல் 'ன்' என்று இருந்தாலும் இந்தச் சிறப்பு வருமா?

ஐயரவர்கள் தம்முடைய வாழ்க்கையில் இவ்வாறு கண்டு பிடித்த பாடம் அனந்தம். அச்சிட்ட நூலாக இருந்தாலும் ஏட்டுச் சுவடிகளோடு ஒப்பிட்டுத் திருத்தி வைத்துக் கொள்ளும் இந்த அருமையான வழக்கத்தை அவர்கள் இறுதிக் காலம் வரையில் கைக்கொண்டிருந்தார்கள். பாடபேதங்களின் அருமை அவர்களுக்கல்லவா தெரியும்!

# தமிழ்த் தாத்தாவும் காந்தித் தாத்தாவும்

தம்முடைய வாழ்க்கை முழுவதையுமே சத்திய சோதனையாக்கி அந்தச் சோதனையில் வெற்றி பெற்று விளங்கும் பெரியார் மகாத்மா காந்தியவர்கள். தம்முடைய

சுய சரித்திரத்திற்குச் 'சத்திய சோதனை' என்ற அழகிய பெயரையே வைத்திருக்கிறார். தமிழ் நாட்டில் தமிழிலக்கியப் புதையலை எடுத்துத் துப்புத் துலக்கி வெளியிட்டு இன்று சுவர்க்கவாசியாக விளங்கும் மகா மகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்களும் சத்திய சோதனை செய்த திருக்கூட்டத்தாருள் ஒருவர். தம் வாழ்க்கையையே இலக்கியமாக்கி அதன்கண் சத்திய சோதனை செய்யலானார் காந்தித் தாத்தா. தமிழிலக்கிய உலகிலே புகுந்து பல காலமாக மங்கி மறைந்து மாறிக் கிடந்த இலக்கியங்களுக்குள்ளே புகுந்து சத்திய சோதனை செய்தார் தமிழ்த் தாத்தா. அறிவாலும் தியாகத்தாலும் அன்பினாலும் இருவரும் தம்முடைய சோதனைகளில் வெற்றி பெற்று வந்தவர்கள். ஒருவர் உலகறிய வெற்றி பெற்றார்; மற்றொருவர் தமிழுலகறிய வெற்றி பெற்றார்.

தம்முடைய வாழ்க்கையிலே உண்மையைக் காண்பதொன்றையே லட்சியமாகக் கொண்டவர் காந்தித்தாத்தா. எவ்வளவு இடையூறு நேர்ந்தாலும், கவர்ச்சிமிக்க பகைஞர் வரினும், ஆற்றல் மிக்க எதிர்ப்பு வரினும் எல்லாவற்றையும் சாந்தத்தோடு புன்னகையுடன் சகித்துப் பகைவரும் போற்றும் நிலையில் மேலெழுந்து நிற்கிறார். தமிழ்த் தாத்தா இலக்கிய சோதனை செய்யப் புகுந்தபோதும், புகுந்தபிறகும் உண்டான இடையூறுகள் கொஞ்ச நஞ்சமல்ல. மதவெறி, பொறாமை, வறுமை எல்லாம் அவருக்கு எதிரே நின்றன. 'சைவ மடத்தில் படித்தவர் ஜைன நூலையா பதிப்பிப்பது?' என்று சமயத்தின் பெயரால் ஒரு கூட்டத்தார் உறுமினர். இவ்வளவு காலம் பெரும் புலவர்கள் செய்யாத வேலையா இவர் செய்துவிடப் போகிறார்!' என்ற அலட்சிய புத்தியோடு கண்ணைச் சிமிட்டி ஏளனம் செய்தார் ஒரு சாரார். தமிழிலக்கியத்தைப் பூம்பொழிலென்றும், கற்பகச் சோலையென்றும் நாம் சிறப்பிக்கிறோம். சங்க இலக்கியம் அக்

காலத்தில் சோலையாகவா இருந்தது? கறையான் புற்று எழுந்து, கரப்பான் பூச்சி பந்தலிட, ஆற்று நீரால் அறுப் புண்டும், தீயின் நாக்கினால் சுவைக்கப் பெற்றும், மனிதர் புக முடியாத பெருங் காடாகக் கிடந்தது. இந்தக் காட்டில் சத்திய சோதனை செய்யப் புறப்பட்ட ஐயரவர்கள் தம் கூரிய அறிவாகிய கோடரியையும் இணையற்ற தமிழன் பாகிய கட்டுச்சாதத்தையும் பரந்த நூலறிவாகிய கவசத் தையும் தம் துணையாகக் கொண்டு புகுந்தார்; வழி கண் டார்; பயன் மரங்களையுங் கண்டார்; பழங்களையும் தொகுத்தார்; தமிழர் விருந்தயர வழங்கினார். இந்தச் சத்திய சோதனையை அப்பெரியார் எழுதிய 'என் சரித்திரம்' நன்றாக தெரிவிக்கிறது.

இப்படி, சத்திய சோதனையை செய்த இரண்டு தாத் தாக்களும் சந்தித்தால் எப்படி இருக்கும்? சந்தித்தார்கள். சந்தித்தபோது நிகழ்ந்தவற்றை, பேசியவற்றைக் கண்ணால் கண்டும் காதால் கேட்டும் இன்புற்றேன்.

∴ ∴ ∴

1937-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் சென்னையில் ஹிந்தி பிரசார சபையில் பாரதீய சாகித்திய பரிஷத்தின் இரண்டாவது மகாநாடு நடைபெற்றது. அதன் தலைவர் காந்தித் தாத்தா. வரவேற்புக் கழகத்தின் தலைவர் தமிழ்த் தாத்தா. 'பாரதவர்ஷத்திலுள்ள பலவேறு நாடுகளினின்றும் இலக்கிய ஆராய்ச்சியின் பொருட்டுப் பல அறிஞர்கள் வந்து கூடியிருந்தார்கள்.'

மகாநாடு நடப்பதற்கு முன்னர், தமிழ்ப் பெரியார் காந்தியடிகளைப் பார்க்கச் சென்றார், ராஜாஜி அவரை அறிமுகப் படுத்தினார். காந்தியடிகள், "உட்காருங்கள் ஐயா!" என்று தமிழிலே சொல்லி வரவேற்றார். அப்படிச் சொல்லும்போது தம் இருக்கரங்களை உயரத் தூக்கி அழுத்துவதுபோல பாவனை செய்தார். வார்த்தையில்

'உட்க்காருங்கள்' என்று 'க்'கை அழுத்தியதும் கைகளை அழுத்தியதும் சேர்ந்தாற் போல் நிகழ்ந்தன. இரண்டு கிழவர்களும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

மகாநாடு ஆரம்பமாயிற்று. தமிழ்த் தாத்தாவின் பிரசங்கம் தமிழிலே இருந்தது. அதை ஹிந்தியில் மொழி பெயர்த்துத் தனியே அச்சிட்டிருந்தார்கள். கையிலே கழியை ஊன்றிக்கொண்டு அறிவினால் பெருத்த தலைக்கு மேலே உருவினாற் பெருத்த தலைப்பாகை தனியடையாளமாக விளங்க, மேடைமேல் ஐயரவர்கள் ஆஜானுபாகுவாக நின்றபோது, பொதியமலைதான் நிற்கிறதோ என்று தோற்றியது.

வரவேற்புப் பிரசங்கம் தமிழின் பழமையையும், விரிவையும், தமிழ் நூல்களின் இனிமையையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துச் சொல்லியது. சங்க இலக்கியங்களின் அழகை மிக அருமையாகப் படம் பிடித்துக் காட்டுவது போலப் பெரியார் வருணித்தார்.

'உலகத்துப் பேரறிஞர்களாற் புகழப் பெற்றவரும், தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரும் ஆகிய மகாத்மா காந்தியடிகளின் அன்பினால் உண்டான இந்த மகாசபையில் நானும் கலந்துகொள்ளும்படி நேர்ந்த இந்நாளை என் வாழ்க்கையிற் சிறந்த நாளாக எண்ணுகின்றேன்' என்று தம் மகிழ்ச்சியையும் காந்தியடிகளின்பாலுள்ள மதிப்பையும் தெரிவித்துக் கொண்டார்.

அவையடக்கத்திலேயே அவருடைய பெருமையும் வெளிப்படுகிறது. தமிழ் வித்துவான்களின் நிலைமை புலவர்களின் ஒற்றுமை, பிற நாட்டினரோடு பழக்கம், தமிழின் பழமை, தமிழின் சிறப்பு, பண்டைத் தமிழ்க் கவிதை, பண்டைத் தமிழரின் நிலப்பகுப்பு, அரசியல் முதலியன புலவர்களின் ஒற்றுமையால் உண்டாகும் பயன் முதலியவற்றைச் சொல்லி, நாம் இனி என்ன செய்ய வேண்டுமென்பதையும் வற்புறுத்தினார்.

இனிமேல் எத்தகைய நூல்கள் வேண்டும்? தமிழ்த் தாத்தாவின் அபிப்பிராயம் வருமாறு:

'பிற்காலத்து நூல்களில் வரவர உயர்வு நவிற்சியும், ஸ்வபாவ விரோதமாகிய வருணனைகளும், அளவுக்கு மேற்பட்ட சிருங்காரமும், விரோத உணர்ச்சியை உண்டாக்கும் மதவிஷயங்களும் புகுந்து ஒற்றுமைக்குப் பங்கம் விளைவித்தன. இனி நூல் செய்யப் புகுவார் அவற்றை இலக்கிய இன்பத்துக்காகப் பாதுகாத்துக் கற்றல் வேண்டும். புதிய இலக்கியங்கள் இயற்றுவதற்கு எவ்வளவோ துறைகள் இருக்கின்றன. பல பாஷைகளிலுள்ள விஷயங்களை அறிவதனால் இத்துறைகள் இன்னும் விரிவடையும். நாளடைவில் மனிதர்களுடைய வாழ்க்கை நிலை மாறுபடுகின்றது; அக்கொள்கைகளுக்கு ஏற்றபடி இலக்கியங்களும் நல்வழியில் மாற வேண்டியது இயல்பே.'

எல்லோரும் பிரசங்கத்தை மிகவும் சுவாரஸ்யமாகக் கேட்டுக்கொண்டே இருந்தார்கள். கடைசியில் காந்தியடிகள் பேசினார். "சாமிநாத ஐயரவர்களைப் பார்க்கும் போதும் அவர் பிரசங்கத்தைக் கேட்கும்போதும் அவர் காலடியின் கீழ் இருந்து தமிழ் படிக்க வேண்டுமென்ற ஆசை உண்டாகிறது" என்று அவர் சொன்னபோது சிலருக்குத் தூக்கிவாரிப் போட்டது. இது உபசாரத்துக்காகச் சொன்ன வார்த்தையா, என்ன! உண்மையே உருவமாக இருக்கும் அப்பெரியார் தமிழ்த் தாத்தாவின் தோற்றத்திலும் பேச்சிலுள்ள கருத்திலும் ஆழ்ந்து மனப்பூர்வமாகத்தான் இந்த உரைகளை வெளியிட்டார். மகாமகோபாத்தியாயராகிய தமிழ்த் தாத்தா உண்மையும் ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியராக இருக்கும் தகுதியுடையவரென்பதைச் சத்திய சோதனை செய்த மகாத்மா உணர்ந்துதான் சொன்னார்

இவ்வாறு சத்திய சோதனை செய்த இரண்டு தாத்தாக்களும் சந்தித்தார்கள்; பேசினார்கள்.

# அல்லயன்ஸ் வழங்கும்

**அரிய, தெய்வீக நூல்களிற் சில...**

**அவசியம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியவை.**

---

| | |
|---|---|
| ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திரர் பதில்கள் I | |
| ,, ,, ,, II | |
| தெய்வத்தின் அருள் வாக்கு | |
| 'வாகீச கலாநிதி' கி.வா.ஜ.வின் பெரிய புராண விளக்கம் பகுதி 1 முதல் 10 வரை | ரூ. 341-50 |
| (மேலும் பல பகுதிகள் அச்சில்) | |
| வழிகாட்டி (திருமுருகாற்றுப் படை விளக்கம்) | 15-00 |
| அபிராமி அந்தாதி | 10-00 |
| நவக்கிரகம் | |
| பி.ஸ்ரீ. அவர்களின் அறுபடை வீடுகள் | |
| 1. திருப்பரங்குன்றம் | 13-50 |
| 2. திருச்செந்தூர் | 13-50 |
| 3. பழனி | 13-50 |
| 4. சுவாமிமலை | 13-50 |
| 5. குன்றுதோறாடல் | 15-00 |
| 6. பழமுதிர் சோலை | 13-50 |
| திருப்பாவை | 9-00 |
| திருவெம்பாவை | 8-00 |
| ஆண்டாள் | 8-00 |
| அருணகிரிநாதரின் வாழ்க்கை வரலாறு | 12-50 |
| கவியரங்கில் கி.வா.ஜ. | (அச்சில்) |
| கி.வா.ஜ. கவிதைகள் | ,, |
| கி.வா.ஜ. சிலேடைகள் I | ,, |
| ,, ,, II | ,, |
| கி.வா.ஜ. பேசுகிறார் | ,, |
| கம்பர் விழாவில் கி.வா.ஜ. | ,, |
| கி.வா.ஜ. பதில்கள் I (ஆன்மீகம்) | ,, |
| ,, ,, II (இலக்கியம்) | ,, |
| ,, ,, III (பொது) | ,, |
| கி.வா.ஜ. சிந்திய முத்துக்கள் | ,, |
| மீனாட்சி கலிவெண்பா (தினமும் பாராயணம் செய்ய வேண்டியது) | ,, |
| ம. ராதாகிருஷ்ண பிள்ளையின் தென்னாட்டுக் கோயில்கள் I | 12-00 |
| ,, ,, II | 25-00 |
| ,, ,, III | 25-00 |
| ,, ,, IV | 25-00 |
| ,, ,, V | அச்சில் |
| சுகர் கூறிய கண்ணன் கதை | 12-00 |
| பாகவதக் கதைகள் | 12-00 |
| சைவ தத்துவம் —கா.ஸ்ரீ.ஸ்ரீ. | 42-00 |

---

## இந்துமத உபாக்கியானம் (பாகம் I & II) ரூ 15-00

(சிறந்த நீதிகளைக் கொண்டது-52ம் பதிப்பு)

---

தற்கால எளிய தமிழ் நடையில், அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில், பிரபல எழுத்தாளர் கா.ஸ்ரீ.ஸ்ரீ. அவர்கள் மொழிபெயர்த்த

1. **வேதங்கள்**
   (ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள் முழுவதும்)
2. **யோக வாசிஷ்டம்**—விரைவில் வெளிவருகிறது.

---

**அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை-600 004**